


அன்பே
ஆருயிரே
சத்யா இராஜ்குமார்

அன்பே
ஆருயிரே
சத்யா இராஜ்குமார்

Please share your novels and Comments @ http://tamilnovel-link.ucoz.com/

# அன்பே ஆருயிரே

## 1

"சஷ்டியை நோக்க
சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவுஞ்
செங்கதிர் வேலோன்"

டேப்பில் கந்தர் சஷ்டி கவசம் சத்தமாக வைக்கப்பட் டிருந்தது. சூரியன் வெளியுலகிற்கு வரலாமா வேண் டாமா என்பதைப் போல யோசித்துக் கொண்டிருந்த அந்த இளம் காலை வேளையில், வழக்கம் போல

அனைத்து வீட்டுக் காலைப் பரபரப்பு அந்த வீட்டையும் பற்றிக் கொண்டிருந்தது.

வீடு என்று சொல்வதைவிட அரண்மனை என்று சொல்லலாம் போல, ஒவ்வொரு சென்டி மீட்டரும் கலை நயத்துடன் கட்டப்பட்டிருந்தது அந்த அரண்மனை வீடு.

வீட்டைச் சுற்றிலும் பெயர் தெரியாத அழகிய பூக் களைக் கொண்ட செடிகள், குரோட்டன்ஸ், ரோஜாச் செடிகள் எனப் பல்வேறு வகையான செடிகள் ஒருபுற மும், பூக்களுடன் தென்றல் காற்றையும் நிழலையும் தரக்கூடிய மரங்கள் ஒருபுறமும் எனத் திட்டம் போட்டுக் கட்டப்பட்டிருந்த அந்த வீடு, இரண்டு மாடிகளுடன் கம்பீரமாக அந்த வீதிக்கு அழகு சேர்த்துக் கொண் டிருந்தது.

வருவோர் போவோரை வியக்க வைக்கும் கலைநயம் மிக்க அந்த வீட்டின் சொந்தக்காரரான ரகுநாத் பரந்த விஸ்தாரமான ஹாலில் அமர்ந்து அன்றைய ஆங்கில நாளிதழைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்தவுடன் கணக்கிடத் தோன்றும் செழுமையின் சிவப்பு, கொஞ்சம் நரைத்த முடி, நீண்ட நாசி, நல்ல உயரம் எனக் கம்பீரமான தோற்றத்துடன் ஐம்பத்தைந்து வயதைக் கடந்திருந்தார்.

''என்ன அபி, உனக்கு இன்னைக்குத்தானே காலேஜ் ரீ ஓப்பனிங்.''

ரகுநாத் கேட்க, ''ஆமாம் பெரியப்பா!'' என்று அவ ருக்குப் பதில் சொல்லிக் கொண்டே ஹாலுக்கு வந்தாள் அவள்.



அந்த அபிநயா எலக்ட்ரானிக்ஸில் பி.இ. கடைசி ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள்.

அன்று கல்லூரி முதல் நாள் என்பதால் வழக்கத்திற்கு மாறாகச் சற்றுச் சிரத்தை எடுத்துத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்த அபிநயா ஏற்கெனவே பார்ப்பதற்கு மிகவும் அழகாகத்தான் இருந்தாள்.

''வாவ் அபி!''

''என்ன ஸ்ரீ?''

''என்ன அதிசயமா இருக்கு!''

''என்ன சொல்ற, புரியல?''

''இல்ல, மேக்கப்பெல்லாம் தடபுடல் படுது.''

''மேக்கப்பா? வழக்கமா செய்யறதுதான். ஆனா கொஞ் சம் கேர் எடுத்துக்கிட்டேன். அவ்வளவுதான்.''

''ஸ்ரீ!''

''என்ன மம்மி?''

''என்னமா பேச்சு, அப்புறம் லேட்டாயிடுச்சுன்னு விட்டா சாப்பிடாமக்கூட ஓடுவ.''

''இதோ வர்றேம்மா. நீயும் வா அபி!'' என்று சொல்லிக் கொண்டே டைனிங் ஹாலுக்குச் சென்றாள் ஸ்ரீநிதி.

''சங்கர், நீயும் வாப்பா!'' என்று அப்பொழுது ஹாலுக்கு வந்த மகனிடமும் சொல்லிக் கொண்டே போனாள் சுந்தரி.

ஸ்ரீநிதி, சங்கர் இருவரும் சுந்தரி, ரகுநாத் தம்பதியின் பிள்ளைகள். ஸ்ரீநிதி கலைக் கல்லூரியொன்றில் பி.எஸ்ஸி. கடைசி ஆண்டு படிக்கிறாள். சங்கர். எம்.பி.ஏ. முடித்து விட்டுச் சொந்தத் தொழில்.

''என்ன அபி, தேட்ற?''

''இங்க என்னோட நோட் வெச்சிருந்தேண்ணா, அதத் தேடிட்டிருக்கேன்!'' என்றவளிடம் ''சரி, எடுத்து வெச்சுட்டு நீயும் சாப்பிட வா!'' என்று சாப்பிடச் சென்றிருந்தான் சங்கர்.

''அபி! இதுவா, பாருமா?''

''தேங்க்யூ பெரியப்பா, இதுதான்!'' என்று சந்தோஷ மாக வாங்கிக் கொண்டவள் காலேஜ் கிளம்புவதற்கு ஏதுவாக அனைத்தையும் தயாராக எடுத்து வைத்து விட்டுத் தானும் சாப்பிடச் சென்றாள்.

''வா அபி!'' என்று அழைத்த சங்கர், ''ஏம்மா, அபி யோட நோட் ஒண்ணு ஹால்ல பார்த்தீங்களா?'' என்று தனது தாயிடம் கேட்டான்.

நோட் கிடைச்சிடுச்சு என்று சொல்வதற்காக அபி வாயைத் திறப்பதற்குள்ளேயே, ''ஆமா, இங்க ஒவ் வொருத்தியும் வெக்கறத எடுத்துப் பத்திரப்படுத்தறது தான் எனக்கு வேலையா? இவ எங்க வெச்சாளோ யாருக்குத் தெரியும்?'' என்று பட்டென்று சுந்தரியிட மிருந்து பதில் வந்திருந்தது.

''நோட் கிடைச்சுடுச்சுண்ணா!'' என்று மெதுவாகச் சொல்லிக்கொண்டே, சாப்பிட, அவர்களோடு தானும் அமர்ந்திருந்தாள் அபிநயா.

''இனிமேலாவது ஒரே இடத்துல வெச்சு எடுத்துப் பழகு. உனக்கு வந்து எல்லாரும் ஊழியம் பண்ணிட் டிருக்க முடியாது!'' என்ற சுந்தரியின் வார்த்தைகளுக்குச் 'சரி' என்பதைப் போலத் தலையை ஆட்டினாள் அபிநயா.



யாரிடமும் கேட்டிருக்காமல் தானே தேடியிருக்கலாம் என்று அபிநயாவால் நினைக்காமல் இருக்க முடிய வில்லை. கூடவே தான் என்ன செய்தால் இந்தப் பெரி யம்மாவுக்குத் தன்னைப் பிடிக்கும் என்றும்.

ரகுநாத்தின் தம்பி மகள் அபிநயா. எதிர்பாராத வித மாக அவள் தனது சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து விட்டிருக்க, சுந்தரி, ரகுநாத் தம்பதியே அபி நயாவை வளர்க்க ஆரம்பித்திருந்தனர். ஒரு வயது கூட நிரம்பியிருக்காத அப்பொழுதே அவளுடைய சுறுசுறுப் பும், துறுதுறுவென்று பார்ப்பவர்களை ஈர்க்கும் அழகும் அனைவரையும் கவரும் விதமாக அமைந்திருந்தது.

அபிநயாவின் பெற்றோர் விட்டுச் சென்ற சொத்தே ரகுநாத்தின் சொத்தை விட இரண்டு மடங்கு அதிகமாக இருந்தது.

அபிநயாவை எப்பொழுதுமே அனைவருக்கும் பிடிக் கும். அந்த அளவிற்கு இன்முகத்துடனும் மிகவும் மரி யாதையுடனும் தான் அவள் அனைவரிடமுமே நடந்து கொள்வாள்.

தொடர்ந்து சில நிமிடங்களில் ரகுநாத்தும் சாப்பிட வர, சுந்தரி அனைவருக்கும் பரிமாறினாள்.

சிறிது நேரத்தில் அனைவரும் சாப்பிட்டு முடிய, ''அபி, கிளம்பலாமா?'' என்று வந்தாள் ஸ்ரீநிதி.

''நீ எங்கூட வர்றியா?''

''ஆமா, அபி.''

''ஏன்?''

''என்ன ஏன்?''

''இல்ல, எப்பவும் நீ டிரைவர் கூடத்தான் போய் இறங் கிக்குவ. சரி, அப்ப சீக்கிரம் கிளம்பி வா. அப்பதான் உன்னை விட்டுட்டு அதுக்கப்புறமா நான் காலேஜ் போய்ச் சேர நேரம் சரியா இருக்கும்.''

டிரைவர் ஸீட்டில் ஏறப்போன அபிநயாவை, ''ஏய், கார நான் ஓட்டறேன்!'' என்று தடுத்து விட்டிருந்தாள் ஸ்ரீநிதி.

''அது சரி, ரெண்டு பேரும் காலேஜ் போய்ச் சேரணும் ஞாபகம் வெச்சுக்கோ.''

''பின்ன?'' என்று டிரைவர் ஸீட்டில் ஏறி அமர்ந்திருந் தாள் ஸ்ரீநிதி.''

''எதுக்கும் ஒரு முறைக்கு ரெண்டு முறையா யோசிச் சுக்கோ!'' என்று காரைச் சுற்றிக் கொண்டு மறு பக்கத் திற்கு வந்திருந்த அபிநயா, ''ஒரு நிமிஷம்...'' என்று டாஷ் போர்டில் இருந்த சிவப்பு டேப்பை எடுத்து காரின் முன்பக்கமும், பின் பக்கமும் 'எல்' போர்ட் ஸ்டிக்கர் ஒட்டி னாள்.

''இதெல்லாம் எதுக்குடி?''

''பின்ன உங்கூட நான் தைரியமா வர வேண்டாமா?''

''அப்ப உனக்கும் இன்னும் எம் மேல நம்பிக்கையே வரலையா?''

''ம். அதுக்கு நீ போய் முதல்ல லைசன்ஸ் எடுக்கணும்.''

''நானும் லைசன்ஸுக்கு அப்ளை பண்ணியிருக்கேன். அதோட 'எல்.எல்.ஆரு'ம் வெச்சிருக்கேன்!'' என்று சொல்லிக்கொண்டே காரை ஸ்டார்ட் செய்திருந்த ஸ்ரீநிதி, ''அப்ப லைசன்ஸ் வெச்சுட்டிருக்கறவங்கெல் லாம் பிரமாதமா ஓட்டுவாங்கன்னு சொல்ற, குட் ஜோக்!'' என்றாள்.



மேலும் பதினைந்து நிமிடங்களில் தனது கல்லூரிக்கு மிக அருகிலேயே வந்து விட்டிருந்த ஸ்ரீநிதி, ''எப்படி மேடமோட டிரைவிங்?'' என்று கேட்டாள்.

''அதுவும் நல்லார்க்கு. அதோட இன்னைக்கு நாம ரோட்ல பார்த்தவங்க எல்லாரோட நேரமும் நல்லார்க்கு.''

''ஹலோ... என்ன கிண்டலா?''

''சேச்சே, நான் உண்மையத்தான் சொன்னேன்.''

''போ அபி, உன்ன மாதிரி நான் ஓட்டலேன்னாலும் ஒண்ணும் ரொம்ப மோசம் கிடையாது.''

''டிரைவிங்கப் பொறுத்த வரைக்கும் பரவாயில்ல, சமாளிச்சுக்கலாம் அப்படிங்கிற வார்த்தைகளுக்கெல் லாம் இடமே இல்ல. ஏன்னா அரைகுறையா ஓட்டறவங் களால தான் எத்தனையோ பேர் பாதிக்கப்படுறாங்க. ஆனா இன்னைக்கு உன் டிரைவிங்ல நல்ல ப்ராக்ரஸ் தெரியுது ஸ்ரீ.''

''அப்பாடா! மேடம் ஒரு வழியா ஒத்துக்கிட்டிங்க!'' என்று ஸ்ரீநிதி தனது கல்லூரியில் இறங்கிக் கொள்ள, அவள் கல்லூரிக்குள் சென்றதும் தான் டிரைவிங் ஸீட்டில் ஏறி அமர்ந்து காரை ஸ்டார்ட் செய்தாள் அபிநயா.

வழக்கத்தை விடவும் நேரம் சற்று அதிகம் ஆகி விட்டிருக்க, எக்காரணத்தைக் கொண்டும் வருடத்தின் முதல் நாளே கல்லூரிக்குத் தாமதமாகி விடக் கூடா தென்று வேகமாகவே காரைச் செலுத்த ஆரம்பித்திருந் தாள் அபிநயா.

அதாவது எல்லை மீறாத வேகத்துடன் தான்.

எப்பொழுதும் கல்லூரிக்குச் செல்லும் வழக்கமான பாதையில் தொடர்ந்து காரை ஓட்டி வந்தவள், மிகுந்த

கவனத்துடன் தான் அந்தச் சந்தையும் கடக்கப் போனாள்.

ஆனால் அதற்குள் அது நடந்து விட்டிருந்தது.

அந்தச் சேரியில் இருக்கும் குழந்தைகளுக்கு விளை யாட்டு மைதானம் எப்பொழுதுமே அந்த ரோடு தான் என்பது வழக்கமாக அந்த வழியாகக் கல்லூரிக்குச் செல்லும் அபிநயாவுக்குத் தெரியுமென்பதால், வேகத்தை மிகவும் குறைத்துத் தான் அவள் அந்தப் பாதையைக் கடக்கப் போனாள்.

ஆனால் அப்படியிருந்தும் அங்கு விளையாடிக் கொண் டிருந்த சிறுவர்களில் ஒருவன் ஓடி வந்து அபிநயாவின் காருக்குள் விழுந்திருந்தான்.

விளையாட்டு மும்முரத்தில் வந்து விழுந்திருந்த அந்தச் சிறுவனின் மேல்தான் நூறு சதவிகிதத் தவறும் இருக்கிறதென்றாலும், கடவுளே என்று உள்ளம் பதறி விட்டிருந்தது அபிநயாவிற்கு.

ஹை ஸ்பீட் வெகிக்கிள் என்பதாலும், மிகக் குறைந்த வேகத்தில் ஓட்டி வந்திருந்ததாலும், அந்த வினாடியே காரை நிறுத்தியும் விட்டிருந்தாள்.

நிறுத்தியவள், நெஞ்சு பதைக்கக் காரிலிருந்து இறங்கி ஓடி வந்தாள்.

ஆனால் அதற்குள் அங்கு ஒரு பெரிய கூட்டமே கூடி விட்டிருந்தது.

ஐயோ! இப்படி அடிச்சுத் தூக்கிட்டாளே என்று அங் கிருந்த பெண்களில் சிலர் நெஞ்சிலும் தலையிலும் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்திருக்க, அங்கிருந்த



மற்றவர்களும் அபிநயாவைப் பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டு விட்டிருந்தனர்.

ஐயோ! உனக்கெல்லாம் கண்ணு முன்னாடியே இல்லை யாடி, நீயெல்லாம் ஒரு பொண்ணா என்று ஏக வசனத் திலும் பேச ஆரம்பித்திருந்தனர்.

ஆனால் அபிநயாவின் கவனம் முழுவதும் கீழே விழுந்து கிடந்த அந்தச் சிறுவனின் மீதுதான் இருந்தது.

லேசாகத் தலையைத் தூக்கிப் பார்த்த அந்தச் சிறு வனை, ''ஏய், கம்முன்னு கிட!'' என்று அதட்டினாள், அரு கிலிருந்த அந்தப் பெண்மணி. அவள் அவனுடைய தாயாகத்தான் இருக்க வேண்டுமென்று அபிநயாவிற்குத் தோன்றியது.

''ஏய், என்னம்மா நீ பாட்டுக்கு ஜாலியா நின்னு வேடிக்கை பாத்துட்டிருக்க. கொலக்கேஸ் கம்ப்ளெய்ண்டக் குடுத்தோம்னு வெச்சுக்க, ஜெயில் உறுதி!'' என்றார்கள்.

தன் மேல் தவறு இல்லை யென்பதை எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் அங்கிருப்பவர்கள் புரிந்து கொள் ளப் போவதில்லை யென்பது தெளிவாகத் தெரிந்தது.

''நீ ஒரு பொண்ணா இருக்கவும் இன்னும் வாயில பேசிட்டிருக்கோம். இல்லன்னா எங்களுக்கு வர்ற கோபத்துக்கு இந்நேரம் என்ன பண்ணியிருப்போம்னு எங்களுக்கே தெரியாது!'' என்று ஆளாளுக்கு வாய்க்கு வந்ததையெல்லாம் பேசிக் கொண்டே போக, கடவுளே இப்படி வந்து மாட்டிக் கொண்டோமே என்று உடலும் உள்ளமும் நடுங்கிப் போனது அபிநயாவிற்கு.

ஆனாலும் மிகவும் சிரமப்பட்டு அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டு, ''பையன சீக்கிரம் ஹாஸ்பிட்ட லுக்கு அழைச்சுட்டுப் போலாமே!'' என்றாள்.

''என்னது, அழைச்சுட்டுப் போறதா, எடுத்துக்கிட்டுத் தான் போகணும். அதோட நீ சொல்ற ஆஸ்பத்திரிக்கெல் லாம் நாங்க வர மாட்டோம். தஸ்புஸ்னு இங்கிலீஷ்ல பேசி அப்புறம் இருக்கற உசுரையும் எடுத்துட மாட் டிங்க?''

''சரி, இப்ப என்னதான் செய்யணும்னு சொல்றீங்க?'' என்று அழுகையை உள்ளடக்கிய குரலில் அபிநயா கேட்க, ''அத நான் சொல்றேன்!'' என்று முன்னால் வந் திருந்தான் அந்த இளைஞன்.

ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாகத் தோன்றிய மரியாதைக்குரிய அவனுடைய தோற்றம், அவன் அந்தச் சேரிக்குச் சம்பந்தமற்றவன் என்பதைத் தெளிவாகக் கூறியது.

''என்னாச்சு?'' என்று வந்தவன் தன்னைப் பார்த்துக் கேட்க, அதைத் தன்னிலையை விளக்கக் கிடைத்த ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு நடந்ததைத் தெளிவாகக் கூறி முடித்தாள் அபிநயா.

செயற்கைத்தனம் சிறிதும் இல்லாத அவனுடைய அலட்சியம் கலந்த அதிகாரக் குரலில் நடந்ததனைத் தையும் சொல்லி விட்டிருந்த அபிநயாவிற்கு, இந்தப் பெரும் இக்கட்டிலிருந்து இவனால் தனக்கு மீட்சி கிடைக்குமென்ற நம்பிக்கை ஓரளவு வந்து விட்டிருந்தது.

மேலும் அவனைக் கண்டதும், அதுவரை கசகச வென்று பேசிக் கொண்டிருந்தவர்கள் அனைவரும் கப் சிப்பென்று வாயை மூடிக் கொண்டதையும் சிறு வியப்பு கலந்த ஆச்சரியத்துடன் கண்டாள்.

ஆனாலும் உண்மையிலேயே அந்தச் சிறுவனுக்கு அடி ஏதேனும் பட்டிருக்குமோ என்று திடீரென்று



தோன்றிய எண்ணத்தில் மீண்டும் மனம் கலங்கிப் போனாள் அபிநயா.

''என்ன, அப்படியே படுக்க வெச்சுட்டே இருந்தா எல் லாம் தானா சரியாயிடுமா, இல்ல அடியே படலயா?''

புதிதாக வந்திருந்த அந்த இளைஞன் கேட்டதற்கு அந்தச் சிறுவனைச் சுற்றியிருந்தவர்கள், ''அது வந்து...'' என்று மென்று விழுங்குவதைப் புரியாமல் பார்த்தாள் அபிநயா.

''டேய், குட்டிப் பையா! எழுந்துக்கோ. இல்லன்னா நிஜமாவே இப்பக் கார உன்மேல விடப் போறேன்!'' என்று வந்தவன் சொன்னதுதான் தாமதம், துள்ளிக் குதித்து எழுந்து நின்றிருந்தான் அந்தச் சிறுவன்.

''என்னப்பா, நிஜமாவே அடி ஏதாவது பட்டிருந்தாலும் தயங்காமச் சொல்லு,'' என்று விசாரித்தவனுடைய குரலில் இப்பொழுது சற்றுக் கரிசனம் கலந்திருக்கிறதோ என்று அபிநயாவால் நினைக்காமல் இருக்க முடிய வில்லை.

''அடியே படல சார். சும்மா விளையாட்டுக்குத்தான் அப்படி செஞ்சேன்!'' என்று அவசரமாகச் சொல்லி விட்டுப் பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டான் சிறுவன்.

''சொல்லு, உன்ன யாரு இப்படிச் செய்யச் சொல்லித் தூண்டினது?''

அதற்குப் பதில் சொல்லாமல் விழித்த சிறுவனை, ''சொல்லுடா,'' என்று அதட்டினான் அவன்.

உடனே பயத்தில் நடுங்கிய குரலில், ''ஆத்தாவும், ஐயாவும் தான் சார்!'' என்று தனது பெற்றவர்களை

நோக்கிக் கைகாட்டியபடி குட்டைப் போட்டு உடைத் தான் அந்தச் சிறுவன்.

ஏதோ சொல்வதற்காக வாயைத் திறக்கப் போனவ னுக்கு, அப்பொழுது சற்று பதைப்புடன் தனது கைக்கடி காரத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அபிநயா கண்களில் பட்டாள்.

''ஒரு நிமிஷம்...'' என்று அபிநயாவுடன் அந்த இடத்தை விட்டு சற்று வெளியே வந்திருந்தவன், ''நீங்க ஏன் ஓவர் ஸ்பீட்ல வந்தீங்க?'' என்று அவளைப் பார்த்துக் கேட்டான்.

''இல்லில்ல ஸார். இன்னைக்குன்னு இல்ல, எப்பவுமே நான் இந்த இடத்த டெட் ஸ்லோல தான் கடந்து போவேன். ஏன்னா இங்கிருக்கற குழந்தைகளுக்கு இந்த ரோடு தான் ப்ளே கிரவுண்டுங்கறது லாஸ்ட் த்ரீ இயர்ஸா தொடர்ந்து இதே வழியாக் காலேஜ் போயிட்டிருக்கற எனக்கு நல்லாவே தெரியும்!'' என்றாள்.

யாரென்று கூடத் தெரியவில்லை. சமயத்தில் வந்து எவ்வளவு பெரிய உதவியைச் செய்திருக்கிறானென்று தோன்றிய நன்றியுணர்வில், தன்னையறியாமலேயே மரியாதையுடன் அவனுடைய கேள்விக்குப் பதில் சொல்லி விட்டிருந்தாள் அபிநயா.

தொடர்ந்து அவசியமற்ற எதையும் கேட்டுக் கொண் டிருக்காமல் ஒரு சில டீடெய்ல்ஸோடு அவளுடைய காலேஜ் ஐடென்டிடி கார்டை மட்டும் வாங்கிப் பார்த்து விட்டுத் தேவையிருந்தால் போனில் தொடர்பு கொள்வ தாகச் சொல்லிக் கிளம்பிக் கொள்ளச் சொன்னான்.

அப்பாடா! இப்பொழுது கிளம்பினாலும் கூடச் சரியான நேரத்திற்குள் கல்லூரிக்குச் சென்று விடலாமென்ற



நிம்மதி தோன்ற, விட்டால் போதும் என்று அவனிடம் சொல்லிக் கொண்டு அந்த வினாடியே கிளம்பியும் விட்டிருந்தாள் அபிநயா.

## 2

அன்று மாலை வீட்டிற்குச் செல்லும்போதே, ஒரே யோசனையாக இருந்தது ஜீவானந்தத்திற்கு.

இப்படிப்பட்ட பெண் எங்காவது இருப்பாளா என்ற யோசனைதான் அது.

அனைத்தும் அவனுடைய தங்கையைப் பற்றியது தான்.

ப்ளஸ் டூவில் அவனுடைய தங்கை மாநில அளவில் நல்ல மதிப்பெண்கள் எடுத்திருந்ததால், சிட்டியிலேயே மிகவும் புகழ்பெற்ற ஒரு பொறியியல் கல்லூரியில் அவ ளுக்கு இலவசமாக இடம் கிடைத்திருந்தது.

அவர்களைப் பொறுத்தவரை அது எத்தனை லட்சங் களானாலும் கட்டிவிட அவர்களால் முடியும்தான்.

ஆனால் இப்பொழுது பிரச்சினையே அதுவல்ல, அவனுடைய தங்கைக்குக் கலைக் கல்லூரியில் படிக்கத் தான் ஆசையாம்.

இப்படியாகுமென்று தெரிந்திருந்தால் நான் இன்னும் சற்று மோசமாகக் கூடப் படித்திருப்பேனே என்னுமள விற்கு முட்டாள்தனமான புலம்பல்.

கல்லூரி முதல் நாளான அன்று மிகவும் கட்டாயப் படுத்தித் தான் அவன் தனது தங்கையைக் கல்லூரிக்கே அனுப்பி வைத்திருந்தான்.

நல்ல மதிப்பெண், பணம் என அனைத்துமே இருந்தும் கூட அந்தக் கல்லூரியில் இடம் கிடைக்கவில் லையே என்று எத்தனை பேர் ஏங்கிக் கொண்டிருக் கிறார்கள் என்பதும் அவர்கள் அறியாதது அல்ல.

அப்படியிருக்கும்போது தங்கை ஏன் இந்தப் பைத் தியக்காரத்தனம் செய்கிறாளென்று அவனால் எண் ணாது இருக்க முடியவில்லை.

சரி, நல்லதைச் சொல்ல வேண்டியது நம் கடமை. அதற்கு மேல் முடிவு அவளுடையது என்று நினைத்துக் கொண்டே வீட்டுக் காம்பவுண்டுக்குள் வந்திருந்தவன், காரை அதனிடத்தில் பார்க் செய்தான்.

''ஹாய் அண்ணா.''

''வாங்க மேடம், ஃபர்ஸ்ட் டே காலேஜ் எப்படி யிருந்தது?''

''பரவாயில்லண்ணா. ரொம்பவே நல்லாயிருந்தது. அப்புறம் என்னண்ணா இன்னைக்கு யூனிஃபார்மே கொஞ்சம் கூடக் கசங்காம பார்க்கவும் ரொம்ப ப்ரஷ்ஷாத் தெரியறீங்க?''

''அப்படியா தெரியறேன்?'' என்று அங்கு ஹாலில் இருந்த அந்தப் பெரிய ஆளுயரக் கண்ணாடியில் தன்னை ஒருமுறை பார்த்துக் கொண்டவன், ''சரிதான். இன்னைக்கு ஐயாவுக்கு அவ்வளவா ஸ்ட்ரெய்ன் இல்ல!'' என்றான்.



''ஆனாலும் என்னோட அண்ணா எப்பவுமே ஃப்ரஷ் தான!'' என்று பெருமையுடன் சொல்லிக் கொண்டாள் வினயா.

''சத்தமாகச் சொல்லாத. அப்புறம் இவன் வேலை யெதுவும் செய்யாம சும்மா பந்தாவுக்கு வேலைக்குப் போய்ட்டு வந்துட்டிருக்கான் போலிருக்குதுன்னு எல் லாரும் நினைச்சுக்குவாங்க.''

''உங்களையா? சான்ஸே இல்லண்ணா. அப்புறம் இந்த உலகத்துல வேலை செய்றவங்கன்னு நூத்துல ஒருத்தரக்கூடச் சொல்ல முடியாது.''

''உனக்கு எப்பவுமே ஏதோ ஒன்ன எடுத்துக்கிட்டு மிகைப்படுத்திப் பேசறதே வழக்கமாப் போயிடுச்சு.''

''சரி, விடுங்க. ஆனா உங்களப் பத்தி மத்தவங்க எல்லாம் பெருமையாப் பேசிக்கறாங்களே, அத நானா சொல்லிக் கொடுத்தேன். அதுலயும் போலீஸ் யூனி ஃபார்ம்ல கம்பீரமா உங்கண்ணா நடந்து வர்றதப் பாத்தா சம்பந்தமில்லாத எங்களுக்கே சல்யூட் அடிக்கணும் போலிருக்கும்னு எல்லாரும் சொல்லும்போது எனக்கு எவ்வளவு பெருமையா இருக்கும் தெரியுமாண்ணா?''

''அடடா, வழக்கம்போல காலேஜ் விஷயத்துக்காகப் புலம்புவியேன்னு யோசிச்சிட்டே வந்தேன். ஆனா இப்ப அதுவே பரவாயில்ல போலிருக்கே!'' என்றவன் -

''இதோ வர்றேன்,'' என்று யூனிஃபார்மை மாற்றுவதற் காகத் தன்னறைக்குச் சென்றவன் சொன்னது போலப் பத்து நிமிடங்களில் திரும்பி வந்தான்.

''வினயா!''

''என்னண்ணா?''

''காலேஜ் முடிச்சு வந்து ஏதாவது சாப்பிட்டாயா?''

''ஆமாண்ணா.''

''அப்பக் கிளம்பலாமா?''

''கிளம்பறதா, நீங்க வந்து டிபன் எடுத்துக்கோங்க.''

''சாப்பிட்றதா? அதெல்லாம் வீட்டுக்குப் போய் அம்மா கையாலதான்.''

''நான் செய்யலண்ணா, தைரியமா சாப்பிடுங்களேன்...'' என்று தங்கை கொண்டு வந்து நீட்டிய பிளேட்டைப் பார்த்தவன், ''வரவர வாழ்க்கைல எதுக்கெல்லாம் தைரியம் வேண்டியதிருக்கு பாரு!'' என்று வாங்கிக் கொண்டான்.

''ஃபர்ஸ்ட் டே காலேஜ் போய்ட்டு வந்திருக்கேன், அதப்பத்தி எதுவுமே கேக்க மாட்டிங்களாண்ணா?''

''பின்ன? சொல்லு. இன்னைக்கு எப்படி டைம் போச்சு. எத்தன பேர ஸைட் அடிச்ச?''

''ஹலோ, என்னோடது வுமன்ஸ் காலேஜ். தெரிஞ்சுக் கோங்க.''

''ஓ! அதனாலதான் நீ அந்தக் காலேஜயே வேண்டாம்னு சொன்ன, நான் அத மறந்தே போய்ட்டேன்.''

''அண்ணா! போதும், நான் ஒண்ணும் அந்த மாதிரி மோசமான பொண்ணு கிடையாது.''

''அது சரிதான், அதவிடக் கொஞ்சம் குறைவுதான்.''

''அண்ணா! உங்கள...'' என்று சிணுங்கிய வினயா, ''ஆமா, நீங்க என்ன இன்னைக்கு ஜாலி மூட்ல இருக்கீங்க போலிருக்கு?'' என்று கேட்டாள்.



''அது சரிதான். நீ இந்தக் காலேஜ வேண்டாம்னு சொன்னா, உனக்கு வேற இடம் பாக்கற சாக்குல இன்னுமொரு நாலு விமன்ஸ் காலேஜ் ஏறி இறங்கலாமேன்னு தான்.''

''நீங்க...? சரிதான், நம்பிக்கறேன்!'' என்ற வினயா, ''ஆனா அதுக்கெல்லாம் அவசியமே இல்லண்ணா, ஏன்னா எனக்கு இந்தக் காலேஜயே ரொம்பவும் பிடிச்சுப் போச்சு!'' என்றாள்.

''அட, திடீர்னு இப்படியொரு மைண்ட் சேஞ்சுக்கு என்ன காரணம்?''

''என்னவோ தெரியலண்ணா. எனக்கு இந்தக் காலேஜயே ரொம்பவும் பிடிச்சுப் போச்சு. அதோட எங்கூட ஒரு அக்கா நல்லாப் பேசினாங்க.''

''அக்காவா? அது யாரு?''

''சீனியர், ஃபைனல் இயர் ஸ்டூடண்ட்.''

''அதனால?''

''அதனால எனக்கு வேற காலேஜ் பார்க்க வேண்டிய ஒரு பெரிய வேலை உங்களுக்கு மிச்சம். அவ்வளவு தான்.''

''முதல்ல எல்லாம் சீனியர்ஸ் நியூகமர்ஸ ராகிங்தான் பண்ணுவாங்க. ஆனா இப்ப நிலைமை தலைகீழ் ஆயிடுச்சு போலிருக்கு?''

''ஆமாம், இப்ப சிட்டில சட்டம் ஒழுங்கு எல்லாம் ரொம்ப நல்லாக்கு. அதான்...'' என்ற தங்கையிடம், ''தெரிஞ்சோ தெரியாமலோ உன் சீனியர் எனக்குச் செஞ்சது ஒரு பெரிய உதவி தான்!'' என்றான் ஜீவானந்த்.

''அவங்க வீட்டுக்குக் கூட நம்ம வீட்டு வழியாதான் போறாங்கண்ணா.''

''ஓ! அந்தளவுக்குப் பேசியாச்சா?'' என்றவன் சாப்பிட்டு முடித்த டிபன் பிளேட்டை வைத்து விட்டுப் போய்க் கைகளைக் கழுவிக் கொண்டு வந்தான்.

''சரி, வினு! கிளம்பலாம்.''

''சரிண்ணா. ஊர்ல அம்மாவும், அப்பாவும் வேற எதிர்பாத்துட்டிருப்பாங்க.''

அம்மா எதிர்பார்த்துட்டிருப்பாங்க, சரிதான். ஆனா அப்பா சான்ஸே இல்ல என்று ஜீவானந்தால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''தங்கம்மா!''

''அம்மா! சொல்லுங்க.''

''நானும் அண்ணாவும் ஊருக்குக் கிளம்பறோம். நாளைக்கு அப்படியே அவங்கவங்க வேலையப் பாக்கற மாதிரிதான் வருவோம்னு நினைக்கறேன்...'' என்று வினயா தனது அண்ணனைப் பார்க்க, ''நான் முன்னாடியே வர வேண்டியது இருந்தாலும் இருக்கும். வீட்ட பத்தரமாப் பாத்துக்கோங்க!'' என்று தானும் சொன்னான் ஜீவானந்த்.

''சரிங்கய்யா, எங்க வீட்டுல அவரும் இப்ப வந்துடுவாங்க!'' என்று மிகவும் பணிவுடன் சொன்னாள் தங்கம்மா.

சில நிமிடங்களில் கிளம்பிய அண்ணன் தங்கை இருவரும் அடுத்த ஒரு மணி நேரத்தில் தங்களது வீட்டைச் சென்று அடைந்திருந்தனர்.



ஆனால் அதற்குள்ளாகவே அவர்களுக்குக் கிடைத்த வரவேற்பு அமோகமாக இருந்தது.

ஒரு அண்ணன் இரண்டு தங்கை என ஜீவானந்துடன் பிறந்தவர்கள் மொத்தம் நான்கு பேர்.

ஓரளவு பெரிய கிராமமான அவர்களது ஊரில் அவர்களுடையது ஒரு மிகப் பெரிய பண்ணைக் குடும்பம்.

வழி வழியாக அவர்களுடைய தொழில் விவசாயம் தானென்றாலும், காலம் மாற மாற, அதில் நவீனத்தைப் புகுத்தி மேலும் வெற்றி கண்டார்கள்.

விவசாயம், பால் பண்ணை என அனைத்திலுமே புதுமைகளைப் புகுத்தி அவர்களே அந்தக் கிராமத்தில் எத்தனையோ பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்திருந்தார்கள்.

ஆனால் ஜீவானந்துக்கோ சிறு வயதிலிருந்தே போலீஸ் அதிகாரியாக வேண்டுமென்ற ஆசை. ஆசை என்று சொல்வதை விட லட்சியம் என்றே சொல்லலாம்.

ஆனால் அவனுடைய வீட்டினருக்கோ அதில் அவ்வளவாக விருப்பமில்லை. முக்கியமாக ஜீவானந்தின் தந்தைக்கு.

என்னதான் மகன் செய்வது மரியாதைக்குரிய வேலை என்றாலும், நாமே நூறு பேருக்கு வேலை தரும் நிலையில் இருக்கும்போது, நம் வீட்டுப் பிள்ளை வெளியே வேலை செய்வதா என்ற ஒரு சிறு ஆதங்கம் அவருக்கு.

பெரிய மகன் அனைத்தையும் நன்றாகவே கவனித்துக் கொள்கிறான் என்றாலும், சிறிய மகனும் கூட

இருந்து பார்த்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று அவரால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனாலும் தனது விருப்பத்தை மகனின் மீது திணிக்க அவர் விரும்பவில்லை.

அப்படியே அவரே விரும்பினாலும் அவரது சிறிய மகனைப் பொறுத்தவரை அது நூறில் ஒரு பங்காகக் கூட நடக்காது என்பதோடு, அவன் ஒன்றைச் சாதாரணமாக நினைத்து விட்டாலே அதை நடத்திக் காட்டும் வரை ஒய மாட்டான் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றே.

அப்படியிருக்கும் போது காவல் துறையில் பணி என்பது அவனுடைய லட்சியம்.

''வாங்கடாம்மா!'' என்று மகனையும், மகளையும் வரவேற்றார் மீனாட்சி.

''மம்மி!'' என்று வினயா தனது தாயருகில் செல்ல, ''என்னம்மா, எங்களுக்காக வாசல்லயே ரொம்ப நேரமாகக் காவலிருக்கீங்க போலிருக்கு. எப்படியும் நாங்க கார விட்டு இறங்கி வீட்டுக்குள்ள தான வந்தாகணும்!'' என்றான் ஜீவானந்த்.

''அது சரிதான் ஜீவா!'' என்று மீனாட்சி ஏதோ சொல்ல வர, ''பெத்த மனசு கேட்கணுமேப்பா!'' என்று தானும் ஹாலுக்கு வந்தார் அவனது தந்தை சண்முகம்.

வினயா தன்னுடைய பெற்றவர்களுடன் மும்முரமாகப் பேச ஆரம்பித்திருக்க, ''நீங்களும் இந்த நேரத்துக்கு அதிசயமா வீட்ல இருக்கீங்கப்பா?'' என்று கேட்டான் ஜீவானந்த்.



''ஆமாம்பா, நானும் ஃபார்ம்ல இருந்து இப்பதான் வந்து நீங்க வருவீங்களேன்னு எதிர்பாத்துட்டிருக்கேன். உன் வேல எப்படிப் போகுது?''

''நல்லாப் போயிட்டிருக்கு!'' என்று ஜீவானந்த் சொல்ல, ''என்ன டாடி, நீங்களும் என் ஃபர்ஸ்ட் டே காலேஜப் பத்தி எதுவுமே கேக்க மாட்டிங்களா?'' என்று குறைப் பட்டுக் கொண்டாள் வினயா.

''தப்புதான். நீ சொல்லுடாம்மா!'' என்று தனது மகளை நோக்கித் திரும்பிய சண்முகம், ''ஆமா, என்ன நீ இப்பிடி ஆளே இளைச்சுப் போய்ட்ட?'' என்று கேட்டார்.

''என்ன டாடி, கிண்டலா? நான் இங்கிருந்து கிளம்பிப் போயே இன்னும் ரெண்டு நாள் கூட முழுசா முடியல, அதுக்குள்ள இளைச்சுப் போக முடியுமா?''

''ஏன் முடியாது? அடுப்படில போய் உக்காந்துட்டு அம்மா சூடா செஞ்சு தரத்தர ரெண்டு மடங்கு முழுங்குவியே!'' என்று வந்தான் அந்த வீட்டின் மூத்த பிள்ளை தேவானந்த்.

''நானொன்னும் அப்படியெல்லாம் இல்ல!'' என்று வினயா மறுக்க, ''என்ன ஜீவா, ஒரே கலக்கலா இருக்கு. ரெண்டு நாளா டி.வி., பேப்பர் எல்லாத்துலயும் உன் பேட்டி தான்!'' என்று தனது தம்பி ஜீவானந்தத்தைப் பார்த்தான் அவன்.

''ஜீவாண்ணாவுக்கு அதெல்லாம் ஒரு பெரிய விஷயமாவே தெரியாதே. ஆமா, நான் எப்ப அப்படியெல்லாம் முழுங்கினேனாம்? அத நீங்க முதல்ல சொல்லுங்க!'' என்று கேட்டாள் வினயா.

''சரி, அத விடு. உன்னப் பத்தியும் ஒரு ஹாட் நியூஸ் கேள்விப்பட்டேன். அது உண்மையா?''

''அது என்ன?''

''அதான் நீ திரும்பவும் அந்தக் காலேஜயே ரொம் பவும் பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டயாமே.''

''சரி, அதுக்கென்ன?''

''இல்ல, மேல படிக்க மாட்டேன்னு சொல்லுவ. கையோட உன் கல்யாணத்த முடிச்சுடலாம்னு பாத்தோம், கடைசில இப்படி ஏமாத்திட்டயே வினு.''

''ம்... சொல்ல மாட்டிங்க, உங்களால முடிஞ்சா முதல்ல ஜீவாண்ணாவோட கல்யாணத்த முடிச்சுக் காட்டுங்க பாக்கலாம்.''

''ஏன் முடியாம? அவன மட்டும் சரின்னு ஒரு வார்த்த சொல்லச் சொல்லு, அப்புறமாப் பாரு.''

''என்னமா, அண்ணியக் காணோம்.''

''அண்ணியோட அண்ணாவுக்கு இன்னும் ஒரு வாரத்துல கல்யாணம் நடக்க இருக்கே, அதுக்காக அவங்க கொஞ்சம் முன்னாடியே கிளம்பிப் போய்ட் டாங்க ஜீவா.''

''ஓ! அப்ப அவங்க இப்ப வீட்ல இல்லையா?'' என்று ஒரு பொருள் பொதிந்த புன்னகையுடன் தனது அண் ணனைப் பார்த்த ஜீவானந்த், ''வேண்டாம்பா, வீட்ல இல்லாதப்ப மட்டும் வாய்ஸ் ரைஸ் பண்ற வேலை யெல்லாம் என்னால செய்ய முடியாது!'' என்றான்.

''அப்ப நீங்க பெரியண்ணாவப் பத்தி என்ன ஜீவாண்ணா நினைச்சுட்டிருக்கீங்க?'' என்று சிரித்த



தங்கையிடம், ''விடும்மா, அவன் சொல்றதும் நியாயம் தான். அவனாவது இன்னும் கொஞ்ச நாளைக்குச் சுதந்தரமா இருக்கட்டும்!'' என்று தேவானந்த் சொன்ன பாவனையில் அனைவரும் நன்றாகவே சிரிக்க ஆரம் பித்திருந்தனர்.

''நீங்க என்ன வேணும்னாலும் சொல்லிக்கோங்க பெரியண்ணா. ஆனா எனக்கென்னவோ ஜீவாண்ணா இந்த விஷயத்துல உங்களுக்கு எதிர்ப்பதமா இருப் பாருன்னு தான் தோணுது!'' என்ற தங்கையிடம், ''அட, நீ வேற ஏன் வினு அவருக்கு அதிசயமாக் கிடைச் சிருக்கற கொஞ்சம் நிம்மதியையும் கெடுக்கப் பாக்கற?'' என்றான் ஜீவானந்த்.

''அடடா, கடைசில ரெண்டு பேரும் சேர்ந்து இப்படி என் மூக்க அறுத்துட்டிங்களே!'' என்று தேவானந்த் புலம்ப, ''என்னமா, குடிக்க ஏதாவது கிடைக்குமா?'' என்று தனது தாயைப் பார்த்தான் ஜீவானந்த்.

''இதோ போறேன்பா. பேச்சு மும்முரத்துல உங்களுக்கு டிபன் குடுக்கறதப் பத்தியே மறந்துட்டேன்!'' என்று மீனாட்சி எழுந்து செல்ல, ''நான் என் கையால வெச் சுட்டுப் போன ரோஜாச் செடி மொட்டு விட்டிருக்குன்னு போன்ல சொன்னீங்களேம்மா, நான் போய் அதப் பாக்க றேன்!'' என்று தானும் சந்தோஷமாக எழுந்து சென்றாள் வினயா.

அதற்குப் பிறகு ஆண்கள் தொழில் விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டிருந்தார்கள்.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, தேங்காய் களை லோடுகளில் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள்,

உடனிருந்து அனுப்பிவிட்டு இரவு உணவுக்கு வருகிறே னென்று சண்முகம் எழுந்து செல்ல, அன்று பால் பண்ணைத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டிய நாளென்று தனது தம்பியைக் கையோடு அழைத்துக் கொண்டு போனான் தேவானந்த்.

''வா, கார்லயே போயிடலாம்!'' என்று ஜீவானந்த் அழைக்க, ''இதையெல்லாம் கணக்குப் பிள்ளையே பாத் துக்குவார்னு சொன்னா அப்பா கேக்கவே மாட்டேங் கறார்!'' என்று தானும் ஏறி அமர்ந்தான் தேவானந்த்.

''இல்ல தேவா, சம்பளம் குடுக்கற ஒரு நாளைக்குக் கஷ்டம் பாக்காம நாமே போய் நின்னு நல்லா வேலை செய்யறவங்களைக் கொஞ்சம் ஊக்குவிச்சா இன்னும் ஒரு மடங்கு வேலைய சந்தோஷமாவே செய்வாங்க.''

''அதுக்குத்தான் ரெண்டு மடங்கு சம்பளம் குடுக்க றோமே! அது பத்தாது?''

''அப்படிப் பணத்துக்காகப் பாக்கறவன் இன்னும் ஒரு நூறு ரூபாய் எங்காவது அதிகமாக் கிடைச்சா அங்க போயிட மாட்டானா? நம்மளுக்கு வேல செய்யறவன் நம்மகிட்ட நம்பிக்கையிருக்கறவனாவும், மரியாதை இருக்கறவனாவும் இருக்கணும். அப்பதான் நமக்கும் வேல பிரமாதமா நடக்கும்.''

''அப்பாவும் இதையே தான் சொல்லிட்டிருக்கார். அவருக்குத் தோப்பு விவசாயம்னு அதப் பாத்துக்கறதே சரியா இருக்கு. நான் ஒருத்தன் என்னதான் செய்ய முடியும்?''

''ஏன், ரெஸ்பான்ஸிபிள் போஸ்ட்டுக்கு ஒருத்தர எடுத்துப் போட வேண்டியதுதான?''



''அப்படித்தான் செஞ்சாகணும் ஜீவா. நூறு பேர் வேல செஞ்சுட்டிருந்த ஃபார்ம்ல இன்னைக்குக் கிட்டத்தட்ட ரெண்டு மடங்கு ஆளுங்க அதிகமா வேல செய்யறாங்க. ஆனா நீ மட்டும் இருந்தா எல்லாத்தையும் சமாளிச் சுடலாங்கற தைரியம் எனக்கு நிறையவே இருக்கு. அதோட...''

''சரி, இப்ப வேலயப் பாக்கலாமா?''

ஆமாம், இதற்கு மேல் எதையும் பேச விட மாட்டானே என்று எரிச்சல் வந்தாலும், அப்போதைக்கு மேலே எதையும் பேசாமல் தம்பியுடன் சேர்ந்து வேலையைப் பார்க்க ஆரம்பித்தான் தேவானந்த்.

# 3

''வினயா.''

''என்னமா?''

''சீக்கிரம் போய்க் கிளம்புமா, அப்புறம் ஜீவா லேட் டாயிடுச்சுன்னு சொன்னா நீ சாப்பிடாமயே போறேன்னு நிப்ப.''

இருந்திருந்து ஜீவாண்ணாவா அப்படிச் செய்ய விடு வார் என்று நினைத்த வினயா எதற்கும் நாம் சற்று முன்னதாகவே கிளம்பித் தயாராக வந்து அமர்ந்து கொள்ளலாமென்று உடனே எழுந்து சென்றாள்.

முதல் நாளான நேற்றைப் போல இல்லாமல் இன்று கல்லூரிக்குச் செல்வதை நினைத்தாலே மிகவும் ஆவலாக இருந்தது வினயாவிற்கு.

ஜீவாண்ணாவோ மிகவும் பங்சுவாலிட்டி பார்க்கிறவர். எக்காரணத்தைக் கொண்டும் நம்மால் தாமதமாகி விடக் கூடாதென்று அரை மணி நேரத்தில் கிளம்பிப் புறப்படத் தயாராக வந்து அமர்ந்திருந்தாள் வினயா.

''வினு.''

''என்ன டாடி?''

''இன்னும் பதினஞ்சு நிமிஷத்துல கிளம்பணுமாம். சாப்பிடலாம், வாம்மா.''

''வர்றேன் டாடி!'' என்று வினயா தனது தந்தையுடன் டைனிங் ஹாலுக்கு வரவும், ஜீவானந்த், தேவானந்த் இருவரும் பேசிக் கொண்டே சாப்பிட வரவும் சரியாக இருந்தது.

''என்ன வினு, கிளம்பி ரெடியா உக்காந்திருக்க, நேத்து இந்நேரம் போகவே மாட்டேன்னு ரகள பண்ணிட்டு, இன்னைக்கு அப்படியே ஆப்போஸிட்டா மாறிட்ட?'' என்று தங்கையைப் பார்த்தான் தேவானந்த்.

''நீங்க கேக்கறதைப் பாத்தா நான் காலேஜ்க்குப் போகாம இருந்தா தான் சந்தோஷப் படுவீங்க போலிருக்கு.''

''அட, எப்படிக் கரெக்டா சொல்லிட்ட?''

''பின்ன உங்களுக்குத் தான் யாரு நிம்மதியா இருந்தாலும் புடிக்காதே, உங்கள மாதிரியே எல்லாரும் கல்யாணத்தப் பண்ணிக்கணும்னு இருக்கீங்க. அப்படித்தான்



வித்யாவையும் மாட்டி விட்டீங்க. என்ன ஜீவாண்ணா, நீங்க என்ன சொல்றீங்க?''

எதுவும் பேசாமல் சில வினாடிகள் தங்கையைப் பார்த்தவன், ''நோ கமெண்ட்ஸ்!'' என்றான்.

சிறிது நேரத்தில் அனைவரும் சாப்பிட்டு முடித்திருக்க, ''இதோ இப்ப வந்துட்றேண்ணா!'' என்று தன்னறைக்குச் சென்றாள் வினயா.

''ஜீவா.''

தந்தை தன்னை அழைக்கத் திரும்பிப் பார்த்தான் ஜீவானந்த்.

''சொல்லுங்கப்பா.''

''போலீஸ் வேலையே சவால் நிறைஞ்சது. அதுலயும் நீ நினைச்சது நடக்காம நிம்மதியாத் தூங்கக் கூட மாட்ட...''

எதையோ சொல்லத் தொடங்கி விட்டுத் தயங்கும் தந்தையைப் பார்த்தான்.

''நீ இந்தத் துறைல சாதிக்கறதையெல்லாம் பாக்கும் போது என்னதான் எங்களுக்கு மனசுக்குள்ள ரொம்பப் பெருமையா இருந்தாலும், அதே சமயம் ரொம்ப பயமாவும் இருக்குப்பா. அதோட இப்ப வினுவும் அங்க உங்கூட இருக்கா...''

''சொல்லுங்கப்பா.''

''உனக்குச் சொல்ல வேண்டியதே இல்லன்னு தெரியும்பா. ஆனாலும் கொஞ்சம் கவனமாப் பாத்துக்கோ. உனக்கு ஏதேதோ மிரட்டல் கால்ஸ் நிறைய வருமே, அதனால தான் இதக்கூட சொல்றேன். மத்தப்படி நீ

எங்கள விடக்கூட பிரமாதமா பாத்துக்குவேன்னு தெரியும்பா...''

''தேவையில்லாம மனசப்போட்டுக் குழப்பிக்காதீங் கப்பா. எனக்குன்னு சில கொள்கைகள் இருக்கு. அவ் வளவுதான். அதோட நீங்க எதிர்பார்க்கறதும் எல்லாமே நடக்கும். அங்க எங்கூட இருக்கற வினு மட்டும் கிடையாது, இங்க இருக்கற உங்க எல்லாரோட நலனும் கூட எனக்கு ரொம்ப முக்கியமானது தான்.''

''ஆனா அப்படி நீ உன் வேலைய மட்டும் பாத்துட் டிருந்தா பெத்தவங்களான எங்களுக்கும் சில ஆசைகள் இருக்குமல்லப்பா.''

''நிச்சயமாப்பா. திரும்பவும் சொல்றேன், நீங்க எதிர் பார்க்கறது எல்லாமே நல்லவிதமா நடக்கும். ஆனா அதுக்குன்னு நேரம் வரணும்னு சொல்றேன். அவ்வளவு தான்.''

தனது வேலையில் தந்தைக்கு அவ்வளவாக விருப்ப மில்லா விட்டாலும், அதை நேரடியாகச் சொல்ல முடி யாமல் அவர் தயங்குவது ஜீவானந்துக்குப் புரியவே செய்தது.

நல்ல வேளையாகத் தந்தை அதை நேரடியாகச் சொல்லி விடவில்லை என்றும் நினைத்துக் கொண் டான். அவர் ஒன்றைச் சொல்லி அதைத் தான் மறுப்பதாக இருக்க வேண்டாமே.

சமையலறையில் இருந்து காபி ட்ரேயுடன் தனது தாய் வர, அதிலிருந்து தானும் ஒரு கப்பை எடுத்துக் கொண்டான் ஜீவானந்த்.



''வினுவுக்காகத்தான் நீயும் வந்திருக்க. இல்லையா ஜீவா?'' என்று கேட்ட தாயிடம், ''என்னமா, சொல் லுங்க,'' என்று கேட்டான்.

''உனக்கும் ஒரு வீடு இருக்கு, வீட்ல எல்லாரும் இருக்காங்கன்றதையும் மறந்துடாதப்பா.''

எப்படி வீட்டிலிருப்பவர்கள் அனைவரும் ஒரே மாதிரி இருக்கிறார்களென்று ஜீவானந்தால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''அந்தக் காலத்துல போருக்காக வீட்டுக்கொரு ஆண் மகனை எல்லாத் தாய்மார்களும் வீரத் திலகமிட்டு சந்தோஷமா அனுப்பி வெச்சாங்களாம்மா. ஏன் நீங்களே கூட எனக்கும் அந்த மாதிரி வீர வரலாற்றுக் கதையெல் லாம் சொன்னதாத்தான், எனக்கு ஞாபகம்.''

''அது சரிதான்பா. அதோட நீயே சொல்றியே, அது அந்தக் காலத்துலதான்னு!'' என்றார் மீனாட்சி.

''எந்தக் காலமா இருந்தா என்னமா, நீங்க சொல்லிக் கொடுத்தது இல்லேன்னு ஆயிடுமா.''

''பின்ன என்னப்பா, வீடு நிறைய எல்லாரும் இருந் துட்டு இப்படி ஆளுக்கொரு மூலைக்குப் பிரிஞ்சு போனா மனசுக்குக் கஷ்டமா இருக்காதா?''

தாய் சொல்ல வருவது புரியவே செய்தாலும், ''நீங் களுமாம்மா?'' என்றான் ஜீவானந்த்.

''பின்ன என்னப்பா, நிறைய வருஷங்களாவே நீ வீடுன்னு ஒண்ணு இருக்கறதயே மறந்துட்ட. அதுக்கப் புறம் வித்யாவுக்குக் கல்யாணம் முடிஞ்சு அவளும் தூரமாப் போய்ட்டா. இப்பக் கடைசியா வினுவும் படிக்கறதுக்காக அங்க உங்கூட வந்துட்டா.

''இங்க தேவாவும், உங்கப்பாவும் சாப்புட்றதுக்காகவும் தூங்கறதுக்காகவும் மட்டும்தான் வீட்டுக்கு வர்றாங்க.''

''சரிதான்மா, அப்ப நீங்களும் அங்க நம்ம வீட்டுக்கு வந்துடுங்க.''

''அப்படி எல்லாத்தையும் போட்டுட்டு வர முடிஞ்சாப் பரவாயில்லையேப்பா. அதோட இங்க உங்கப்பாவுக் குத்தான் எல்லாமே நேரா நேரத்துக்குச் சரியா நடந்தாக ணுமே.''

''என்ன, என்னப்பத்தின பேச்சு அடிபடுது,'' என்று சண்முகம் கேட்க, ''எல்லாம் உங்களப் பத்தின புகழ் தான்பா!'' என்று வந்தாள் வினயா.

''அதெல்லாம் காதுல விழுந்ததுமா!'' என்றவர், ''இனி மேல் நீ அங்கயும், இங்கயும் மாறி மாறி இருமா. ஏன்னா வினு அங்க இருக்காள்ல!'' என்று மனைவியைப் பார்த்துச் சொன்னார் சண்முகம்.

''வாவ்! தேங்க்யூ டாடி!'' என்ற வினயா, ''அது சரிதான், அண்ணி வந்ததுக்கப்புறமே நீங்க எவ்வளவோ ஃப்ரீ ஆயிட்டிங்க. இல்லையாம்மா?'' என்றாள்.

மேலும் சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்த பிறகே அண்ணனும் தங்கையும் கிளம்பினர்.

## 4

''ஏய் ஸ்ரீநிதி, என்ன பண்ணிட்டிருக்க?''



''நான் சும்மாதான் இருக்கேன் சங்கரண்ணா.''

''அப்பாடா! முதல் தடவையா உண்மைய ஒத்துக்கற.''

''அண்ணா! ப்ளீஸ் ஏதாவது படத்துக்குப் போலாமா?''

''அடடா, சும்மா இருக்காம நானே கிளப்பி விட்டுட் டேனா!'' என்று சங்கர் புலம்ப, அப்பொழுது ஹாலுக்கு வந்த அபிநயாவிடம், ''அபி! உனக்கு ஒண்ணு தெரியுமா? நாம இப்ப சினிமாவுக்குப் போகப் போறோம்!'' என்று சந்தோஷமாகச் சொன்னாள்.

''சினிமாவுக்கா, என்ன படம்?''

''அதெல்லாம் இல்லமா, அவ கிடக்கறா. எனக்கு வேற வேலையிருக்கு!'' என்றான் சங்கர்.

''ப்ளீஸ் போய்ட்டு வரலாமே!'' என்று அபிநயாவும் சொல்ல, ''அபி! நீயா!'' என்று ஆச்சரியப்பட்ட ஸ்ரீநிதி மீண்டும் தனது அண்ணனை வற்புறுத்த ஆரம்பித்தாள்.

சில வினாடிகளில் சங்கரும் சரியென்று ஒத்துக் கொள்ள, உடனே என்ன படமென்று முடிவு செய்வதில் பேச்சு திசை மாறியது.

''வாணி தியேட்டர்ல போயிட்டிருக்கற அந்தப் படம் ரொம்ப நல்லா இருக்காம். பாத்துட்டு வந்த என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாரும் சொன்னாங்க. அதுலயும் அந்த ஹீரோவோட போலீஸ் ஆக்ட் ரொம்பப் பிரமாதமா இருக்காம்!'' என்று சொல்லிவிட்டு அதற்குப் பிறகே அபிநயாவின் முக பாவனையைக் கவனித்தாள் ஸ்ரீநிதி.

அபிநயாவிற்குக் காவல் துறை என்றாலே பிடிக்காது. அவளே அறியாத வயதில் நடந்த சில சம்பவங்களினால் அவளது மனதில் ஆழப் பதிந்திருக்கும் அந்தத் தீராத

வடு எப்பொழுதுதான் மறையுமோ என்று ஸ்ரீநிதியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''சரி, எந்தப் படமா இருந்தா என்ன, மூணு மணி நேரம் வேஸ்ட்டாப் போயிடுச்சேன்னு ஃபீல் பண்ணாத அளவுக்கு இருந்தா சரி!'' என்றாள் அபிநயா.

''வாவ்! அப்ப அந்தப் படத்துக்கே போலாமா?'' என்று குதித்த ஸ்ரீநிதி, ''சரி, அப்ப சீக்கிரம் கிளம்பலாம்.'' என்று அனைவரையும் அவசரப் படுத்தினாள்.

''நான் ரெடி தான்!'' என்று அங்கிருந்த சோபாவில் அமர்ந்த அபிநயா, அங்கு டீபாயின் மேலிருந்த ஒரு வார இதழை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தாள்.

''சரிதான். நீ எப்பவும் ஃப்ரெஷ்ஷாதான் இருப்ப. நான் போய் உடனே கிளம்பி வர்றேன். அண்ணா! நீங்களும் சீக்கிரமா போய்க் கிளம்புங்களேன்!'' என்று வேகமாகச் சென்றாள் ஸ்ரீநிதி.

வார இதழின் படங்களை மட்டும் பார்த்துக் கொண்டு பக்கங்களைப் புரட்டிக் கொண்டே சென்றவள், ஒரு பக்கத்தைத் திருப்பிவிட்டு மீண்டும் வேகமாக முன் பக்கத்திற்கு வந்தாள்.

இவர்...

அப்படியானால் நேற்றுக் காலையில் திடீரென்று வந்து தனக்கு அந்தப் பெரும் உதவியைச் செய்தவர் மிஸ்டர் ஜீவானந்த்! சூப்பரின்டெண்டெண்ட் ஆஃப் போலீஸ்!

கம்பீரமான அவரது தோற்றமும், முகத்தில் தெரிந்த ஒருவிதக் கடினமும் அவர் ஏதாவதொரு உயர்ந்த பதவியில் இருப்பவராகத்தான் இருக்க வேண்டுமென்று



தான் நினைத்தது சரியாகத்தான் போயிற்று என்று நினைத்துக் கொண்டாள் அபிநயா.

என்னதான் தன் மேல் ஒரு சிறு தவறு கூட இல்லையென்றாலும், அது வெளியாட்கள் யாருக்கும் தெரியாத பட்சத்தில், அதிலும் அந்தச் சேரி மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒட்டு மொத்தமாகப் பழியைத் தன் மேல் சுமத்தும் போது பார்ப்பவர்களுக்கு அதைத்தானே உண்மையென்று நம்பத் தோன்றும்.

அப்படியிருக்கும்போது அந்த இளைஞன் மட்டும் தக்க சமயத்தில் வந்து உதவாமல் இருந்திருந்தால்... என்று ஏற்கெனவே பலமுறை நினைத்து விட்டதைப் போல அப்பொழுதும் நினைத்து உடல் சிலிர்த்துப் போனாள் அபிநயா.

எப்படியோ அந்த இடத்திலிருந்து கிளம்பினால் போதுமென்று வந்து விட்டிருந்தவளுக்கு, அதற்குப் பிறகுதான் அவ்வளவு பெரிய உதவியைச் செய்தவனுக்கு ஒரு நன்றிகூடச் சொல்லாமல் விட்டு விட்டோமே என்று மனம் உறுத்த ஆரம்பித்திருந்தது.

தனது எண்ண ஓட்டத்தை விடுவித்து விட்டுத் தொடர்ந்து மேலே படிக்கத் தொடங்கினாள்.

பல வருடங்களாகக் காவல் துறைக்குச் சவாலாக இருந்த, பணத்திற்காக எதையும் செய்யும் பயங்கரமான கூலிப் படைக் கும்பல் ஒன்றை ஜீவானந்த் எஸ்.பி. கூண்டோடு பிடித்திருந்ததைப் பற்றிப் பெருமையுடன் பிரசுரித்திருந்தார்கள்.

அதற்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளையும் பட்ட துன்பங்களையும் தொடர்ந்து படிக்கப் படிக்க அதிலேயே மூழ்கிப் போய் விட்டிருந்தாள் அபிநயா.

அதிலும் சில நாட்களுக்கு முன் அனைத்து மீடியாக் களும் அதையே பிரதிபலித்ததும் அப்பொழுது பார்த்து அவளுக்கு நினைவுக்கு வந்தது. இந்த மீடியாக்களுக்கு வேறு வேலையில்லை. புதிதாக ஏதாவதொன்று கிடைத்து விட்டால் போதுமே என்று தான் அலட்சிய மாக நினைத்ததும்.

''அபி! கிளம்பலாமா?'' என்று ஸ்ரீநிதி வர, ''ஓ யெஸ்!'' என்று எழுந்து விட்டிருந்தாள் அபிநயா.

''இதோ அம்மாகிட்ட சொல்லிட்டு வந்துட்றேன்!'' என்று ஸ்ரீநிதி சென்று தனது தாயிடம் சொல்லிவிட்டு வர, ''ஒரு நிமிஷம்...'' என்று தானும் தனது பெரியம்மா விடம் சொல்லிவிட்டு வருவதற்காக உள்ளே சென்றாள் அபிநயா.

அவர் அருகில் சென்றிருந்தவள், ''எப்பதான் நீயெல் லாம் திருந்துவ?'' என்ற பெரியம்மா சுந்தரியின் வார்த் தைகள் புரியாமல் பார்த்தாள்.

''ஊரு சுத்தறதுக்கெதுக்கு இந்தப் பாடு பட்ற? ஒண் ணுமே தெரியாத மாதிரி முகத்த வெச்சுக்கிட்டு எல் லாரையும் கிளப்பி விட்ரு. ஏதோ உனக்குன்னு நாலு பணம் இருக்கவும் தப்பிச்ச.''

.............

''எப்ப உன் படிப்பு முடியும்னு இருக்கோம். முடிஞ் சதும் எவனாவது இல்லாதவனுக்குக் கட்டி வெச்சுட்டா உன் பணத்துக்காகவாவது சகிச்சுக்கிட்டு உங்கூடக் குடும்பம் நடத்துவான்.''

பணத்துக்காகச் சகித்துக் கொண்டா?



இதென்ன இப்பொழுது இப்படியெல்லாம் கூடப் பேச ஆரம்பித்து விட்டார்களென்று நினைத்த அபிநயாவிற் குக் கண்கள் கலங்கி விட்டிருந்தன.

ஏதோ போனால் போகிறதென்று சகித்து ஏற்றுக் கொள்ளும் அளவிற்குத்தான் தான் இருக்கிறேனா? இல்லையில்லை, இவர்களுக்கு ஏனோ வரவரத் தன்னைப் பார்த்தாலே பிடிக்காமல் போய்க் கொண்டிருக்கிறது. அப்படித் தான் செய்த தவறு தான் என்ன என்று நினைத் தவள் அதை அவரிடம் நேரடியாகக் கேட்டே விட்டாள்.

''ஓ, நீ என்னயே கேள்வி கேக்கற அளவுக்கு வந்துட் டியா? சரி. காரணத்தச் சொல்றேன். காது குளிரக் கேட் டுக்கோ. யாருக்கும் ஊழியம் பண்ணிட்டிருக்கணுங்கற அவசியம் எனக்கில்ல. என் குழந்தைகள விட ரெண்டு மடங்கு நல்லா உன்னப் பாத்துக்கணுமாம். அப்படின்னு உன் பெரியப்பா சொல்லிச் சொல்லியே உன்னப் பாத் தாலே எனக்குப் பிடிக்காமப் போயிடுச்சு. எல்லாத்துக்கும் மேல உன்னோட திமிர் பிடிச்ச நடத்தை எனக்கு உம்மேல இருக்கற கொஞ்ச நஞ்ச பாவ உணர்ச்சியையும் சேத்துக் கொன்னுடுச்சு!'' என்றாள்.

தனது பெரியம்மா சொல்லச் சொல்ல அதை உணர்ச்சி துடைத்த முகத்துடன் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள் அபிநயா.

''நான் என்ன கதையா சொல்லிட்டிருக்கேன்! வெளிய அவங்க ரெண்டு பேரும் உனக்காக வெய்ட் பண்ணிட் டிருப்பாங்க. கிளம்பு கிளம்பு!'' என்று அவர் சொல்லவும், ''அபி! சீக்கிரமா வா!'' என்று வெளியே இருந்து ஸ்ரீநிதி யின் குரல் கேட்கவும் சரியாக இருந்தது.

வெளியே செல்வதற்காகத் திரும்பிய அபிநயா, ''ஒரு நிமிஷம்...'' என்ற சுந்தரியின் குரலில் நின்று மீண்டும் திரும்பி அவரைப் பார்த்தாள்.

''நான் சொன்னதையெல்லாம் போய் எல்லார்கிட் டயும் சொல்லி உம்மேல சிம்பதி கிரியேட் பண்ணிட் டிருக்காத! அதே சமயம் நான் சொன்னதையும் மனசுக் குள்ள வெச்சு ஒழுக்கமா நடந்துக்கோ.''

பதிலெதுவும் சொல்லாமல் அதே உணர்ச்சி துடைத்த முகத்துடன் அவரைப் பார்த்தாள் அபிநயா.

''ம்... இந்தத் திமிரத்தான்டி சொல்றேன், நீயெல்லாம் கண்டிப்பா அனுபவிப்ப.''

''சரிதான், அப்படியாவது உங்களுக்கு எம்மேல இருக்கற வெறுப்பும் கோபமும் கொஞ்சமாவது குறை யும்னா, நான் அது எவ்வளவு பெரிய துன்பமானாலும் சந்தோஷமா அனுபவிக்கத் தயார்.''

''உம்மேல இருக்கற வெறுப்பு குறையறதா? அதுவும் எனக்கு? அதுக்கு நாம ரெண்டு பேரும் குறைஞ்சது இன்னொரு ஜென்மம் எடுக்கணும்.''

அவருடைய பதிலில் விரக்தி கலந்த சிரிப்புடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள் அபிநயா.

ஆனால் அவளுடைய மனம் ஊமையாய் அழுது கொண்டிருந்தது.

என்னை மட்டும் இந்த உலகத்தில் தனியாகத் தவிக்க விட்டுவிட்டு நீங்கள் நிம்மதியாகப் போய்ச் சேர்ந்து விட்டீர்களே அம்மா என்று மனதிற்குள் கதறித் தீர்த்தாள்.



# 5

ஒரு வாரம் சென்றிருந்தது.

இப்பொழுதெல்லாம் கல்லூரிக்குச் செல்வதை நினைத் தாலே மிகவும் சந்தோஷமாக இருந்தது வினயாவிற்கு.

அதிலும் அன்றைக்குப் பிறந்த நாளன்று சற்று நன் றாகவே தனது தோற்றத்தில் கவனம் செலுத்தியிருந் தாள்.

''குட் மார்னிங்கா.''

''வாவ் வினயா! குட்மார்னிங்! என்ன இன்னைக்கு ரொம்ப க்யூட்டா வந்திருக்க?''

''ம்... பர்த்டே, ஸ்வீட் எடுத்துக்கோங்க.''

''அப்படியா, மெனி மோர் ஹாப்பி ரிட்டர்ன்ஸ் ஆஃப் தி டே!'' என்று ஒரு ஸ்வீட்டை எடுத்துக் கொண்டாள் அபிநயா.

''வயசக் கேக்கக் கூடாதுன்னு சொல்லுவாங்க, ஆனா லும் கேக்க...'' என்று அபிநயா முடிப்பதற்குள்ளேயே, ''பத்தொன்பது தொடங்குதுக்கா!'' என்றாள் வினயா.

கூடவே, ''டுவல்த் முடிச்சுட்டு காலேஜ் ஃபர்ஸ்ட் இயர் வந்திருக்கேன். நான் சொல்லலேன்னாலும் உங்க ளால என்னோட வயச கெஸ் பண்ண முடியாதா என்ன?'' என்றாள்.

''அது சரிதான்,'' என்ற அபிநயா, ''என்னைப் பேர் சொல்லியே கூப்பிடேன்!'' என்றாள்.

''பேர் சொல்லியா, அது நல்லா இருக்காதே!'' என்று வினயா தயங்க, ''அதெல்லாம் நல்லார்க்கும். பேர் சொல்லிக் கூப்புட்ற, அவ்வளவுதான்,'' என்று முடித்து விட்டிருந்தாள் அபிநயா.

அதற்குள் இருவரும் பேசிக் கொண்டே வகுப்பறைக்கு அருகிலேயே வந்து விட்டிருந்தனர்.

''நேரத்துலயே வந்துட்டேன். இன்னும் என் ஃப்ரண்ட்ஸ் யாரும் வந்திருக்க மாட்டாங்க. நீ வேணும்னா க்ளாசுக்குப் போ வினயா. நான் அவங்க வந்ததும் போய்க்கறேன்.''

''பரவாயில்லக்கா. நானும் அதுவரைக்கும் உங்ககூட இருக்கேன்!'' என்ற வினயா, ''ஸாரி! அக்கா வாபஸ்!'' என்று அவசரமாகச் சொல்ல, ''ம்... அது ஞாபகமிருக் கட்டும்!'' என்று தானும் சிரித்தாள் அபிநயா.

''நான் உங்ககிட்ட ஒண்ணு சொல்லலாமா?''

''சொல்லு வினயா.''

''நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க!'' என்று வினயா சொல்ல, ''அடடா! அபி, போதும் கீழே இறங்கி வா!'' என்று வானத்தை நோக்கிக் கை காட்டி அழைத்தாள் அபிநயா.

''என் க்ளாஸ் மேட் சொன்னது சரிதான்.''

''என்ன சொன்னாங்க?''

''நீங்கதான் காலேஜ் க்வீனாம். படிப்பிலிருந்து எக்ஸ்ட்ரா கரிகுலர் ஏக்டிவிட்டிஸ் வரைக்கும் எல்லாத் துலயுமே நீங்கதான் எப்பவும் ஃபர்ஸ்ட்டாம்.

''ஆனா அதப் பத்தியெல்லாம் உங்களுக்குப் பந்தா ஒருதுளி கூட இருக்காதாம்...''



''யாரு உங்கிட்ட ஒண்ணுமே இல்லாததப் போய் இப்படியெல்லாம் பயங்கரமா மிகைப்படுத்திச் சொன் னது?''

''சும்மா சொல்லாதீங்க. யாரோ ஒருத்தர்னா மிகைப் படுத்திச் சொல்ல வாய்ப்பிருக்கு, ஆனா அதையே எல் லாருமே சொல்லும்போது?''

''சரி, விடு வினயா!'' என்று சிரித்த அபிநயா, ''எனக்குத் தான் எல்லாமே தெரியும். நாந்தான் எல்லாத்துலயும் ஃபர்ஸ்ட் அப்பிடின்னெல்லாம் எப்பவும் யாராலேயும் சொல்ல முடியாது தெரியுமா!'' என்றாள்.

''உன் கலருக்கு நீ இன்னுங் கொஞ்சம் டார்க்கா டிரஸ் பண்ணினா பாக்க எடுப்பா இருப்ப வினயா.''

''அண்ணாகூட அதத்தான் சொல்லிட்டே இருக்கார். இந்த சண்டே போய் பர்ச்சேஸ் பண்ணணும். உங்க டிரஸ்ஸிங் சென்ஸ் ரொம்பப் பிரமாதமா இருக்கு அபி!'' என்று வினயா சொல்லிக் கொண்டிருக்கும்போதே அபிநயாவின் தோழிகள் வந்து விட்டிருந்தனர்.

''கமிங் சண்டேன்னா நானுங்கூட பர்ச்சேஸ் போக வேண்டியிருக்கு!'' என்ற அபிநயா, தனது தோழிகளின் அழைப்புக்குத் திரும்ப, ''சரி, திரும்பவும் பார்க்கலாம். பை!'' என்று அங்கிருந்து கிளம்பி விட்டிருந்தாள் வினயா.

அன்று விடுமுறை நாள்.

அரசாங்க விடுமுறை நாளாகவும் இருந்ததினால் அனைவரும் வீட்டில் தான் இருந்தார்கள். டி.வி. பார்த்துக் கொண்டே அனைவரும் அரட்டையடித்துக் கொண் டிருக்க, அபிநயா குளித்துவிட்டுப் போய்த் தனது தாயின் போட்டோவுக்கு முன்பாக நின்றிருந்தாள்.

என்றெல்லாம் மனது அமைதி யில்லாமல் தவிக்கிறதோ அன்றெல்லாம் தனது தாயின் அந்தப் பெரிய போட்டோவின் முன்பு நின்று தொழுவது அபிநயாவின் வழக்கம்.

நேரில்தான் தான் தாயிடம் பேசியது கிடையாது. ஏன், பார்த்தது கூடக் கிடையாது என்பதால், மற்றவர்கள் தனது தாயைப் பற்றிப் பெருமையாகச் சொல்லும் பொழுது மனதிற்குள் ஆதங்கப்பட்டுக் கொண்டாலும், தான் ஏன் இப்படி துரதிர்ஷ்ட வசமாகப் பிறந்தோம் என்று கவலையாக இருந்தாலும், அது முகத்தில் எதிரொலித்து விடாதவாறு அவர்கள் சொல்வதைச் சந்தோஷமாகக் கேட்டுக் கொள்வாள் அபிநயா.

''உங்கம்மாவும் உன்ன மாதிரிதான் அபிநயா. எல்லார் கூடவும் எவ்வளவு அன்பாவும், ஆசையாவும் பழகு வாங்க தெரியுமா! எத்தனை திறமையா வீட்டையும் பிஸினஸையும் நிர்வாகம் செய்தாங்க தெரியுமா! ஏழை பணக்காரங்கன்ற பாகுபாடு பாக்காம திறமைக்கும் வயசுக்கும் மதிப்புக் கொடுப்பாங்க தெரியுமா!'' என்று வேலைக்காரி பர்வதம் கதை கதையாகச் சொல்லிக் கொண்டே போவாள்.

ஆனால் அதைச் சுந்தரி பார்த்து விட்டால் அவ்வளவு தான். தன்னால் தான் அனைவருக்கும் பிரச்சனை என்று அதற்கும் சேர்த்து மனம் நொந்து நூலாகிப் போவாள் அபிநயா.

அந்த அளவிற்குப் பர்வதத்தைப் போட்டு வசை மொழிகளால் வறுத்தெடுத்து விடுவாள் சுந்தரி.

ஏனோ, அன்றைக்கு மனம் மிகவும் சோர்வாக இருக்க, எதையும் செய்யத் தோன்றாமல் அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள் அபிநயா.



சில வினாடிகளில் தனது மொபைல் ஒலிக்க, எடுத்துப் பார்த்தவள், புன்னகையுடன் அட்டெண்ட் செய்து பேச ஆரம்பித்திருந்தாள்.

''ஏய் வினு, என்ன பண்ணிட்டிருக்க? நான் ஒண்ண செய்யச் சொன்னா நீ ஒண்ண செஞ்சுக்கிட்டு... முதல்ல இந்தப் பக்கம் வா!'' என்று வேஷ்டியை மடித்துக் கட்டிக் கொண்டே தங்கையை நோக்கி வந்தான் ஜீவானந்த்.

''பருப்பு வெந்துடுச்சான்னு பாத்தேன். இதுக்கு ஏண்ணா திட்றீங்க?'' என்று வினயா நகர, அவசரமாகக் காய் இருந்த வாணலியைத் திறந்து பார்த்தான் ஜீவானந்த்.

''பாரு, ஒரு ரெண்டு நிமிஷம் பாத்துக்கோன்னு சொல் லிட்டுப் போனேன். அதுக்குள்ள காயைக் கருக வெச்சுட்ட, இரு, இதையெல்லாம் உன்னையே சாப்புட வைக்க றேன்.''

''அச்சச்சோ! பருப்பு அடிப் புடிக்கற வாசம் வருதுண்ணா. அத நீங்க முதல்ல பாருங்க. இல்லன்னா அதை எல்லாத்தையும் அப்புறம் நீங்க சாப்புட வேண்டிய தாயிடும்!'' என்று சொல்லிக்கொண்டே வினயா ஃபேன் ஸ்விட்சை ஆன் செய்ய வெங்காயச் சருகுகள் அனைத்தும் காற்றில் பறக்கத் தொடங்கி விட்டிருந்தன.

''முதல்ல ஃபேன ஆஃப் பண்ணு. ஒரு தடவ கூட்ற துக்குள்ளேயே உஷ் அப்பான்னு ஒரு மணி நேரம் உக்காந்துட்ட!'' என்றவன் பருப்பு இருந்த பாத்திரத்தைத் திறந்து பார்த்துவிட்டு, ''அப்பாடா! காய் மாதிரி இது கருகிடல. என் நல்ல நேரம் இல்லையா?'' என்று தங்கையைப் பார்த்துச் சிரித்தான்.

''ஸாரிண்ணா.''

''எதுக்கு?''

''என்னால உங்களுக்கொரு சாம்பார் கூடச் செஞ்சு குடுக்க முடியல.''

''அட, என்ன நீ இதுக்குப் போய் இப்படிக் கவலைப் படற? ஏதோ கெட்ட நேரத்துலயும் ஒரு நல்ல நேரம்னு நான் சந்தோஷப் பட்டுட்டிருக்கேன்.''

தனது அண்ணனின் பாவனையில், ''போங்கண்ணா!'' என்று சிரித்தவள், ''கொஞ்சம் சமாளிச்சுக்கற அளவுக் காவது சமையல் கத்துக்கோன்னு அம்மா எதுக்குச் சொன் னாங்கன்னு இப்பதான் புரியுது!'' என்றாள்.

''கொஞ்சம் சமாளிக்கற அளவுக்கா? வேண்டாம்மா. அதுக்கு இதுவே பெட்டர்!'' என்று ஜீவானந்த் தோசையைச் சுட்டு எடுத்துக் கொடுக்க, ''தேங்க்யூண்ணா!'' என்று வாங்கிக் கொண்டாள் வினயா.

''அண்ணா! இந்தாங்க. நீங்க வேணும்னா முதல்ல சாப்புடுங்க. நான் அப்புறம் சாப்புட்றேன்.''

''வயிறு நிறைய சாப்டுட்டு தெம்பா வந்து ஊத்திக் குடு. ஏன்னா நான் உன்னைவிட ஒரு ரெண்டு மடங் காவது அதிகமா சாப்புடுவேன்.''

''ஒரே டிபன் தாண்ணா. சமாளிச்சுக்குவீங்களா? இந்தத் தங்கம்மா எப்பவும் இப்படித்தான் அடிக்கடி ஜோலின்னு எங்காவது போயிட்றது. வேல சுத்தமாப் பிரமாதமா செய்வா. ஆன ஆள்தான் அடிக்கடி காணாமப் போயிடு வான்னு அம்மா, எப்பவும் சொல்லிட்ருப்பாங்க. அது சரியாதான் இருக்கு.''

தொடர்ந்து அரை மணி நேரத்தில் ஜீவானந்த் டூட் டிக்குக் கிளம்பத் தயாராக யூனிஃபார்முடன் வெளியே



வந்திருக்க, ''அண்ணா! நான் பர்ச்சேஸ்க்குப் போய்ட்டு வரட்டுமா?'' என்று தயக்கத்துடன் மெதுவாகக் கேட் டாள் வினயா.

''அதுக்கேன் இவ்வளவு பவ்யமா கேக்கற?''

''இல்ல, நான் இங்க இன்னும் வெளிய தனியா எங் கயும் போனதில்லையே. அதான்.''

''அது சரிதான். இப்பவே அங்க தோட்டத்துக்கு போன் பண்ணி நம்ம டிரைவரக் கார எடுத்துட்டு வரச் சொல் லிடலாம்.''

''வேண்டாம்ணா!'' என்று அவசரமாகச் சொன்ன தங்கையைப் பார்த்தான் ஜீவானந்த்.

''என்னோட சீனியர் அபிநயா பர்ச்சேஸ் போகணும்னு சொல்லிட்டிருந்தாங்க, அவங்ககூட வேணும்னா போய்ட்டு வரட்டுமாண்ணா?''

''நீ போகணும்னு டிஸைட் பண்ணினதுக்கப்புறம் நான் வேண்டாம்னு சொல்ல மாட்டேன். ஆனா இதுவரைக் கும் அவங்க ஒண்ணும் உன்னக் கூப்பிட்ட மாதிரி தெரியலையே.''

''நான் கூப்பிடுவேன்னு அவங்க இருப்பாங்கன்னு நினைக்கறேண்ணா.''

''சரி, எதுக்கும் என் மொபைலுக்குக் கூப்புடு. கதவ வந்து உள்ள பூட்டிக்கோ!'' என்று தனது அண்ணன் கிளம்ப, வெளியே சென்று பை சொன்னவள், அவர் கிளம்பியதும் வீட்டிற்குள் வந்தாள்.

உள்ளே வந்தவள் மொபைலை எடுத்து அபிநயா விற்கு அழைத்தாள்.

என்கேஜ்டு டோன் வர, சிறிது நேரம் கழித்து மீண்டும் முயன்றவள், அரை மணி நேரத்தில் கிளம்பித் தயாராக இருப்பதாகச் சொல்லிவிட்டு மொபைலை வைத்தாள்.

சொன்னது போலவே அரை மணி நேரத்தில் கிளம்பி யிருந்தவள், தனது அண்ணனுக்கு அழைத்துப் பேசி னாள்.

சில வினாடிகளில், ''சரிண்ணா!'' என்று போனை வைத்தவள், அபிநயாவின் வரவுக்காகக் காத்திருக்க லானாள்.

## 6

சில வினாடிகளில் தனது மொபைல் ஒலிக்க எடுத்துப் பார்த்தவள், வேகமாகக் கதவைத் திறந்து வீட்டு கேட்டிற்கு வெளியே காத்திருந்த அபிநயாவை நோக்கிப் புன்னகையுடன் சென்றாள்.

''வாங்க அபி, ஏன் கார்லயே இருக்கீங்க? இறங்கி வாங்க.''

''இல்ல வினயா, பர்ச்சேஸ் முடிச்சுட்டு வரும்போது வேணும்னாப் பாக்கலாம். நீ ரெடியா?''

''நான் ரெடிதான். இதோ வீட்டப் பூட்டிட்டு வந்துட் றேன்!'' என்று சென்ற வினயா, ஒரு நிமிடத்தில் திரும்பி வந்தாள்.

முன் பக்கத்தில் தனக்குப் பக்க வாட்டுக் கார் கதவை அபிநயா திறந்துவிட, ஏறி அமர்ந்து கொண்டாள்.



''சாப்டாச்சா வினயா?'' என்று கேட்டுக் கொண்டே காரை ஸ்டார்ட் செய்தாள் அபிநயா.

''நான் சாப்டாச்சு அபி, நீங்க?''

''நானும் ஆச்சு.''

''வீட்ல என்னை எல்லாரும் வினுன்னு கூப்புடு வாங்க. நீங்களும் அப்பிடியே கூப்புடுங்களேன்.''

''சரி வினு, உங்க வீட்ல நீதான் செல்லப் பொண்ணா?''

''அது சரிதான், நாந்தான் வீட்டுக் கடைக்குட்டி.''

''ஓ! அப்ப அந்த ஸ்பெஷல் வேற இருக்கா?''

அபிநயா லாவகமாகக் காரை ஓட்டும் விதம் கண்டு வியந்த வினயா, அதை வெளிப்படையாகவே சொன் னாள்.

''நீ இப்படிச் சொல்ற, வீட்ல எல்லாரும் ஓவர் ஸ்பீட்னு திட்றாங்க வினு.''

''நானும் லாவகமா ஓட்றீங்கன்னுதான் சொன்னேனே தவிர, வேகமா ஓட்டலேன்னு சொல்லலையே.''

வினயாவின் வார்த்தைகளில் நன்றாகவே சிரித்த அபிநயா, ''நீ சரியான ஆள்தான் வினு!'' என்றாள்.

''நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க, கொஞ்சம் வேகத்தக் குறைச்சுக்கோங்களேன்.''

''ஷ்யூர்.''

சிரித்த முகத்துடன் உடனே சரியென்று ஒத்துக் கொண்ட அபிநயாவை ஏனோ அதற்குப் பிறகு மிகவும் பிடித்துப் போனது வினயாவிற்கு.

''நீங்க வீட்ல ஒரே பொண்ணா?''

''ஆமா வினு. பர்ச்சேஸ்க்கு எங்க போகலாம்? உனக்கு ஏதாவது ஐடியா இருக்கா?''

''முதல்ல உங்க சாய்ஸ் அபி.''

''ஓகே.'' என்ற அபிநயா, அடுத்த பத்து நிமிடங்களில் ஒரு பெரிய துணிக்கடையின் கார் பார்க்கிங்கில் சென்று காரை நிறுத்தியிருந்தாள்.

கடைக்குள் சென்றிருந்த இருவரும் கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்தில் தங்களுக்குப் பிடித்தவற்றைத் தேர்ந் தெடுத்திருந்தார்கள்.

''வினு! இனி உன் சாய்ஸ்!'' என்று அபிநயா சொல்ல, வினயா சொன்ன கடைக்கு அடுத்ததாகச் சென்றார்கள்.

அவர்கள் சென்ற அந்தக் கடையின் கார் பார்க்கிங் நிரம்பி விட்டிருந்ததால், ஒரு பொது நிறுத்தத்தில் காரைப் போட்டு விட்டு இருவரும் பிளாட்பாரத்தில் நடக்க லானார்கள்.

இருவரும் ஜாலியாகப் பேசிக் கொண்டே நடந்து கொண்டிருக்க, திடீரென்று, ''வினு! சீக்கிரம் வாயேன்!'' என்று அடிக்குரலில் மெதுவாகச் சொன்னாள் அபிநயா.

''ஏன் அபி?''

''கடைக்குள்ள போய்ட்டுச் சொல்றேன், வா!'' என்று குனிந்தபடி முணுமுணுத்த அபிநயாவின் செய்கை புரியா விட்டாலும் அவள் சொன்னபடி செய்தாள் வினயா.

வேகமாக நடந்து வந்ததில் சில வினாடிகளிலேயே இருவரும் கடைக்குள் வந்திருக்க, ''உஷ்... அப்பாடா!'' என்று பெருமூச்செறிந்தாள் அபிநயா.



என்னவென்று கேட்கத் தோன்றினாலும் அபிநயாவே சொல்லட்டுமென்று பேசாமல் இருந்தாள் வினயா.

அவர்கள் கேட்ட மெட்டீரியல்ஸை எடுப்பதற்காகக் கடை ஊழியர்கள் சென்றிருக்க, அவள் எதிர்பார்த்தது போலவே தானாகவே அந்தப் பேச்சை எடுத்தாள் அபிநயா.

''இப்ப நாம பார்த்தோமே பொறுக்கிகள, கொஞ்ச நாளா அவங்களோட டார்ச்சர் ரொம்பவும் அதிகமா யிடுச்சு வினயா.''

''யாரு அவங்க?''

''தெரியல. ஆனா அதுல ஒருத்தனோட அப்பா அரசியல்ல ஒரு பெரிய புள்ளியாம். அந்தத் திமிர்ல தான் குதிச்சுட்டிருக்காங்க. ஆரம்பத்துல நீ என்ன பெரிய இவனா, போடான்னு தான் நானும் இருந்தேன். ஆனா இப்பப் போகப் போக அவனோட தொல்லை ரொம்பவும் அதிகமாயிடுச்சு.''

''உங்க வீட்டுக்குத் தெரியுமா?''

''இல்ல, தெரியாது. சொல்லாமல் சரியாயிடும்னு தான் சொல்லாம இருக்கேன்!'' என்று வினயாவைப் பார்த் தவள், அப்படிச் சொல்ல வேண்டிய நிலை வந்தால் பெரியம்மா சுந்தரியின் வார்த்தைகள் எந்த மாதிரி இருக்குமோ என்று அபிநயாவிற்கு மனதிற்குள் மிகவும் பயமாகத்தான் இருந்தது.

அதற்குள் அவர்கள் கேட்ட கலெக்ஷன்ஸ் வந்திருக்க, இருவரின் கவனமும் அதில் சென்றிருந்தது.

''எதுக்கும் ரொம்ப நேரம் கழிச்சே வெளிய போலாம் வினு. அவனுக வெளிய வெயிட் பண்ணிட்டிருந்தாலும் இருப்பானுக.''

''சரி அபி!'' என்று துணிகளை ரசித்துக் கொண்டே சொன்ன வினயா, ''எப்பயிருந்து உங்களுக்கு இந்தப் பிரச்சன?'' என்று கேட்டாள்.

''ஒரு மூணு மாசத்துக்கு முன்னாடி என் க்ளாஸ் மேட்டோட அக்கா கல்யாணத்துக்குப் போயிருந்தேன். அப்ப தான் இவன மாப்பிள்ளை ஸைட்ல எப்படியோ சொந்தம்னு என் ஃப்ரண்ட்ஸ் எனக்கு இன்ட்ரட்யூஸ் பண்ணி வெச்சா, ஐ மீன் ஃப்ரண்ட்ஸ் எல்லாருக்குமே.''

''ஓ, அப்ப அவங்ககிட்டயாவது இவனப்பத்தி சொல்லிப் பாருங்களேன்.''

''எங்க? அவங்க வீட்லயே இவனோட ஃபேமிலிய ஒரு ஸ்பெஷல் கெஸ்டா தான் கல்யாணத்துக்கு அழைச்சிருக்காங்க. மத்தப்படி அவங்களுக்குள்ள ரிலேஷன் ஷிப்பெல்லாம் எதுவும் கிடையாது.''

மெதுவாகப் பேசிக் கொண்டே இருந்தாலும், இருவரும் துணிகள் சிலவற்றையும் செலக்ட் செய்திருக்க, கடை ஊழியர்கள் எதுவும் சொல்லிவிடவில்லை.

''அவகிட்ட ஒரு தடவ லைட்டா ஆரம்பிச்சதுக்கே, அச்சச்சோ! என்னால தான் உனக்கு இவ்வளவு பெரிய பிரச்சன, நான் இப்ப என்ன செய்யட்டும்னு அவ எனக்கு மேல புலம்ப ஆரம்பிச்சுட்டா. அதுக்கப்புறம் நான் அவகிட்ட இந்த விஷயத்தப் பத்திப் பேசறதையே விட்டுட்டேன்.''

இருவரும் சேர்ந்து நிறைய கலெக்ஷன்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு மேலும் இரண்டு மணி நேரம் கழித்தே வெளியே வந்தார்கள்.



யதேச்சையாக அபிநயாவைப் பார்த்த வினயாவிற்கு அவளுடைய கண்கள் பயத்துடன் சுற்றும் முற்றும் பார்ப்பது தெரிய, அந்தப் பொறுக்கிகளின் மேல் இருந்த கோபம் இன்னும் அதிகம் தான் ஆனது அவளுக்கு.

ஆனாலும் ஏற்கெனவே பயந்து போயிருக்கும் அபிநயா விடம் அதைக் காட்டிக் கொள்ளாமல் வேறு விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டு வந்தாள்.

இருவரும் பாதி தூரம் வந்திருக்க, அபிநயா பயந்தது போலவே அவர்கள் வந்து பாதையை மறைத்திருந் தார்கள்.

''ம்... அப்புறம் அபி, இப்படி என்னப் பாத்துட்டே பார்க்காத மாதிரி போனா எப்படி? நான் உனக்காக எவ்வளவு ஏங்கிட்டிருக்கேன்னு திரும்பத் திரும்பச் சொல்லிட்டே இருக்கணுமா உனக்கு?''

அவனை முறைத்தபடி அபிநயா வேகமாக நடக்க, வினயாவும் அவளுடன் சேர்ந்து நடந்தாள்.

ஆனால் அவர்களின் வேகத்திற்கு அந்தத் தடியன்களும் ஈடு கொடுத்ததோடல்லாமல், அவர்களுக்கு முன்னே வந்தும் நின்றிருந்தார்கள்.

''இது யாரு புதுசா? ஆனாலும் உங்கூட சேர்றவங்க எல்லாருமே உன்ன மாதிரியே செம ஃபிகராதான் இருக்காங்க.''

சினிமாப்பட ஹீரோ மாதிரி அதிநாகரிக உடையில் எல்லை மீறிப் பேசும் ஒவ்வொருவனுடைய கன்னத்திலும் ஓங்கி ஒரு அறை கொடுக்கத் தோன்றிய உந்துதலை மிகவும் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள் அபிநயா.

இருவரும் காருக்கு அருகிலேயே வந்திருக்க, காருக்குள் ஏறிவிடாமல் வந்து குறுக்கே நின்றிருந்தவர்களின் வார்த்தைகள் இப்பொழுது எல்லையைக் கடந்திருந்தன. அவற்றைக் காதால் கேட்கக் கூட முடியாத அளவிற்குப் பெண்கள் இருவருக்கும் உடல் கூசிப் போனது.

அவ்வளவு நேரமாகப் பேசாமல் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த அபிநயாவிற்கு எங்கிருந்து அவ்வளவு கோபம் வந்ததோ, ''தள்ளுங்கடா பொறுக்கிகளா! இல்லன்னா செருப்பு பிஞ்சுடும்!'' என்று கட்டுக்கடங்காத கோபத்தில் உச்சஸ்தாயியில் கத்தியிருந்தாள்.

''அட! செருப்பு பிஞ்சிடுமாம் மச்சா!'' என்று ஒருவன் சொல்ல, ''பாவம் பழைய செருப்பு போலிருக்கு!'' என்றான் மற்றொருவன்.

சற்றுத் தள்ளி நின்றிருந்த இன்னொருவனும் கிண்டலாக எதையோ சொன்னதில் அனைவருடைய கவனமும் அவன் பக்கம் சென்றிருந்த அந்த வினாடியைப் பயன்படுத்திக் கொண்டு இருவரும் காருக்குள் ஏறி அமர்ந்திருந்தார்கள்.

''ஓ கார்ல ஏறிட்டா நாங்க கார எடுக்க விட்டாத்தான!'' என்று ஒருவன் கேலியாகச் சிரிக்க, தனது கோபத்தையெல்லாம் காட்டிக் கார் கதவை அறைந்து மூடினாள் அபிநயா.

''அப்பிடி நம்மள அடிக்கப் போறாங்களாம்டா!'' என்றவர்கள், மீண்டும் பழையபடி வந்து நின்றிருந்தார்கள்.



அதற்குள் தான் ஒரு வேலையைச் செய்திருந்தாள் வினயா.

காரை ஸ்டார்ட் செய்து மேலே ஏற்றினால் என்னவென்று கூட தோன்றத் தொடங்கி விட்டது அபிநயாவிற்கு.

வினயா மொபைலில் எதையோ பார்த்துக் கொண்டிருக்க, குனிந்தபடி தலையில் கை வைத்து அமர்ந்திருந்தாள் அபிநயா.

சில வினாடிகளில் தனக்கு பதில் மெஸேஜ் வர, அதை ஒரு முறுவலுடன் பார்த்தாள் வினயா.

''பேசாம போலீஸைக் கூப்புட்டா என்ன வினு?'' என்று அபிநயா தன்னைப் பார்க்க, அதைத்தானே செய்திருக்கிறேனென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் வினயா.

திடீரென்று எதற்காகவோ அந்த ரவுடிகள் சற்றே நகர, ''அப்பா! தொலஞ்சானுங்கடா!'' என்று அந்த வினாடியே காரை ஸ்டார்ட் செய்திருந்தாள்.

காரை ஸ்டார்ட் செய்ததுதான் தாமதம். அதெப்படி எங்களைத் தாண்டிச் சென்று விடுவீர்களா என்று மீண்டும் வந்து பாதையை மறைத்து நின்றிருந்தார்கள்.

''சை'' என்று எரிச்சலுடன் அபிநயா காரை ஆஃப் செய்ய, ''இங்க எத்தன பேர் நடந்துட்டிருக்காங்க! யாராவது ஒருத்தராவது என்ன ஏதுன்னு கேக்கறாங்களான்னு பாருங்களேன்!'' என்றாள் வினயா.

''எப்பிடிக் கேப்பாங்க, அதான் பாக்கறதுக்கு ஒவ்வொருத்தனும் அக்மார்க் ரவுடியாவே தெரியறானுங்களே, ஸாரி வினு! என்னால உனக்கும் பிரச்சனை.''

''அட நீங்க வேற அபி! என்னால உங்களுக்குப் பிரச்சனைன்னு நான் ஃபீல் பண்ணிட்டிருக்கேன். நான் கூப்புடப் போய்த்தான் நீங்க பர்ச்சேஸ்க்கே வந்தீங்க.''

வினயாவிற்குப் பதில் சொல்வதற்காக வாயைத் திறக்கப் போன அபிநயா, அதற்குள் தனது மொபைலுக்கு அழைப்பு வர அட்டெண்ட் செய்து பேசினாள்.

அபிநயா பேச ஆரம்பித்து ஐந்து நிமிடங்கள் ஆகியிருக்க, அதே சமயம் வெளியே இருந்தவர்களின் சத்தம் இன்னும் அதிகமாகியிருந்தது.

''சரி, நான் திரும்பவும் கூப்புடட்டுமா?'' என்று போனை வைத்தவள், ''இனி லேட் பண்ணாம போலீஸைக் கூப்புட வேண்டியதுதான்!'' என்று சொல்லவும் போலீஸே அங்கு நேரில் வரவும் சரியாக இருந்தது.

''டேய் டேய்! போலீஸ்டா!'' என்று மற்ற நால்வரும் சுதாரித்துக் கொண்டு ஓடத் தயாராக, அதில் ஒருவன் மட்டும், ''நான் யாா்னு தெரியுமா? எங்கப்பா எவ்வளவு பெரிய ஆள் தெரியுமா?'' என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நின்றான்.

''டேய்! வேண்டாம்டா. இவர் ரொம்ப ஸ்ட்ரிக்ட். மாட்டுனா அப்புறம் அவ்வளவுதான். உள்ள போறது உறுதி!'' என்று ஓடியவர்களை போலீஸார் வளைத்துப் பிடித்திருந்தனர்.

அப்பொழுதும் அப்படியே நின்றிருந்த மந்திரியின் மகன் திரும்பி அபிநயாவைப் பார்த்து, ''போலீஸ்க்குப் போற அளவுக்கு வந்துட்டியா? கவனிச்சுக்கறேன்!'' என்றான்.



அதற்குள், ''டேய் வாடா! பொண்ணுங்ககிட்ட காட்ற வீரத்தையெல்லாம் அங்க வந்து காட்டு!'' என்று பிடித்திருந்தான் ஜீவானந்த் எஸ்.பி.

''ஸார், வேண்டாம். எங்கப்பா மினிஸ்டர். என்னப் புடிச்சுட்டுப் போனீங்கன்னா அப்புறம் அவர் சும்மா இருக்க மாட்டார்.''

''வாடா, டேய், பொறுக்கி! நீ போலீஸ்க்கு முன்னாடி நின்னு பேசற அளவுக்கு வந்துட்டியா?'' என்று அவனது கழுத்தைப் பிடித்துத் தள்ளியவன், மற்ற நால்வருடன் அவனையும் ஜீப்பில் ஏற்றச் சொன்னான்.

ஜீப்பில் ஏறாமல், அப்பொழுதும் அதே பாட்டை அவன் பாட, ''கவலைப்படாத! உன்ன ஸ்பெஷலாவே கவனிக்கச் சொல்றேன்!'' என்றவன் திரும்பினான்.

அதற்குள் அபிநயாவும், வினயாவும் காரை விட்டுக் கீழே இறங்கியிருந்தார்கள்.

''ரொம்ப நேரமா எங்ககிட்ட பிரச்சன பண்ணிட்டிருக்காங்க ஸார்!'' என்று அபிநயா சற்று மரியாதை கலந்த பயத்துடன் சொல்ல, அப்படியா என்பதைப் போல அவளையும் அவளுக்குப் பக்கத்தில் நின்றிருந்த தனது தங்கையையும் பார்த்தான் ஜீவாவனந்த்.

''இனிமேல் பிரச்சன பண்ண மாட்டாங்க, நான் பாத்துக்கறேன்!'' என்று உடனே அவர்களை அங்கிருந்து கிளம்பிக் கொள்ளச் சொன்னான்.

ஐயோ, இப்படியாகி விட்டதே என்று வினயாவிற்குத் தான் மனதிற்குக் கஷ்டமாக இருந்தது. வீட்டிலேயே கவனமாக இருக்கச் சொல்பவரிடம் போய் ஒரு பொது

இடத்தில் பிரச்சனையென்று அழைக்க வேண்டியதாகி விட்டதே என்றிருந்தது அவளுக்கு.

மேலும் பொது இடத்தில் சொந்தம் கொண்டாடு வதைத் தன் அண்ணன் எப்பொழுதும் விரும்ப மாட்டா ரென்பதால், அப்பொழுது அபிநயாவிடமும் வினயா எதையும் சொல்லிக் கொள்ளவில்லை.



## 7



''வாலு! என்ன பண்ணிட்டிருக்க?'' என்று ஹாலுக்கு வந்த ஜீவானந்த், ''போன சன்டே மாதிரி இன்னைக்கு சமையல் எதுவும் ட்ரை பண்ணலயா?'' என்று கேட் டான்.

''வேண்டாம்ணா, பேசாம ஹோட்டலுக்குப் போயிட லாம்.''

''ஹோட்டலா, உனக்குப் புடிக்காதே.''

''பரவாயில்லணா. நான் அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன்.''

''ஆனாலும் வேண்டாம், வீட்லயே செஞ்சுக்கலாம்.''

''திரும்பவும் வீட்லயா?''

''அட ஏன் இப்படிப் பயப்பட்ற? பிரட் ஆம்லெட் வெஜிடபிள்ஸ் போட்டுப் பண்ணிக்கலாம். அப்புறம் எக் ஆம்லெட். ஓ.கே.வா?''

''ஓகேண்ணா!'' என்று சந்தோஷமாகச் சொன்ன வினயா, ''நீங்க உக்காருங்கண்ணா. நான் செய்யறேன்!'' என்று வேகமாக எழுந்தாள்.



''ஏன், அப்படியென்ன உனக்கு எம்மேல கோபம்?'' என்ற தனது அண்ணனைப் பார்த்துப், ''போங்கண்ணா!'' என்று சிணுங்கினாள் வினயா.

''பின்ன திடீர்னு இப்படி ஒரு ஷாக் குடுத்தா எப்படித் தாங்கிக்க முடியும்? எங்கூட வந்து ஹெல்ப் வேணும்னா பண்ணு. மத்தத நான் பாத்துக்கறேன்.''

''பரவாயில்லண்ணா. நானே செய்யறேனே.''

''அடடா! சரி, வா. அப்ப உனக்கு நான் ஹெல்ப் பண் றேன்.''

''இருந்தாலும் நீங்க எதுக்குண்ணா இதெல்லாம் செய்யறீங்க?''

''ஏன்னா நானும் சாப்பிடணுமே!'' என்றவனை முறைத் தவள், ''அண்ணா...'' என்று தயக்கத்துடன் மெதுவாக அழைத்தாள் வினயா.

''ம்.''

''அண்ணா! நான் என் சீனியர, அதான் அபிநயாவ இன்னைக்கு நம்ம வீட்டுக்கு இன்வைட் பண்ணியிருக் கேன்.''

''என்ன நீ சன்டே ஆயிட்டா ஏதோ ஒரு ப்ரோகிராம் வெச்சுக்கற?''

அப்படிக் கேட்ட தனது அண்ணனைக் குற்ற உணர் வுடன் பார்த்தாள் வினயா.

''ஸாரிண்ணா. உங்ககிட்ட ஏற்கெனவே சொல்லாம விட்டுட்டேன்.''

''ஏற்கெனவே என்ன? இப்பக்கூட நீ எங்கிட்ட சொல்ல வேண்டாம்னுதான் சொல்றேன். நீ இப்படி பிஸியா

கிட்டே போறதப் பாத்தா அப்புறம் என்னை நீ யாருன்னு கேட்ருவியோங்கற பயந்தான்.''

''நானு! அதுவும் உங்கள?''

மேலும் ஒரு மணி நேரத்தில் வெளியே கிளம்பத் தயாராக ஜீவானந்த் வர, ''என்னண்ணா நீங்க?'' என்று சிணுங்கினாள் வினயா.

''என்ன?''

''இன்னொரு அஞ்சு நிமிஷத்துல அபி வந்துடுவாங்க. ஒரு ஹாய் மட்டும் சொல்லிட்டுப் போய்டுங்களேன்.''

''வெறும் ஹாய் மட்டும் தான் சொல்லணுமா? அப்ப நான் கிளம்பறேன்.''

''சரிசரி. நிறையவே பேசுங்க!'' என்று வினயா சிரித்துக் கொண்டே சொல்ல, ''அப்ப ஓ.கே.'' என்று ஹால் சோபாவில் அமர்ந்தான் ஜீவானந்த்.

''யாரோ ஒரு ஃபேமஸ் இண்டஸ்ட்ரியோட எம்.டி. மர்டர் கேஸ் விஷயமா இன்வெஸ்டிகேஷனுக்கு காலைல பதினோரு மணிக்குப் போகணும்னு சொல்லிட்டிருந் தீங்க. ஆனா இப்ப என்னவோ நான் சொன்னதுக்காக இருக்கற மாதிரி சொல்றீங்க?''

''சரி. அப்ப அப்படியே நினைச்சுக்கோ!'' என்ற ஜீவானந்த் தனது மொபைலுக்கு அழைப்பு வர அட்டெண்ட் செய்து காதில் வைத்தான்.

அதே சமயம் வெளியே கார் வந்து நிற்கும் ஓசை கேட்க, ''ஐய்! அபி வந்துட்டாங்க!'' என்று எழுந்து ஓடினாள் வினயா.

காரிலிருந்து அபிநயா இறங்கிக் கொண்டிருக்க, ''வாங்க அபி!'' என்று சந்தோஷமாக வரவேற்றாள்.



''வர்றேன் வினு!'' என்று கேட்டைத் தாண்டி உள்ளே கால் வைத்தவள், குரைத்துக் கொண்டே தன் மேல் பாய்வதைப் போல ஓடி வந்த நாயைப் பார்த்து ''ஐயய்யோ! என்னக் காப்பாத்து!'' என்று கத்திக் கொண்டே வினயாவின் பின்னே சென்று ஒளிந்து கொண்டாள்.

''அப்பா! இதென்ன பாக்கவே இவ்வளவு பயங்கரமா இருக்கு!'' என்ற அபிநயாவிடம், ''இது அண்ணாவோட பெட்!'' என்றாள்.

வினயாவின் ஒரு அதட்டலிலேயே அது உடனே அடங்கிவிட, ''வாங்க அபி!''ன்னு அபிநயாவை உள்ளே அழைத்து வந்தாள்.

''என்ன வினு, வீட்ல யாரும் இல்ல போலிருக்கு?''

''ஆமா, அபி. இங்க நானும் சின்ன அண்ணாவும் மட்டும்தான் இருக்கோம்!'' என்றவள், ''வாங்க அபி. உக்காருங்க!'' என்று ஹால் சோபாவைக் காட்டி அமரச் சொல்லி உபசரித்தாள்.

தனது அண்ணன் உள்ளே போன் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''வாங்க அபி, டிபன் சாப்பிடலாம்.''

''நான் சாப்டாச்சு வினு, நீ?''

''நானும் ஆச்சு.''

அதே நேரம் ஹாலுக்கு வந்த ஜீவானந்த், ''வாங்க!'' என்று அபிநயாவை வரவேற்றான்.

அங்கு ஜீவானந்த்தைப் பார்த்த அபிநயாவால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றிருந்தாள்.

''நீங்க...'' என்று அபிநயா தயங்கிக் கொண்டே கேட்க, ''என்னோட அண்ணா!'' என்றாள் வினயா.

நீ சொல்லவில்லையா என்பதைப் போல ஜீவானந்த் தங்கையைப் பார்க்க, ''ஸாரி அபி! நீங்க வீட்டுக்கு வரும் போது உங்களுக்கொரு சர்ப்ரைஸா இருக்கட்டுமேன்னு தான் நான் சொல்லல!'' என்றாள் வினயா.

''அது சரிதான். காபி போட்டுட்டு வர்றேன்னு போய்ட்டு டீ கொண்டு வருவா. சர்ப்ரைஸ்க்காகக் கொண்டு வந்திருப்பான்னு நினைச்சுக்க வேண்டாம்!'' என்ற தன்னைப் பார்த்து முறைத்த தங்கையிடம், ''நம்ம வீட்டு கெஸ்ட்டோட நலன்ல அக்கறை எடுத்துக்கறது நம்ம கடமையில்லையா? அதனால தான் சொன்னேம்மா. நீ ஒண்ணும் தப்பா எடுத்துக்காத!'' என்றான் ஜீவானந்த்.

''அப்ப நான் போட்ற காபி, டீ மாதிரி இருக்கும்னு சொல்றீங்களா?''

''அப்பிடிப் பாத்தா நீ போட்ற டீ காபி மாதிரி இருக் கணுமே! வேண்டாம்மா, அதெல்லாம் இப்ப எதுக்கு, வேண்டாமே!'' என்று பாவமாகச் சொன்ன ஜீவானந்தின் பாவனையில் நன்றாகவே சிரித்து விட்டாள் அபிநயா.

''இப்பப் போய் நான் காபி கலக்கப் போறேன். அத நீங்களும் குடிக்கறீங்க. என்னை இப்படியெல்லாம் பேசின உங்களுக்கு அதுதான் தண்டனை! என்ன அபி, நீங்க என்ன சொல்றீங்க?''

''அது சரிதான் வினயா!'' என்று அபிநயா சிரிக்க, ''அடடா, நான் இப்பக் கொஞ்சம் அவசரமா வெளியே கிளம்பியாகணுமே!'' என்றான் ஜீவானந்த்.



''அதெல்லாம் முடியாது, காபி சாப்டுட்டுதான் நீங்க கிளம்பணும்!'' என்று வினயா சொல்ல, ''ஆமாம், கண் டிப்பா நீங்களும் எங்களுக்குக் கம்பெனி குடுத்துத்தான் ஆகணும்!'' என்று அபிநயா தானும் சொன்னாள்.

''நிலம இப்பிடியாயிடுச்சே!'' என்ற ஜீவானந்த்திடம், ''நீங்க எதுவும் சொல்லாம இருந்திருந்தாக் கூடத் தெரியாது. சொல்லிட்டு இப்படி என்னை மட்டும் தனியா மாட்டி விட்டுட்டுப் போகணும்னு பாக்கறீங்களே, இது நியாயமா?'' என்று கேட்டாள் அபிநயா.

''ஹலோ, ரெண்டு பேரும் என்னைப்பத்தி என்ன நினைச்சுட்டிருக்கீங்க? இருங்க காபியும் இல்லாம, டீயும் இல்லாம வித்தியாசமான டேஸ்ட்ல ஒண்ணு தர்றேன்.''

''அச்சச்சோ! வேண்டாம் வினு. எதுவா இருந்தாலும் பேசித் தீர்த்துக்கலாம்!'' என்று அபிநயா பயந்தது போலச் சொல்ல, ''ம்... அந்தப் பயம் இருக்கட்டும்!'' என்றாள் வினயா.

காபி தயாரிப்பதற்காக வினயா உள்ளே செல்ல, தனக்கு எதிரில் அமர்ந்திருந்த ஜீவானந்த்திடம் தேங்க்ஸ் என்றாள் அபிநயா.

அப்படிச் சொன்ன தன்னை அவன் புரியாமல் பார்க்க, ''ரெண்டு கிரிட்டிக்கல் சிச்சுவேஷன்ஸ்ல நீங்க எனக்கு ரொம்பப் பெரிய ஹெல்ப் செஞ்சும் கூட அப்ப நான் இருந்த நிலைல உங்களுக்கு ஒரு தேங்க்ஸ் சொல்லக் கூட எனக்குத் தோணாமப் போயிடுச்சு!'' என்றாள்.

''அது என் கடமை. உன் இடத்துல யார் இருந் திருந்தாலும் நான் அதத்தான் செஞ்சிருப்பேன்.''

நீ எனக்குப் பத்தோடு பதினொன்றுதான் என்ற அவனது பதிலால் மனதிற்குள் கஷ்டமாக இருந்தாலும்

அவனுடைய ஒருமை அழைப்பால் மனம் முழுக்க ஒரு இதம் பரவுவதையும் உணர்ந்தாள்.

''அது சரிதான், நீங்க செஞ்ச அந்த ரெண்டு உத விக்கும் ரொம்ப நன்றி.''

அதே நேரம், ''இந்தாங்க அபி, ஸ்நேக்ஸ் எடுத்துக் கோங்க!'' என்று கையில் ப்ளேட்டுடன் வந்தாள் வினயா.

''ஆமா வினு, காபிக்கே இந்தப் பாடுன்னா அப்புறம் டிபன் சாப்பாடெல்லாம்?''

''இங்க வீட்ல வேலைக்கு ஒருத்தருக்கு ரெண்டு ஆளுங்க இருக்காங்க அபி. சன்டே ஆனா மட்டும் தான் அவங்க ஊருக்குப் போய்டுவாங்க. அதுவும் மேக்ஸிமம் சன்டே நாங்க இங்க இருக்க மாட்டோம். ஊருக்குப் போய்டுவோம், அதனாலதான்.''

''ஓ அப்ப சன்டே மட்டும் நீங்க இருந்திருந்தா உன்னோட சமையல்னு சொல்லு.''

''அது சரிதான். ஆனா இப்பப் பழகிப் போச்சு.''

''சரி, நான் சொன்ன மாதிரி செஞ்சு முடிச்சுட்டுக் கூப் புடுங்க!'' என்று மொபைல் போனை உள்ளே வைத்துக் கொண்டே வந்த ஜீவானந்த், ''நல்லா செய்யறதுக்குன்னு நினைச்சுக்க வேண்டாம். மோசமா செஞ்சாலும் சாப் புட்றதுக்கு!'' என்றான்.

''ஆனாலும் இன்னைக்கு நீங்க என்னை ரொம்பத்தான் ஓட்றீங்கண்ணா.''

''யாரு? நானு! உன் கையால லஞ்ச் செஞ்சு அவங்கள சாப்பிடச் சொல்லிப் பாரு. அப்புறம் நீ இருக்கற பக்க மாவது வருவாங்களான்னு பாக்கலாம்.



வினயா தனது அண்ணனைப் பார்த்துப் பொய்க் கோபத்துடன் முறைக்க, ''ஆனாலும் என்னை நீங்க ரொம்ப உயர்வா நினைச்சுட்டிருக்கீங்க. அதுக்கு ரொம்ப நன்றி!'' என்றாள் அபிநயா.

''என்னண்ணா, கிளம்பிட்டிங்க போலிருக்கு?''

''ஆமா வினு. உடனே கிளம்பணும்,'' என்றவன், ''நீ இருந்து கண்டிப்பா லஞ்ச் சாப்டுட்டுத்தான் போகணும்!'' என்று உண்மையான அக்கறையுடன் அபிநயாவைப் பார்த்துச் சொன்னான் ஜீவானந்த்.

''என்னண்ணா, நீங்க அவங்க போறதப் பத்தி இப் பவே சொல்றீங்க. அபி ஈவினிங் வரைக்கும் - ஏன், அதுக்கும் மேலயே கட இருந்துட்டு அப்புறமாத்தான் போவாங்க.''

''அது சரிதான். நீ செஞ்ச லஞ்ச்ச சாப்டுட்டு அப்புறம் எங்க போறது?'' என்ற தனது அண்ணனின் வார்த்தை களில், ''அண்ணா! உங்கள...'' என்று வினயா பல்லைக் கடிக்க, நன்றாகவே சிரிக்க ஆரம்பித்திருந்தாள் அபிநயா.

ஜீவானந்த் சென்று விட்ட பிறகு கூட மேலும் இரண்டு மணி நேரங்களுக்கும் மேலாகவே இருந்து விட்டு அதற்குப் பிறகுதான் கிளம்பினாள் அபிநயா.

அங்கு தான் இருந்த நேரம் முழுவதிலும் வினயா என்னதான் வெகுளியாகத் தனது குடும்பத்தினர் அனைவரைப் பற்றியுமே சொன்னாள் என்றாலும், அவள் பெருமையுடன் சொல்லிக் கொண்டே போனதில் பெரும்பான்மையான பேச்சு அவளது சிறிய அண்ணன் ஜீவானந்தனைப் பற்றியதாகத்தான் இருந்தது.

ஒருவேளை அவரைப் பற்றித் தெரிந்து கொள்வதில் தான் காட்டிய ஈடுபாடு தான் அதற்குக் காரணமோ என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

என்னதான் முதன் முறையாகப் பார்க்க நேர்ந்த போதே ஜீவானந்தின் தோற்றம் மனதிற்குள் முழுமையாகப் பதிந்து விட்டிருந்ததென்றாலும், அவனை மேலும் இரண்டு முறை பார்க்க நேரிட்டால் இப்படித் தன் மனம் முழுமையாகத் தன் வசம் இழந்து விடுமென்று அவள் நினைத்துக்கூடப் பார்த்திருக்கவில்லை.

அதிலும் அவரது பணியால் அவரைத் தனக்குப் பிடிக்காமல் அல்லவா போயிருக்க வேண்டும் என்றும் ஆச்சரியத்துடன் நினைக்கத் தோன்றியது.

அதிலும் ஜீவானந்த் தன்னைக் காவல் பணிக்காகவே முழுமையாக அர்ப்பணித்திருந்தான். நீதியையும் நேர்மையையும் காப்பாற்றுவதற்காக அது எவ்வளவு கடினமாக இருந்தாலும் துணிந்து நின்று போராடக் கூடியவனாகவும் இருந்தான். மேலும் அநியாயம் எங்கே நடந்தாலும் அது எந்த விதத்தில் நடந்தாலும் தட்டிக் கேட்கக் கூடியவன். குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தால் மட்டுமே நிம்மதியாகத் தூங்கக் கூடியவன்.

அதிலும் பெரிய மனிதர்கள் என்னும் வெறும் போர்வையில் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கும் பலருக்கும் கடவுளின் மேல் இல்லாத பயம் காவல் துறையின் மேல் இருப்பதை நிரூபித்துக் காட்டியிருந்தான் ஜீவானந்த்.

அவனது சட்டத்தின் பார்வையில் சிக்கிக் கொண்ட பல பேர் அந்த ஊரில் இருந்ததால், அவனுக்கு வேண்டியவர்களைவிட வேண்டாதவர்களே அதிகமென்று சொல்லலாம்.



நியாயம் ஒன்றுக்காக எந்த அளவிற்கு உழைக்கவும் தயாராகத் தனது பணியில் முழு ஈடுபாடும் அக்கறையும் உடையவனாக இருந்தான்.

இப்படி அவளுடைய அண்ணனைப் பற்றி இன்னும் மேலே மேலே வினயா சொல்லிக் கொண்டே போனது தான் மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்து கொண்டே இருந்தது அபிநயாவிற்கு.

# 8

''அபிநயா!''

தனது பெரியப்பா ரகுநாத் அழைக்க, ''இதோ வர்றேன் பெரியப்பா!'' என்று சொல்லிக் கொண்டே ஹாலுக்கு வந்திருந்தாள் அபிநயா.

''சொல்லுங்க பெரியப்பா.''

''உனக்கொரு வேலமா. நம்ம கம்பெனி வரைக்கும் போய்ட்டு வரணும்.''

''சரி பெரியப்பா, போய்ட்டு வர்றேன்.''

''நம்ம இன்கம் டேக்ஸ் ஃபைல்ஸ் தர்றேன். கொண்டு போய் சங்கர் கிட்ட குடுத்துட்டு நான் சில ஃபைல்ஸ் சொல்லியிருக்கேன். அத வாங்கிட்டு வா.''

''சரி பெரியப்பா!'' என்று அவர் கொடுத்ததை வாங்கிக் கொண்டு சென்றாள் அபிநயா.

''என்னம்மா அபி, கொஞ்சம் அளவான ஸ்பீட்ல போம்மா. இப்பக் கொஞ்ச நாளா உனக்கு எதிலும் ஒரு அவசரம் தான். வேண்டாம்மா, எல்லாத்துலயுமே பொறுமையா இருக்கணும். உங்கம்மா நளினி மாதிரி!'' என்று சொல்லிவிட்டுப் பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டார் ரகுநாத்.

எதைப் பற்றி அவளிடம் பேசக்கூடாது, கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டுமென்று நினைக்கிறாரோ, அதையே மறந்து பேசிவிட்டுப் பிறகு வழக்கம் போலக் கவலைப் பட்டுக் கொண்டார்.

ஏற்கெனவே ஒரு குறையைப் பற்றி ஏங்கிக் கொண் டிருப்பவளிடம் மேலும் அதையே தான் ஞாபகப்படுத்தி விட்டதற்காகத் தன்னையே நொந்து கொண்டார்.

தனக்குத் தொடர்ந்து பல வாரங்களாக இருந்து வந்த அந்தத் தடியன்களின் தொல்லை இந்தப் பதினைந்து நாட்களாகச் சுத்தமாக இல்லாமல் போயிருந்ததில் மன திற்குள் எவ்வளவோ நிம்மதியாக உணர்ந்தாள் அபிநயா. கூடவே எதையோ இழந்து விட்டாற் போன்ற ஒருவித வெறுமையையும்.

அந்த வெறுமைக்குக் காரணமும் ஜீவானந்தத்தை மீண்டும் பார்க்க முடியாததுதான்.

தான் அவரை நினைத்துக் கொள்வதைப் போல இல்லாவிட்டாலும் அதில் பத்தில் ஒரு பங்காவது அவர் தன்னைப் பற்றி நினைப்பாரா? இதே நிலை தொடர்ந் தால் எங்கே தன்னிடம் தெரியும் வித்தியாசத்தை மற்றவர்களும் கண்டு கொள்வார்களோ என்று மன திற்குள் பயந்துகூடப் போனாள் அபிநயா.



அரைமணி நேரத்தில் ரகுநாத் சொன்ன வேலையை முடித்துவிட்டு அவர் சொல்லியிருந்த ஃபைல்களுடன் திரும்பி வந்திருந்தாள் அபிநயா.

''பெரியப்பா! இந்தாங்க. நீங்க கேட்ட ஃபைல்ஸ்.''

கையிலிருந்த ஃபைலைக் கொடுத்துவிட்டு வெளியே செல்லத் திரும்பியவளை அழைத்தார் ரகுநாத். அவரது அழைப்பில் நின்று மீண்டும் திரும்பி அபிநயா அவரைப் பார்க்க, ''இந்த வருஷத்தோட உனக்குப் படிப்பு முடியுது, இனி அடுத்தது என்ன பண்ணலாம்னு இருக்க?'' என்று கேட்டார்.

''நீங்க என்ன சொல்றீங்களோ, அப்படியே பண்றேன் பெரியப்பா.''

''இது உன்னோட லைஃப்மா. உனக்குன்னு சில விருப்பு வெறுப்புகள் இருக்கணும்.''

அப்படியானால் முதலில் இந்த வீட்டை விட்டு எங்காவது போய்விடும் வரம் வேண்டுமென்று நினைத் துக் கொண்ட அபிநயா அதை வெளியே சொல்ல வில்லை.

.........

''நானும் சிலது நினைச்சுட்டிருக்கேன். ஆனா அது எல்லாத்துக்கும் முன்னாடி உனக்குன்னு உன்னைப் பெத்தவங்க விட்டுட்டுப் போன தொழில் இருக்குமா. அத நீ கத்துக்கத் தொடங்கணும். அப்பத்தான் நாளைக்கு உனக்கொரு வாழ்க்கை அமையும்போது தொழில உன் பேருக்கு மாத்தறதுக்கு சவுகர்யமா இருக்கும்.''

மேலும் ஐந்து நிமிடங்களில் தனது பெரியப்பாவின் அறையிலிருந்து வெளியே வந்த அபிநயா, மதிய

உணவை எடுத்துக் கொள்வதற்காக டைனிங் ஹாலுக்குச் சென்றாள்.

''வா அபிம்மா, சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா?''

''நானே எடுத்து வெச்சுக்கறேம்மா. இப்பதான உங்களுக்கு லஞ்ச் வேலையே முடிஞ்சிருக்கும். நீங்க போய் உக்காருங்க.''

''அப்புறம் நீ கால் வயிறு சாப்டுட்டுப் போயிடுவ.''

''உங்க சமையல அப்பிடிச் சாப்டுட்டுப் போக முடிஞ்சாப் பரவாயில்லையே!'' என்ற அபிநயா சாப்பிடுவதற்காக அமரப் போகவும், தன் பக்கத்தில் நின்று பேசிக் கொண்டிருந்த பர்வதம் திடீரென்று தலை சுற்றிக் கீழே சாயவும் சரியாக இருந்தது.

அடுத்த வினாடி இருக்கையை விட்டு எழுந்திருந்த அபிநயா கீழே விழப் போனவளைத் தன் கைகளால் பற்றி டைனிங் டேபிள் இருக்கையில் அமர வைத்திருந்தாள்.

சில வினாடிகளில் சமாளித்துக் கொண்டு, ''எனக்கு ஒண்ணுமில்லம்மா!'' என்று எழப் போன பர்வதத்தைத் தடுத்தாள் அபிநயா.

''பேசாம ஒரு அஞ்சு நிமிஷமாவது உக்காருங்கமா, இல்ல, படுத்துக்கறீங்களா?''

''இல்ல அபிமா. எனக்கு ஒண்ணுமில்ல. சொன்னாக் கேளு.''

''ஒண்ணுமில்லாமதான் விழப் போனீங்களாக்கும்! வேலைக்குதான் இன்னும் நாலு பேர் இருக்காங்களே! நீங்க முன்னாடி இருந்து அவங்ககிட்ட வேல வாங்குங்கம்மா. இந்தாங்க. முதல்ல தண்ணி ஒரு டம்ளர் குடிங்க.''



அபிநயா கொடுத்த தண்ணீரை வாங்கிப் பர்வதம் குடிக்கப் போகவும், சுந்தரி டைனிங் ஹாலுக்கு வரவும் சரியாக இருந்தது.

திடீரென்று அங்கு சுந்தரியைப் பார்த்த பர்வதம் அவசரமாக எழப்போக, ''இன்னும் கொஞ்சம் கழிச்சே எழுந்திருங்க. இல்லன்னா திரும்பவும் விழுந்துடப் போறீங்க!'' என்று அவரைத் தடுத்தாள் அபிநயா.

''என்ன நடக்குது இந்த வீட்ல? ஒரு வேலைக்காரக் கழுத நீ! என்ன திமிரும் நெஞ்சழுத்தமும் இருந்திருந்தா நீ மேல உக்காந்திருப்ப! உன்ன மாதிரி ஈனப் பிறவிகளுக்காகத்தான் இதையெல்லாம் போட்டு வெச்சிருக்கோமாக்கும்?'' என்று சுந்தரி இன்னும் ஏதேதோ சொல்லித் திட்டிக் கொண்டே போக, ''இப்ப என்ன நடந்துடுச்சுன்னு இப்பிடித் திட்றீங்க? அவங்க மேல எந்தத் தப்பும் இல்ல. நாந்தான் அவங்க தல சுத்தி விழறதைப் பாத்துக் கைத்தாங்கலாகப் புடிச்சு மேல உக்கார வைச்சேன்!'' என்றாள் அபிநயா.

''இங்க நீயே ஒரு தண்டம், இன்னும் எல்லா வேலைக்காரிகளையும் அழைச்சுட்டு வந்து உக்கார வெச்சு உபசரி போ. அனாதக் கழுத நீ, எனக்கு முன்னாடி நின்னு பேசற அளவுக்கு வந்துட்டியா? இன்னொரு தடவ இந்த மாதிரி எதித்துப் பேசின... அப்புறம் நான் என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது, ஜாக்கிரத!'' என்று எல்லையற்ற கோபத்துடன் சுந்தரி பேசிவிட்டுச் சென்ற திசையையே தன்னிலை மறந்து பார்த்துக் கொண்டு நின்றாள் அபிநயா.

என்ன செய்வது, நிறைய மனிதர்கள் உணர்ச்சிகரமாக இருக்குமளவிற்கு, நியாயமாக இருப்பதில்லையே.

என்னதான் இந்த விஷயம் ரகுநாத்தின் காதுகளுக்கும் சென்றதென்றாலும், தான் இதைப் பற்றி மனைவியிடம் கேட்டால் இன்னும் கொஞ்சம் பிரச்சனையைப் பெரி தாக்கி அபிநயாவைப் புண்படுத்துவாளென்று பேசாமல் விட்டு விட்டார்.

அபிநயா எவ்வளவோ முயன்று வழக்கம் போலத் தன்னைக் காட்டிக் கொண்டாலும், அழுதழுது வீங்கிப் போயிருந்த முகமும் சிவந்து போய் விட்டிருந்த கண் களும் அவளை நன்றாகவே காட்டிக் கொடுத்தன.

எப்படியெல்லாம் வளர்ந்திருக்க வேண்டிய பெண்! பிறக்கும் முன்பே என்ன பாவத்தைச் செய்தாளோ, பாவம்! பிறந்ததிலிருந்து ஒவ்வொரு நாளும் சுடு சொற்களையும் கடும் முகத்தையும் மட்டுமே அனுபவித்துக் கொண் டிருக்கிறாளே என்று அவரால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இந்தக் குழந்தையைக் காலம் முழுக்கக் கண் கலங்க விடாமல் வைத்துக் காப்பாற்றுபவனின் கைகளில் பிடித்துக் கொடுக்க நீ அருள் புரிய வேண்டும் கடவுளே என்று மனதார வேண்டிக் கொண்டார் ரகுநாத்.

''குட்மார்னிங் அபி.''

''ஹாய் வினு! குட்மார்னிங். என்ன ரொம்ப நாளா உன்னைப் பார்க்கவே முடியல.''

''அத நான் கேக்கணும் அபி. சரி, அதெல்லாம் இருக் கட்டும். முதல்ல ஸ்வீட் குடுங்க.''

''அடப்பாவமே! குடுத்துட்டுத் திருப்பிக் கேப்பன்னு தெரிஞ்சிருந்தா நீ பர்த்டேவுக்குக் குடுத்த ஸ்வீட்ட சாப்பிடாம அப்படியே வெச்சிருந்திருப்பேனே.''



''நல்லா ஜோக்கடிக்கறீங்க! நிஜமா நான் எதுக்கு ஸ்வீட் கேக்கறேன்னு தெரியலையா?''

''நிஜமா தெரியல வினு.''

''ம், நேத்து வந்து போன செமஸ்டர் ரிசல்ட்ல நீங்க காலேஜ்லயே ஃபர்ஸ்ட் மார்க் வாங்கியிருக்கீங்களே! அதுக்குத்தான் கேக்கறேன்.''

''ஓ, சரி. குடுத்துட்டாப் போச்சு. அப்புறம் வினு, வீட்ல சமையல் உன்னோடதுதானா?''

''இல்லையே, ஏன் கேக்கறீங்க?''

''இல்ல, பாக்கக் கொஞ்சம் இளைச்சுத் தெரியறயே அதான்.''

''அதையேன் அபி கேக்கறீங்க. இந்த ஜீவாண்ணா வோட தொல்லை தாங்க முடியல. தினமும் எக்ஸர் சைஸ் செய்யலேன்னா விட மாட்டேங்கறாங்க.''

''அட, நல்ல ஹேபிட் தான.''

''ஓ, நீங்களுமா? அதுக்காக தினமும் காலைல ஆறு மணிக்கே எழுந்திருச்சுட்டிருக்கேன் தெரியுமா?'' என்று பாவமாகச் சொன்ன வினயாவின் பாவனையில் அபி நயாவால் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

''என்னவோ நாலு மணிக்கு எழுந்திருக்கற மாதிரி சலிச்சுக்கற!''

''விட்டா அதெல்லாம் நாலு மணிக்கே கூட அண்ணா எழுப்பி விட்டுடுவார். கேக்கறதப் பார்த்தா நீங்களும் நேரத்துலயே எழுந்திருச்சுடுவீங்க போலிருக்கு!''

''நானும் அஞ்சு மணிக்கு மேலதான் எழுவேன் வினு. அதுக்கு முன்னாடி எல்லாம் எழ என்னாலும் முடியாது.''

''ஆனாலும் எல்லா விஷயத்துலயுமே நீங்க கிரேட்டா தான் இருக்கீங்க. நான் ஒண்ணு கேக்கலாமா அபி?''

''சொல்லு வினு.''

''என்னை ஏன் உங்க வீட்டுக்கே இன்வைட் பண்ண மாட்டேங்கறீங்க? நீங்க என்னை உங்க ஃப்ரண்டாவே நினைக்கலையா?''

''அச்சச்சோ! என்ன வினு நீ...''

''ஸாரி அபி, என்னை எல்லாரும் வாயாடின்னுதான் சொல்லுவாங்க. நானே ஒவ்வொரு முறையும் வந்து வந்து பேசறதுனால என்னை அவாய்ட் பண்ண முடியாம சகிச்சுக்கிட்டுப் பேசறீங்களோன்னு எனக்கு ஒரு சின்ன சந்தேகம்...''

''உன்னோட இடத்துல வேற யார் இருந்தாலும் உன்ன மாதிரிதான் நினைப்பாங்க வினு. ஆனா என்னோட பிரச்சனையே வேற...''

................

''நானும் யதார்த்தமா நான் ஸ்கூல்ல படிச்சுட்டிருக்கும்போது ரெண்டு தடவ என்னோட ஃப்ரண்ட்ஸை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிருக்கேன். அவங்கள என் பெரியம்மா ஏதேதோ பேசி ஹர்ட் பண்ணிட்டாங்க. ஐ மீன் எம்மேல இருக்கற எரிச்சலையும் கோபத்தையும் என்னைச் சார்ந்தவங்க மேல காட்டினா அத என்னால தாங்கிக்க முடியாது வினு. அதனால நான் அதுக்கப்புறம் யாரையும் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறதப் பத்தி நினைச்சுக் கூடப் பாக்கறதில்ல.''

அபிநயா சொன்னது முழுமையாகப் புரியா விட்டாலும் ஏதோ கொஞ்சம் புரிவது போலிருந்தது வினயாவிற்கு.



''ஏன் பெரியம்மா... உங்க அம்மா அப்பா?''

''அவங்க இப்ப இல்ல. நான் பிறந்ததும் எங்கம்மாவும் எனக்கு மூணு வயசிருக்கும்போது அப்பாவும் இறந்துட்டாங்க.''

அபிநயா சொன்னதைக் கேட்டு உண்மையிலேயே மனதளவில் ஆடிப் போனாள் வினயா.

''அபி....''

''எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும் வினு. அதனால உன்னைக் கண்டிப்பா வீட்டுக்குக் கூட்டிட்டுப் போக மாட்டேன்!'' என்ற அபிநயாவின் கண்களில் தெரிந்த வலி வினயாவைக் குற்ற உணர்வில் தள்ளி விட்டிருந்தது.

''ஸாரி அபி, எனக்குப் பேசத் தெரியாதுன்னு மத்தவங்க சொல்லும்போது கோபப்படுவேன். ஆனா இப்ப...''

''ப்ளீஸ் வினு. இனி வேற ஏதாவது பேசலாமே. நீ ரொம்ப யதார்த்தமா இருக்க. அவ்வளவுதான். அதோட எனக்கும் நீ அப்படி இருக்கறதுதான் பிடிச்சிருக்கு.''

மேலும் சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்துவிட்டு அதற்குப் பிறகே இருவரும் பிரிந்து போனார்கள்.

என்ன முயன்றும் அபிநயாவின் பெற்றவர்கள் உயிருடன் இல்லை என்னும் விஷயத்தை வினயாவால் ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை.

எவ்வளவு அன்பான, அழகான, அறிவான பெண். இருந்திருந்து அவர்களுக்குப் போய் இவ்வளவு பெரிய குறையை வைக்க உன்னால் எப்படி முடிந்தது கடவுளே என்று மனதளவில் துடித்துப் போனாள்.

# 9

''என்னண்ணா, இன்னைக்கு ரொம்ப நேரத்துலயே கிளம்பிட்டிங்க?''

''ஏன்?''

''இன்னும் கொஞ்ச நேரத்துல எல்லாரும் வந்துடு வாங்க, அதனால தாண்ணா கேட்டேன்!''

''சரிதான். நான் லஞ்ச்சுக்கு வந்துட்றேன் வினு,'' என்று கிளம்புவதில் மும்முரமாக இருந்த தனது அண்ணனைப் பார்த்தாள்.

''பேசாம நான் ஊர்லயே ஜாலியா இருந்திருப் பேண்ணா, படிக்கறேன்னு இங்க வந்து பொழுதே போக மாட்டேங்குது, ஒரே போர்.''

''அது சரிதான். ஆடு மாடு கோழின்னு மேச்சுக்கிட்டு தோட்டத்துக்குள்ள சுத்திட்டிருந்தவளக் கூட்டிட்டு வந்து இன்ஜினியரிங் காலேஜ்ல சேத்து விட்டா பின்ன நீ அப்படித்தான சொல்லுவ.''

''நானொன்னும் அதெல்லாம் மேச்சதில்ல. இங்க எப்படி இருக்கேனோ அப்படித்தான் அங்கயும் இருந் தேன். ஆனா என்ன, வீடு நிறைய ஆளுங்க இருக்கற தால அங்க போரே தெரியாது.''

''ஆனா ஒண்ணு மட்டும் நீ இங்க வந்து பிரமாதமாப் பழகியிருக்க!'' என்ற தனது அண்ணன் ஜீவானந்தத்தைப் பார்த்தாள் வினயா.



''என்னண்ணா?''

''நல்லாப் பேசப் பழகியிருக்க.''

''ஸாரிண்ணா.''

''ஸாரியா? நல்லாப் பேசறேன்னு தான சொன்னேன்.''

''அண்ணா! ஒன் செகண்ட். காபி எடுத்துட்டு வர் றேன்!'' என்று உள்ளே செல்லப் போன தங்கையைத் தடுத்தவன், ''வேண்டாம்மா. நான் கொஞ்சம் உடனே கிளம்பணும். மதியம் வேணும்னா கொஞ்சம் முன்னாடியே வர ட்ரை பண்றேன். முதல்ல நீ போய்ச் சாப்புடு!'' என்று கிளம்பி விட்டிருந்தான்.

இன்னும் சிறிது நேரத்தில் ஊரிலிருந்து அனைவரும் வந்து விடுவார்களென்ற சந்தோஷத்துடன் குளித்து விட்டு வந்து சாப்பிட்டுக் கொள்ளலாமென்று வேகமாகக் குளிக்கப் போனாள் வினயா.

''தங்கம்மா.''

''அம்மா! சொல்லுங்கம்மா!'' என்று வந்த வேலைக்காரி தங்கம்மாவிடம், ''அம்மா சொன்ன மாதிரி வெங்காயம் எல்லாத்தையும் கட் பண்ணி வெச்சுடு. இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடுவாங்க!'' என்று சொல்லிவிட்டுப் போனாள்.

''வாவ் அபி! வாங்க, வாங்க வாங்க! என்ன இது, என் னால நம்பவே முடியலையே.''

''ம்... பின்ன நீ மட்டும் தான் சர்ப்ரைஸ் குடுப்பியா, நான் குடுக்க மாட்டேனா?''

''வாவ், ஐ அம் ஸோ ஹேப்பி நவ்!'' என்று சந் தோஷத்தில் துள்ளிய வினயா, ''வாங்க அபி!'' என்று

அவளுடைய கைகளைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய் முதலில் ஹாலில் அமர்ந்திருந்த தனது தந்தைக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள்.

அடுத்ததாக உள்ளே அழைத்துச் சென்று தனது தாய் அண்ணி அக்கா வேலைக்காரப் பெண்கள் வரை அனைவரிடமும் எனது தோழி என்று பெருமையுடன் அறிமுகப்படுத்தினாள்.

''அப்பப்பா! என்ன சந்தோஷம் வினு!'' என்று தங்கையைப் பார்த்த வித்யா, ''நான் ஒண்ணு சொல்லலாமா?'' என்று சிரித்துக் கொண்டே அபிநயாவைப் பார்த்துக் கேட்டாள்.

''சொல்லுங்க,'' என்றாள் புன்னகையுடன் அபிநயாவும்.

''நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க. அழகுன்னா ஒவ்வொருத்தங்க ஒவ்வொரு விதத்துல க்யூட்டா இருப்பாங்க. ஆனா நீங்க எல்லா விதத்துலயுமே ரொம்ப க்யூட்டா, அழகா இருக்கீங்க.''

''அது சரிதான்!'' என்று அதே நேரம் டிபன் ப்ளேட்களுடன் வந்தார் மீனாட்சி.

''அபி என்னோட ஃப்ரண்டாக்கும்! அதனால அழகாதான் இருப்பாங்க!'' என்றாள் வினயா.

''அது என்னவோ சரிதான், இருந்திருந்து உனக்குப் போய் இவ்வளவு அழகான ஃப்ரண்டான்னு தான் எனக்கு ஒரே ஆச்சரியம் வினு!'' என்ற தனது அக்காவை முறைத்தாள் வினயா.

''அதென்ன இருந்திருந்து. அப்பிடின்னா நான் அசிங்கமா இருக்கேனா? பாருங்கம்மா இவள.''



''அச்சச்சோ! நீ என் தங்கையாச்சே வினு! ஒரேயடியா அப்பிடிச் சொல்லிடுவேனா!'' என்று வித்யா கிண்டலாகத் தங்கையைப் பார்க்க, ''இனி ரெண்டு பேரும் ஆரம்பிச்சிட்டிங்களா?'' என்று சிரித்தார் மீனாட்சி.

''அப்ப நீங்க சொல்லுங்கம்மா, இங்க இருக்கிற எங்க மூணு பேர்லயுமே யார் ரொம்ப அழகு?''

''அதுலென்ன சந்தேகம், அபிநயாதான்!'' என்று யோசிக்காமல் அந்த வினாடியே சொல்லி விட்டிருந்தவரைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது அபிநயாவிற்கு.

என்னதான் தான் சிறந்த அழகியே என்றாலும், அதற்காக அவள் போற்றப்பட்டதில்லை.

ஏன் படிப்பு, விளையாட்டு என அனைத்திலுமே இதுநாள் வரை அவள் முதலாவதாகத்தான் வந்திருக்கிறாள்.

தனது இளமைக் காலங்களில் அதற்கெல்லாம் ஒரு சிறு பாராட்டேனும் கிடைக்குமென்று மிகவும் எதிர்பார்த்து ஏமாந்து நின்ற கணங்கள்... அப்பப்பா! அவை என்றும் மறந்து விடக் கூடியவை அல்லவே.

மாறாகத் தன்னை நன்றாகப் படிக்கிறாய், அழகாக இருக்கிறாயென்று யாராவது சொல்லி விட்டால் அப்பொழுதெல்லாம் தான் ஏதோ மிகப் பெரிய பாவத்தைச் செய்து விட்டதைப் போலத் தன்னைச் சுந்தரி நடத்துவதும்...

தன்னை மறந்து சிரித்த நாட்கள் அந்த வீட்டில் மிகவும் குறைவு. ஏன், இல்லையென்று கூடச் சொல்லலாமே.

''சரியா சொன்னீங்கம்மா!'' என்று பெண்கள் இரு வருமே ஒரு மனதாக ஒத்துக் கொண்டனர்.

''அபி! இந்தாம்மா, எடுத்துக்கோ!'' என்று மீனாட்சி கொடுத்த ப்ளேட்டை வாங்கிக் கொண்ட அபிநயா, ''உங்களுக்கெல்லாம்?'' என்று அனைவரையும் பார்த்துக் கேட்டாள்.

''நாங்க எல்லாரும் இப்பதான் சாப்புட்டோம். அபி! நீங்க எடுத்துக்கோங்க!'' என்று வித்யா சொல்ல, ''அம்மா செஞ்சது அபி. ரொம்ப நல்லார்க்கும். எடுத்துக்கோங்க!'' என்று தானும் உபசரித்தாள் வினயா.

தன்னிடம் அனைவரும் நன்றாகப் பேசியதில் அவர் களில் ஒருத்தியாகத் தன்னையும் நினைக்க ஆரம்பித் திருந்தாள் அபிநயா.

ஆனால் சற்றுக் கவனித்துப் பார்த்ததில் தான் அவர்கள் அனைவரிடமுமே வெள்ளை மனதுடன் நன்றாகப் பழகுவது தெரிந்தது.

''உங்க அண்ணி மட்டும் தனியா கிச்சன்ல கஷ்டப் பட்டுட்டிருக்காங்க பாருங்க, முதல்ல ரெண்டு பேரும் போய் ஹெல்ப் பண்ணுங்க!'' என்று தனது மகள்களை அனுப்பிய மீனாட்சியின் மீது மரியாதை பல மடங்கு அதிகரித்திருந்தது அபிநயாவிற்கு.

மருமகளையும் மகள்களையும் ஒரே மாதிரி நடத்து வதற்கு எவ்வளவு பரந்த மனப்பான்மை இருக்க வேண்டு மென்று நினைக்கத் தோன்றியது.

''கொஞ்சமா தான் வெச்சுத் தந்திருக்கேன். எல்லாத் தையும் சாப்டுடணும்!'' என்று அன்பு கலந்த அதிகாரக் குரலில் சொன்னவர், ''இருமா... வர்றேன்!'' என்று எழுந்து



செல்ல, அனைவரின் அன்பான பேச்சும் தூய்மையான சிரிப்பும் அந்த வீட்டையே ஒரு கோவிலாக்கிக் காட் டியது அபிநயாவிற்கு.

சில நிமிடங்களில் ஜூஸ் ட்ரேயுடன் வந்த வித்யா, ''நீங்க மட்டும் தனியா உக்காந்திருக்கீங்கன்னு அம்மா அனுப்பினாங்க. வாங்க அபி, முன்னாடி போகலாம்,'' என்று அபிநயாவை அழைத்துச் சென்றாள்.

மேலும் சிறிது நேரத்தில், ''அம்மா கிச்சனுக்கு வந்துட் டாங்க. அதனால எங்களுக்கும் விடுதலை,'' என்று வினயாவும் அவர்களுடைய அண்ணியும் கூட ஹாலுக்கு வந்திருந்தனர்.

அவர்களுடைய வெளிப்படையான கிண்டல் பேச் சிலும், சிரிப்பிலும் அபிநயா தானும் அவர்களில் ஒருத்தி யாகவே மாறியிருந்தாள்.

திடீரென்று யாரோ அழைக்கும் குரல் கேட்க, பெண் கள் நால்வரும் திரும்பிப் பார்த்தனர்.

நடுத்தர வயதுடைய கணவன் மனைவி போல யாரோ இருவர் ஹாலுக்கு வெளியே நின்றிருக்க, வித்யா எழுந்து சென்று என்னவென்று விசாரித்தாள்.

''அம்மா! நாங்க ஜீவா ஐயாவப் பாக்கணும்!'' என்று அவர்கள் சொல்ல, ''அவர் இப்ப வீட்ல இல்லையே!'' என்றாள் அவள்.

மீண்டும், ''வர்ற நேரந்தான். வாங்க. உள்ள வந்து உக் காருங்க!'' என்றாள்.

மிகுந்த தயக்கத்துடன் அவர்கள் இருவரும் உள்ளே வந்து அமர, ஏழ்மை அவர்களுடைய தோற்றத்திலும் உடையிலும் வெளிப்படையாகவே தெரிந்தது.

''இதோ வர்றேன்,'' என்று உள்ளே சென்ற வித்யா சில நிமிடங்களில் இரு கண்ணாடி டம்ளர்களில் குடிக்க எதையோ கொண்டு வந்து, வந்தவர்களுக்குக் கொடுத்து உபசரித்தாள்.

மீண்டும் பேச ஆரம்பித்திருந்த பெண்கள், ஹாலில் அமர்ந்திருந்தவர்கள் திடீரென்று எழுந்து நின்றதில் திரும்பிப் பார்த்தனர்.

அதற்குள் ஹாலுக்குள் வந்திருந்த ஜீவானந்த் அங்கு அமர்ந்திருந்த புதியவர்களை, அடையாளம் கண்டு கொள்ளும் விதமாகப் பார்த்தான்.

''ஐயா! போதைப் பழக்கத்துக்கு அடிமையாகியிருந்த எங்க பையனப் பழையபடி நல்ல விதமா எங்களுக்கு மீட்டுத் தந்தீங்களேய்யா...''

''முதல்ல உக்காருங்க!'' என்ற ஜீவானந்த், தானும் அவர்களுக்கு எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்தான்.

அவர்கள் அமர்ந்ததும், ''ம்... சொல்லுங்க,'' என்றான்.

''ஐயா! அந்தக் கூடாத நட்பு திரும்பவும் வந்துடும் போலிருக்குங்கய்யா. அந்த ஸ்நேகிதப் பசங்க ரொம்பவும் பெரிய இடங்கறதுனால எங்களாலயும் ஒண்ணும் சொல்ல முடியல. நீங்க வந்ததுக்கப்புறம் சுத்தமா இல்லாமப் போய்ட்ட அந்தப் போதைப் பொருள் திரும்பவும் புழங்க ஆரம்பிச்சுடுச்சுங்கய்யா...''

மேலும் சில நிமிடங்கள் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்த ஜீவானந்த், ''சரி. நான் சொன்ன மாதிரி செய்ங்க. பயப்படாம போய்ட்டு வாங்க!'' என்று எழுந்திருந்தான்.



''ஐயா! பழையபடி இப்பவும் நீங்கதான் எங்க கஷ்டத்தத் தீத்து வைக்கணும்!'' என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று அவனது காலிலேயே விழுந்து விட்டிருந்தனர்.

''என்ன இது, எழுந்திருங்க முதல்ல!'' என்று இரண்டடி பின்னால் சென்றிருந்தான் ஜீவானந்த்.

''எப்படியிருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியது என்னோட கடமை. இனிமேல் இந்த மாதிரியெல்லாம் பண்ணாதீங்க. தைரியமாப் போங்க!'' என்றவனின் குரலில் இருந்த அழுத்தத்தில், ''ரொம்ப நன்றிங்கய்யா!'' என்று கையெடுத்துக் கும்பிட்டு விட்டு அவர்கள் கிளம்பினர்.

அவர்கள் சென்றதும் ஹாலுக்குப் பக்கவாட்டில் இருந்த அந்த நீளமான அறையில் அமர்ந்திருந்தவர்களை நோக்கி வந்தான்.

முதலில் அபிநயாவை வரவேற்றுச் சில வார்த்தைகள் பேசியவன், பிறகு தனது அண்ணியை நோக்கித் திரும்பினான்.

''கல்யாணம் நல்லபடியா முடிஞ்சதா? திடீர்னு எதிர்பாராத விதமா சில வேலைகள் வந்துடுச்சு. அதான் வர முடியல.''

''அதெல்லாம் எல்லாம் நல்ல விதமா முடிஞ்சது. உங்க வேல அந்த மாதிரியாச்சுங்களே. கல்யாணத்தன்னைக்கு உங்க கிஃப்ட்டும் வாழ்த்துக்களும் வந்து சேர்ந்ததுல எல்லாருக்கும் ரொம்ப சந்தோஷம்!'' என்றாள் அவனுடைய அண்ணி நிவேதா.

மேலும் சில வினாடிகளுக்குப் பிறகும் கூடத் தனது அண்ணன் தன்னைப் பார்க்காமல் போக, ''நானும் இங்க இருக்கேன்!'' என்றாள் வித்யா.

''ஓ நீயா, ம்... அப்புறம் நினைச்சா கிளம்பி வந்துடுவ போலிருக்கு!'' என்ற தனது அண்ணனின் வார்த்தைகளில், ''என்னது நினைச்சா வர்றேனா, அவர் வரட்டும். உடனே கிளம்பற வேலையப் பாக்கறேன்!'' என்றாள் அவள்.

''அடடா, என் காதுல சரியாதான் விழுந்ததா?'' என்று ஜீவானந்த் உள்ளே செல்ல, ''இருந்திருந்து எனக்கு இவ்வளவு இன்சல்ட்டா?'' என்று அப்பொழுது ஹாலுக்குள் வந்த தனது தந்தையிடம் சென்று முறையிட்டாள் வித்யா.

சில நிமிடங்களில் தனது சீருடையை மாற்றிக் கொண்டு ஜீவானந்த் திரும்பி வந்தபோது, ஆண்கள் அனைவருமே வந்திருந்தனர்.

''என்னங்க, ஜீவாண்ணா நம்மள எதுக்கு வந்தீங்கன்னு கேக்கறார்?'' என்று வித்யா தனது கணவரிடம் சொல்ல, ''ஜீவா அப்படியெல்லாம் கேக்க மாட்டாரே!'' என்றான் அவளுடைய கணவன் திவாகர்.

''சரியா சொன்னீங்க திவா! நான் அவள மட்டும் தான் அப்படிக் கேட்டேன்!'' என்ற ஜீவானந்த், அவனை நலம் விசாரித்துப் பேசுவதில் முனைந்திருந்தான்.

''ஆனாலும், என்னைக் கேட்டாலும் அது உங்களையும் கேட்ட மாதிரி தான். எனக்கெல்லாம் ரோஷம் அதிகம்பா. நான் கிளம்பறேன்!'' என்று வித்யா சொல்ல, ''அப்ப வேற யாருக்கு ரோஷமே இல்லேங்கற?'' என்று தங்கையைப் பார்த்துக் கேட்டான் ஜீவானந்த்.



''வேண்டாம்மா. நாம ரெண்டு பேரும் ஒண்ணு சேந்துக்கலாம். இல்லன்னா நிறையப் பேர் உள்ள புகுந்து விளையாடத் தயாரா இருக்காங்க!'' என்று திவாகர் சொல்ல, ''அது சரிதாங்க!.நான் எதுக்குக் கிளம்பணும்? இது எங்கப்பாவோட வீடு!'' என்று சென்று சோபாவில் தனது தந்தையருகில் அமர்ந்து கொண்டாள் வித்யா.

''இத நீ அப்பவே செஞ்சிருக்கலாம்கா!'' என்று வினயா சிரிக்க, ''நாளைக்கு உனக்கும் இதே நிலைமைதான் வினு. அத நீ மனசுல வெச்சுக்கோ!'' என்று தங்கையைப் பார்த்துச் சொன்னாள்.

''எல்லாரும் சேர்ந்து உங்கள போரடிக்கறோம். ஸாரி அபி!'' என்று வினயா சொல்ல, ''அச்சச்சோ! அதெல்லாம் இல்ல. எனக்கு ஜாலியாத்தான் இருக்கு!'' என்றாள் அபிநயா.

''என்னது, ஜாலியா இருக்கா? அப்ப அறுத்துட வேண்டியதுதான்.''

அப்படிச் சொன்ன தனது தங்கை வித்யாவைப் பார்த்த ஜீவானந்த், ''அப்ப இவ்வளவு நேரமும் என்ன பண்ணிட்டிருந்த?'' என்று கேட்டான்.

''அப்புறம் ஜீவா, உன்னைப் பாக்க ரெண்டு பேர் வந்துட்டுப் போனாங்க,'' என்று அவனது தந்தை சண்முகம் சொல்ல, ''அதெல்லாம் அண்ணா பாத்துப் பேசிட்டார்பா!'' என்றாள் வினயா.

''இப்ப வந்துட்டுப் போனவங்க இல்லமா!'' என்றவர், இரண்டு மணி நேரங்களுக்கு முன்பு வந்துவிட்டுப் போனவர்களைப் பற்றி மகனிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''அண்ணாவுக்கு ஏற்கெனவே தொழில் பக்தி குறைவு. நீங்க வேற ஏன் டாடி?'' என்று வித்யா சொல்ல, மீனாட்சி வந்து அனைவரையும் சாப்பிட அழைத்தார்.

''என்னமா இன்னுமொரு நாலு கோழி அடிச்சும் கூட இதுக்குள்ள சமையல் முடிஞ்சதா?'' என்ற ஜீவானந்தின் பாவனையில், ''என்னப்பா இன்னும் யாராவது லஞ்சுக்கு வர்றாங்களா?'' என்று ஸீரியஸாய்க் கேட்டார் மீனாட்சி.

''வித்யா கிளம்பலாமா, லஞ்ச்சுக்கு இருக்கா, அதான் கேட்டேன்.''

''அண்ணா! வேண்டாம்!'' என்று பொய்க் கோபத்துடன் வித்யா தனது அண்ணனை முறைக்க, ''விடுமா. அவன் இப்படியெல்லாம் பேசி ரொம்ப நாளாச்சு. எந்நேரமும் வேல வேலன்னு ஓடிட்டிருப்பான். நீங்க எல்லாரும் வந்த சந்தோஷத்துலயாவது பேசட்டும்!'' என்று சிரித்துவிட்டுப் போனார் அவர்.

''அப்படின்னா நீங்க இன்னும் கொஞ்சம்கூட மாறவே இல்லையாண்ணா?'' என்று வித்யா கேட்டுக் கொண்டிருக்கும்போதே, நிவேதாவும் வந்து அனைவரையும் சாப்பிட அழைத்தாள்.

பேசிக் கொண்டே அனைவரும் சாப்பிட எழுந்து செல்ல, ''நான் கிளம்பறேன்,'' என்று தானும் எழுந்திருந்தாள் அபிநயா.

''என்னது, கிளம்பறீங்களா, அதுவும் சாப்பிடாம? சும்மா வெறும் நேரத்துல வந்தாலே நம்ம வீட்ல சாப்பிடாமக் கிளம்பறது கஷ்டம். நீங்க இப்ப சாப்பிடாமக் கிளம்பிடுவீங்களா, அதுவும் இன்னைக்கு? அப்படி மட்டும் கிளம்பிட்டிங்கன்னா அப்புறம் நாங்க எல்லாருமே உண்ணா விரதம் இருந்துடுவோம்!'' என்றாள் வித்யா.



''நடக்கறதப் பேசணும்!'' என்ற தனது பெரிய அண்ணன் தேவானந்தின் வார்த்தைகளில், ''அப்பிடியென்ன நடக்காதத நான் பேசிட்டேன்?'' என்று கேட்டாள்.

''கண்டிப்பா நீங்க இருந்து சாப்டுட்டுதான் கிளம்பணும்!'' என்று தானும் அபிநயாவை உபசரித்த தேவானந்த், தனது தங்கையிடம், ''கவலைப்படாத! அவங்க இருந்து சாப்டுட்டுதான் போவாங்க!'' என்றுவிட்டுப் போனான்.

''வாங்க அபி!'' என்று அபிநயாவைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போன வித்யா, பக்கத்து அறைக்குள்ளிருந்து வெளியே வந்த ஜீவானந்த்தை நோக்கிப் போனாள்.

''ஜீவாண்ணா! எனக்கொரு சின்ன உதவி பண்ண முடியுமா?'' என்றவளை என்ன என்பதைப் போலப் பார்த்தான் அவன்.

''எனக்கொரு ஒன் வீக்காவது உங்க கூடவெல்லாம் இருக்கணும்னு ஆசையா இருக்குண்ணா. நீங்க சொன்னா அவர் நிச்சயமா ஒத்துக்குவார். அவர்கிட்ட ஒரு வார்த்தை சொல்றீங்களாண்ணா?''

''அட, இதுக்கேன் இவ்வளவு கவலைப்பட்ற? உஷ் அப்பாடான்னு சந்தோஷமா விட்டுட்டுப் போய்ட மாட்டார்? ஆனாலும்...''

''ப்ளீஸ்ணா, ப்ளீஸ்.''

''சரி விடு. சொல்லிப் பாக்கலாம்...''

''இப்பதாண்ணா எனக்கு சந்தோஷம்!'' என்ற வித்யாவைப் பார்த்த அபிநயாவிற்கு மிகவும் ஆச்சரிய மாக இருந்தது.

தனது அண்ணன் 'ம்' என்று ஒரு வார்த்தை சொன்ன திலேயே இவ்வளவு சந்தோஷமென்றால், அவன் மேல் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்க வேண்டுமென்று தோன்றியது.

அங்கிருந்து நகரப் போனவனைத் தடுத்த வித்யா, ''அண்ணாண்ணா! அப்புறம் இன்னொரு ஹெல்ப்!'' என்றாள்.

''சொல்லு.''

''இல்லண்ணா, ஒன்னும் அவசரமில்ல. நிதானமாவே சொல்றேன்.''

''ஆரம்பிச்சத முடிச்சுட வேண்டியதுதான?''

''அது சரிதான். திரும்பவும் நான் உங்கள எப்ப ஃப்ரீயா பாக்கப் போறேனோ, அதனால இப்பவே சொல்லிட றேன்!'' என்றவள், ''மைதிலின்னு சொல்லிட்டு எங் கூடக் காலேஜ்ல படிச்சாளேண்ணா, அதாவது என்னோட ஃப்ரண்ட், அவள ஒரு வாரத்துக்கு முன்னாடி பாத்தேன்...''

''சரி.''

''அவளுக்குப் பெத்தவங்க இல்லாததால அவள வளத்தது அவளோட சொந்த அத்தையேதாண்ணா, அதாவது அவளோட அப்பா கூடப் பிறந்த தங்கை.''

..............

''அவங்க மைதிலிய ரொம்பவும் கொடுமைப் படுத் தறாங்களாண்ணா! எனக்கு என்ன பண்றதுன்னே



தெரியல. வெளிய போய் எப்படியாவது வாழ்ந்துட லாம்னா அதுக்கும் எனக்குத் தைரியமில்லன்னு அவ ஒரே புலம்பல்.

''அவளுக்கு ஏதாவது ஹெல்ப் பண்ணணும் போல எனக்குத் தோனிட்டே இருக்குண்ணா...''

''இந்தக் காலத்துப் பொண்ணுங்களும் ஒண்ணும் சாதாரணமில்ல. தேவையில்லாததையெல்லாம் நினைச்சு நீ குழம்பிட்டிருக்காத!'' என்று கைக்கடிகாரத்தைப் பார்த் துக் கொண்டே ஜீவானந்த் சொல்ல, சிறிதாகிப் போன வித்யாவின் முகம் அபிநயாவின் கண்களில் படத் தவறவில்லை.

பாவம், அந்தப் பெண் மைதிலி என்றுதான் அவளுக் கும் தோன்றியது.

அதென்ன இந்தக் காலத்துப் பெண்கள்! அப்படி யானால் முந்தைய தலைமுறைப் பெண்கள் மட்டும் மிக வும் நியாயமாக நடந்து கொள்கிறார்களோ, எதுவானா லும் அவரவர்களுக்கு வந்தாலல்லவா தெரியும்.

''அவனுங்களால இப்ப உனக்கொன்னும் பிரச்சனை யில்லையே?'' என்று ஜீவானந்த் கேட்ட சில வினாடி களுக்குப் பிறகுதான் அவன் கேட்டது தன்னைத்தான் என்பது அபிநயாவிற்குப் புரிந்தது.

''இல்ல, இப்ப ஒன்னும் பிரச்சனையில்ல!'' என்று அபிநயா சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ''சரி, வாங்க அபி. சாப்பிடப் போலாம். வெளிய யாரோ கூப் பிட்ட மாதிரியிருந்ததுன்னு போய்ப் பார்த்தேன்,'' என்று வந்தாள் வித்யா.

# 10

என்ன தடுத்தும் வினயாவின் வீட்டிற்குச் சென்று வந்தது தான் மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்து கொண்ட இருந்தது அபிநயாவிற்கு.

ஒருவரின் காலை ஒருவர் வாரிச் சிரித்துப் பேசிக் கொண்டு ஒரு குடும்பத்திலிருக்கும் அனைவருமே எவ் வளவு சந்தோஷமாக இருக்கிறார்களென்று தோன்றியது, தனக்கு அப்படியெல்லாம் இருக்கக் கொடுத்து வைக்க வில்லையே என்று ஏக்கமாகவும் இருந்தது.

முக்கியமாக ஜீவானந்த்தின் கம்பீரமான முகம் தான் அதிகம் நினைவிற்கு வந்து கொண்டே இருந்தது. அவனைப் பார்த்த முதல் பார்வையிலேயே தன் மனம் தன் வசம் இழந்து விட்டதும்.

கூடவே இப்பொழுதெல்லாம் காண்பவை அனைத் துமே மிகவும் அழகாகி விட்டதைப் போல்வும், வாழ்க்கை மிகவும் ரசனை மிக்கதாக மாறி விட்டதைப் போலவும் தோன்றத் தொடங்கி விட்டிருந்தன.

தன்னை விளையாட்டுக்குப் பயமுறுத்துவதைப் போலத் தனக்கு முன்னால் வந்து நின்றிருந்த ஸ்ரீநிதியை நிமிர்ந்து பார்த்தாள் அபிநயா.

''என்ன பயங்கர யோசனை?''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல.''

''ஆமா, நீயென்ன, இன்னும் ஒண்ணுமே பண்ணாம இருக்க?''



''என்ன பண்ணணும்னு சொல்ற?''

''என்னவா? நிஜமாவே உனக்கு ஒண்ணும் தெரி யாதா?''

''இல்ல, சொல்லு.''

''உன்னப் பொண்ணு பாக்க இன்னும் ரெண்டு மணி நேரத்துல வரப் போறாங்க.''

''வாட்?''

''அப்பாவாவது சொல்லியிருப்பார்னு நினைச்சேன் அபி!'' என்று ஸ்ரீநிதி சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்த அறைக்குள் வந்தார் ரகுநாத்.

''சரியான நேரத்துக்குத் தான் நானும் வர்றேன் போலி ருக்கு!'' என்றவர், ''பொண்ணு பாக்கறதுக்குன்னு இல்லமா. நேத்து மதியம்தான் சும்மா பாக்க வர்றோம்னு போன்ல சொன்னாங்க. மறுக்கக் காரணமில்லாததோட உனக்கும் பிடிச்சிருந்தாதான் மேல பேசறது. இல்லன்னா இதோட விட்டுடலாம்!'' என்றார்.

மறுத்துப் பேசத் துடித்த மனதைச் சிரமப்பட்டுக் கட் டுப் படுத்திக் கொண்டாள் அபிநயா.

''நானும் இதப் பெருசா எடுத்துக்காததாலதான் உங்கிட்டயும் சொல்லல!'' என்று விட்டுப் போனார் அவர்.

என்னதான் ரகுநாத் சொன்னது உண்மையே என்றாலும் நடந்தது வேறாக இருந்தது.

வந்தவர்களுக்கு அபிநயாவை மிகவும் பிடித்து விட்ட தோடு, அவர்களுடைய நிறைவான செல்வாக்கு மிக்க பின்புலமும், அனைவரிடமும் நன்றாகப் பேசும்

இனிமையான வெளிப்படையான பேச்சும் ரகுநாத்திற்கும் மிகவும் பிடித்து விட்டிருந்தன.

அதாவது உடனே மறுத்து எதையும் சொல்லிவிடும் அளவிற்கு இருக்கவில்லை.

அனைத்திற்கும் உச்ச கட்டமாக என்னதான் எங்களுக்குப் பெண்ணை மிகவும் பிடித்து விட்டதென்றாலும் அபிநயா நன்றாக யோசித்து மெதுவாகவே தனது விருப்பத்தைத் தெரிவிக்கட்டும். அதற்கு மேல் எங்கள் வீட்டுப் பிள்ளையை உங்களுக்குப் பிடித்திருந்தால் இந்த வருடம் அபிநயாவின் படிப்பு முடிந்ததும் தொடர்ந்து மேலே நடக்க வேண்டியதை யோசித்துக் கொள்ளலாமென்று சந்தோஷத்துடன் சொல்லி விட்டுச் சென்றிருந்தார்கள்.

தன்னிடம் வரட்டும், ஒற்றை வார்த்தையில் விருப்பமில்லையென்று சொல்லி விடலாமென்று அபிநயாவும் காத்திருக்கலானாள்.

ஆனால் அப்படி யாரும் உடனே வந்து அவளிடம் எதையும் கேட்டு விடாததோடு, ரகுநாத்தும் தொழில் விஷயமாகப் பதினைந்து நாட்கள் வெளிநாட்டுப் பயணம் புறப்பட்டுச் சென்று விட்டிருந்தார்.

ஆனால் அந்த நேரத்தில்தான் ஒரு வேலையைச் செய்திருந்தாள் சுந்தரி.

எங்கள் வீட்டுப் பெண்ணிற்கும் முழுச் சம்மதம். அவர் அவசரமாக வெளிநாட்டிற்கு ஒரு பிஸினஸ் டூர் சென்றிருப்பதால் உங்களிடம் பேசி நிச்சயதார்த்தத்திற்கு நாள் குறிக்கச் சொல்லியிருக்கிறாரென்று தொடர்ந்து வந்த



பதினைந்து நாட்களிலேயே நிச்சயதார்த்தத் தேதியும் கூட குறித்து முடிக்கப்பட்டு விட்டிருந்தது.

நிச்சயதார்த்த ஏற்பாடுகள் அனைத்தும் நடக்கவே ஆரம்பித்திருக்க பார்க்கிறவரை பார்த்துவிட்டு நேராகச் சுந்தரியிடம் சென்று நின்றாள் அபிநயா.

ஹால் சோபாவில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தவளிடம் சென்று, ''எனக்கு இந்தத் திருமணத்தில் விருப்பமில்லை, அனைத்தையும் உடனே நிறுத்தி விடுங்கள்!'' என்றாள்.

பேப்பரில் இருந்து முகத்தை நிமிர்த்தி அபிநயாவைப் பார்த்தாள் சுந்தரி.

''ஏன்?''

''பிடிக்கல.''

''அதான் ஏன், அந்தப் பையனுக்கு என்ன குறைச்சல்?''

''தெரியாது, எனக்குப் பிடிக்கல. அவ்வளவுதான்.''

''அதெல்லாம் கல்யாணமாயிட்டா புடிச்சுப் போயிடும்.''

''பிடிக்கவே இல்லேங்கறேன். அப்புறம் எதுக்காகக் கல்யாணம் வரைக்கும் போறதப் பத்திப் பேசணும்?''

''நீ உம் மனசுல என்னடி நினைச்சுட்டிருக்க? நீ சொல்றதை யெல்லாம் கேக்க இங்க யாரும் தயாரா இல்ல. அதோட இந்த வீட்ட விட்டு நீ... சரி நேரடியாவே விஷயத்துக்கு வர்றேன். எங்கிட்டயிருந்து உனக்கு விடுதலை கிடைக்கணும்னா அதுக்குக் கல்யாணம்தான் உனக்கு ஒரே தீர்வு.''

''எனக்கு இப்பக் கல்யாணம் வேண்டாம்.''

''அதான் ஏன்னு கேக்கறேன். சொல்லித் தொலை யேன், யாரையாவது லவ் பண்றியா?''

'ஆமாம்.''

''யாரது?''

ஏனோ அந்த நேரத்தில் ஜீவானந்தின் கம்பீரமான முகம் மனதிற்குள் தோன்ற, தன்னையறியாமலேயே ஒரு வினாடி பிரமித்துப் போனாள் அபிநயா.

''புத்தி ஊர் மேயப் போகுதாக்கும்! உங்கம்மா மாதிரி தான நீயும் இருப்ப? பாவமேன்னு வளத்த பாவத்துக்கு எங்களத் தலை குனிய வெச்சுடாத.''

தொடர்ந்து சுந்தரி பேசிக்கொண்டே போக, அவ ளுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் துடித்துப் போனாள் அபிநயா.

சுந்தரியிடமிருந்து தப்பிப்பதற்காகத் தான் பொய் சொன்னது தவறுதான் என்றாலும், அதற்கு அவள் தனது தாயையெல்லாம் இழுத்துக் கேவலமாகப் பேசுவா ளென்று அபிநயா சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை.

''என்னை எது வேணும்னாலும் சொல்லுங்க! ஏன், என்னத் திட்டாம உங்களால இருக்கவே முடியாதுங் கறதும் எனக்குத் தெரியும். ஆனா எங்கம்மாவப் பத்திப் பேச அதுலயும் இப்ப உயிரோடயே இல்லாதவங்களப் பத்தித் தப்புத் தப்பாப் பேச உங்களுக்கு எந்த ரைட்சும் கிடையாது!'' என்று வாழ்க்கையிலேயே முதன் முறை யாகக் கோபத்துடன் தன்னை எச்சரிப்பதைப் போலச் சொல்லிவிட்டுப் போன அபிநயாவின் வார்த்தைகளில் அயர்ந்து போய் நின்றிருந்தாள் சுந்தரி.



# 11

''வேகமா வாங்கம்மா. அப்புறம் காலேஜ்க்கு லேட் டாயிடும்.''

''இதோ வந்துட்டேன் பெரியப்பா. கோவில்ல இருந்து அப்படியே காலேஜ்க்குப் போகணுமே, அதான் எல்லாத் தையும் ரெடியாவே எடுத்துட்டு வந்துட்டோம்!'' என்று அபிநயா காரருகில் வந்திருக்க, அவளைத் தொடர்ந்து ஸ்ரீநிதியும், ''ஆமாம்பா. அதான் கொஞ்சம் லேட்!'' என்று வந்திருந்தாள்.

''உனக்காகப் பாத்துட்டிருந்தா லேட்டாயிடும்னு சொன்னா எங்க அபி கேக்கறா?'' என்று ரகுநாத் சொல்ல, ''ஹலோ... பர்த்டே எனக்கு. அதுக்காகத்தான் கோவி லுக்கே போறோம். அத மறந்துட்டுப் பேசாதீங்க டாடி!'' என்றாள் ஸ்ரீநிதி.

''மறக்கறதா, இல்ல... அதுக்கு நீதான் விட்டுடுவியா?'' என்று ரகுநாத் டிரைவிங் சீட்டில் ஏறி அமர, பெண்கள் இருவரும் ஏறிக் கொண்டனர்.

''கோவிலுக்குப் போயே ரொம்ப நாளாச்சு அபி!'' என்று ஸ்ரீநிதி சொல்லிக் கொண்டிருக்க, ''நான் மட்டும் என்னவாம், உன்னோட லாஸ்ட் பர்த்டேவுக்குக் கோவி லுக்கு உங்கூட வந்தது!'' என்றாள் அபிநயா.

ஆனா இன்னைக்குப் பாத்தா உனக்குத்தான் பிறந்த நாளோன்னு எல்லாரும் நினைச்சுக்குவாங்க. அந்த அளவுக்குப் பிரமாதமா வந்திருக்க என்று சொல்வதற்காக

வாயைத் திறந்து விட்டிருந்த ஸ்ரீநிதி பிறகு சொல் லாமலே வாயை மூடிக் கொண்டாள்.

அபிநயாவுடைய தாயின் இறந்த நாளில் தான் அவ ருடைய பிறந்த நாளென்பதால் அவள் என்றைக்குமே பிறந்த நாள் கொண்டாடியது கிடையாது. மாறாக அன்றைக்குச் சற்று சோகமாகவும் காணப்படுவாள்.

அதற்காக அழுது வடிந்து கொண்டு பார்ப்பவர்களின் கவனத்தை ஈர்க்கும்படியும் நடந்து கொள்ள மாட்டாள்.

''அபி! நான் ஒன்னு சொல்லலாமா?''

''ம், சொல்லு.''

''நீ ரொம்ப அழகா இருக்கடி. அதுவும் சேலைல. தேவதை மாதிரி. எனக்கே உன்னப் பாத்துட்டே இருக் கலாம் போல இருக்கு.''

''சரி. பாத்துக்கோ, நானொன்னும் காசெல்லாம் கேக்க மாட்டேன்.''

''பர்மிஷன் எனக்கு மட்டும்தானா, இல்ல...''

''ஏய், உதை கிடைக்கும்!'' என்று அபிநயா ஆள்காட்டி விரலால் பத்திரம் காட்டிக் கொண்டிருக்கும் போதே, கார் கோவில் வாசலில் வந்து நின்றிருக்க, பெண்கள் இரு வரும் இறங்கிக் கொண்டனர்.

தந்தை காரைப் பார்க் செய்வதற்காகச் சென்றிருக்க, தன்னுடன் நடந்து வந்து கொண்டிருக்கும்போதே பாதியில் நின்று விட்டிருந்த அபிநயாவைத் திரும்பிப் பார்த்தாள் ஸ்ரீநிதி.

''ஆரம்பிச்சுட்டயா...'' என்று அருகில் சென்றிருந்த ஸ்ரீநிதி, அபிநயாவின் கையைப் பிடித்து இழுக்க, ''ஒன் செகண்ட் ஸ்ரீ...'' என்றாள் அவள்.



சிறு குழந்தை ஒன்றை ஒருத்தி - அவள் அந்தக் குழந்தையின் தாயாகத்தான் இருக்க வேண்டுமென்று அபிநயாவிற்குத் தோன்றியது - கோவிலுக்கு வருவோர் போவோரிடம் சென்று பிச்சை கேட்குமாறு விரட்டிக் கொண்டிருந்தாள்.

மேலும் அந்தக் குழந்தை சரியாகச் செய்யவில்லை யென்று வேறு அவள் அதை அடிக்கவும் செய்ய, ''ஏய்! முதல்ல அந்தக் குழந்தைய விடு!'' என்று மிரட்டினாள் அபிநயா.

''அடப் போம்மா உன் வேலையப் பாத்துக்கிட்டு!'' என்று அந்தப் பெண் அபிநயாவைத் திட்ட, ''வா அபி. எல்லாரும் பாக்கறாங்க பாரு, நமக்கு இதெல்லாம் அவ சியமா?'' என்று அபிநயாவின் கையைப் பிடித்துக் கோவிலுக்குள் இழுத்தாள் ஸ்ரீநிதி.

''உனக்கென்ன, பணம் வேணும். அவ்வளவுதான?'' என்று அந்தப் பெண்ணைப் பார்த்துக் கேட்ட அபிநயா தனது ஹேண்ட் பேக்கைத் தேட, அதற்குப் பிறகுதான் அது காருக்குள் இருப்பது நினைவிற்கு வந்தது.

அப்பொழுது, ''ஏன் ரெண்டு பேரும் இங்கயே நின் னுட்டிங்க?'' என்று வந்த ரகுநாத்திடம் சில நூறு ரூபாய் நோட்டுகளை வாங்கி அதை அந்தப் பெண்ணிடம் கொடுத்தாள் அபிநயா.

''சரி அபி, இனியாவது வந்து சேரு,'' என்ற ஸ்ரீநிதி தனது தந்தையுடன் கோவிலுக்குள் செல்ல, தான் கொடுத்த பணத்தை வாங்கித் தனக்குள் அவசரமாகப் பத்திரப்படுத்திக் கொண்டவளைப் பார்த்தாள் அபிநயா.

''இனிமேல் இந்த மாதிரியெல்லாம் சின்னக் குழந் தையைக் கொடுமைப்படுத்தின, அப்புறம் நடக்கறத வேற.''

இப்படியெல்லாம் சிறு குழந்தையைக் கொடுமைப் படுத்திச் சம்பாதிக்கும் பணத்தால் எப்படித்தான் ஒரு தாயால் உடம்பை வளர்க்க முடிகிறதோ என்ற எரிச்ச லுடன் திரும்பிய அபிநயா, அப்பொழுதுதான் கொஞ்சம் தள்ளி நின்று கொண்டிருந்த ஜீவானந்த்தைப் பார்த்தாள்.

தனது மொபைலுக்கு வந்த அழைப்பை அட்டெண்ட் செய்து பேசுவதற்காக வெளியே வந்திருந்த ஜீவானந்த், அவ்வளவு நேரமும் அங்கு நடந்தவற்றைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தான்.

யதேச்சையாகத் திரும்பிய அபிநயாவிற்கும் அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருந்தது, அதாவது அங்கு நடந்தவற்றைப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

ஏனோ அவனைப் பார்த்ததில் மனம் படபடவென்று அடித்துக் கொள்ள, மரியாதைக்காக அவனைப் பார்த்து ஒரு புன்னகையை மட்டும் உதிர்த்தாள்.

அதற்குள் அண்ணா கிளம்பலாம் என்று வந்த வினயா, ''வாவ் அபி!'' என்று குதித்தாள்.

''வினு, நீயுமா!''

''அபி! நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க.''

''இத்தன நாளா மாடர்ன் டிரஸ்லயே பாத்துட்டிருந் துட்டு இப்ப சேலைல உங்களப் பாக்கறதுக்கு அந்த வானத்துத் தேவதையே கீழே இறங்கி வந்த மாதிரி யிருக்கு!'' என்று வினயா சொல்லிக் கொண்டிருக்க,



''கரெக்ட். நானும் அதத்தான அபி சொன்னேன்!'' என்று வந்தாள் ஸ்ரீநிதி.

''வா ஸ்ரீ. இவங்கதான் நான் சொன்னேனே, என் ஜூனியர் ஃப்ரண்ட்னு, வினயா. இவங்க வினயாவோட அண்ணா ஜீவானந்த். போலீஸ் ஆபீஸர்!'' என்று அறிமுகப் படுத்தியவள், ஸ்ரீநிதியையும் அவர்களுக்கு அறிமுகப் படுத்தி வைத்தாள்.

''அபி உங்களப் பத்தியெல்லாம் நிறையச் சொல்லி யிருக்கா. என்னை உங்க வீட்டுக்கு இன்வைட் பண்ண மாட்டிங்களா?'' என்று கேட்டாள் ஸ்ரீநிதி.

''பின்ன, நீங்களும் நிச்சயம் எங்க வீட்டுக்கு வரணும்!'' என்று வினயா அழைக்க, ''நீங்களும் கண்டிப்பா எங்க வீட்டுக்கு வரணும்!'' என்று தானும் அவர்கள் இருவரை யும் உபசரித்த ஸ்ரீநிதி.

''ஒரு நிமிஷம். இதோ வந்துட்றேன்!'' என்று பொது வாகச் சொல்லிவிட்டுச் சென்றாள்.

''ம்... முதல் தடவையா பாக்கறவங்க கூட வீட்டுக்கு வாங்கன்னு இன்வைட் பண்றாங்க, ஆனா நிறைய முறை பாத்துட்ட பின்னாடி கூட சிலர்... ம்கூம்...'' என்றான் ஜீவானந்த்.

''யாரோ சிலர் சொந்த வீட்டுக்கே விருந்துக்குப் போற மாதிரிதான் போறாங்களாம், அதான் எதுக்கு நம்ம இன்வைட் பண்ணி போக முடியலையேன்னு அவங் களக் கவலப்பட வைக்கணுங்கற நல்ல எண்ணத்துல...''

''மறைமுகமாக் கேட்டுப் பாக்கலாம். அப்பவாவது இன்வைட் பண்ணுவியான்னு பாத்தா இப்பிடியொரு

பதிலா?'' என்ற ஜீவானந்தின் பாவனையில் நன்றாகவே சிரித்தாள் அபிநயா.

''எங்க வீட்டுக்கு வாங்க!'' என்று அபிநயா அவர்கள் இருவரையும் - குறிப்பாக, ஜீவானந்தை - அழைக்க, ''நிச்சயமா வருவேன்!'' என்றவனின் பார்வையில் என்ன இருந்தது என்பதை அபிநயாவால் கண்டு கொள்ள முடியவில்லை.

ஆனால் அவனுடைய புன்னகையில் தன்னை மறந்து நின்ற அபிநயா, சில வினாடிகளுக்குப் பிறகே மீண்டும் பழைய நிலைக்கு வந்தாள்.

''ஆனாலும் நீங்க இன்னைக்கு ரொம்ப அழகா இருக்கீங்க அபி!'' என்ற வினயா, ''நீங்க என்னண்ணா சொல்றீங்க?'' என்று வெகுளியாகத் தனது அண்ணனிடமும் கருத்துக் கேட்டாள்.

''அபிநயாவ உனக்குப் புடிக்குன்றதனால நீ கொஞ்சம் மிகைப்படுத்தியே சொல்றியோன்னு எனக்குத் தோணுது!'' என்ற தன்னை, ''சரியா சொன்னீங்க!'' என்று மேலும் விரிவடைந்த புன்னகையுடன் பார்த்த அபிநயாவின் அழகில் உண்மையிலேயே சில வினாடிகள் தானும் திகைத்து நின்று விட்டிருந்தான் ஜீவானந்த்.

''ஆமா, என்ன கோவிலுக்கெல்லாம்?'' என்ற அபிநயாவிடம், ''இன்னைக்கு அண்ணாவோட பர்த்டே. அதான் கோவிலுக்குப் போய்ட்டு வரச்சொல்லி அம்மா ஒரே போன்!'' என்றாள் வினயா.

''வாவ்! உங்களுக்குமா? மெனி மோர் ஹேப்பி ரிட்டர்ன்ஸ் ஆஃப் தி டே!'' என்று வாழ்த்தினாள் அபிநயா.

''அப்படின்னா உங்களுக்கும்...''



''எனக்கில்ல, ஸ்ரீநிதிக்கு இன்னைக்கு பர்த்டே.''

''நிஜமாவா?! ஹேப்பி பர்த்டே!'' என்று அப்பொழுது வந்த ஸ்ரீநிதியை வினயா வாழ்த்த, ஜீவானந்த் தானும் அவளை வாழ்த்தினான்.

மேலும் சில வினாடிகளில் ரகுநாத்தும் வேண்டுதலை முடித்துக் கொண்டு வந்திருக்க, அவர்களுக்குள் ஒருவரையொருவர் அறிமுகப்படுத்தி விட்டு, அபிநயா தானும் கோவிலுக்குள் சென்றாள். ''இருங்க அபி. நானும் வர்றேன்!'' என்று உடன் சென்றாள் வினயா.

''உங்கள நேர்ல பார்க்கவே எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு. எத்தனை பெரிய சாதனைகளையெல்லாம் செஞ்சிருக்கீங்க! மீடியாவுல அதையெல்லாம் பார்த்து நான் ரொம்பவும் ஆச்சரியப்பட்டிருக்கேன்!'' என்று உண்மையிலேயே உணர்ந்து சொன்னார் ரகுநாத்.

''நீங்க எவ்வளவு பெரிய இன்டஸ்ட்ரியலிஸ்ட். நானும் உங்களப்பத்தி நிறையக் கேள்விப்பட்டிருக்கேன்!'' என்று ஜீவானந்த் மேலே சொல்லச் சொல்ல மீண்டும் ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்று விட்டிருந்தார் அவர்.

வெளி நடப்புகளை இந்த அளவிற்குக் கிரகித்துக் கொள்ள முடிவதால் தான் அவரால் தனது வேலையில் இந்த அளவு சாதிக்க முடிகிறதோ என்று ரகுநாத்தால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

சில நிமிடங்களில் பெண்கள் மூவரும் வெளியே வந்திருந்தனர்.

''அபி! நீங்களும் காலேஜ்க்கு எங்க கூடவே வாங்களேன்!'' என்று வினயா அழைத்துவிட, ''ப்ளீஸ் அபி. நீ

வினயாகூடவே போய்க்கோயேன். டாடி கூட நான் காலேஜ்ல போய் இறங்கிக்குவேன். ரெண்டு பேருக்கும் லேட்டாகாது!'' என்று அதையே பிடித்துக் கொண்டாள் ஸ்ரீநிதி.

வினயா தொடர்ந்து கட்டாயப்படுத்தியதில் தங் களுடன் வந்திருந்த அபிநயா தனக்கு நேர் பின்னால் அமர, ரியர் வ்யூ மிரரில் தெரிந்த அவளது முகத்தைப் பார்க்காமலிருக்க ஜீவானந்த் சற்றுச் சிரமப்பட வேண்டி யிருந்தது.

சும்மா என்றால் எப்படியோ, இப்பொழுதெல்லாம் தன்மேல் விழும் அபிநயாவின் பார்வையில் வெளிப் படையாகவே தெரிந்த ஒரு வித ஏக்கம் கலந்த எதிர் பார்ப்பு அவனையும் தன் வசமிழக்கச் செய்து விட் டிருந்தது.

என்னதான் அவள் ஒரு சிறந்த அழகியாக இருந் தாலும், ஏன் - மற்ற அனைத்து விதங்களிலுமே கூடப் பிரமாதமானவளாக இருந்தாலும், அலட்டல் சிறிதும் இல் லாமல் அனைவரிடமும் நன்றாகப் பழகும் அபிநயாவை மற்றவர்களைப் போலவே ஜீவானந்த்துக்கும் மிகவும் பிடித்து விட்டிருந்தது.

பத்து நிமிடங்களில் காலேஜ் கேட்டில் வந்து கார் நிற்க, இருவரும் இறங்கிக் கொண்டனர்.

''இனிமேல் தினமும் கோவிலுக்கு வரலாம் போலி ருக்கே!'' என்று ஜீவானந்த் சொல்ல, ''ஏன்?'' என்று கேட்டாள் அபிநயா.

''அப்பதான தினமும் காலேஜ்க்கு வர முடியும், அது வும் லேடீஸ் காலேஜ்க்கு.''



''அது சரிதான், அதுலயும் எவ்வளவு பெரிய மனுஷர்.''

''ம், அது வேற இருக்கு. அப்புறம் எப்படிப்பட்ட ஜாப்.''

ஜீவானந்த் சொன்னது காதில் விழாததைப் போல, ''சரி, நாங்க கிளம்பறோம்,'' என்றாள் அபிநயா.

என்னதான் அவன் சொன்னது கிண்டலுக்காகவே என் றாலும், அபிநயா அதைப் பொருட்படுத்தாதது அவனது கருத்தில் படத் தவறவில்லை.

அன்று மாலை கல்லூரி முடிந்ததும் ப்ராஜக்ட் வொர்க் கிற்குத் தேவையான மெட்டீரியல்ஸ் சிலவற்றைத் தனது தோழிகளுடன் சென்று பர்ச்சேஸ் செய்து முடித்து விட்டுக் காரில் தனியாக வீட்டிற்குச் சென்று கொண் டிருந்தாள் அபிநயா.

நேரமாகி விட்டதால் சற்று வேகமாகவே காரைச் செலுத்தியவள், திடீரென்று சற்றுத் தொலைவில் ஒரு பெண் வந்து நின்று கையசைத்து லிப்ட் கேட்பதைப் பார்த்துக் காரின் வேகத்தை வெகுவாகக் குறைத்தாள்.

அதற்குள் அந்தப் பெண்ணும் சற்று வேகமாக நடந்து காருக்கு அருகிலேயே வந்திருக்க, அபிநயாவும் காரை நிறுத்தியே விட்டிருந்தாள்.

நிறுத்தியவள் கார் ஜன்னலைக் கீழே இறக்கி விட்டு விட்டு, அந்தப் பெண்ணைப் பார்க்க, ''மேடம்! ப்ளீஸ் மேடம்! எங்க அக்காவுக்குப் பிரசவ வலியெடுத்துடுச்சு. வலியில ரொம்பவும் துடிக்கறாங்க. நானும் ரொம்ப நேரமா துடிச்சுட்டிருக்கற அக்காவப் பாக்க வீட்டுக்கும் யாராவது லிப்ட் குடுத்து உதவி பண்ண மாட்டாங் களான்னு ரோட்டுக்கும் அலைஞ்சுட்டிருக்கேன். தயவு

செஞ்சு கொஞ்சம் உள்ள வர முடியுமா?'' என்று கெஞ்சினாள்.

''இங்க பக்கத்துல நூறு அடிக்குள்ள தான் வீடிருக்கு. அக்கானால எழக்கூட முடியல. அதனால உங்கள அங்க கூப்புட்றேன். ப்ளீஸ்... எங்கள ஏதோ ஒரு பஸ் ஸ்டேண்ட்ல இறக்கி விட்டுட்டாக் கூடப் போதும்!'' என்று, அபிநயா சற்றே இளகுவதைப் பார்த்து, மேலும் கெஞ்சினாள் அந்தப் பெண்.

''சரி, உள்ள வாங்க!'' என்று முன் பக்கக் கார் கதவைத் திறந்துவிட்ட அபிநயா அந்தப் பெண் சொல்லும் வழியில் காரைச் செலுத்தினாள்.

அவள் சொன்னதைப் போல நூறடி மட்டும் இருக்கவில்லை, அரை கிலோ மீட்டருக்கும் அதிகமாகவே இருக்கும் போலத் தோன்றியது.

உண்மையைச் சொன்னால் ஒருவேளை வரமாட்டார்களோ என்னும் பயத்தில் தூரத்தைச் சற்றுக் குறைத்துச் சொல்லியிருப்பாள் பாவம் என்று தனக்குள் நினைத்துக் கொண்டாள் அபிநயா.

கடைசியாக அவள் சொன்ன இடத்திற்கு அதாவது மெயின் ரோட்டிலிருந்து மிகவும் உள்ளேயே வந்து காரை நிறுத்திய அபிநயா, அதற்குப் பிறகுதான் அந்த இடத்தைச் சுற்றிலும் திரும்பிப் பார்த்தாள்.

அந்த இடம் தென்னந் தோப்பாக இருக்க, ஒரு முப்பதடி தூரத்தில் இருந்த ஓட்டு வீடு ஒன்று கண்களுக்குத் தென்பட்டது.

''ஒரே நிமிஷம் மேடம். அக்காவக் கைத்தாங்கலாப் புடிச்சுக் கூட்டிட்டு வந்துட்றேன்!'' என்று காரை விட்டு இறங்கி வேகமாகச் சென்றாள் அந்தப் பெண்.



என்னதான் உதவி செய்வதற்காக வந்திருந்தாலும் அந்தப் புதிய இடம் மனதிற்குள் ஒருவிதப் பயத்தை ஏற்படுத்தியதை அவளால் நன்றாகவே உணர முடிந்தது.

திடீரென்று தனக்குப் பின்னால் ஏதோ அரவம் கேட்கத் திரும்பிப் பார்த்தாள் அபிநயா.

பின்னால் ட்ராக்டர் ஒன்று வந்து குறுக்கே நின்றிருக்க, அதிலிருந்து வெளியே குதித்தான் ஒருவன்.

கடவுளே! இவன்...

சற்று யோசித்துப் பார்த்த பிறகுதான் அவன் அன்று ஒரு நாள் தானும் வினயாவும் பர்ச்சேஸ்க்குச் சென்ற பொழுது வந்து பிரச்சனை செய்த அந்த நால்வரில் ஒருவன் என்பது நினைவுக்கு வந்தது.

அப்படிக் குதித்து இறங்கியிருந்தவன் தன்னைப் பார்க்கக் கூடாதென்றோ அல்லது தான் பார்த்து விடக் கூடாதென்றோ சற்றுத் தள்ளித் தென்னந் தோப்பிற்குள் புகுந்து எங்கோ சென்றான்.

மிகவும் அவசரமென்று உள்ளே சென்ற பெண்ணோ திரும்பி வருவாள் போலத் தெரியவில்லை.

பேசாமல் நாம் கிளம்பி விடலாமென்று நினைத்துக் காரை ஸ்டார்ட் செய்த பிறகுதான் பின்னாலிருக்கும் ட்ராக்டரை எடுக்காமல் தான் காரை எடுக்க முடியாதென்பது அபிநயாவிற்குப் புரிந்தது.

மேலும் ஐந்து நிமிடங்களும் சென்ற பிறகுதான் பிரசவ வலி, உதவி என்பதெல்லாம் பொய் என்பதும் ஊர்ஜிதமாயிற்று.

கடவுளே! இப்படி வந்து மாட்டிக் கொண்டு விட்டோமே என்று பதறிப் போனாள் அபிநயா.

இப்பொழுது அந்த ஓட்டு வீட்டுக்குள்ளிருந்து இன்னும் இரண்டு இளைஞர்களும் வெளியே வர, நிச்சயம் தான் மாட்டிக் கொண்டோமென்று உடனே தான் ஒரு வேலையைச் செய்திருந்தாள் அபிநயா.

ஒருவேளை அதற்கு அவசியமற்றும் போகலாமென் றாலும் எதற்கும் இருக்கட்டுமென்று தனது மொபைலில் இருந்து ஜீவானந்தின் மொபைலுக்கு ரத்தினச் சுருக்க மாக ஒரு மெஸேஜை அனுப்பியிருந்தாள்.

மெஸேஜை அனுப்பி முடித்துவிட்டு மொபைலைக் கீழே வைத்ததுதான் தாமதம், அந்த நான்கு பொறுக்கி களும் வந்து அபிநயாவின் காரைச் சூழ்ந்து கொண்டு விட்டிருந்தனர்.

## 12

**வா**ரக் கடைசிக்காகத் தனது அண்ணனை நச்சரித்து அழைத்துக் கொண்டு அவருடன் ஊருக்குப் போய்க் கொண்டிருந்தாள் வினயா.

''நைட் டின்னர முடிச்சதும் கிளம்பணும்!'' என்ற தனது அண்ணனைக் குற்ற உணர்ச்சியுடன் பார்த்தாள்.

''ஸாரிண்ணா! நான் பேசாம டிரைவர வரச் சொல்லி அவர் கூடவே வந்திருக்கலாம். என்னால உங்களுக்கு இடைஞ்சல்.''

''அட பெரிய மனுஷி மாதிரி பேசற. இப்ப நானும் வந்து எல்லாரையும் பாத்த மாதிரியாச்சே!'' என்று



ஜீவானந்த் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவ னுடைய மொபைலுக்கு ஏதோ மெஸேஜ் டோன் வர, அதை எடுத்துப் பார்ப்பதற்காகத் தனது அண்ணனுக்கு முன்பாகவே தான் கையை நீட்டியிருந்தாள் வினயா.

''பழக்க தோஷத்துல கைய நீட்டிட்டேன்!'' என்று அசடு வழிந்த தங்கையிடம், ''அதனாலென்னமா, நீயே எடுத்து யாருன்னு பாரு!'' என்றான்.

தொடர்ந்து டிரைவிங்கில் கவனமாக இருந்த ஜீவானந்த், ''அண்ணா'' என்று சற்று ஆச்சரியத்துடன் அழைத்த தங்கையை என்னவென்பதைப் போலப் பார்த்தான்.

''மெஸேஜ் அனுப்பினது அபிநயாண்ணா. ஆனா எனக்கொன்னும் புரியல.''

தன்னுடைய மொபைலுக்கு அவளுடைய மெஸேஜா? மனதிற்கு ஏனோ ஒரு மாதிரியாகப் பட தங்கையிட மிருந்து உடனே மொபைலை வாங்கிப் பார்த்தான் ஜீவானந்த்.

பார்த்ததோடல்லாமல் அடுத்த சில வினாடிகளி லேயே அவளுடைய மொபைலுக்கும் அழைத்தான், ஆனால் எதிர்ப்புறத்திலிருந்து நாட் ரீச்சபிள் என்ற பதில் தான் கிடைத்தது.

முதலில் ஒன்றுமே புரியாதது போல இருந்தது, திரும்பத் திரும்பப் படித்ததில் நன்கு புரிந்தது.

அப்படியானால்...

''வினு! அபிக்கு என்னவோ பிரச்சன. உடனே போய்ப் பார்த்தாகணும்.''

"என்ன சொல்றீங்க?"

"ஆமாம்மா!" என்றவன் அந்த வினாடியே ஒரு 'யு' டர்ன் அடித்துக் காரை எதிர்த்திசையில் திருப்பியிருந் தான்.

ஏதோ பிரச்சனை யென்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது. இல்லையென்றால் தன்னுடைய அழைப்பு அவளுடைய மொபைலுக்குச் சென்றிருக்க வேண்டுமே.

காரில் செல்லச் செல்லவே சில முக்கியமான வேலை களை மொபைலில் பேசி முடித்திருந்தான்.

தனது அண்ணனிடம் பேசத் தோன்றினாலும், அவ னுடைய பரபரப்பு வினயாவின் வாயை அடைத்திருந்தது.

ஆனால் அபிநயா மெஸேஜ் அனுப்பியிருந்த இடத் திற்கும் இப்பொழுது இவர்கள் இருக்குமிடத்திற்கும் இடையே இடைவெளி இருபத்தைந்து கிலோ மீட்டர் களுக்கும் மேல் இருந்தன.

"உன்னை வேணும்னா எங்காவது... வேண்டாம். அதுக்கெல்லாம் நேரமில்ல. நீயும் கூடவே வா!" என்று தங்கையைப் பார்த்துச் சொன்னவன் காரின் வேகத்தை மேலும் அதிகப்படுத்தினான்.

இருபது நிமிடங்களில் அபிநயா சொன்ன இடத்திற்கு வந்து சேர்ந்திருந்தவன், அதற்கு மேல் எந்தத் துப்பும் கிடைக்காமல் சில வினாடிகள் திகைத்து நின்றான்.

சில வினாடிகள்தான்.

என்ன முயன்றும் தான் நினைத்ததை எதையுமே அபிநயாவால் செயல்படுத்த முடியவில்லை. இப்பொழுது தான் இருக்கும் இடத்தையும் அவளால் ஓரளவிற்குக் கூட கணிக்க முடியவுமில்லை.



கெட்டதிலும் ஒரு நல்லதாகக் கடத்தி வந்தபோது அவர்கள் மயக்க மருந்து எதையும் கொடுத்திருக்க வில்லை.

நல்லவேளையாக ஆபத்து வரும் முன்னரே செய்தி அனுப்பினோமென்று நினைத்தவள், இப்பொழுது தான் விளம்பரமென்னும் பெயரில் நாளொன்றுக்கு எத் தனையோ அவசியமில்லாத செய்திகள் வருகிறதே, அந்த மாதிரி நினைத்துக் கொண்டு இதையும் பார்க்காமல் விட்டிருந்தால் என்று தோன்றிய எண்ணத்தில் மீண்டும் நடுங்கிப் போனாள்.

ஜீவானந்த்துக்குச் செய்தி அனுப்பி முடித்துவிட்டு அவள் போனைக் கீழே வைத்திருந்த அந்த வினாடியே சற்று தூரத்தில் நின்றிருந்த அந்த தடியன்கள் நால்வரும் வந்து அபிநயாவின் காரைச் சூழ்ந்து விட்டிருந்தனர்.

சற்றுச் சுதாரித்திருந்தால் காரை ஸ்டார்ட் செய்திருக்க லாமோ என்று அபிநயாவிற்கு இப்பொழுது தோன் றியது. அப்படிச் செய்திருக்காத தன் மேல் கோபம் கூட வந்தது. ஆனால் நடந்து விட்டதைப் பற்றி இனி யோசித் துப் பலனில்லையே என்று உடனே தனது எண்ணத்தின் போக்கை மாற்றிக் கொண்டாள்.

அப்படியே அவள் அதற்கு முயன்றிருந்தாலும் எதற்கும் துணிந்திருந்த அவர்களிடமிருந்து தான் நிச்சயமாகத் தப்பியிருக்க முடியாதென்பது, பாவம்! அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

அவர்களும் காரில் ஏறி அமர்ந்ததுதான் தாமதம், உடனே அபிநயாவை டிரைவர் சீட்டுக்குப் பக்கத்து சீட்டில் தள்ளி விட்டுவிட்டு காரை அந்தத் தடியன்கள் ஓட்ட ஆரம்பித்திருந்தார்கள்.

யாரிடமாவது உதவி கேட்டுக் கத்தலாமென்று பார்த்தால் அதற்கும் வழியில்லாமல் கண்களோடு வாயையும் சேர்த்து இறுக்கிக் கட்டி விட்டிருந்தார்கள்.

அத்து மீறிய அவர்களுடைய தொடுகைகளும், அசிங்கமான வார்த்தைகளும் இனி நாம் அவ்வளவுதான், தொலைந்தோமென்று அபிநயாவை நினைக்க வைத்தி ருந்தன.

அவர்கள் பேசிக் கொள்வதை வைத்துப் பார்க்கும் போது தன்னைக் கடந்த சில நாட்களாகவே உளவு பார்த்து வந்திருப்பதும் தெரிந்தது.

சிறிது நேரத்திற்குப் பிறகு எங்கோ சென்று காரை நிறுத்தியவர்கள், ''ம்... இறங்கு!'' என்று உடும்புப் பிடியாக ஏதோ ஒரு வீட்டிற்குள் அழைத்துச் சென்று அதற்குப் பிறகே கண் கட்டை அவிழ்த்து விட்டார்கள். கண்கட்டை மட்டும்.

வனாந்திரத்திற்குள் தான் அந்த வீடு அமைந்திருக்க வேண்டுமென்று அபிநயாவிற்குத் தோன்றியது, அதுவும் கண்களுக்குப் புலப்படும் அளவிற்குப் பார்த்த வளுக்கு ஆங்காங்கே பெரிய பெரிய கறுப்பு உருவங்கள் அந்தப் பெரிய இருட்டறை முழுக்க நின்று கொண் டிருப்பதைப் போலத் தோன்றியது.

'கீ'யென்று அந்த மிகப் பெரிய அறை முழுக்கப் பரவியிருந்த ஒருவித நிசப்தம், நெஞ்சுக் கூட்டிற்குள் குளிர் பரப்பியது.

எங்கோ மிக அருகில் நாய்கள் பல ஒன்று சேர்ந்து - நாயாகத்தான் இருக்க வேண்டுமென்று அபிநயா விற்குத் தோன்றியது - ஊளையிடும் சப்தம் அவளுக் கிருந்த பயத்தை மேலும் பல மடங்கு அதிகப்படுத்தி யிருந்தது.



அழுகையில் வெளிப்பட்ட அவளுடைய தேம்பல் சத்தம் அந்த அமைதியான இடத்தில் பயங்கரமாகக் கேட்டது.

அபிநயாவை நாற்காலியோடு சேர்த்துப் பிணைத்துக் கட்டிவிட்டுச் சற்று முன்னர் தான் அந்தப் பொறுக்கிகள் நால்வரும் வெளியே சென்றார்கள்.

சும்மாவே அவர்களிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்வது சிரமம். அப்படியிருக்கும்போது சரக்கு அது இதென்று ஏதேதோ திட்டங்களுடன் திரும்பி வரப் போகும் அவர்களிடமிருந்து தான் முழுமையாகத் தப்பி விடுவோமென்ற நம்பிக்கையை இப்பொழுது அபிநயா பெருமளவு இழந்திருந்தாள்.

அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு திடீரென்று வெளியே ஏதோ ஒரு கார் வந்து நிற்கும் ஓசை கேட்க, கடவுளே! இதற்குள் வந்து விட்டார்களா என்று மீண்டு மொரு முறை நடுங்கிப் போனாள்.

தொடர்ந்து வந்த சில வினாடிகளிலேயே அந்த அறைக் கதவும் வெளியே இருந்து திறக்கப்படும் ஓசை கேட்க, ஐயோ! அந்தத் தடியன்களுக்கு இந்த இருட்டே ஆயிரம் மடங்கு மேலாயிற்றே! அவர்களிடமிருந்து என்னைக் காப்பாற்று கடவுளே என்று மனதார வேண்டிக் கொண்டாள்.

தொடர்ந்து வந்த சில வினாடிகளிலேயே அந்த அறைக் கதவு திறந்து கொண்டதோடு, அந்த அறையி லிருந்த மின்சார பல்புகளும் உயிர் பெற்றிருந்தன.

என்ன ஆச்சரியம்! தனது கண்கள் நன்றாகத்தான் வேலை செய்து கொண்டிருக்கின்றனவா?

அதற்குள் மிக அருகிலேயே வந்திருந்த ஜீவானந்த், அபிநயாவைப் பிணைத்திருந்த கட்டுக்களைத் தளர்த்தி அவளை விடுவித்தான். கூடவே அவளுடைய வாய்க் கட்டையும்.

''ரொம்ப தேங்க்ஸ்!'' என்று கண்கள் கலங்கச் சொன்னவள், இருக்கையிலிருந்து எழுந்தாள்.

ஆனால் அவ்வளவு நேரமும் இறுகக் கட்டப்பட்டிருந்த அவளுடைய கால்கள் திடீரென்று எழுந்த அவளுடைய வேகத்திற்கு ஈடு கொடுக்காமல் போக, அப்படியே கீழே சாயப் போனாள்.

ஆனால் அதற்குள் கீழே விட விழாமல் அபிநயாவைத் தனது கைகளில் தாங்கிக் கொண்ட ஜீவானந்த், ''பாத்து... கொஞ்சம் பேலன்ஸ் பண்ணிட்டு அதுக்கப்புறமா எழுந்துரு!'' என்றான்.

ஒரு சில வினாடிகளுக்குள் ஓரளவு சமாளித்துக் கொண்ட அபிநயா, ''இப்பப் பரவாயில்ல!'' என்று அவனிடமிருந்து விலகி நின்றாள்.

அபிநயாவை அழைத்துக் கொண்டு போய்க் காரில் அவனது தங்கையுடன் அமர வைத்த ஜீவானந்த், ''உள்ள லாக் பண்ணிக்கோங்க!'' என்று எங்கோ சென்று விட்டுச் சிறிது நேரத்தில் திரும்பி வந்தான்.

''உன் கார்ல ரெண்டு டயர் பஞ்சர். சர்வீஸ்க்குத் தான் விடணும்!'' என்று டிரைவர் சீட்டில் ஏறி அமர்ந்தவன், அவளுடைய காரிலிருந்து எடுத்து வந்திருந்த அனைத்தையும் அவளிடம் கொடுத்து விட்டுக் காரை ஸ்டார்ட் செய்தான்.



சற்று முன் இருந்ததற்கு இப்பொழுது பரவாயில்லையென்றாலும் கலவரப்பட்டிருந்த அபிநயாவிடமிருந்து ஒரு தலையசைப்பு மட்டுமே பதிலாகக் கிடைத்தது.

ஜீவானந்த் காரை நேராகத் தனது வீட்டிற்கு விட்டிருக்க, அங்கு சென்று முகம் கை கால் கழுவி வினயா கொடுத்த ஒரு ஸ்ட்ராங் காபியைக் குடித்த அபிநயா ஓரளவு பழைய நிலைக்கே திரும்பியிருந்தாள்.

''சரி, கிளம்பலாமா?'' என்று எழுந்த ஜீவானந்த்திடம், ''என்னால உங்களுக்கெதுக்கு சிரமம்?'' என்று தயங்கிக் கொண்டே மெதுவாகக் கேட்டாள் அபிநயா.

''சிரமம் ஒண்ணுமில்ல. நான் உங்க வீட்டு வழியாவே தான் போயாகணும்.''

உடனே எழுந்து கொண்ட அபிநயா, தன்னருகில் நின்றிருந்தவளிடம், ''ஸாரி வினு!'' என்றாள்.

''எதுக்கு அபி?''

''இல்ல, என்னால நீங்க ஊருக்குப் போக முடியாமப் போயிடுச்சு.''

''அட நீங்க வேற அபி, நாங்க ஊருக்குப் போனதுக்கப்புறம் உங்களுக்கு இப்படி ஆகியிருந்ததுன்னா... இப்ப மனசுக்கு எவ்வளவு நிம்மதியா இருக்கு தெரியுமா?''

உண்மையாக உணர்ந்து சொன்ன வினயாவின் அன்பில் நெஞ்சம் உருகிப் போயிற்று அபிநயாவிற்கு.

''கதவ உள்ள பூட்டிக்கோம்மா. நான் வர்றதுக்கு நைட் பதினோரு மணிக்கு மேல ஆகும்!'' என்று ஜீவானந்த் வெளியே செல்ல, தானும் ஒரு தலையசைவுடன் வினயாவிடம் விடை பெற்றுக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தாள் அபிநயா.

தான் காரின் டிரைவர் ஸீட்டில் ஏறி அமர்ந்ததும், அபி நயாவிற்காக மறுபக்கக் கதவைத் திறந்து விட்டான் ஜீவானந்த்.

தனது மொபைலுக்கு அழைப்பு வர, அட்டெண்ட் செய்து பேசியவன், "எங்கிருந்து பிரஷர் வந்தாலும் எம் பேரச் சொல்லிடுங்க. இப்ப நான் அங்க தான் வந்துட் டிருக்கேன்!" என்று போனை வைத்தான்.

அடுத்த வினாடியே காரை ஸ்டார்ட் செய்திருந்த ஜீவானந்த், தொடர்ந்து ஓட்ட ஆரம்பித்திருக்க, "உங் களுக்கு எப்பிடி நன்றி சொல்றதுன்னே தெரியல!" என்றாள் அபிநயா.

"இப்பவும் நான் என் கடமையத்தான் செஞ்சிருக் கேன்!" என்றவனின் பதிலில் இறுக்கம் சற்றே தளர்ந் தாலும், மிகவும் அவசியமான எதையோ இழந்து விட் டாற் போலவும் மனதிற்குள் உணர்ந்தாள்.

"வீட்ல உன்ன எதிர்பார்த்துட்டிருப்பாங்க இல்லையா?"

"ஆமா ஸார், ஆனாலும் பர்ச்சேஸ்க்கு போய்ட்டு வர்றதால இன்னைக்கு நான் வர லேட்டாகும்னு ஏற்கெனவே சொல்லியிருக்கேன். அப்புறம் இப்ப நடந்த பிரச்னை எங்க வீட்டுக்குத் தெரியாம இருந்தா நல்லது!" என்ற அபிநயா அப்பொழுது நடந்தவற்றையும் வீட்டில் தன்னுடைய நிலையையும் சிறிதும் மறைக்காது அவனிடம் சொல்லி முடித்திருந்தாள்.

"நீ ஃப்ரீயா இரு. தேவையில்லாததை மனசுக்குள் போட்டு ஸ்ட்ரெய்ன் பண்ணிக்காத. நீ இல்ல, உன் இடத் துல வேற யார் இருந்தாலும் முடிஞ்ச அளவுக்கு வயசுப் பொண்ணுங்க சம்பந்தப்பட்ட விஷயங்கள நான் வெளிய விட்றதில்ல."



"நீங்க மட்டும் சரியான நேரத்துக்கு வந்திருக்க லேன்னா... என்னால நினைச்சுக் கூடப் பாக்க முடியல."

"என்ன பண்றது, தமிழ் சினிமாக்கள்ல அந்தக் காலத்துலிருந்தே ஹீரோ வில்லன அடிச்சுத் துவைச்சுப் புடிச்சு வெச்சா கடைசியா போலீஸ்காரங்க வந்து விலங்கு மாட்டி ஜீப்ல ஏத்தற மாதிரியே காட்டிக்காட்டி போலீஸ் னாலே அத மட்டும் தான் சரியா செய்வாங்கன்ற மாதிரி மக்கள் மனசுல ஒரு எஃபெக்ட் க்ரியேட் ஆயிடுச்சு."

"ஹலோ ஸார், அதே சினிமாதான் போலீஸ் டிபார்ட் மெண்ட்டோட வீரதீரச் சவால்களையும் அதுல ஜெயிக் கறதுக்காக அவங்க எடுக்கற ரிஸ்க்கையும், கஷ்டங் களையும் கூட நிதர்சனமா காட்டிட்டிருக்கு."

"இப்ப என்ன சொல்ல வர்ற? சினிமாவாலதான் போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கும், போலீஸ்க்கும் பெரு மைன்னா?" என்று கேட்ட ஜீவானந்த்திடம், "அச்சச்சோ! நான் அப்படி யெல்லாம் சொல்ல வரல!" என்று அவசர மாக மறுத்தாள் அபிநயா.

"எது எப்படியோ நானெல்லாம் ஏதாவது ப்ராப்ளம்னு வந்துட்டா உடனே ஸ்பாட்டுக்குப் போய் ஆக்ஷன் எடுக்கற சின்சியர் போலீஸ்பா."

"சரிதான், நான் ஒத்துக்கறேன்."

"அப்பாடா, ஒரு வழியா மேடம் ஒத்துக்கிட்டிங்க."

"ஆமா ஸார், வினு என்னவோ சொன்னாளே, அது உண்மையா?"

"என்ன அது... ஸார்?"

"பின்ன உங்கள நான் எப்படிக் கூப்புடட்டும்?"

''ஜீவான்னு கூப்புடு. அப்படித்தான் என்னை வீட்ல எல்லாரும் கூப்புடுவாங்க.''

''வினுவுமா?''

''வினு ரொம்ப சின்னப் பொண்ணாச்சே.''

''அப்பிடிப் பாத்தா நானும் அவளவிட ஒரு மூணு வருஷத்துக்குத்தான் பெரியவளா இருப்பேன்.''

''ஓ! அப்பிடியா? அப்பிடின்னா நீயும் என்ன அவள மாதிரி அண்ணான்னே கூப்புடு!'' என்றவனின் வார்த்தை களில் கேலி இருந்ததோ என்று அபிநயாவால் நினைக் காமல் இருக்க முடியவில்லை.

''ம்கூம். என்னால அப்படியெல்லாம் கூப்புட முடியாது. கொஞ்சம் ஓவராத் தெரிஞ்சாலும் நான் ஜீவான்னே கூப்புட்டுக்கறேன்!'' என்று பட்டென்று சொல்லியிருந் தாள் அபிநயா.

''ஆனாலும் நீங்க எவ்வளவு பெரிய போலீஸ் ஆபீஸர்! அதான்...''

''இப்பதான் யாரோ வேற மாதிரி சொன்னதா ஞாபகம். வினு அப்பிடி என்ன சொன்னா?''

''உங்களுக்கு மிரட்டல் கால்ஸ் எல்லாம் நிறைய வந்துட்டே இருக்குமாமே, ஐ மீன். உங்களுக்கு ஜாப்ல நிறைய ரிஸ்க் இருக்கு. அத நினைச்சா தான் எனக்கு எப்ப வுமே ரொம்ப பயமாவே இருக்கும்னு வினு சொல்லுவா.''

''ம்.''

''அதான் நீங்க கூட லாஸ்ட்டா அரெஸ்ட் பண்ணி னீங்களே, அந்தக் கூலிப்படைக் கூட்டத்தோட தலைவன்...''



''என்ன பண்ணலாம்னு சொல்றீங்க? அவங்கிட்டப் போய்க் கால்ல விழுந்துடலாமா?'' என்றவனின் குரலில் எரிச்சல் இருந்ததோ? ''ஆமா, பயம் வினுவுக்கு மட்டும் தானா?'' என்று கேட்டான்.

இல்ல, எனக்கும் தான் என்று தொண்டை வரை வந்த வார்த்தைகள் அதற்கு மேல் வரத் தயங்கின.

ஜீவானந்த்தின் பார்வை தன்னை என்னவோ செய்ய, ''என்னமா?'' என்ற அவனது கரிசனத்தில் அபிநயா விற்குக் கண்கள் கூடக் கலங்கி விட்டிருந்தன.

''எனக்கும் அப்படித்தான்னு சொன்னா சந்தோஷப் படுவீங்களா?''

''இல்ல, வருத்தப்படுவேன்.''

''ஏனோ?''

''தப்புத் தப்பாக் குழந்தைத்தனமா கற்பன பண்ணிட் டிருக்கியே, அதான்.''

''ஓரேயடியா தப்புன்னே முடிவு பண்ணிட்டிங்களா?''

''இப்ப ரொம்ப மைன்ட் டிஸ்டர்ப் ஆயிருக்க. வீட்ல போய் வயிறு நிறைய சாப்டுட்டு நல்லாப் படுத்துத் தூங்கு. எல்லாம் சரியாயிடும்.''

''ஒரு பொண்ணா நானே சொல்லவும், என்ன சீப்பா நினைச்சுட்டிங்க இல்ல?''

''இல்லமா, நீ இன்னும் சின்னப் பொண்ணு. உன் வயசுக்கு...''

''எனக்கும் இருபத்தொன்று முடியப் போகுது, நானொன்னும் ரொம்பச் சின்னப் பொண்ணு கிடை யாது.''

என்னதான் ஜீவானந்தத்தை இடைமறித்துத் தன்னிலையை அவனுக்கு உணர்த்த முயன்றாலும், சற்று முன்னர் தனது வயதைப் பற்றித் தானே சொன்னது தான் நினைவிற்கு வந்தது அபிநயாவிற்கு.

இப்படி முரண்பாடாகப் பேசிக் கொண்டிருக்கிறோமே என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் ஜீவானந்த் அப்படி நினைக்கவில்லை போலும். ''எனக்குன்னு வாழ்க்கைல சில கொள்கைகள் இருக்கு. அதுக்கு மேரேஜ் லைஃப் எனக்குத் தடையா இருக்கும். ஐ மீன் இன்னும் சில வருஷங்களுக்கு. இருமா... நான் சொல்லி முடிச்சுட்றேன். பரவாயில்ல, நான் வெயிட் பண்றேன்னு கூட நீ சொல்லலாம். ஆனா எனக்கு அதுல உடன்பாடில்ல. உன்ன மாதிரி ஒரு பிரமாதமான பொண்ண ஏத்துக்க முடியாத நிலைல இருக்கோமேன்றதுல எனக்கும் ஒரு சின்ன வருத்தம் தான். நீயும் தேவையில்லாத எண்ணங்கள உன் மனசுலிருந்து அழிச்சுடு.''

ஏதேதோ சொல்ல நினைத்ததெல்லாம் ஜீவானந்தின் வார்த்தைகளில் காணாது போயிருக்க, அதற்கு மேல் அபிநயாவின் வீடு சென்று சேரும் வரை காரில் அமைதி நிலவியது. அவளை வீட்டு கேட்டருகில் இறக்கி விட்டு விட்டு அவன் கிளம்பியும் இருந்தான்.

# 13

இடையில் முப்பது நாட்கள் சென்றிருந்தன.



எப்பொழுதும் இல்லாத அளவிற்கு இப்பொழுது வாழ்க்கையே வெறுத்துப் போயிருந்தது அபிநயாவிற்கு.

இரவு உணவை முடித்துக் கொண்டு தன் அறைக்குச் செல்லப் போனவள் பெரியப்பா ரகுநாத் தன்னை அழைப்பது கேட்டு நின்றாள்.

ஹாலில் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தவரிடம் சென்று நின்றாள் அபிநயா.

''சொல்லுங்க பெரியப்பா.''

''ஏம்மா கொஞ்ச நாளா ஒரு மாதிரியா இருக்க? ஏதாவது பிரச்சனையா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல பெரியப்பா!'' என்று அவசரமாகச் சொன்னவளை நிமிர்ந்து பார்த்தார்.

''உங்க பெரியம்மாகிட்ட ஏதோ சொல்லியிருக்க, உண்மையா?''

அது என்னவாக இருக்கும் என்பதைப்போல யோசித்துக் கொண்டிருந்தவளிடம் தானே கேட்டார் ரகுநாத்.

''ஏம்மா, நீ யாரையாவது மனசுக்குள்ள...''

ஜீவானந்தின் நினைவு வர, கண்கள் கலங்கி விட்டிருந்தன அபிநயாவிற்கு.

ஆனால் அதைச் சிரமப்பட்டுத் தனக்குள் மறைத்துக் கொண்டவள், ''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை!'' என்றாள்.

''நீ எப்பவுமே இந்த அளவுக்கு டல்லா இருந்ததே இல்ல. அதான் கேக்க வேண்டியதாயிடுச்சு. உனக்கு என்ன பிரச்சினையா இருந்தாலும் அத நீ எங்கிட்ட சொல்லலாம். உனக்கு நான் நல்லத மட்டும் தான் செய்வேங்கற

நம்பிக்கை மட்டும் உனக்கு எப்பவுமே இருந்தாப் போதும்.''

சரியென்பதைப் போலத் தலையை அசைத்துவிட்டுத் தன்னறைக்கு வந்து சேர்ந்திருந்த அபிநயாவிற்கு ஓவென்று கதறி அழ வேண்டும் போல இருந்தது.

யார் நல்லது செய்து என்ன, வாழ்நாள் முழுக்க ஏதாவது ஒன்றுக்காக அழுது கொண்டேதான் இருக்க வேண்டுமென்று தன்னைக் கடவுள் படைத்து விட்ட பிறகு.

எதையெதையோ எண்ணி மனம் கலங்கியவள் வெகு நேரத்திற்குப் பிறகே தூங்கப் போனாள்.

''ஹாய் அபி.''

''வினு, எப்படியிருக்க?''

''நான் நல்லார்க்கேன். நானும் லாஸ்ட் ஒன் வீக்கா உங்களப் பாக்க ட்ரை பண்ணிட்டிருக்கேன். ஆனா இன்னக்கித்தான் பாக்க முடிஞ்சிருக்கு.''

''அப்படியா, இப்பெல்லாம் ஃப்ரண்ட்ஸ் நேரத்துலயே வந்துட்றதால நானும் நேரத்துல க்ளாஸ்க்குப் போயிட்றேன். அதான் பாக்க முடியறதில்ல போலிருக்கு. அப்புறம் வீட்ல எல்லாரும் நலமா வினு?''

''ஆமா அபி, அப்புறம் அம்மா நேத்து போன் பண்ணியிருந்தாங்க. அவங்க மட்டுமில்ல. எல்லாருமே உங்கள ரொம்ப ரொம்ப கேட்டதா சொல்லச் சொன்னாங்க. அதோட உங்க போன் நம்பரையும் கேட்டு வாங்கிட்டாங்க.''

''எதுக்கு?''

''அது சர்ப்ரைஸ். அவங்களே உங்களுக்கு போன் பண்ணுவாங்க.''



தன்னுடன் பேச மாட்டாரா என்று ஏங்க வைத்து விட்டுப் பேசவே அவர்களுடைய வீட்டில் காசு கேட்கும் ஒருவரைப் பற்றித்தான் நினைவிற்கு வந்தது அபிநயாவிற்கு.

''என்ன அபி?''

''சரி விடு. நீதான் சர்ப்ரைஸ்னு சொல்லிட்டயே! அப்புறம் சாப்டாச்சா வினு?''

''அதெல்லாம் ஆச்சு. நீங்க அபி?''

''நானும் ஆச்சு.''

''ஏன் டல்லாத் தெரியறீங்க?''

''உங்கூடப் பேசாததாலதான். இனி சரியாயிடுவேன்.''

''அடடா, கேக்கவே எவ்வளவு நல்லார்க்கு, அது மட்டும் உண்மையா இருந்தா..''

''உண்மைய மட்டும் தான் நான் பேசறது. அப்புறம் உங்கண்ணா எப்படியிருக்கார்?''

''ஜீவாண்ணாவத் தான் கேக்கறீங்கன்னு நினைக்கறேன்!'' என்றவள், ''அவரு மேல நான் ரொம்பக் கோபமா இருக்கேன் அபி. அவரப்பத்தி எனக்கு எதுவும் தெரியாது!'' என்றாள்.

''அடடா, என்னாச்சு வினு?''

''பின்ன என்ன அபி, ஒரே வீட்ல தான் இருக்கோம்னு பேரு. நான் அண்ணாவப் பாத்து ரெண்டு நாளாச்சு.''

''ஆனா பாவம், அவருக்கு எவ்வளவோ ஜாப் டென்ஷன். இந்த அண்ணாவெல்லாம் பேசாம கல்யாணம் பண்ணிக்காம இருக்கறது நல்லது. இல்லன்னா வர்ற பொண்ணு பாவம்!'' என்று அதையும் தானே சொன்னாள் வினயா.

''என்ன, உங்க அண்ணா மேல ரொம்பவும் கோபமா இருப்ப போலிருக்கு.''

''என்ன பண்றது, அவருக்கு முன்னாடி பேச முடியாதே! அதனால இப்படிப் பேசித் தீத்துக்கறேன்!'' என்று சிரித்தவள், ''ஸாரி அபி. நான் பாட்டுக்குப் பேசிப் பேசியே உங்கள இன்னும் டல்லடிச்சுட்டிருக்கேன்!'' என்றாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்ல. வினு எவ்வளவு நேரம் பேசினாலும் டல்லடிக்காது!'' என்ற அபிநயா, ''சரி வினு. அப்பத் திரும்பவும் பாக்கலாம்,'' என்று கிளம்பியே விட்டிருந்தாள்.

மிகவும் முயன்று இப்பொழுது சில நாட்களாகத்தான் ஜீவானந்தின் நினைவுகளைக் கொஞ்சம் அதுவும் மிக மிகக் கொஞ்சமாக மனதின் ஒரு மூலையில் ஒதுக்கி வைக்கக் கற்றுக் கொண்டிருந்தாள் அபிநயா. ஆனால் அதற்கும் விடாமல் நேற்றுப் பெரியப்பா ரகுநாத், இன்று வினயா...

ஒரு வாரம் சென்றிருந்தது.

அன்று மாலை கல்லூரி முடிந்து அபிநயா வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தபோது வீடே வெறிச்சோடிக் கிடந்தது.

கையிலிருந்த புத்தகங்களைச் சோபாவில் வைத்து விட்டு அவள் தானும் அமர, பே என்று பயங்காட்டிக் கொண்டு பின்னாலிருந்து வந்தாள் ஸ்ரீநிதி.

''நீ எப்பக் காலேஜ்ல இருந்து வந்த?''

''இப்பதான் ஜஸ்ட் டூ மினிஸ்ட்க்கு முன்னாடி. அப்புறம் உனக்கொன்னு தெரியுமா, அபி?''



''சொல்லு.''

''வினு போன் பண்ணியிருந்தா.''

''ஓ, எதுக்கு?''

''கமிங் சன்டே அவங்க ஊர்ல இருக்கற வீட்ல ஏதோ ஃபங்ஷனாம். அதுக்கு என்னயும் இன்வைட் பண்ணத் தான் கூப்பிட்டிருந்தா. அதுக்கு உங்கூட என்னயும் கண்டிப்பா வரச் சொன்னா. நாம போகலேன்னா அவளே காரோட நம்மளக் கூட்டிட்டுப் போக வந்துடுவாளாம்.''

இதிலென்ன சர்ப்ரைஸ் இருக்கிறது என்று நினைத்த அபிநயா, ''ஆமா, அதுக்கு நீ என்ன சொன்ன?'' என்று கேட்டாள்.

''நானா? நாந்தான் வினுகிட்ட என்னயெல்லாம் உங்க வீட்டுக்குக் கூப்பிட மாட்டியான்னு கேட்டுட்டே இருந் தாச்சே, அதோட அன்னைக்குக் கோவில்ல பாத்ததுக் கப்புறம் கூட நானும் அவளும் போன்ல நிறைய முறை பேசிக்கிட்டோம், தெரியுமா?

''அப்புறம் வினுவுக்கும் என்னை மாதிரியே பரதம் கத்துக்கணும்னு ஆசையாம். நெக்ஸ்ட் வீக்ல இருந்து நானும் அவளும் க்ளாஸ்க்குக் கூடப் போகப் போறோமே.''

''அடடா! எல்லாமே கேக்கவே புதுசா இருக்கு.''

''இப்ப என்ன அவங்க வீட்டுக்கு இன்வைட் பண்ணா.

''இப்ப என்ன அவங்க வீட்டுக்கு இன்வைட் பண்ணா. அவ கூப்பிட்டப்பதான் நாங்க இதப்பத்தியே டிஸைட் பண்ணினோம்.''

''ரொம்ப சந்தோஷம் ஸ்ரீ.''

''அப்புறம் சன்டே அவங்க வீட்டுக்கு என்ன டிரஸ் போட்டுட்டுப் போகலாம்? எப்படிப் போகலாம்?'' என்று

சந்தோஷத்தில் குதித்த ஸ்ரீநிதியின் போக்கு சற்று வித்தியாசமாகப் பட்டது அபிநயாவிற்கு.

''என்ன அபி, சொல்லு.''

''கண்டிப்பாய்ப் போயேதான் ஆகணுமா ஸ்ரீ? எனக்கென்னவோ பிடிக்கல.''

''அட என்ன அபி நீ, என்ன விடவும் நீ சந்தோஷமாக் கிளம்புவன்னு பாத்தா இப்பிடி டல்லடிக்கற.''

''இந்த சன்டே எனக்கு வேற வேலையிருக்கு ஸ்ரீ. அதான்.''

''அது என்ன வேலைன்னு எனக்குத் தெரியும். ப்ராஜக்ட் வொர்க் பர்ச்சேஸ்க்கு உன் ஃப்ரெண்ட்ஸ் கூடப் போகணும்னு சொல்லுவ.''

''ஆமா. அதேதான்.''

''அதெல்லாம் அப்புறமாப் பாத்துக்கோ. சன்டே அவங்க வீட்டுக்குப் போறோம். அவ்வளவுதான்!'' என்று ஒரேயடியாக நின்ற ஸ்ரீநிதியிடம் அபிநயாவும் அப்பொழுது எதையும் சொல்லிக் கொள்ளவில்லை.

''அப்புறம் அவங்க வீட்டுக்கு நாம ரொம்ப நல்லாப் போகணும் அபி. நாமளும் ரொம்ப ரிச்தான்றது அவங்களுக்குப் பாத்ததுமே தெரியணும். அதுவும் வினு சொல்றதப் பாத்தா அவங்க ஊரே ரொம்பவும் பட்டிக்காடா இருக்கும் போலிருக்கு, அவங்க வீட்டு ஆளுங்களும் அப்பிடித்தான் இருப்பாங்கன்னு நினைக்கறேன்.''

இந்த ஒரு விஷயத்தில் மட்டும் இவள் ஏன் அவளுடைய தாய் சுந்தரியைப் போலவே இருக்கிறாளென்று அபிநயாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.



தங்களுடைய அளவிற்கு இல்லாவிட்டாலும் அன்று கடைசியாக வினயாவின் வீட்டிற்குச் சென்றிருந்தபோது இருந்த அவளுடைய குடும்பத்தினர் அனைவரையும் வைத்துப் பார்க்கும் போது அவர்களும் மிகவும் வசதி படைத்தவர்கள் என்றுதான் அபிநயாவிற்கும் தோன்றியது.

மேலும் அவர்கள் மிகவும் பெருந்தன்மையுடனும் நாகரிகத்துடனும் நடந்து கொண்டதையும் அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''நீ ரொம்ப அழகா இருக்கறதுனால உன்னப் பாத்ததுமே எல்லாருக்கும் புடிச்சுப் போயிடுது, ஆனா நான் என்னதான் பிரமாதமா மேக்கப் எல்லாம் பண்ணிக்கிட்டாலும்...''

''போதும் ஸ்ரீ, எதுக்கு உன்ன நீயே இப்பிடி கீழிறக்கிக்கற? எப்பவுமே மீடியமாவே இருக்க மாட்டியா? ஒண்ணு இந்த எண்டுல, இல்லன்னா அந்த எண்டுலதான் இருப்பியா?''

''ம்... நீ சொல்லுவ, எனக்குத்தான் தெரியும்...''

''உலகத்துல எல்லாருக்குமே எல்லாமே கிடைச்சுடாது ஸ்ரீ. இப்ப உனக்குப் பாரு, அம்மா, அப்பா எல்லாருமே இருக்காங்க. ஆனா எனக்கில்லையேன்னு நான் ஃபீல் பண்ணிட்டே உக்காந்துட்டிருந்தா நல்லா இருக்குமா?''

''ஆமா டாடி மம்மிகிட்ட சொல்லிட்டிருந்தது உண்மையா?'' என்று தன்னையறியாமல் கேட்டு விட்டுப் பிறகு சற்றுத் தயங்கிய ஸ்ரீநிதியைப் பார்த்தாள் அபிநயா.

''இல்ல. இப்ப இருக்கற ப்ராப்பர்ட்டிஸ்ல ஸெவன்டி பர்ஸன்டேஜ்க்குப் பக்கம் எல்லாமே உனக்குச் சேர வேண்டியதுதான்னு சொல்லிட்டிருந்தார்...''

மேலும், அதெல்லாம் முடியாது. அதை நம் பிள்ளைகளோடு சேர்த்து மூன்று பங்காகத்தான் பிரிக்க வேண்டுமென்று தனது தாய் - தந்தையிடம் - சண்டையிட்டுக் கொண்டது. ஆனால், அதை அபிநயாவிடம் சொல்லாமல் தனக்குள்ளேயே வைத்துக் கொண்டாள் ஸ்ரீநிதி.

''அதெல்லாம் இருக்கட்டும் ஸ்ரீ. பெரியவங்க நம்ம எல்லாருக்கும் நல்லது தான் செய்வாங்க. ஆனா நீ தேவையில்லாம ஏதோ ஒன்ன நினைச்சு நினைச்சு உம் மனசுக்குள்ள ஒரு காம்ப்ளக்ஸ் க்ரியேட் பண்ணிக்காத. அப்புறம் லைஃப சந்தோஷமா அனுபவிக்க முடியாது. ஏன், நிம்மதியாக்கூட இருக்க முடியாது!'' என்றாள்.

''சரிதான்!'' என்ற ஸ்ரீநிதி, ''ஏய் அபி, நேத்துப் பேசிட்டிருந்தோமே, அந்தப் படத்துக்கு டிக்கெட் வாங்கிட்டு வந்திருக்கேன்!'' என்றாள்.

''வாவ் நிஜமா?'' என்று சந்தோஷமாகக் கேட்ட அபிநயா, ''அப்ப வா, கிளம்பலாம். இப்பவே போனாதான் சரியா இருக்கும்!'' என்றாள்.

பத்து நிமிடங்களில் கிளம்பி வந்த இருவரும் அப்பொழுது வீட்டிற்குள் வந்த ரகுநாத்திடம் மட்டும் சொல்லிக் கொண்டு டிரைவரைக் காரை எடுக்கச் சொல்லிக் கிளம்பி விட்டிருந்தனர்.

''அம்மாவைத் தேடினேன் டாடி. எங்கன்னு தெரியல. அவங்ககிட்ட நீங்க சொல்லிடுங்க!'' என்று சொல்லிவிட்டு ஸ்ரீநிதி வந்திருக்க, சென்ற முறை சினிமாவுக்குச் சொல்லிக் கொள்ளச் சென்றபோது சுந்தரி பேசியதனைத்தும் நினைவுக்கு வர அபிநயா தானும் சுந்தரியிடம் சொல்லாமலே கிளம்பி வந்திருந்தாள்.



சந்தோஷமாகப் பேசிச் சிரித்தபடி அபிநயாவும் ஸ்ரீநிதியும் சினிமா பார்த்து முடித்துவிட்டு இரவு ஒன்பது மணிக்குத் திரும்பி வந்த பொழுது, அனைவரும் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

தங்களுடன் சில வார்த்தைகள் பேசிவிட்டு பிசினஸ் விஷயம் பேசியபடி ரகுநாத்தும் சங்கரும் அங்கிருந்து எழுந்து செல்ல, ''இந்த அண்ணாவும் டாடியும் எப்பவும் இப்பிடித்தான். பேசாம நாம தினமும் எங்காவது இன்னைக்கு மாதிரியே வெளிய போயிடலாம்!'' என்றாள் ஸ்ரீநிதி.

''அது சரி. முதல்ல வீட்ல இருக்கறவங்கள மதிச்சு சொல்லிட்டுப் போகப் பழகுங்க!'' என்று சுந்தரி வர, ''போகும்போது உங்களத் தேடினோம் மம்மி. அதுக்கப்புறம்தான் லேட்டாயிடுச்சுன்னு அப்ப வந்த டாடிகிட்ட மட்டும் சொல்லிட்டுப் போய்ட்டோம்!'' என்றாள் ஸ்ரீநிதி.

அவர் தன்னை நினைத்துத்தான் சொல்கிறார் என்பது அபிநயாவிற்குப் புரியவே செய்தது.

சரி. தானும் ஸ்ரீநிதியை ஆமோதித்து ஏதாவது சொல்லலாமா என்று வாயைத் திறக்கப் போன அபிநயா, ஒரு வேளை அவர் தன்னைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கவில்லையென்றால் என்று பேசாமலே இருந்து விட்டாள்.

''போ அபி. போரடிக்குது. நான் போய் டி.வி. பார்த்துட்டே சாப்பிடப் போறேன். நீயும் வர்றதா இருந்தா வா!'' என்று டிபன் ப்ளேட்டுடன் ஸ்ரீநிதி எழுந்து செல்ல, தான் மட்டும் அங்கேயே அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தாள் அபிநயா.

''உன்னோட நடத்தையெல்லாம் ஒண்ணும் சரியில்ல. பாவம்! வேற வழியில்லையேன்னு நாங்க வெச்சுப்

பாக்கற பாவத்துக்கு எங்க பொண்ணையும் கெடுத்து விட்டுடாத!'' என்ற சுந்தரியை நிமிர்ந்து பார்த்த அபிநயா, பிறகு மீண்டும் தன் பாட்டுக்குச் சாப்பிட ஆரம்பித் திருந்தாள்.

''ஏய், என்னடி! உங்கிட்டதான சொல்லிட்டிருக்கேன், காதுல விழல?''

''எவ்வளவு பெரிய வார்த்தை சொல்லிட்டிங்க! உண் மைலயே நடத்த சரியில்லாம இருக்கற ஒரு பொண்ணு கூட இதுக்கு எந்தப் பதிலும் சொல்லமாட்டா.''

''சரிக்குச் சரி பதில் குடுத்தா நீ பெரிய மனுஷி ஆயி டுவியா?''

''உங்க வார்த்தைகளுக்கு மதிப்புக் குடுக்கணும்னு தான் பதிலே சொல்லிட்டிருக்கேன். இல்லன்னா இந்த மாதிரி கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்றதையே நான் கேவலமா நினைக்கறேன்.''

''உன்னோட திமிர அடக்கலேன்னா நான் சுந்தரி இல்லடி.''

இதென்ன வம்பாய் இருக்கிறது! பதில் சொன்னாலும் பிரச்சனை, சொல்லாவிட்டாலும் பிரச்சனையா?

சாப்பிடும் எண்ணமே மறைந்துவிட, பேசாமல் எழுந் திருந்தாள் அபிநயா.

அதற்கும் எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் நான் பேசிக் கொண்டிருக்கும் போதே என்னை மதிக்காமல் எழுந்து செல்வாளென்று சுந்தரி மேலும் ஏதேதோ சொல்லிக் கொண்டிருப்பது காதில் விழ, கடவுளே என்று அனைத்துமே வெறுத்துப் போயிற்று அவளுக்கு.



# 14

''அபி! அபி! எழுந்துருடி.''

நல்ல தூக்கத்திலிருந்த அபிநயா சிரமப்பட்டுக் கண்களைத் திறந்து பார்த்தாள்.

''என்ன ஸ்ரீ, நீ ஏன் சன்டே அன்னைக்குக் கூட நடு ராத்திரியில வந்து எழுப்பற?''

''நடு ராத்திரியா, மணி நாலே முக்கால்டி.''

''சரி. அதுக்கென்ன?''

''ஏய் ப்ளீஸ்பா, முதல்ல எழுந்துறேன்.''

''எப்படியும் நான் அஞ்சு மணிக்கு எழுந்துடுவேன். இன்னும் கால் மணி நேரம் தூங்க விடேன்...'' என்று போகப் போகத் தூக்கத்தில் வார்த்தைகள் தேய்ந்து போயின அபிநயாவிற்கு.

''ஏய் என்னடி, இப்படிக் கும்பகர்ணி மாதிரி உடனே திரும்பவும் தூங்க ஆரம்பிச்சுட்ட. இப்ப நீயே எழுந்துக் கறியா, இல்ல... தண்ணி ஒரு பக்கெட்டக் கொண்டு வந்து மேல ஊத்தட்டுமா?''

''அடப்போப்பா. இப்பதான் நல்ல ட்ரீம் ஒண்ணு வந்தது. அதுக்குள்ள...''

''ட்ரீமா? ஏய் ஏய், அதப்பத்தி சொல்லேன். அதுல வந்த உன் ஹீரோ எப்படியிருந்தான்?''

''ஹீரோவா?''

''ம், பின்ன இந்த ஏஜ்ல வேறென்ன ட்ரீம் வரும்?''

''அடப்போடி, நாம எல்லாரும் பிக்னிக் போயிருக் கோம். அந்த இடம் பூக்காடு மாதிரி பார்க்கறதுக்கே அப் படியே சோலைவனம் மாதிரியிருக்கு. அத ரசிச்சுட்டிருந் தவள வந்து இப்படிப் பாதில எழுப்பி விட்டுட்டயே.''

''நானும் அப்படிப் போறதுக்குத்தான் லேட்டாயிடக் கூடாதுன்னு இப்படி வந்து எழுப்பிட்டிருக்கேன்.''

அப்படிச் சொன்னவளைப் புரியாமல் பார்த்த அபிநயா, ''என்ன சொல்ற?'' என்று கேட்டாள்.

''வினயா வீட்டுக்குப் போறதைப் பத்தி சொல்லிட் டிருக்கேன்.''

''ஏய் உனக்கென்ன மூளை ஏதாவது குழம்பிப் போச்சா?''

''ஏன் அபி?''

''பின்ன இந்த நேரத்துக்குக் கிளம்பிப் போனா அப் புறம் தூங்கிட்டிருக்கறவங்க வீட்டுக் கதவப் போய் நாம தட்ட வேண்டியது தான்.''

''சரி. இப்ப நீ என்னதான் சொல்ல வர்ற?''

''டிபன் சாப்டுட்டு ஒன்பது மணிக்கு மேல வேணும் னாப் போலாம். இல்லன்னா அதுவும் வேண்டாம்.''

ஒரு வழியாக எட்டு மணிக்கு அபிநயாவைக் கிளப்பிக் கொண்டு டிரைவரைக் காரை எடுக்கச் சொல்லிக் கிளம்பியே விட்டிருந்தாள் ஸ்ரீநிதி.

டிரைவரிடம் அட்ரஸை மட்டும் கொடுத்திருக்க, அவனும் ஒரு மணி நேரத்தில் வினயாவின் வீட்டு வாசலுக்கே சென்று காரை நிறுத்தினான்.

அவர்களுடைய வீட்டைக் கண்டு பிடிப்பது ஒன்றும் சிரமமாக இருக்கவில்லை. மாறாக மிகவும் சுலபமாக இருந்தது.



அந்த ஊரில் இருக்கும் சிறு குழந்தை வரை யாரைக் கேட்டாலும் வினயாவின் வீட்டைச் சரியாக அடையாளம் காட்டியதைப் பார்க்கவே அவர்களுக்கு மிகவும் ஆச் சரியமாக இருந்தது.

புது இடம், முதல் முறையாகச் செல்கிறோமென்ற எண்ணமெல்லாம் ஸ்ரீநிதிக்குச் சிறிதும் இல்லாததைப் பார்த்த அபிநயாவுக்கு வியப்பாக இருந்தது. சினிமாக் களில் எல்லாம் வருவதைப் போல இருந்த அந்த மிகப் பெரிய பங்களாவையும்.

''நம்ம வீடு மாதிரியே வினு வீடும் ரொம்பப் பெரிசு தான்!'' என்று ஸ்ரீநிதி சொல்லிக் கொண்டிருக்க,

நாம் மட்டும் எத்தனை முறை இவர்களுடைய வீட் டிற்கு வந்து விட்டோம். ஆனால் அவர்களில் யாரையும் ஒரு முறை கூடத் தங்களுடைய வீட்டிற்கு அழைக்கும் நிலையில் நாம் இல்லையே என்று மிகவும் ஆதங்கமாக இருந்தது அபிநயாவிற்கு.

அவர்கள் ஹாலுக்குள் சென்றிருக்க, சோபாவில் அமர்ந்து யாரோ சிலருடன் பேசிக் கொண்டிருந்த சண் முகம் திரும்பிப் பார்த்தார்.

சிரித்த முகத்துடன் அவர்களை வரவேற்றுச் சில வினாடிகள் பேசிய சண்முகம், ''வினயா!'' என்று தனது சிறிய மகளை அழைத்தார்.

அதற்குள் ஹாலுக்கு வந்திருந்த வினயா, ''வாவ் அபி, ஸ்ரீநிதி! வாங்க வாங்க!'' என்று சந்தோஷமாக முன்னே வந்து அவர்களை உள்ளே அழைத்துப் போனாள்.

தொடர்ந்து வீட்டிலிருக்கும் அனைவரும் வந்து வரவேற்றுப் பேசினாலும், ஏதோ வேண்டாத விருந்

தாளியாக வந்து விட்டதைப் போல அபிநயாவிற்குத் தான் மனதிற்குள் ஏனோ ஒரு மாதிரியாகவே இருந்தது.

இந்த ஸ்ரீநிதி ஏன் அப்படி ஒரேயடியாக நின்று அழைத்து வந்தாளென்று அவள் மேல் சற்று எரிச்சலாகக் கூட வந்தது.

எப்படியோ ஒரு மணி நேரம் தாக்குப் பிடித்தவள், அதற்கு மேல் கிளம்புவதாகச் சொன்னாள்.

''கிளம்பறீங்களா?'' என்று வித்யா ஆச்சரியமாகக் கேட்க, ''என்னது கிளம்பறதா, மதியத்துக்கு மேல போலாம் அபி! ப்ளீஸ்...'' என்று ஸ்ரீநிதியும் பிடித்துக் கொண்டு விட்டிருந்தாள்.

யார் என்ன சொல்லியும், ''தயவு செஞ்சு கம்ப்பல் பண்ணாதீங்க. நான் கிளம்பணும்!'' என்று நின்று விட்டிருந்த அபிநயாவின் செய்கை அனைவருக்கும் புதுமையாக இருந்தது.

அதே நேரம், ''ஐய்! ஜீவாண்ணா வந்தாச்சு!'' என்று வினயா குதிக்க, மற்ற அனைவருக்கும் கூட அவனைப் பார்த்ததால் ஏற்பட்ட சந்தோஷம் அபிநயாவின் கண்களில் படத் தவறவில்லை.

ஜீவானந்தின் கம்பீரமான குரலைக் கேட்டதுமே கண்கள் கலங்கி விட்டிருக்க, கடவுளே! தான் இவ்வளவு பலவீனமானவளா என்று அபிநயாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அது மற்றவர்களின் கவனத்தை ஈர்த்து விடாமலிருக்க உடனே தன்னைச் சமாளித்துக் கொள்வதற்காகக் குளியலறைக்குள் சென்றிருந்தாள்.



''இன்னைக்கு அபியோட பிறந்த நாள்!'' என்ற ஸ்ரீநிதி, உடனே, ''சித்தியோட அதாவது அபி அம்மாவோட இறந்த நாளும் கூட!'' என்றாள்.

''என்ன சொல்றீங்க? அப்பிடின்னா...''

''ஆமா, அபி பிறந்தப்பவே அவங்கம்மா இறந்துட்டாங்க. சில வருஷங்கள்லேயே சித்தப்பாவும்.''

ஸ்ரீநிதி சொன்னதைக் கேட்டதில் அனைவருக்கும் மனது மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

சில வினாடிகளில் திரும்பி வந்த அபிநயா ஓரளவு பழைய நிலைக்கு வந்திருக்க, தன்னைப் பார்ப்பவர்களின் கண்களில் ஏதோ வித்தியாசம் தெரிகிறதா என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இந்தச் சிறு வயதில் எத்தனை பெரிய பாரத்தைச் சுமந்து கொண்டிருக்கிறாளென்று அனைவருக்கும் மனம் உருகிப் போயிருந்தாலும், அதை யாரும் அபிநயாவிற்கு முன்பாக வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

சிரித்த முகத்துடன் வந்த அபிநயாவிடம், ''ப்ளீஸ் அபி! எங்களுக்காக ஈவினிங் வரைக்கும் கடைசி லஞ்ச் வரைக்கும் இருந்து சாப்டுட்டாவது போகலாமே!'' என்றாள் வினயா.

''சரிதான் வினு, எல்லாரோட விருப்பமும் அது தான்னா எனக்கும் சம்மதம்!'' என்றாள் அபிநயா.

''ஹலோ மேடம், வாங்க!'' என்ற ஜீவானந்தை ஒரு சிறு புன்னகையுடன் பார்த்த அபிநயா, ''நாங்கதான் உங்கள வரவேற்கணும் போலிருக்கு. அந்த அளவுக்கு அதிசயமா வந்திருக்கீங்க போலிருக்கு!'' என்றாள்.

''எங்க, அதான் கிளம்பியாகணும்னு நீ ஒத்தக் கால்ல நிக்கறயாக்கும்? அதோட இந்த மாதிரி பட்டிக்காட்டு வீட்டையெல்லாம் உன்ன மாதிரி மாடர்ன் கேர்ள்க்கு புடிக்குமா?''

''ஏன் பிடிக்காம, இயற்கை எழில் நிறைஞ்ச இந்த மாதிரி ஒரு அழகான ஊர்ல இருக்கக் குடுத்து வெச்சிருக் கணுமே.''

''அப்ப இருக்க முழுச் சம்மதம்?''

''சம்மதம், ஆசை இதெல்லாம் எனக்கு மட்டும் இருந்து என்ன பயன், மத்தவங்களுக்கும் இருக்கணுமே!'' என்ற அபிநயாவின் வார்த்தைகளில் இருந்த வருத்தம் ஜீவானந்த்தை என்னவோ செய்து விட்டிருந்தது.

என்னதான் மனதின் ஆதங்கம் தன்னையே அறியா மல் வெளிப்பட்டிருந்தாலும், அதற்குப் பிறகு, கடவுளே! அனைவருக்கும் முன்னிலையில் இப்படிப் பேசி விட்டோமே என்றிருந்தது அபிநயாவிற்கு.

நல்ல வேளையாக வேறு எதைப் பற்றியோ அங் கிருந்த அனைவரும் மும்முரமாகப் பேசிக் கொண்டிருந் ததில் அபிநயா அப்படிச் சொன்னது வேறு யார் காதிலும் விழுந்திருக்கவில்லை.

''ஜீவா! வாப்பா. இப்பதான் உனக்கு போன் பண்ண ணும்னு நினைச்சுட்டே வந்துட்டிருக்கேன்!'' என்று ஸ்நேக்ஸ் பிளேட்களுடன் வந்தார் மீனாட்சி.

''ஏம்மா இதையெல்லாம் நீங்க எடுத்துட்டு வர்றீங்க?'' என்று அவன் உரிமையாகத் தனது தாயைக் கடிந்து கொள்ள, ''அபி! இந்தாடாம்மா!'' என்று அவர் நீட்டியதை வாங்கிக் கொண்ட அபிநயா சாப்பிடவும் தொடங்கி யிருந்தாள்.



''ஏன் கண்ணா, நான் செய்யாம வேற யார் செய்வா? இந்தா, நீயும் எடுத்துக்கோ!'' என்று தாய் கொடுத்த ஸ்நேக்ஸ் ப்ளேட்டை வாங்கிக் கொண்ட ஜீவானந்த்,

''வாவ்! சூப்பர்ப் ஆன்ட்டி!'' என்று சாப்பிட்டுக் கொண் டிருந்த அபிநயாவைப் பார்த்து, ''இப்பதான் யாரோ கிளம்பறேன்னு ஒத்தக்கால்ல நின்னுட்டிருந்தாங்க! ஏன் வினு, அது யார்ன்னு உனக்குத் தெரியுமா?'' என்று தங்கையைக் கேட்டான்.

''அது யாரு?'' என்று அபிநயா ஒன்றும் தெரியாத தைப் போலக் கேட்க, ''ம்... கேக்க மாட்ட?'' என்றான்.

''ஆமா, அப்படி இங்கயே இருந்தா மட்டும் என்ன யூஸ், வீட்டுக்குள்ளேயே தான் அடஞ்சு கிடக்கணும். ஸ்ரீக்கும் அபிக்கும் நம்ம ஊரு புதுசு. ஏன், இங்க எதுவுமே அவங்களுக்குத் தெரியாது. அதிசயமா வந்திருக்காங்க ளேன்னு எங்களையெல்லாம் வெளியவா கூட்டிட்டுப் போகப் போறீங்க ஜீவாண்ணா?'' என்று தனது ஆதங் கத்தை வெளிப்படுத்தினாள் வினயா.

''நினைப்புதான். எவ்வளவு பெரிய போலீஸ் ஆபீசர்! ஏதோ போனாப் போகுதுன்னு பெருந்தன்மையோட வந்திருக்கார். இதுக்கும் மேல மிஸ்டர் ஜீவானந்த் உங்களையெல்லாம் வெளிய வேற கூட்டிட்டுப் போகணு மாக்கும்?'' என்று தானும் தங்கைக்கு ஒத்து ஊதினாள் வித்யா.

குடும்பத்தில் உள்ளவர்களின் ஏக்கம் புரிய, அன் றைக்கு ஒரு நாளைக் குடும்பத்திற்காகச் செலவிடுவது என்ற முடிவுக்கு வந்திருந்தான் ஜீவானந்த்.

''அம்மா! டீ ஒரு கப் குடுங்க. நாங்க நம்ம தோட்டம் துரவு, ஆடு மாடு, கோழின்னு எல்லாத்தையும் பாக்கப் போகணும்!'' என்றான்.

''நிஜமாவாண்ணா?''

''அடடா! சீக்கிரம் வாய மூடிக்கோமா. ஈ எறும்புன்னு போனாத் தப்பில்ல, காக்கா குருவின்னு ஏதாவது போயிடப் போகுது.''

''போங்கண்ணா!'' என்று சிணுங்கிய வினயா, ரொம்ப ரொம்பத் தேங்க்ஸ் என்று சந்தோஷமாகக் குதித்தாள்.

''எப்படியோ நம்ம வீட்டு கெஸ்ட்டுக்காகத்தான் னாலும் ரொம்ப நாளைக்கப்புறம் நீங்களும் எல்லாத் தையும் பாக்கப் போறீங்க!'' என்றாள் வித்யா.

''அப்படின்னு நீ நினைச்சுட்டா எப்படியும் மாசத்துக்கு குறைஞ்சது ஒரு ரெண்டு மூணு தடவையாவது ஜீவா வந்து எல்லாத்தையும் பாக்காம இருக்க மாட்டான். கூடவே டவுன்ல நான் போய்ப் பாத்தாக வேண்டிய வேலைகளை யெல்லாத்தையும் கூட, ஒரு வார்த்த சொன்னாப் போதும், பிரமாதமா முடிச்சுக் குடுத்துடு வான். அதனால எனக்கு இப்பெல்லாம் எவ்வளவோ வேலைப் பளு குறைஞ்சு நான் ரொம்ப நிம்மதியா இருக்கேன் தெரியுமா?'' என்று வந்தார் அந்தக் குடும்பத் தின் தலைவர் சண்முகம்.

''அப்பாகிட்டயே பாராட்டு வாங்கியாச்சா! அப்ப நீங்க பெரிய ஆள்தாண்ணா!'' என்று வித்யா ஆச்சரியமாகத் தனது அண்ணனைப் பார்த்துச் சிரிக்க, ''தெரிஞ்சா சரி!'' என்று தனது சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண் டான் ஜீவானந்த்.

''ஆனாலும் எனக்கென்னவோ அப்பா உங்களுக்கு ஐஸ் வெக்கறாரோன்னு...'' என்று வித்யா மெதுவாகத் தனது அண்ணனின் காதில் கிசுகிசுக்க,



''என் தங்கச்சிங்கறதை அப்பப்ப ப்ரூஃப் பண்ற!'' என்று தங்கையைப் பார்த்தான் அவன்.

''சொல்லுங்கப்பா, நான் இப்ப என்ன செய்யணும்?'' என்று ஜீவானந்த் தனது தந்தையிடம் கேட்க, ''அதான் இன்னைக்கு நீயே போய் எல்லாத்தையும் பாத்துக்க றேன்னு சொல்லி ஏற்கெனவே என் வேலையைக் குறைச் சிட்டயே!'' என்றார் சண்முகம்.

''ஏம்பா, பெரியண்ணா, ஒவ்வொரு நாளும் இங்கே தோட்டத்துலயும் ஃபார்ம்லயும் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கறார். ஆனா அவர ஒரு நாளாவது இந்தளவுக்குப் பாராட்டியிருப்பீங்களா?''

என்னதான் வித்யா சொல்வதைப்போல தேவானந்த் தான் அனைத்தையுமே கவனித்துக் கொள்கிறானென் றாலும் அவன் எடுப்பதை விட என்றைக்காவது ஒரு நாள் வந்து பார்க்கும் ஜீவானந்த் எடுக்கும் முடிவுகளே அனைத்து விதங்களிலுமே சிறப்பானதாக அமைந்தன.

அப்படியே அதை யாராவது சுட்டிக் காட்டினாலும் தேவானந் இதற்கெல்லாம் காரணம் தம்பிதான் என்று ஜீவானந்த்தை வெறுத்து விடக் கூடாதே என்று சண் முகமும் இந்த விஷயத்தில் எப்பொழுதும் சற்றுக் கவனத்துடன் தான் நடந்து கொண்டார்.

இன்றைக்குக் கூட தேவானந்த் இல்லாததால் எங்கே தான் சிரமப்பட்டு விடுவேனோ என்று தனது முக்கிய மான வேலைகளனைத்தையும் போட்டு விட்டு ஆனால் அதைச் சற்றும் வெளிக் காட்டிக் கொள்ளாமல் வந்து நின் றிருக்கும் தனது சிறிய மகன் ஜீவானந்த்தைப் பார்க்கை யில் அவருக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

கோடிக்கணக்கான சொத்துக்களும் அதைப் பராமரிக்க நூற்றுக் கணக்கான ஆட்களும் என இன்னும் எத்தனையோ வசதிகள் நமக்கு இருக்கும் போது அது என்னதான் அரசாங்க வேலையே என்றாலும் நம் மகன் ஏன் மற்றவர்களிடம் சென்று கையேந்த வேண்டுமென்ற எண்ணமெல்லாம் ஆரம்ப நாட்களில் சண்முகத்திடமும் இருக்கத்தான் செய்தது.

ஆனால் சிறு வயது முதலே ஒன்றை நினைத்து விட்டால் அதை முடிக்காமல் தூங்கிப் பழக்கப்படாத ஜீவானந்த் அவன் ஆசைப்பட்டபடியே காவல்துறைப் பணிக்குத் தேர்வானபோது அவர் ஒன்றும் உள்ளுக்குள் சந்தோஷப்பட்டு விடவில்லை.

மேலும் மகனுடைய குணத்தை நன்கு அறிந்தவரென்பதால் மிகவும் சிரமப்பட்டு அவனது விருப்பத்தை அவமதிக்கும் விதமாக எதையும் சொல்லிவிடாமல் தானாகவே விட்டுக் கொடுத்தும் இருந்தார்.

மகனின் கடமையுணர்ச்சிக்கும், பொறுப்புணர்ச்சிக்கும் என்னதான் அவன் தான் நினைத்ததைச் சாதிப்பானென்று மற்றவர்களைப் போலவே சண்முகமும் எதிர்பார்த்தாரென்றாலும், இவ்வளவு விரைவில் இந்த அளவு உயரத்தை எட்டிப் பிடிப்பானென்று அவர் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அதிலும் அவனால் நன்மையடைந்தவர்கள் வந்து கண்ணீர் மல்க மனதார நன்றி தெரிவித்து விட்டுச் செல்லும்போது, மிகவும் மனம் நெகிழ்ந்து போவதோடு இனி எக்காரணத்தைக் கொண்டும் அவனுடைய விருப்பத்திற்கு மாறாகவோ அல்லது அவனது மனம் புண்



படும்படியோ தான் எதையும் சொல்லிவிடக் கூடாதென்ற முடிவுக்கும் மனதிற்குள் வந்திருந்தார்.

பாவம்! ஏற்கெனவே அவனுடைய தொழிலில் அவனுக்கும் எத்தனையோ சவால்கள், இடைஞ்சல்கள் என பிரச்சனைகள் நிறைய இருக்குமே. அதற்கு மத்தியில் அவனுக்கு நாம் உதவி செய்யா விட்டாலும் பரவாயில்லை. என்ன இந்தத் தந்தையென்று தன்னைப் பார்த்தாலே அவன் எரிச்சல் படும்படி ஆகி விடக் கூடாதென்று சண்முகமும் இப்பொழுதெல்லாம் தன்னை நிறைய மாற்றிக் கொண்டு விட்டிருந்தார்.

''அபியோட அப்பாகூட போலீஸ் ஆபீஸராதான் இருந்தார்!'' என்று ஸ்ரீநிதி சொல்ல, பழைய நினைவுகளால் அனைவருக்கும் முன்னிலையில் தன் முக பாவனை மாறி விடாதிருக்க வெகுவாகச் சிரமப்பட்டாள் அபிநயா.

தன் நிலையை உணர்ந்ததாலோ என்னவோ ஜீவானந்த் தனது தந்தையுடன் வேறு எதைப் பற்றியோ பேச ஆரம்பித்திருக்க, மனதிற்குள் அவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டாள்.

சில நிமிடங்கள் பொறுத்துப் பார்த்த வினயா, ''என்னண்ணா அப்பாகூட மும்முரமாப் பேச ஆரம்பிச்சுட்டீங்க, நாம வெளிய கிளம்ப வேண்டாமா?'' என்று கேட்டாள்.

''பின்ன? நான் ரெடி. நீ, நம்ம கெஸ்ட் எல்லாரும் ரெடியா? என்ன போகலாம்தான?'' என்று அபிநயாவையும், ஸ்ரீநிதியையும் கேட்டான் ஜீவானந்த்.

சந்தோஷத்துடன் சரி என்பதைப் போலத் தலையை அசைத்த அபிநயாவின் பார்வை, தன்னை ஏதோ செய்ய

ஏனோ அந்த நிமிடத்தை அணு அணுவாக ரசித்தான் ஜீவானந்த்.

இந்த உணர்வுதான்...

அபிநயாவிற்கும் இது போலத்தான் இருந்ததா? அதைத்தான் அன்று தன்னிடமும் எதிர்பார்த்தாளா?

இதை எப்படி நான் அவளுக்குக் கொடுக்கத் தவறி னேன், நான் ஏதேதோ சொல்லி அவளது அன்பைத் தட்டிக் கழித்த அன்று அவளுடைய மனம் என்னவெல் லாம் பாடு பட்டிருக்கும்.

''அண்ணா! என்ன யோசனை?'' என்று வினயா கேட்க, ''ஒண்ணுமில்ல. கிளம்பலாம்!'' என்று எழுந்தான்.

''போய்ட்டு லஞ்சுக்குள்ள வந்துடுங்க!'' என்ற வித்யா விடம், ''ஏன் நீ வர்லையா?'' என்று கேட்டான்.

''இல்லண்ணா. நான் வரல.''

''ஏன், வந்தா மூக்கு முட்ட உள்ள போயிருக்கற சாப் பாட்டுல கொஞ்சமாவது ஜீரணமாகுமில்ல.''

''போங்கண்ணா! உங்கள மாதிரி அப்படியெல்லாம் சாப்ட்டு எனக்கு ஒண்ணும் பழக்கமில்ல!'' என்று வித்யா சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ''வேண்டாம்பா, இந்த மாதிரி சமயத்துல அவ வெளிய எங்கயும் வேண் டாம். நல்லா ரெஸ்ட் எடுக்கட்டும்!'' என்று வந்தார் மீனாட்சி.

''எந்த மாதிரி சமயத்துல?'' என்று புரியாமல் ஜீவானந்த் கேட்க, ''அடப் போங்கம்மா, நீங்க இருந்திருந்து ஜீவாண்ணா கிட்டப் போய்ச் சொன்னா அப்புறம் அவ் வளவுதான்!'' என்று அழகாக வெட்கப்பட்டாள் வித்யா.



''ம். இனி இதுக்கு மேல சொல்ல வேற செய்யணு மாக்கும்!'' என்று சிரித்த ஜீவானந்த், ''ஓ! அதான் என் மனைவிய நல்லாப் பாத்துக்கோங்க, நல்லாப் பாத்துக் கோங்கன்னு மாப்ளகிட்டருந்து போனுக்கு மேல போனா?'' என்றான்.

''பாருங்கமா, எதுக்குமா இருந்திருந்து இவர்கிட்ட சொன்னீங்க?'' என்று வித்யா சிணுங்க, ''வேணும்னாப் பாரு, இன்னைக்கு சாட்டே வேற, இன்னும் ஒரு மணி நேரத்துல மனுஷன் இங்க இருக்கப் போறார்!'' என்றான்.

''அவரொன்னும் இன்னைக்கு வரமாட்டார். அவருக் குக் கம்பெனில நிறைய வேலையிருக்கு.''

''சரி, பார்க்கலாம்!'' என்று சிரித்துக் கொண்டே சென்ற தனது அண்ணனைப் பார்த்த வித்யாவாலும் புன்ன கையை முழுமையாக மறைத்துக் கொள்ள முடியவில்லை.

# 15

அன்றைய நாள் இப்படியொரு மறக்க முடியாத நாளாக அமையுமென்று அபிநயா கனவிலும் எதிர்பார்த் திருக்கவில்லை.

என்னதான் வெளியே சாதாரணமாகக் காட்டிக் கொண்டாலும் தன்னையறியாமலேயே உள்ளுக்குள் அந்த நாளில் எப்பொழுதும் இருக்கும் ஒரு வித மெல் லிய சோகம் அப்படியே சந்தோஷமாக மாறுமென்று அபிநயா சற்றும் நினைத்துக் கூடப் பார்த்திருக்க வில்லை.

அந்த ஊரில் ஜீவானந்த்துடையது ஒரு மிகப் பெரிய விவசாயக் குடும்பமாக இருந்தது. பெரிய நவீனப் பால் பண்ணை, பூந்தோட்டம், பழத்தோட்டம், தென்னந் தோப்பு, விவசாயம் என வியந்து பார்ப்பதற்கும், தெரிந்து கொள்வதற்கும் அபிநயாவிற்கு எத்தனை எத்தனையோ விஷயங்கள் இருந்தன.

மேலும் அந்த இடங்கள் அனைத்திலுமே நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் வேலை செய்து கொண்டிருக்க, அவர்கள் அனைவரின் முகங்களிலும் தெரிந்த அந்த சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் ஒருவித ஆச்சரியத் துடன் கண்டாள் அபிநயா.

அதற்குக் காரணமும் அவர்கள் கொடுக்கும் நல்ல ஊதியமும், பெருந்தன்மையுடன் ஊழியர்களை நடத்தும் விதமுமே என்பதும் கண் கூடாகவே தெரிந்தது.

அப்படித் தாங்கள் சென்ற எல்லா இடங்களிலும் உள்ள ஊழியர்கள் ஒவ்வொருவரையும் அவர்களுடைய பெயர் சொல்லி அழைத்து ஜீவானந்த் நலம் விசாரித்த தில் அவர்கள் சந்தோஷத்தின் எல்லைக்கே சென்றிருந் தார்கள்.

மேலும் அவனுடன் பேசுவதற்காக நீ நானென்று போட்டியிட்டவர்கள் அனைவரிடமும் அதில் ஒருவரைக் கூட விட்டு விடாமல் பந்தாவோ பகட்டோ துளியும் காட்டாமல் இனிமையாகப் பேசிய ஜீவானந்த்தின் செய் கையில் அபிநயாவிற்கும் அவன் மேல் பெருமதிப்பு உண்டாகியிருந்தது.

இன்னும் இன்னும் என ஜீவானந்த் பற்றிய பல நல்ல குணங்களைக் கண்டு கொண்ட அபிநயாவால், ஏனோ சந்தோஷப்பட முடியவில்லை.



கடைசியாகத் தென்னந் தோப்பிற்குச் சென்றிருக்க, ''ஐயா! என் கையால உங்களுக்கு இளநி வெட்டிக் கொடுத்து எவ்வளவு நாளாச்சுங்கய்யா!'' என்று ஓடி வந்தான் அந்த வேலையாள்.

''ம். மாரி! எப்படியிருக்க? சாப்டாச்சா?'' என்று அவனிட மும் சில வார்த்தைகள் பேசிய ஜீவானந்த், ''உன் கையால இளநீர் வாங்கிக் குடிக்காம நான் மட்டும் போயிடு வேனாக்கும்! எங்க ஒரு பத்து இளநீர் வெட்டு, பாக்க லாம்!'' என்றான்.

அதற்குள் வினயா, ஸ்ரீநிதி, அபிநயா மூவரும் கூட அருகில் வந்திருக்க, தனது அண்ணனைப் போலவே வினயா தானும் தோட்டக்காரனிடம் அவனுடைய கடைசிக் குழந்தை வரை அனைவரையும் பெயர் சொல்லி நலம் விசாரித்ததை ஆச்சரியத்துடன் கண்டாள் அபிநயா.

''நீங்க எப்படியிருக்கீங்க சின்னம்மா? நீங்க இல்லாம அம்மா ரொம்பவும் சிரமப்பட்றாங்க. பேசாம நீங்க இங்கிருந்தே படிக்கப் போங்கமா. எங்க எல்லாருக்கும் ரொம்ப சந்தோஷமா இருக்கும்.''

''சரிதான். அப்புறம் மாரி! இவங்க என் ஃப்ரண்ட்ஸ் ஸ்ரீநிதி, அபிநயா!'' என்று வினயா அவர்கள் இருவரையும் அவனுக்கு அறிமுகப்படுத்தி வைக்க, ''வாங்கம்மா!'' என்று கையெடுத்துக் கும்பிட்டான் அந்த மாரிமுத்து.

''ஏய் ஸ்ரீ, இங்க வாயேன். நான் உனக்கொன்னு காட் றேன்,'' என்று வினயா ஸ்ரீநிதியை அருகில் எங்கோ அழைத்துக் கொண்டு போக, ''அந்த மஹாலட்சுமியே கீழே இறங்கி வந்த மாதிரி அம்சமா அழகா இருக்

கீங்கமா!'' என்று தன்னைப் பார்த்துச் சொன்ன மாரி முத்துவைப் புன்னகையுடன் பார்த்தாள் அபிநயா.

''நீ ஏன் மாரிமுத்து, இந்தக் காலத்துப் பொண்ணுங்கள சும்மாவே கைல புடிக்க முடியாது!'' என்று ஜீவானந்த் புன்னகையுடன் அபிநயாவைப் பார்க்க, ''நான் ஒண்ணும் அந்த மாதிரி பொண்ணு கிடையாது!'' என்றாள் அபிநயா.

''ஒரு நிமிஷம், வர்றேங்கய்யா!'' என்று எங்கோ சென்றவன், சில வினாடிகளில் சில ப்ளாஸ்டிக் ஸ்டூல் களுடன் திரும்பி வந்தான்.

''உக்காருங்கய்யா, நீங்க எவ்வளவு நேரம் நிப்பீங்க?'' என்று மனதார உபசரித்தவன், ''நீங்களும் உக்காருங் கம்மா!'' என்று அபிநயாவையும் உபசரித்தான்.

''சரி, உக்காரு. இல்லன்னா அவன் மனசு கஷ்டப் படுவான்!'' என்றவன் இளநீரை வாங்கி அபிநயாவிடம் கொடுத்தான்.

அபிநயா வாங்கி அதை உடையிலெல்லாம் சிந்திக் கொண்டே குடிக்க, ''இரு இரு, அப்படியில்ல!'' என்று தான் ஒரு இளநீரைக் குடித்துக் காட்டினான்.

ஒரு சொட்டுக்கூட கீழே சிந்தாமல் தானும் அவனைப் போலவே குடிக்க முயற்சி செய்த அபிநயா இப்பொழுது முன்னிலும் அதிகமாகவே அனைத்தையும் மேலே கொட்டிக் கொண்டாள்.

''அடடா, இருங்கமா. நான் உள்ள போய் ஏதாவது ஸ்ட்ரா இருக்கான்னு பாக்கறேன்!'' என்று மாரிமுத்து அங்கு பக்கத்திலிருந்த அந்த ஓட்டு வீட்டிற்குள் செல்ல, ''நான் வேணும்னா ஹெல்ப் பண்ணட்டுமா?'' என்று கேட்டான் ஜீவானந்த்.



''எப்படி?''

''எப்படி வேணும்னாலும். ஏன், சிந்தாம நானே குடிக்க வெக்கறேன்!'' என்றவனின் பார்வை என்னவோ செய்ய, அந்தப் பார்வையைச் சந்திக்க முடியாமல், குப்பென்று சிவந்துவிட்ட முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண் டாள் அபிநயா.

''இல்லையேம்மா!'' என்று வருத்தத்துடன் அவன் திரும்பி வர, ''பரவாயில்ல. நான் குடிச்சாச்சு!'' என்றாள்.

ஆனால் இளநீருக்குள்ளே இருக்கும் அந்த மெல்லிய தேங்காயை மட்டும் இன்னும் இன்னுமென்று வாங்கிச் சாப்பிட்டாள்.

''அம்மா! இன்னும்...'' என்று கேட்டவனிடம், ''அச் சச்சோ. போதும்! இங்க எங்காவது தண்ணி இருக்குமா கை கழுவறதுக்கு?'' என்று கேட்டாள்.

''பாருங்கம்மா. பின்னாடி தோட்டத்துக்குத் தண்ணி பாஞ்சுட்டிருக்கு!'' என்று அங்கு செல்லும் வழியைக் காட்டினான் மாரிமுத்து.

பம்ப் செட் மூலமாகக் கிணற்றிலிருந்து திடுதிடு வென்று வந்து விழுந்து கொண்டிருந்த நீரை ஆசையுடன் சில வினாடிகள் பார்த்தபடி நின்றிருந்த அபிநயா அதற்குப் பிறகே சென்று கைகளைக் கழுவினாள்.

''எப்பங்கய்யா கல்யாணச் சாப்பாடு போடப் போறீங்க? இந்த மஹாலட்சுமி மாதிரி உங்களுக்குப் பொருத்தமான பொண்ணைப் பாத்துக் கல்யாணம் பண்ணிக்கோங் கய்யா.''

கைகளைக் கழுவிக் கொண்டு திரும்பி வந்து கொண் டிருந்த தன்னைக் குறிப்பிட்டு மாரிமுத்து சொல்லிக்

கொண்டிருக்க, அதற்கு ஜீவானந்த் என்ன சொல்லப் போகிறானோ என்னும் ஆவலில் அபிநயாவின் இதயத் துடிப்பு படபடவென்று அதிகரித்திருந்தது.

''கூடிய சீக்கிரம் நடக்கும்!'' என்று ஜீவானந்த் சொல்லிக் கொண்டிருக்க, அதற்குள் அவர்களுக்கு அருகிலேயே வந்திருந்த அபிநயா, தனக்குச் சம்பந்தமில்லாத எதையோ அவர்கள் பேசிக் கொண்டிருப்பதைப் போலச் சிரமப்பட்டு முக பாவனையைச் சாதாரணமாக வைத்துக் கொண்டாள்.

ஆனால் அதே நேரம் அபிநயாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஜீவானந்துக்கு அவளுடைய முயற்சி கண்களில் படத் தவறவில்லை.

''அண்ணா!''

''வாங்கமா. இளநீர் குடிங்க.''

''எனக்கு வேண்டாம், ஸ்ரீக்கு வெட்டிக் குடுங்க மாரிமுத்து!'' என்று சொன்ன வினயா, ''அண்ணா! ப்ளீஸ்ணா எனக்கொரு சின்ன ஹெல்ப்!'' என்றாள்.

''சொல்லு.''

''அதாண்ணா எங்கூடப் படிச்சாளே என் ஃப்ரெண்ட் சுகன்யா, அவ ஊரிலிருந்து வந்திருக்காளாம். இப்ப தாண்ணா என்னக் கூப்புட்டா. என்ன அவங்க வீட்டுக்கு வரச் சொல்லி ரொம்பவும் கேக்கறா. ப்ளீஸ் கொஞ்ச நேரம் நாங்க அவங்க வீட்டுக்குப் போய்ட்டு வரட்டுமாண்ணா?''

''இப்ப நான் உனக்கு என்ன செய்யணும்? அத மட்டும் சொல்லு.''



''எங்களப் போற வழில அவங்க வீட்ல கொண்டு போய் விட முடியுமாண்ணா?''

''சரி, போகலாம்,'' என்றவன், மாரிமுத்துவிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு முன்னே நடந்தான்.

முதலில் சென்ற வினயாவும் ஸ்ரீநிதியும் காரின் பின் பக்கம் ஏறி அமர்ந்திருக்க, வேறு வழி தெரியாமல் தான் முன் பக்கமாக ஏறி அமர்ந்தாள் அபிநயா.

தங்கையிடம் வழி கேட்டுக் கொண்டவன், பத்து நிமிடங்களில் அவளது தோழியின் வீட்டில் அவர்களை இறக்கி விட்டிருந்தான்.

''இங்கயே இறங்கிக்கோம்மா. அவங்க பாத்துட்டா உள்ள வரலேன்னா விட மாட்டாங்க!'' என்றவன், ''மேக்ஸிமம் ஒன் அவர். அதுக்குள்ள கிளம்பிடணும்!'' என்றான்.

''சரிண்ணா. வா ஸ்ரீநிதி!'' என்று இறங்கிக் கொண்ட வினயா, ''அபி! நீங்களும் வாங்களேன்!'' என்று அழைத்தாள்.

''இல்ல வினு, நீங்க போய்ட்டு வாங்க!'' என்று அபிநயா சொல்ல, காரை ஸ்டார்ட் செய்திருந்தான் ஜீவானந்த்.

''எங்க போறீங்க? வீட்டுக்குப் போகல போலிருக்கு?''

''ஆமா, இப்படியே மேல போய்ட்டு வரலாம். மல மேலிருந்து பாத்தா வ்யூ ரொம்ப நல்லார்க்கும்.''

''எங்க பாத்தாலும் பசுமையா உங்க ஊர் ரொம்ப நல்லார்க்கு.''

''அது சரிதான். மலையடிவாரத்துல இருக்கே, அதுவும் ஒரு காரணம்தான்.''

எங்கும் போர்த்தியிருந்த பசுமைக் கம்பளமும், மெல்ல வந்து இதமாய் வருடிச் செல்லும் தென்றல் காற்றும் மனதை என்னவோ செய்ய, அந்த நிமிடத்தை மிகவும் ரசித்தாள் அபிநயா.

''எப்படித்தான் இந்த மாதிரியான இடத்தையெல்லாம் விட்டுட்டு சிட்டிலயும் டவுன்லயும் மக்களால சந்தோஷமா வாழ முடியுதோ!''

''அப்படி இருக்கறவங்களால தான் இன்னும் இந்த மாதிரியான இடங்கள்லயாவது இயற்கை மிஞ்சியிருக்கு. அதோட படிப்பு, வேலை வாய்ப்பு சவுகரியங்கள் இதெல்லாம் வேணும்னா அதுக்கு சிட்டிதான் ஒரே சாய்ஸ்.''

''அப்படிப் பாத்தா இங்க இருக்கறவங்கெல்லாம் வேலை செய்யலையா, வசதியா இல்லையா?''

''இருக்காங்க. ஆனா முன்ன அளவுக்கெல்லாம் இப்ப இந்த மாதிரி கிராமங்கள்ல வேலைக்கு ஆள் கிடைக்கறதில்ல. இப்ப நம்ம பண்ணைல தோட்டத்துலெல்லாம் வேலை செய்யறாங்கன்னா அவங்களுக்கு நாம குடுக்கற சம்பளம் அப்பிடி. அதோட இன்னும் எத்தனையோ வசதிகள் செஞ்சு குடுத்திருக்கோம். எல்லாத்துக்கும் மேல தலை முறை தலைமுறையா அவங்களுக்கெல்லாம் நம்ம குடும்பங்களுக்கு வேல செஞ்ச விசுவாசம்.''

பேசிக் கொண்டிருக்கும்போதே தனது மொபைலுக்கு அழைப்பு வர, அட்டெண்ட் செய்து காதில் வைத்தான்.

''ம். சொல்லுங்க.''

............



''அத நீங்க மைண்ட் பண்ணாதீங்க. நான் சொன்ன மாதிரி பிரிச்சு வேல செய்ங்க. ஒரு சின்ன நியூஸ் கூட வெளிய கசிய விட வேண்டாம். அப்புறம் அக்யூஸ்ட் அலர்ட் ஆயிடுவான்.''

..........

''அதயே ஃபாலோ பண்ணுங்க, யார் போன் பண்ணினாலும் அட்டெண்ட் பண்ண வேண்டாம். நான் பார்த்துக்கறேன். இன்னும் ட்வன்டி ஃபோர் அவர்ஸ்ல இந்த ஆபரேஷன் முடியணும் சக்ஸஸ் ஃபுல்லா!'' என்று போனை வைத்திருந்தான்.

''ஏதோ அவசரம் மாதிரியிருக்கு. அப்ப நீங்க இப்பவே கிளம்பணுமா?'' என்று ஜீவானந்த்தைப் பார்த்துக் கேட்டாள் அபிநயா.

''கிளம்பணும், ஈவினிங்.''

என்ன போன் என்று கேட்பதற்காக வாயைத் திறந்து விட்ட அபிநயா, உனக்கு அவசியமில்லாதது என்று முகத்திலடித்த மாதிரி ஏதாவது சொல்லி விடுவாரோ என்ற பயத்தில் கேட்காமலே திரும்பிக் கொண்டாள்.

சில வினாடிகள் யோசித்த பிறகுதான் தான் கேட்க நினைத்ததும் சற்று அதிகப்படிதான் என்பது புரிந்தது.

நடைமுறைக்குச் சிறிதும் ஒத்து வராத கணக்குகளைப் போடும் தன்னை நினைத்ததில் தனக்கே பிடிக்கவில்லை. ஏனோ திடீரென்று அவ்வளவு நேரமும் இருந்த நிலை மாறி மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது அபிநயாவிற்கு.

ஜீவானந்த் தன் பாட்டுக்கு டிரைவிங்கில் கவனமாக இருக்க, அதற்குப் பிறகு காருக்குள் அமைதி நிலவியது.

பதினைந்து நிமிடப் பயணத்திற்குப் பிறகு மலை மேல் ஓரிடத்தில் காரை நிறுத்தியிருந்தான் ஜீவானந்த்.

''இது ஒரு நல்ல வ்யூ பாயிண்ட். இங்க காரை நிறுத்தறதால மத்த போற வர்ற, வெகிக்கிள்சும் டிஸ்டர்ப் ஆகாது!'' என்றவன் அங்கிருந்த அந்த மிகப் பெரிய மரத்திற்குப் பக்கவாட்டு நிழலில் காரை நிறுத்திவிட்டு, ''இறங்கி வா!'' என்று தானும் இறங்கினான்.

அவனைத் தொடர்ந்து காரை விட்டு இறங்கியிருந்த அபிநயா, ''வாவ்!'' என்று குதித்தாள்.

''என்ன?''

''சூப்பர் ப்ளேஸ்!'' என்று ஆச்சரியத்துடன் அங்கிருந்து சுற்றிலும் பார்த்தாள்.

அங்கிருந்து கீழே பார்க்கத் தென்னை பனை மரங் களனைத்தும் கொண்டையுள்ள சிறு குச்சிகளை வரிசை யாக நட்டு வைத்திருப்பதைப் போல இருக்க, மேகங் களின் நிழல் கொஞ்சம் கொஞ்சமாக அந்த மரங்களை யும் பச்சைப் பசேலென்ற சமவெளிகளையும் கடந்து போவதைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை.

சந்தோஷத்தில் சிறு பிள்ளையாக மாறிப் போயிருந்த அபிநயாவைக் கண்களில் ரசனையுடன் பார்த்தான் ஜீவானந்த்.

''ஆமா, இங்க ஆள் நடமாட்டமே இல்ல, திடீர்னு ஏதா வது பிரச்சனைன்னா?'' என்று தன்னைப் பார்த்த அபி நயாவிடம், ''என்ன பயமா இருக்கா?'' என்று கேட்டான்.

''எனக்கென்ன பயம், நீங்க இருக்கும் போது? யாரை யுமே காணலியேன்னு கேட்டேன். அவ்வளவுதான்.''



''ஆடு மாடு மேய்க்கறவங்க மட்டும் - அதுவும் காலைல யும், சாயங்காலமும் மட்டும் - ஒன்னாப் போவாங்க, வரு வாங்க. மத்தப்படி ஆள் நடமாட்டம் இங்க கொஞ்சம் குறைவுதான்.''

அந்த மதிய நேரத்திலும் கேட்ட பறவைகளின் சத்தமும், கீ என்ற ஒரு வித ரீங்காரமும் ஏனோ மனதிற் குள் ஒருவிதப் பயத்தையே ஏற்படுத்தின.

''ஆனா இங்கயும் அங்கங்க தூர தூரமா சில வீடுகள் தெரியுதே.''

''ஆமா, இங்கயும் குடியிருக்கறவங்க இருக்காங்க.''

''ஆனா ரொம்ப பயமா இருக்குமே.''

''அவங்களுக்குப் பழகிப் போயிருக்கும். அங்க பாரு!'' என்று வெகு தூரத்தில் வெள்ளைக் கம்பி போன்ற எதையோ காட்டி அதுதான் நம்ம வீடு என்று ஜீவானந்த் சொல்ல, அதற்கு நடுவே வெள்ளைத் திட்டு போன்று ஒரு சிறு புள்ளியாகத் தெரிந்த அவர்களது வீட்டை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

மேலும் சில நிமிடங்களும் கூட இயற்கையைப் பற்றிப் பேசுவதில் கழிய, ''சொல்லு, கார்ல வரும்போது என்ன கேக்க வந்த?'' என்று கேட்டான்.

எதுவும் பேசாமல் சில வினாடிகள் அவனைப் பார்த்த அபிநயா, கலங்கத் தொடங்கியிருந்த கண்களை மறைப்ப தற்காகப் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

''என்னமா?''

''நான் என்னோட லிமிட்ட அடிக்கடி மறந்துடுவேன். வேறொன்னுமில்ல...''

''அபி! இங்க பாரு.''

ஜீவானந்தின் கரிசனத்தில் என்ன முயன்றும் வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் போக, தனது உள்ளங் கைகளால் முகத்தை மறைத்துக் கொண்டு அழுது விட்டிருந்தாள் அபிநயா.

ஒரு சில வினாடிகளில் தன்னைச் சமாளித்துக் கொண் டவள், ''போலாம்,'' என்று காரில் ஏறி அமர்ந்திருந்தாள்.

ஆனால் அப்பொழுதும் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டே இருக்க, பார்வையை வெளிப்புற மாகத் திருப்பிக் கொண்டிருந்தாள்.

அந்த வினாடியே காரில் ஏறி அமர்ந்திருந்த ஜீவானந்த், ''இல்லமா. இந்த விஷயத்துல நாந்தான் தப்புக் கணக்குப் போட்டுட்டேன்!'' என்றான்.

அப்படிச் சொன்னவனை உடனே திரும்பிப் பார்த்த வளின் கண்களில், அவன் என்ன சொல்ல வருகிறா னென்பதைப் புரிந்து கொள்ள முடியாத தன்மைதான் அதிகம் இருந்தது.

''எதுவுமே சிம்பிளாக் கிடைச்சுட்டா நமக்கு அத னோட அருமை தெரியாதுன்னு சொல்லுவாங்க. உன் விஷயத்துல நானும் அப்படித்தான் நடந்துக்கிட்டேன்.''

.........

''அபி! எம்மேல கோபமா?''

''ஜீவா! நீங்க...''

கைகளை மார்பின் குறுக்கே கட்டியபடி கண்கள் நிறைந்த காதலுடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த ஜீவானந்த்தை நம்ப முடியாத ஆச்சரியத்துடன் பார்த்தாள் அபிநயா.



எல்லையற்ற சந்தோஷத்தால் வந்த ஆனந்தக் கண் ணீர் கண்களை மறைக்க, ''ஜீவா'' என்று உதடு துடிக்க அவனை அழைத்தாள்.

''அபி!''

''ஜீவா!'' என்று ஏதோ சொல்ல வந்தவளைத் தன்னரு கில் இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டான் ஜீவானந்த்.

முதலில் சில வினாடிகள் ஜீவா ஜீவா என்று அரற்றி யவள், அதற்குப் பிறகு அவனுடைய அணைப்பிற்குள் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னை மறக்க ஆரம்பித் திருந்தாள்.

அந்தகாரமே நிறைந்த இருண்ட உலகிற்குள் பலப்பல ஆண்டுகள் திக்குத் தெரியாமல் அலைந்து திரிந்து கொண்டிருந்தவளை, அந்தக் கடவுளே வந்து தனது கருணை மிக்க கரங்களால் காப்பாற்றிக் கொண்டு போய்த் தனது புகலிடம் சேர்த்து விட்டாற் போல ஒரு எல்லையற்ற நிம்மதியையும், பாதுகாப்பையும்தான் முதலில் அவனது அணைப்பில் உணர்ந்தாள் அபிநயா.

போகப்போக அவனுடைய அணைப்பில் முழுமை யாகத் தன்னை மறந்திருந்தவள், அவனுடைய கைகளுக் குள் மேலும் வாகாக ஒண்டிக் கொண்டாள்.

அப்படி எவ்வளவு நேரம் இருவரும் இறுகிய அணைப் பில் கட்டுண்டு கிடந்தார்களோ, முதலில் தன்னிலை உணர்ந்து கொண்ட ஜீவானந்த் தனது வலிய கரங்களுக் குள் ஒரு பூக்குவியலைப் போலப் பின்னிக் கிடந்தவளைக் கண்கள் நிறைந்த எல்லையற்ற காதலுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

தொடர்ந்து அபிநயாவும் சில வினாடிகளில் கண் களைத் திறந்து அவனை நிமிர்ந்து பார்க்க, ''அபி!'' என்று மீண்டும் அணைத்துத் தன்னவளின் முகமெங்கும் முத்தங்களால் அர்ச்சித்தவன் மேலும் சிறிது நேரம் கழித்தே தனது அணைப்பிலிருந்து விடுவித்தான்.

''போதும்மா. நான் அவ்வளவா பொறுமைசாலி கிடை யாது!'' என்றவனைப் பார்த்தவளின் முகம் வெட்கத்தால் சிவந்து குங்கும நிறம் கொண்டு விட்டிருந்தது.

அபிநயாவின் வெட்கம் கலந்த தவிப்பைப் புன்ன கையுடன் தனது கண்களால் அள்ளிப் பருகிக் கொண்டே காரை ஸ்டார்ட் செய்திருந்தான் ஜீவானந்த்.

''என்னடா?''

''நான் இவ்வளவு அதிர்ஷ்டசாலியா! என்னால நம் பவே முடியல!'' என்று கண்கள் கலங்கியவளைச் செல்ல மாக அதட்டினான்.

''நான் சொல்ல வேண்டியதையெல்லாம் நீ சொல்ற யாக்கும்? இவ்வளவு நாளும் நீ பட்ட கஷ்டம், தவிப்பெல் லாம் போதுன்டா. இனிமேல் என்னோட அபி சந்தோஷமா, நிம்மதியா எப்பவும் சிரிச்சுக்கிட்டே இருக்கணும். என்ன வளான உன்னை என் கண்ணுக்குள்ளே இமையா வெச்சுக் காப்பாத்த வேண்டியது என்னோட கடமை. எங்க ... என் அபியோட அக்மார்க் சிரிப்ப ஒரு தடவ சிரிச்சுக் காட்டு, பாக்கலாம்?''

''ம், இது...''

தடங்களற்ற நேர்பாதை வந்துவிட, சற்று வேகமாகக் காரைச் செலுத்த ஆரம்பித்திருந்தான்.



அபிநயா தனது மனதை வெளிப்படுத்திய அன்று என்னதான் யோசிக்காமல் ஏதேதோ காரணங்களை நினைத்து மறுத்துப் பேசியிருந்தாலும், அதற்குப் பிறகு கையருகில் வந்த சொர்க்கத்தை அதன் அருமை தெரி யாமல் தட்டி விட்டு விட்டதைப் போல மிகவும் சிரமப் பட்டுப் போனான் ஜீவானந்த்.

இனித் தனக்கு என்னவோ அனைத்துமே முடிந்து விட்டதைப் போலக் கடைசியாக அவள் தன்னைப் பார்த்த பார்வைதான் மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்து கொண்டே இருந்தது.

ஆனாலும் சில நாட்கள் சென்றால் மறந்து விடப் போகி றாள். அதற்குத் தான் ஏன் இவ்வளவு யோசிக்க வேண்டு மென்று போகப் போக அதை வெகு சாதாரணமாக எடுத்துக் கொள்ளவும் பழகியிருந்தான்.

ஆனால் அவை அனைத்துமே சில நாட்கள்தான். அதற்குப் பிறகு மீண்டும் அவனது மனம் உறுத்தத் தொடங்கி விட்டிருந்தது. கூடவே ஒரு சிறு பெண்ணின் நினைவுகள் தன்னை இந்த அளவு தொந்தரவு செய் கிறதே என்று ஆச்சரியமாகவும் இருந்தது.

அபிநயா தன்னைப் பற்றி அவளே சொன்னதும், அவளைப் பற்றித் தான் விசாரிக்க நேர்ந்ததும்தான் அதற்குக் காரணமென்பதும் அவனுக்குப் புரியவே செய்தது.

அனைத்திற்கும் மேலாகத் தனது தங்கை வினயா வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அபிநயாவைப் பற்றிப் பெருமையாகச் சொல்லிக் கொண்டே இருப்பதும் அவளுடைய எண்ணங்கள் தன்னை இம்சிப்பதற்கான ஒரு முக்கிய காரணம் என்பதும்.

தனது மூளை என்னதான் இப்படிப் பல காரணங்களை அடுக்கினாலும், அபிநயாவைத் தனது மனதிற்குப் பிடித்து விட்டதுதான் முக்கியக் காரணம் என்பதை ஜீவானந்தும் இப்பொழுது கடைசியாகத்தான் உணர்ந்து கொண்டிருந்தான்.

## 16

அபிநயாவும் ஸ்ரீநிதியும் திரும்பித் தங்களுடைய வீடு சென்று சேர்ந்தபோது, நேரம் மாலை வேளையாகி இருந்தது.

ரகுநாத்தும், சுந்தரியும் ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க, ''ஹாய் மம்மி! டாடி!'' என்று தானும் சென்று உடனமர்ந்து கொண்டாள் ஸ்ரீநிதி.

ஆனால் அபிநயாவிற்குத்தான் தனிமை வேண்டியிருந்தது.

நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்த பாரம் கரைந்ததில் மனம் லேசாகிக் காற்றில் பறப்பதைப் போலிருக்க, மீண்டும் தன்னைச் சுற்றியிருக்கும் அனைத்துமே மிகவும் அழகாகி விட்டதைப் போல, வாழ்க்கையே ரசனை மிக்க ஒன்றாகி விட்டதைப் போல, மிகவும் சந்தோஷமாக உணர்ந்தாள்.

ஜீவானந்த்தை நினைத்ததில் நெஞ்சம் குறுகுறுக்க, உள்ளம் சந்தோஷத்தாலும் ஏதோ ஒரு இனம் கண்டு கொள்ள முடியாத பரவசத்தாலும் நிரம்பி வழிந்தது.



இனித் தனக்கும் மற்றவர்களைப் போல ஓர் அழகான எதிர்காலம் இருக்கிறதென்ற எண்ணமே மீண்டும் மீண்டும் தோன்றி அவளை உற்சாக வெள்ளத்தில் மூழ்கடித்துக் கொண்டிருந்தது.

இப்படி ஒரே நாளில் தனது வாழ்க்கையே அர்த்தமுள்ளதாகி விடுமென்று அபிநயா சற்றும் எதிர்பார்த்திருக்காததால், நடந்ததை அவளால் இன்னும் முழுமையாக நம்பக்கூட முடிந்திருக்கவில்லை.

ஒருவேளை இது நிலைக்கா விட்டால், ஏதாவதொரு காரணத்தால் மீண்டும் ஜீவானந்த்துக்குத் தன்னைப் பிடிக்காமல் போய் விட்டால் என்று வினாடி தோன்றி மறைந்த அந்த எண்ணத்திலேயே நடுநடுங்கிப் போனாள்.

இல்லையில்லை, அப்படியெல்லாம் எதுவும் ஆகாது, என்று தனக்குள்ளேயே மீண்டும் மீண்டும் பலமுறை சொல்லிக் கொண்டாள்.

ஸ்ரீநிதி தன்னை அழைக்கும் குரல் கேட்க, தனது அறைக்குள்ளிருந்து வெளியே வந்தாள் அபிநயா.

''என்ன ஸ்ரீ?''

''அபி! உன்ன அம்மாவும், அப்பாவும் கூப்புட்றாங்க.''

எதுக்கு என்று கேட்கப் போனவள், ''சரி, வர்றேன்,'' என்றாள்.

''என்ன அதிசயமாக் குளிக்கப் போகாம இருக்க, காலையிலிருந்து நல்லா சுத்தினதுக்கு ஒரே கசகசன்னு இருக்கு. நான் குளிக்கப் போறேன்பா!'' என்று நகர்ந்தாள் ஸ்ரீநிதி.

எதுவுமே செய்யத் தோன்றாமல் தன்னை நினைக்கவே சிரிப்புத்தான் வந்தது அபிநயாவிற்கு.

ஸ்ரீநிதி சொல்லிவிட்டுப் போனது நினைவு வர, மீண்டும் எங்கெங்கோ செல்லப்போன கற்பனைக் குதிரையைக் கடிவாளமிட்டு அடக்கினாள்.

நேராகத் தனது பெரியம்மா, பெரியப்பாவிற்கு முன்பு போய் நின்றவள், "சொல்லுங்க பெரியப்பா!" என்றாள்.

"ம், உக்காருமா."

"பரவாயில்ல, பெரியப்பா."

"இல்ல உக்காரு, உங்கூடக் கொஞ்சம் பேசணும்."

என்னவாக இருக்குமென்று யோசித்துக் கொண்டே மெதுவாக அமர்ந்தவளைப் பார்த்தாள் சுந்தரி.

இவளாலல்லவா நாம் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு அலைய வேண்டியிருக்கிறதென்று அபிநயாவின் மேல் எரிச்சல்தான் வந்தது சுந்தரிக்கு.

இவள் மட்டும் சரியென்றிருந்தால் இந்நேரம் இவளுக்குத் திருமணமே நிச்சயிக்கப்பட்டு விட்டிருக்குமே.

அதிலும் அவர்களுக்கே நல்ல செல்வாக்கு மிக்க பின்புலம் இருப்பதால் அவர்கள் பணத்தைப் பெரிதாக மதிக்காதவர்களாக வேறு இருந்ததில்தான், அந்த இடம் தட்டிப் போனதைச் சுந்தரியால் சற்றும் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை.

உங்கள் வீட்டுப் பெண்ணை எங்கள் பிள்ளைக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டதென்று அவர்களே வலிய வந்திருந்ததும் வேறு.

என்ன, பையன் பார்ப்பதற்குச் சற்றுச் சுமார் தான் என்றாலும், மற்றப்படி அவர்களுக்கு ஒரு குறையும் இருக்கவில்லையே! அதுவும் பெண்ணை மட்டும் கொடுங்கள், பிரமாதமாக வைத்துக் கொள்வோமென்று வேறு கேட்டார்களே.



என்னதான் அவர்கள் அப்படிக் கேட்டாலும், போனால் போகிறதென்று பெருந்தன்மையாகக் காட்டிக் கொள்ளவாவது சுந்தரி தானும் சீர் முறைகளை ஓரளவு செய்து விடத்தானே நினைத்திருந்தாள்.

கடைசியாக வேண்டாமென்று ஒரேயடியாக நின்று அனைத்தையும் கெடுத்து விட்டாளே பாவி! ஆனால் ஒரு முறை ஏமாந்து விட்டதாலேயே அதற்குப் பிறகு மிகவும் ஜாக்கிரதையாகி விட்டிருந்தாள் சுந்தரி.

கணவனுக்குத் தன் மேல் சந்தேகம் வந்து விடாதவாறு நயமாகப் பேசிக் காய்களை நகர்த்த ஆரம்பித்திருந்தாள்.

எதற்கு வேண்டுமானாலும் செல்லம் கொடுங்கள், நான் ஏனென்று எப்பொழுதாவது கேட்டிருக்கிறேனா. ஆனால் நமக்கும் ஒரு பெண் இருப்பதால்தான் நான் இந்த ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் அவ்வப்பொழுது உங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன்.

நான் என்ன, இப்பொழுது உடனே திருமணத்தை முடித்து விடலாமென்றா சொல்கிறேன், நல்ல இடங்கள் வரும்போது சற்றுச் சிரத்தையெடுத்துப் பார்க்க வேண்டியது பெற்றவர்களாகிய நம்முடைய கடமையென்று தானே சொல்கிறேன்.

இந்த மாதிரி நல்ல விஷயங்க ளெல்லாம் தானாக நேரம் கூடி வரும்போது நடந்தால் தான் ஆயிற்று. அதை விட்டுவிட்டு நம் விருப்பத்திற்குத் தேடும் போதெல்லாம் நல்ல இடங்கள் அமையாது.

அனைத்திற்கும் மேலாக இப்பொழுது அவளுடைய பெற்றவர்களே இருந்திருந்தாலும் கூட இதைத்தான் செய்திருப்பார்கள்.

இப்படித் தனது மனைவி சொல்வதையெல்லாம் யோசித்துப் பார்த்த ரகுநாத்திற்கும் அவள் சொல்வதில் நியாயம் இருப்பது போலத்தான் தெரிந்தது.

தாமாகத் தேடிப் போகாவிட்டாலும் இனித் தேடி வரும் நல்ல இடங்களை அவசியமில்லாமல் புறக்கணித்து விடக் கூடாதென்ற முடிவுக்கு மனதிற்குள் வந்திருந்தார்.

ஆனால் எது எப்படியானாலும் அப்படி வருபவர்கள் கண்டிப்பாகப் பணத்திற்கு ஆசைப்படுபவர்களாக இருக்கக் கூடாதென்பதில் மட்டும் அவர் உறுதியாக இருந்தார்.

அப்படி வருபவர்கள்தான் பெண்ணின் அருமை புரிந்து நடந்து கொள்வார்கள்.

அப்பொழுதுதான் நாமும் அபிநயாவுடைய தாய், தந்தையுடையது என அனைத்துச் சொத்துக்களையும் ஒரு பைசா பாக்கியில்லாமல் பிரித்துக் கொடுத்து விட்டுக் கடமையை நல்லபடியாக முடித்துவிட்ட நிம்மதியுடன் அமர்ந்து கொண்டு விடலாமென்று நினைத்தார்.

இவை அனைத்திற்கும் மேலாக வருபவன் பெண்ணைக் கண்ணுக்குள் வைத்துக் காப்பாற்றுபவனாக இருக்க வேண்டும். மணமக்கள் இருவரும் கடைசி வரை கருத்தொருமித்துப் பல்லாண்டு காலம் சந்தோஷமாக வாழ வேண்டும் என்றெல்லாம் நினைத்துக் கொண்டவர், கடவுளே! இவையனைத்தும் நல்லபடியாக நடந்து முடிய நீதான் அருள் புரிய வேண்டுமென்று மனதார வேண்டிக் கொண்டார்.



அபிநயாவின் திருமண விஷயத்தில் தனது மனைவியின் கணக்கும் ரகுநாத்திற்குப் புரியவே செய்தது. ஆனாலும் அவர் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

என்னதான் அனைவருக்கும் முன்னிலையில் நல்லபடியாக நடத்தினாலும் தனிமையில் அபிநயாவைத் தனது மனைவி படுத்தும் பாடு அவர் அறியாதது அல்ல.

மேலும் இந்த மாதிரி சிறு விஷயங்களிலெல்லாம் நாம் கேள்வி கேட்கப் போய் முக்கியமானதில் கோட்டை விட்டு விடக் கூடாதென்பதிலும் அவர் கவனமாக இருந்தார்.

என்னதான் நினைப்பது சுலபமென்றாலும், அதை நடைமுறைப்படுத்துவது கடினமென்பதால் எப்பாடு பட்டாவது ஒரு நல்லவனின் கையில் அபிநயாவைப் பிடித்துக் கொடுக்கும் வரை தனக்கு நிம்மதியில்லையென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டார்.

தனது பெரியப்பா சொன்னதனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த அபிநயாவிற்கு, ஏனோ அன்றைக்கு மனதிற்குக் கஷ்டமாக இருக்கவில்லை.

மாறாகத் தன்னருகில் மணமகனாக ஜீவானந்த்தைக் கற்பனை செய்து பார்த்தவளுக்கு, உச்சி முதல் பாதம் வரை ஏதோ இனம் புரியாத தவிப்பு ஒன்று அலை அலையாகப் பரவுவதையும் உணர முடிந்தது.

''இப்பக் கொஞ்ச நாளா உனக்கு ஜாதகங்கள் நிறைய வர ஆரம்பிச்சிருக்குமா. அதனாலதான் இதக்கூடச் சொல்றோம். உன்னோட முழுச் சம்மதமில்லாம எதுவும் நடக்காது. அதுக்கு நான் உனக்கு உறுதி தர்றேன்!'' என்ற தனது பெரியப்பாவிடம் சரி யென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் அபிநயா.

தன்னை மனதில் வைத்துத்தான் கணவன் இப்படிச் சொல்கிறாரென்பது சுந்தரிக்குப் புரியவே செய்தது.

சரிதான், பார்த்துக் கொள்கிறேனென்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

ஒரு வாரம் சென்றிருந்தது.

ஒவ்வொரு நாளும் ஜீவானந்திடமிருந்து அழைப்பு வந்ததால் சந்தோஷத்தில் திக்குமுக்காடிப் போனாள் அபிநயா.

அன்றைய நாளின் வாழ்த்துக்களுடன் மேலும் ஒரு சில வார்த்தைகள் மட்டும்தான் பேசுவானென்றாலும், அபிநயாவிற்கு அதுவே போதுமானதாக இருந்தது.

அன்று ஞாயிற்றுக் கிழமையானதால் மிகவும் ஆவலுடன் ஜீவானந்த்தின் அழைப்புக்காகக் காத்திருக்கலானாள்.

ஆனால் நேரம்தான் போய்க் கொண்டே இருந்ததே தவிர, அன்று அவனிடமிருந்து எந்த அழைப்பும் வரவில்லை.

பாவம், வேலைக்கு நடுவில் அழைக்க முடிந்திருக்காதென்று மனதைத் தேற்றிக் கொண்டாள்.

ஆனால் அந்தச் சமாதானமும் மதியம் வரை மட்டுமே தாக்குப் பிடித்தது. அதற்குப் பிறகு தவிப்பு மிகவும் அதிகமாகி விட்டிருக்க, உடனே தனது மொபைலை எடுத்து ஜீவானந்த்துக்கு அழைக்கப் போனாள்.

ஆனால் அதற்குள் மனம் மாறி வினயாவுக்கு அழைத்திருந்தாள்.

நெஞ்சம் படபடவென்று அடித்துக்கொள்ள, எதிர்முனையின் இணைப்புக்காகக் காத்திருந்தாள்.



ஏனோ வழக்கத்திற்கு மாறாக அன்று ஒரு ரிங் போய் இணைப்புத் துண்டாகி விட, மனதிற்குள் ஏனோ ஒரு மாதிரியாக உணர்ந்தாள்.

ஆனால் அடுத்த ஐந்து நிமிடங்களில் வினயாவே திரும்ப அழைத்தாள்.

மிகவும் சிரமப்பட்டு ஒரு ரிங்கை மட்டும் போக விட்டவள், அதற்கு அடுத்த வினாடியே அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்தாள்.

''ஹாய் வினு, நல்லார்க்கியா?''

............

''ஆமா நாந்தான் கூப்புட்டிருந்தேன். ரொம்ப பிஸியா இருப்ப போலிருக்கு?''

............

எதிர் முனையில் வினயா சொன்னதை யெல்லாம் இடைமறிக்காமல் கேட்டு முடித்த அபிநயாவிற்கு ஏனோ திரும்பப் பேச்சே வரவில்லை.

ஒருவேளை வினயா தன்னிடம் சும்மாவேனும் விளையாடுகிறாளோ.

''ஓ ஸாரி வினு, லைன்ல தான் இருக்கேன். இங்கே பெரியப்பா கூப்புட்டார். அதான் எட்டிப் பாத்தேன்,'' என்றவள் மேலும் சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்து விட்டு அதற்குப் பிறகே போனை வைத்தாள்.

இதென்ன சினிமா கதைகளில் அல்லவா இது போலெல்லாம் நடக்கும்.

வினயா சொன்ன விஷயத்தின் சுருக்கம் இவ்வளவு தான்.

இன்று காலை அவளுடைய அத்தை மகள் திருமணத் திற்கு, அதாவது வினயாவின் தந்தையுடைய தங்கை பெண் திருமணத்திற்குக் குடும்பத்துடன் அனைவரும் சென்றிருக்கிறார்கள்.

அங்கு மாப்பிள்ளை அலங்காரமெல்லாம் முடிந்த நிலையில் தாலி கட்டப் போவதற்குச் சற்று முன்னர் மண மகன் அவனது அறையில் மயங்கி விழுந்திருக்கிறான். விஷயம் பெண்ணுடைய சொந்தங்களுக்கும் தெரிந்து விசாரிக்கப் போக, அதற்குப் பிறகுதான் மணமகனுக்கு உடலில் ஏதோ பெரிய நோய் இருந்தது தெரிய வந்திருக்கிறது.

மணமகனின் வீட்டார் அந்த விஷயத்தையே வெளியே தெரியாமல் மறைத்துத் திருமணம் வரை வந்திருந்ததும்.

நல்ல வேளையாக யார் செய்த புண்ணியமோ மண மகள் தப்பிவிட்டாள் என்று சொந்தங்களில் ஒரு சிலர் மன நிம்மதியடைய, ஆனால் பெரும்பான்மையினரோ மணமேடை வரை வந்து விட்டு ஒரு பெண்ணிற்குத் திருமணம் நின்று விட்டால் அப்புறம் அந்தப் பெண் ணுடைய கதி அவ்வளவுதான். அவளுக்கு மீண்டும் திருமணமென்பது நடக்க முடியாத - ஏன், நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்றாகி விடுமென்று ஏதேதோ பேசியிருக்கிறார்கள்.

கடைசியில் என்ன செய்வதென்று அறியாத நிலை யில் தவித்துக் கொண்டிருந்த தங்கையின் குடும்பதிற்குச் சண்முகமும் அவரது மனைவி மீனாட்சியும் சென்று ஆறுதல் சொல்லப் போக, அப்பொழுதுதான் சொந் தங்கள் அனைவருக்கும் அந்த எண்ணம் உதித்திருக் கிறது.



யாரென்று தெரியாதவர்களுக்கே முன் நின்று உதவும் பெருந்தன்மையான குணம் கொண்டவர் சண்முகம். அப்படியிருக்கும் போது தங்கைக்கு ஒரு கஷ்டம் வந்திருக்கும் இந்த நேரத்தில் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பாரா? நிச்சயம் தங்கை மகளை அவருடைய குடும்பத்திற்கு மருமகளாக்கிக் கொள்வார் என்றெல்லாம் சொந்தங்கள் தங்களுக்குள் பேச ஆரம்பித்திருந்தனர்.

தங்கை குடும்பத்தினரும் அதையே ஆவலுடன் எதிர் பார்ப்பது தெரிய, சண்முகத்திற்குத்தான் என்ன செய்வ தென்றே புரியாத நிலை.

திருமணமென்பது மகன் சம்பந்தப்பட்ட விஷய மல்லவா?

இப்படியெல்லாம் அனைவரும் தவித்துக் கொண் டிருந்த விஷயமறிந்து அப்பொழுதுதான் மண்டபத்திற்கு வந்திருந்த ஜீவானந்தோ தான் ஒரு வேலையைச் செய்தான்.

நேராகச் சென்றவன் மணமகளுடன், அதாவது தனது அத்தை மகளுடன் சென்று பேசினான்.

ஆனால் அவளோ ஏற்கெனவே எனக்குத் திருமணத் தில் விருப்பமில்லை யென்று எவ்வளவு எடுத்துச் சொல்லியும் விடாமல் கட்டாயப்படுத்தி இப்பொழுது இந்த நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார் கள். ஆனால் எனக்கு வெளிநாடு சென்று படிக்கத்தான் ஆசை. தயவு செய்து என்னைக் காப்பாற்றுங்கள். எனக்கு இப்பொழுது திருமணம் வேண்டாம். நீங்கள் சொன் னால் என்னுடைய பெற்றவர்கள் கண்டிப்பாகக் கேட்டுக் கொள்வார்களென்று ஜீவானந்தின் காலில் விழாத

குறையாக மிகவும் வேண்டிக் கேட்டுக் கொண்டிருக் கிறாள்.

எந்தச் சங்கடமும் இல்லாமல் பிரச்சனை சுமுகமாக முடிந்ததில் ஜீவானந்துக்கும் மனதிற்குள் ஒரு சிறு நிம்மதி.

ஆனாலும் பெண்ணின் திருமணம் நின்று விட்டிருந்த தில் தனது அத்தை குடும்பத்தினரின் வேதனையும் அவனுக்குப் புரியவே செய்தது.

எப்படியோ ஒரு பெரிய பிரச்சனை வந்த சுவடு தெரியாமல் மறைந்து விட்டிருந்ததில் அபிநயாவிற்கும் மனதிற்குள் நிம்மதி.

மதிய உணவிற்காக அவள் டைனிங் ஹாலுக்குச் சென்றபோது, சுந்தரி யாருடனோ பேசிக் கொண்டிருப் பது தெரிந்தது.

''ஓ! இந்தப் பொண்ணுதானா, சின்னக் குழந்தையா இருக்கும்போது பாத்தது!'' என்று அங்கு புதிதாக வந் திருந்த அந்த நடுத்தர வயது மனிதர் தன்னைப் பார்த்துக் கேட்பது காதில் விழுந்தது.

''ஆமா, இவ தான் காலேஜ் கடைசி வருஷம் படிச்சுட் டிருக்கா. இப்பிருந்து பாத்தாதான் படிப்பு முடியும் போது கல்யாணம் பண்ணச் சவுகர்யமா இருக்கும்னு பாத்துட் டிருக்கோம்.''

''அது சரிதான். ஜாதகப்படி பாத்தா சில பிரச்சனைகள் வர வாய்ப்பிருக்குதான். ஆனா அதுக்கெல்லாம் பரிகார மும் இருக்கு. சரி. நான் அப்பக் கிளம்பறேன். எல்லாத் துக்கும் மேல நான் சொன்ன மாதிரிக் கடவுள வேண்டிக் கோங்க. எல்லாம் நல்லபடியா நடக்கும்!'' என்று அந்த



மனிதர் கிளம்ப, அதற்குப் பிறகுதான் வந்திருந்தவர் குடும்ப ஜோசியர் என்பது அபிநயாவிற்குப் புரிந்தது.

''என்ன, ஜோசியர் சொல்லிட்டுப் போனதைக் கேட் டியா?''

தன்னிடம் எரிச்சலை உள்ளடக்கிய குரலில் கேட்ட சுந்தரியைப் பார்த்தாள் அபிநயா.

''ஜாதகத்துல உனக்கு நேரம் ரொம்ப மோசமா இருக் காம். அது சரி. எப்ப நல்லா இருந்தது? அதுதான் பிறந்த நிமிஷமே பெத்தவள முழுங்கிட்டயே! எப்படியோ உன்னப் புடிச்சிருக்கற சனியன் மத்தவங்களையும் பாதிக் காம இருந்தா சரி.''

சுந்தரி பாட்டுக்குச் சொல்லிவிட்டுப் போக, எப்படித் தான் இவர்களால் சர்வ சாதாரணமாக மற்றவர்களின் மனதைப் புண்படுத்த முடிகிறதோ என்று அபிநயாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

என்னுடைய தாய் மட்டும் உயிருடன் இருந்திருந்தால் ஒவ்வொரு நாளும் இப்படிக் கடுஞ் சொற்களை மட் டுமே கேட்க வேண்டிய நிலை எனக்கு வந்திருக்குமா?

கடவுளே! இவர்களிடமிருந்து எப்பொழுது எனக்கு விடுதலை கிடைக்கும்? என்னை ஏன் இப்படியெல்லாம் சோதிக்கிறாய் என்று வழக்கம் போல மனதிற்குள் ஊமை யாய் அழுதாள் அபிநயா.

## 17

அன்றைக்கு வேண்டுமென்றே வழக்கத்தை விடவும் சற்று நேரம் கழித்தே கல்லூரிக்குச் சென்றாள் அபிநயா.

அவள் எதிர்பார்த்தது போலவேதான் அனைத்தும் நடந்தது.

காரைப் பார்க் செய்து விட்டுத் தான் வரவும், வினயா தனது அண்ணனுடன் காரில் வந்து இறங்கவும் சரியாக இருந்தது.

மனம் படபடக்க அவர்களை நெருங்கியவளை, ''ஹாய் அபி!'' என்று அழைத்தாள் வினயா.

''ஹாய் வினு, குட்மானிங்.''

''குட்மானிங் அபி, என்ன இன்னைக்கு நீங்க கொஞ்சம் லேட் போலிருக்கு?''

''ஆமாம் வினு,'' என்றவள், ஜீவானந்திடம், ''நல் லார்க்கீங்களா?'' என்று கேட்டாள்.

அந்த நேரம் பார்த்து வந்த தனது வகுப்புத் தோழி களுடன் பேசுவதற்காக வினயா திரும்பியிருக்க, ''இல்ல, நான் நல்லா இல்ல!'' என்றவனைப் பார்த்தாள் அபிநயா.

''என்ன நேத்து சன்டேதான, நீ போன் பண்ணி யிருக்கலாமே. நாமதான் அபி அபின்னு தூக்கத்துல கூட உளறிட்டிருக்கோம். ஆனா நம்ம ஆளுக்கு அப்படி யெல்லாம் எதுவும் இல்ல போலிருக்குன்னு நேத்தெல் லாம் நான் தூங்கவே இல்ல தெரியுமா?''

ஜீவானந்தின் கிண்டலும், பார்வையும் என்னவோ செய்ய, தன்னைச் சாதாரணமாகக் காட்டிக் கொள்ள மிகவும் முயன்று தோற்றாள்.

''இல்ல, போன சன்டே மாதிரி ஒவ்வொரு சன்டேவும் ஸ்பெஷல் ட்ரீட் வேணுமா?''



அவன் எதைக் குறிப்பிட்டுக் கேட்கிறான் என்பது புரிய, ''நான் அதுக்கு எப்பவும் தயார் தான்!'' என்று காரை ஸ்டார்ட் செய்திருந்தான்.

அவனுடைய தங்கையிடம் மட்டுமின்றித் தன்னிட மும் சொல்லிவிட்டுக் கிளம்பியிருந்த ஜீவானந்தின் பார்வை, சரி... நீ என்னதான் செய்யப் போகிறாயென்று பார்க்கிறேன் என்று சொல்லாமல் சொல்வதைப் போல இருந்தது.

அன்றைக்கு வகுப்பறையில் கூட அபிநயாவால் கவனத்தை ஒருமுகப்படுத்த முடிந்திருக்கவில்லை, அவனுக்கும் இப்படித்தான் இருக்குமோ என்று நினைக்கத் தோன்றியது.

கூடவே டியூட்டி என்று வந்துவிட்டால் ஜீவாண்ணா மற்ற அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு அதற்குள் ளேயே மூழ்கிப் போய் விடுவாரென்று நிறைய முறை வினயா சொன்னதுதான் நினைவுக்கு வந்தது.

அதனாலேயே தொந்தரவு செய்யக் கூடாதென்று அபிநயாதான் ஜீவானந்தை அழைத்துப் பேசவே இல்லை.

''என்ன அபி, இப்பக் கொஞ்ச நாளா நீ தினமும் லேட்டாவே காலேஜ்க்குக் கிளம்பற? ஏன் உன்னோட வழக்கமான நேரத்த விட பதினஞ்சு நிமிஷம் கழிச்சுப் போற?''

''ஆமா ஸ்ரீ, சும்மா க்ளாஸ்ல போய் உக்காந்துட்டிருக் கலேன்னா என்னன்னுதான்.''

''ஓ! அப்ப உன் ஃப்ரண்ட்ஸ் அவங்களும் லேட்டா வர ஆரம்பிச்சுட்டாங்களா?''

தேவையில்லாமல் பொய் சொல்கிறோமே என்று லேசாக மனச்சாட்சி உறுத்தினாலும், ''ஆமாம்,'' என்றிருந் தாள் அபிநயா.

ஆனால் அப்படிச் சென்றும் கூட இரண்டு நாட்களாக ஜீவானந்த்தைப் பார்க்க முடியவில்லையே என்று கவலையாக இருந்தது அபிநயாவிற்கு.

இன்றைக்கு மதியம் வரை பார்த்துவிட்டு அதற்குப் பிறகு தானாவது அவனுக்கு அழைத்துப் பேச வேண்டு மென்று நினைத்துக் கொண்டாள்.

''திடீர்னு நேத்து மதியம் வினு கூப்பிட்டு டேன்ஸ் க்ளாஸ்க்கு வர்ற வாரத்திலிருந்து போலாம்னு சொல் லிட்டா.''

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கவலை என்று நினைத்தவள், ''ஏன்?'' என்று பெயருக்குக் கேட்டு வைத் தாள்.

''என்ன ஏன்னு கேக்கற? உனக்குத் தெரியாதா?''

''என்ன தெரியாதான்னு கேக்கற?''

''ம், வினு அண்ணாவுக்கு அதான் போலீஸ் ஆஃபீ ஸரா இருக்காரே அவருக்கு ஆக்ஸிடெண்ட் ஆயிடுச் சாம். பயப்படறதுக்கு ஒன்னுமில்ல. ஆனா கண்டிப்பா ஒரு வாரமாவது பெட் ரெஸ்ட் எடுக்கணும்னு சொல் லிட்டாங்களாம்.''

.............

''ஏய் அபி, என்னாச்சு, நீ ஏன் பேயறைஞ்ச மாதிரி யாய்ட்ட?''



தன்னெதிரில் நின்று கொண்டிருக்கும் ஸ்ரீநிதி தன்னை நிறைய முறை அழைத்திருக்க வேண்டுமென்றுதான் அபிநயாவிற்குத் தோன்றியது.

''ஏய், என்னடி ஆச்சு?''

''இல்ல, ஆக்ஸிடெண்ட்னு சொன்னதுல நேத்துக் காலைல காலேஜ்க்குப் போற வழில நடந்த பயங்கர மான ஆக்ஸிடெண்ட் ஒன்னு ஞாபகத்துக்கு வந்துடுச்சு. வேறொன்னுமில்ல.''

''ஆமாம் போ, உனக்கு வேற பொழப்பே இல்ல. எனக்குக் காலேஜ்க்கு லேட்டாச்சு. நான் கிளம்பறேன்.''

ஸ்ரீநிதி கிளம்பியது தான் தாமதம். ஓடிச்சென்று தனது மொபைலை எடுத்து ஜீவானந்த்துக்கு அழைத்திருந்தாள்.

மூன்று ரிங் போய் அதற்குப் பின்னரே இணைப்புக் கிடைக்க, அதற்குள்ளேயே படபடப்பு பல மடங்கு அதிகரித்திருந்தது.

''நான் அபி, எப்படியிருக்கீங்க?''

................

''தயவு செஞ்சு இப்ப நீங்க எங்க இருக்கீங்கன்றத மட்டும் உடனே சொல்லுங்களேன்!'' என்றவள், எதிர் முனையில் தனக்குத் தேவையான பதில் கிடைத்த அந்த வினாடியே வெளியே ஓடிச்சென்று காரை அடைந் திருந்தாள்.

நல்லவேளையாக அபிநயாவின் அந்த வேகத்தை யாரும் பார்த்திருக்கவில்லை. அப்படியே யாராவது பார்த்தாலும் அதைக் கண்டு கொள்ளும் மனநிலையில் அப்பொழுது அவள் இருக்கவில்லை.

அடுத்து பத்து நிமிடங்களில் வினயாவின் வீட்டைச் சென்றடைந்திருந்தாள் அபிநயா.

வீட்டின் வெளிக்கதவு திறந்தே இருக்க, யாரும் இல்லாமல் டி.வி.யில் நியூஸ் அதன் பாட்டுக்கு ஓடிக் கொண்டிருந்தது.

மீண்டும் வேகநடையுடன் ஜீவானந்த்தின் அறைக்கு - அப்படித்தான் வினயா ஒருமுறை காட்டியதாக ஞாபகம் - சென்றிருந்தாள்.

அறை வாயிலில் நின்றபடியே கண்களால் அந்த அறை முழுக்கத் தேடியவள், அவனை அங்கு காணாது திகைத்தாள்.

''சரி, நான் திரும்பவும் கூப்பிடறேன்,'' என்று பின்னாலிருந்து வந்த குரலில் அப்படியே திரும்பினாள்.

''வாங்க மேடம்!'' என்று அபிநயாவைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டே அவளைத் தாண்டித் தன்னறைக்குள் வந்தவன், ''என்ன காலேஜ் போகலையா?'' என்று கேட்டான்.

வேஷ்டி பனியனுடன் அவன் இருக்க, அவனுடைய இடது தோள்ப்பட்டைக்குச் சற்றுக் கீழே போடப்பட்டிருந்த அந்தப் பெரிய ப்ளாஸ்ட்டர் வெளிப்படையாகவே தெரிந்தது.

''என்ன தண்டனையா, உக்காரலாமே.''

அவன் கேட்டதனைத்தும் காதில் விழுந்தாலும், அபிநயாவின் கவனம் முழுக்க மேலும் ஏதாவது காயம் பட்டிருக்கிறதா என்று கண்களால் அவனது உடலெங்கும் ஆராய்வதில் இருந்தது.



''ஹலோ!'' என்று ஜீவானந்த் தனது முகத்திற்கு முன்னால் சொடக்குப் போட்ட பிறகு தான், சற்றே நடப்புக்கு வந்து நிமிர்ந்து அவனது முகத்தைப் பார்த்தாள்.

''என்னாச்சு?''

''அத நான் கேக்கணும்.''

''சரி. கேளு.''

''உங்களுக்கு இவ்வளவு ஆயிருக்கு, எங்கிட்ட ஒரு வார்த்த கூட நீங்க சொல்லவே இல்லதான?''

உதடு துடிக்கக் கேட்டவளைப் பார்த்தவன், ''ஏய் பேபி! கூல் டவுன்!'' என்றான்.

கண்ணீர் கண்களை மறைக்க, ''என்னாச்சு ஜீவா?'' என்று கேட்டாள்.

''அத இப்படிக் கேட்டா சொல்ல முடியாது.''

''பின்ன எப்படிக் கேக்கணும்?''

''சிரிச்சுக்கிட்டே.''

''அதோட ஒரு பார்ட்டியும் வெச்சு எல்லார்க்கும் ட்ரீட் குடுத்துட்டுக் கேட்டா இன்னும் நல்லார்க்குமே.''

''அட, அதுவும் சரிதான்.''

''ஏய் உன்ன...'' என்று தன்னை அடிப்பதற்காகக் கையை ஓங்கியவளை இழுத்து அணைத்தவன், சற்று உள்ளே வந்து மறு கையால் தனது அறைக் கதவை மூடினான்.

''முதல்ல என்ன விடு. எனக்கு உம்மேல கோபம்!'' என்று தனது அணைப்பிலிருந்து வெளியே வரத் திமிறியவளை, அபி என்று உதடுகளால் முணுமுணுத்துக்

கொண்டே நெஞ்சம் நிறைந்த காதலுடன் அவளது உதடுகளை நோக்கிக் குனிந்தான்.

கண்கள் சொக்கத் தானும் சில வினாடிகள் அவனது கைகளில் கிறங்கி நின்றவள், உடனே ,''ப்ளீஸ் வேண் டாம். இது தப்பு!'' என்று தனது கைகளால் பலமனைத் தையும் கொடுத்து அவனைப் பிடித்துத் தள்ளினாள்.

ஆனால் அவள் என்ன முயன்றும் அதையெல்லாம் வெகு சாதாரணமாகத் தடுத்து விட்டிருந்தவன், மேலும் சிறிது நேரம் அவளை இறுக அணைத்து நின்று கொண் டிருந்து விட்டு அதற்குப் பிறகே விடுவித்தான்.

''என்னடா?''

.............

''அபி...''

''என்னாச்சு ஜீவா?'' என்று அவனது காயத்தைக் காட்டிக் கேட்டவளிடம், ''ஒரு சின்ன ஆக்ஸிடெண்ட்!'' என்று நடந்ததைச் சுருக்கமாகச் சொன்னான் ஜீவானந்த்.

அவன் சொன்னதைக் கேட்டு முடித்தவள், ''கடவுள் புண்ணியத்துல இதோட போச்சு. இன்னும் கொஞ்சம் பலமா அடிபட்டிருந்தா?'' என்று மேலே பேச முடியாமல் கலங்கியவளைச் சிரித்துக் கொண்டே சமாதானப்படுத் தினான்.

''என்ன நீ ஒரு சின்ன விஷயத்துக்குப் போய் இந்த அளவுக்கு ஃபீல் பண்ற?''

''ப்ளீஸ் ஜீவா, சிரிக்காதீங்க.''

''அட்டா, எனக்கு அழத் தெரியாதே. நான் இப்ப என்ன பண்ணட்டும்?''



''அதுக்கேன் நீங்க இவ்வளவு ஃபீல் பண்றீங்க, என்னக் கல்யாணம் பண்ணிக்கோங்க. தன்னப்போல பழகிடு வீங்க.''

''அபி! உன்ன மாதிரி ஒரு நல்ல, பிரமாதமான பொண் ணக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுக்குப்புறம் நான் ஏன்டா அழப் போறேன்? நான் அப்ப உலகத்துலேயே ஒரு பெரிய அதிர்ஷ்டசாலி ஆயிட மாட்டேனா?''

''ஜீவா, நிஜமா ஃபீல் பண்ணிதான் சொல்றீங்களா? அப்படிப் பாத்தா உண்மையான அதிர்ஷ்டசாலி நீங்க இல்ல ஜீவா. நாந்தான்.''

''உன் படிப்பு எப்ப முடியுன்னு பாத்துட்டிருக்கேன். ரொம்பவும் காத்திருக்க முடியாமப் போய்ட்டா உடனே பொண்ணு கேட்டு உங்க வீட்டுக்கு வந்து நிப்பேன். தயாரா இரு.''

''எனக்கென்னவோ பயமா இருக்கு ஜீவா. இதெல்லாம் நல்லபடியா நடக்குமா?''

''நான் இருக்கேன்டா, உனக்கென்ன பயம்?''

ஏனோ அந்த நேரம் பார்த்து உனக்கு ஜாதகத்துல நேரம் ரொம்ப மோசமா இருக்காம் என்று சுந்தரி சொன்னது தான் ஞாபகத்திற்கு வந்தது அபிநயாவிற்கு.

கடவுளே! அப்படியானால் அந்தக் கெட்ட நேரம் ஜீவா னந்தையும் ஏதாவது பாதித்து விடுமோ?

தான் மிகவும் அதிர்ஷ்டக்கட்டைதானோ? இல்லாவிட் டால் சுந்தரி சொன்னது போல ஏன் தான் பிறந்ததுமே தனது தாயின் உயிர் பிரிய வேண்டும், அதற்குப் பிறகு தந்தையும்.

அனைத்திற்கும் மேல் ஜீவானந்த் தன்னிடம் அன்பை வெளிப்படுத்தி ஒரு வாரம் தானே ஆகிறது. அதற்குள் ஏன் அவனுக்கு இரண்டு சோதனைகள் வர வேண்டும்.

ஏனோ மனம் மிகவும் பாரமாகிவிட, கண்களிலிருந்து அளையறியாமலேயே மாலை மாலையாகக் கண்ணீர் கொட்டத் தொடங்கி விட்டிருந்தது.

''அபி! என்னமா, ஏன் அழற?''

கடவுளே! நான் ஏன் ஜீவானந்தைப் பார்த்தேன், அவன் மீது அன்பு கொண்டேன். இப்பொழுது அவனும் அல்லவா தன்னை விரும்பத் தொடங்கி விட்டான்.

''என்னடா, இங்க பாரு.''

''ஜீவா...''

''ஜீவா! நான் ரொம்பவும் துரதிர்ஷ்டசாலி, என்னைக்....''

''பைத்தியம், என்னதான் இருபத்தோரு வயசு ஆயிருந்தாலும் மனசளவுல இன்னும் சின்னக் குழந்தையா இருக்கயேடா. உன்னப் புடிக்காதவங்க உன் மனசக் கலைக்கறதுக்காக ஏதேதோ சொல்லியிருப்பாங்க போலிருக்கே, இருந்தாலும் அத இந்தளவுக்கா நம்பறது?''

உண்மைதானோ, தன்னைப் பிடிக்காததால் சுந்தரி தானே இட்டுக் கட்டியதோ?

''அபி! இங்க பாரு, ஒரு இயந்திரம் மாதிரி வாழ்ந்துட்டிருந்த எனக்குள்ளயும் அன்பு, காதல் இதெல்லாம் இருக்குங்கறது புரிய வெச்சவடா நீ. சாதாரணமாவே எனக்கு ஒன்னு புடிச்சுட்டா அது எனக்கு நடந்தாகணும், நடத்திக் காட்டிடுவேன். அப்படியிருக்கும் போது என் உயிர்ல ஒன்னாக் கலந்துட்ட உன்னை இந்த உலகமே எதிர்த்து நின்னாலும் துணிஞ்சு நின்னு போராடிக் கைப்பிடிப்பேன்டா!'' என்று சொல்லிக் கொண்டே தனது கண்ணீரைத் துடைப்பதற்காக நீட்டியிருந்த ஜீவானந்தின் கையைத் தனது இரு கரங்களாலும் பற்றிக் கொண்டிருந்தாள் அபிநயா.



''அந்த தைரியமும், நம்பிக்கையும் எனக்கு நிறைய இருக்கு ஜீவா. ஸாரி ஜீவா. தேவையில்லாம ஏதேதோ பேசி உங்கள போரடிச்சுட்டேன்.''

''தேவையில்லாமயா, என்னோட வீர தீரத்தையெல்லாம் காட்றதுக்கு ஒரு சான்ஸ் கிடைக்கும் போலிருக்குன்னு நான் சந்தோஷப்பட்டுட்டிருக்கேன். ஆனாலும் நான் சொன்னதுல பாதி நடக்கறதுக்கான சான்ஸ் ரொம்பக் குறைவுதான்!'' என்று பொய்யாக வருத்தப்பட்டுக் கொண்டவனைப் புரியாமல் பார்த்தாள்.

''அங்க நம்ம வீட்ல என்னடா இவன் கல்யாணமே பண்ணிக்க மாட்டான் போலிருக்கேன்னு பயந்துட்டிருக்காங்க. அப்படியிருக்கும் போது இந்த விஷயம் தெரிஞ்சாலே ரொம்ப சந்தோஷப்படுவாங்க. எல்லாத்துக்கும் மேல பொண்ணு நீதான்னு சொன்னா என்னத் தலைல தூக்கி வெச்சுக் கொண்டாடாத குறையா இருக்கும். அங்க உங்க வீட்லயும் உன்னோட பெரியப்பா ரொம்ப நல்ல டைப். பெருந்தன்மையா சந்தோஷமா உன்னை எனக்குக் கரம் பிடிச்சுக் குடுப்பார். ஸோ ரெண்டு வீட்லயும் எதிர்ப்புக்கு இடமே இல்ல. அப்புறமெங்க நான் என்னோட வீரத்தையெல்லாம் காட்றது?''

ஜீவானந்த் சொன்னதையெல்லாம் கேட்ட அபிநயாவாலும் இப்பொழுது சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

''அடடா, சொன்ன மாதிரி நீங்க பாவந்தான்!'' என்று மேலும் சிரித்தாள் அபிநயா. ஏனோ சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் போக மீண்டும் மீண்டும் சிரித்தாள்.

ஆனால் சுந்தரி...

சுந்தரியைப் பற்றி ஜீவாவிற்குத் தெரியாதே.

ஆனால் என் ஜீவாவைப் பற்றியும் சுந்தரிக்குத் தெரியாதே. ஒரு சுந்தரியென்ன, அவரைப் போல இன்னும் ஆயிரம் சுந்தரிகள் வந்தாலும் தனக்காக ஜீவா இருக்கும் போது கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லையென்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள் அபிநயா.

''ஜீவா! ஐ அம் ஸோ ஹேப்பி நவ்!'' என்று சந்தோஷத்துடன் சொன்ன அபிநயாவைப் பார்த்தான் ஜீவானந்த்.

''ம்கூம்... நான் நம்ப மாட்டேன்.''

''ஏன்?''

''உண்மையான சந்தோஷமா இருந்தா நீ அத சும்மா வாயில சொல்லிட்டிருக்க மாட்ட.''

''பின்ன எப்படி....''

ஜீவானந்த்தின் பார்வை தன்னை ஏதோ செய்ய, அவனுடைய கண்களை நேருக்கு நேராகப் பார்த்தாள்.

''ஜீவா!'' என்று அவனது கழுத்தைப் பிடித்துத் தொடங்கியவள், ''ஐ லவ் யூடா!'' என்று அவனை இறுக அணைத்து அவனது இதழ்களில் தனது இதழ்களைப் பதித்தாள்.

ஆனால் அதற்கு மட்டும் தான் அவன் அபிநயாவை விட்டிருந்தான். மீண்டும் ஜீவானந்த் அவளை விடுவித்த போது அவளுக்கு மூச்சு வாங்கியது.

ஜீவானந்தின் பார்வை தன்னை மேலும் என்னவோ செய்ய, ''நான் வெளிய போறேன்,'' என்று எழுந்து விட்டிருந்தாள்.



அபிநயாவைத் தொடர்ந்து சில வினாடிகளில் தானும் ஹாலுக்கு வந்திருந்தான் ஜீவானந்த்.

''அப்ப இன்னைக்குக் காலேஜ்க்குப் போகல?''

''அச்சச்சோ!'' என்று அபிநயா வாட்ச்சைப் பார்க்க, ''இனி கிளம்பினாலும் கஷ்டந்தான்!'' என்றான்.

''வினு?''

''அவ காலேஜ் போயாச்சு.''

''ஓ''என்றவள், ''அப்ப வீட்ல இன்னைக்கு நீங்க மட்டும்தானா?'' என்று கேட்டாள்.

''ஏன், இன்னைக்கு முழுக்க எங்கூடவே இருக்கப் போறியா?'' என்றவனின் வார்த்தைகளில், ''அச்சச்சோ! நான் கிளம்பறேன்பா. பெரியப்பா வொர்க்கிங் டேஸ்ல ஒரு நாளைக்கு லீவ் போட முடியுமா, கொஞ்சம் வேலையிருக்குன்னு கேட்டுட்டே இருந்தார். நான் போறேன்,'' என்று எழுந்து விட்டிருந்தாள்.

''டிபன்... இல்லன்னா ஒரு கப் காபி?''

''நோ தேங்க்ஸ் ஜீவா! உங்க ஹெல்த்த நல்லாப் பாத்துக்கோங்க. அப்படியே இங்க இருக்கற என்னையும்!'' என்று அவனருகில் சென்று அவனது நெஞ்சில் கை வைத்துச் சொன்னவள், அடுத்த வினாடியே எட்டித் தன்னைப் பிடிக்க வந்தவனின் கைகளில் சிக்காமல், ''நான் வர்றேன், பை!'' என்று ஓடியே விட்டிருந்தாள்.

# 18

''ஹாய்ணா.''

''வாங்க மேடம். என்ன, சாப்டாச்சா?''

''ஆச்சுண்ணா, நீங்க?''

''நானும் ஆச்சு, என்ன ஒரே படிப்பு போலிருக்கு?''

''ஆமாண்ணா. நான் ஒருத்தர்கிட்ட பெட் கட்டியிருக் கேன்.''

''எதுக்கு? என்னன்னு?''

''ஃபர்ஸ்ட் மார்க் வாங்குவேன்னு. பெட் கட்டினது அபி கூட.''

''ஓ....''

''ஆமாண்ணா. எப்பவும், எல்லாத்துலயும் அவங்க தான் ஃபர்ஸ்ட் மார்க். அது மட்டுமில்ல. நல்லாப் படிச்சா எல்லாருமே, ம்கூம் என்னாலயும் ஃபர்ஸ்ட் மார்க் வாங்க முடியுமாம். அபி சொல்றாங்க.''

''முடியும்மா. எல்லாமே நம்ம முயற்சிலதான் இருக்கு. அப்புறம் வினு...''

''சொல்லுங்கண்ணா.''

''என்னால ஒரு பத்து நாளைக்குச் சரியான நேரத்துக்கு வீட்டுக்கு வர முடியாதுமா. முக்கியமான என்குயரி ஒன்னு போயிட்டிருக்கு. என்னதான் தங்கம்மாவும் கூட இருந்தாலும் நீ மட்டும் வீட்ல தனியா இருக்கையேன்னு என்னால நிம்மதியா டியூட்டி பார்க்க முடியாது. இன்னும் கொஞ்ச நாளைக்கு நீ பேசாம ஊர்ல இருந்து டிரைவர் கூடக் காலேஜ்க்கு வந்துட்டுப் போய்க்கோம்மா.''

''சரிண்ணா, நீங்களே சொல்லலேன்னாக் கூட நான் உங்ககிட்ட கேக்கலாமான்னு தான் இருந்தேன். இப்பவே நீங்க ரொம்ப ஸ்ட்ரெய்ன் பண்ணிட்டுத்தான் இருக்கீங்க.



இதுக்கு மேலயும் வேல அதிகமா இருக்கும்னா என்னால நினைச்சுக் கூடப் பார்க்க முடியலண்ணா.

''நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. தயவு செஞ்சு முடிஞ்ச அளவுக்கு ஓவர் ஸ்ட்ரெய்ன் பண்ணிக் காதீங்கண்ணா. ஏன், டாக்டர் கைல அடிபட்டதுக்கு மினிமம் ஒன் வீக்காவது ரெஸ்ட் எடுக்கணும்னு சொன் னார். ஆனா நீங்க மூணு நாள்ல வேலைக்குக் கிளம்பிட் டீங்க. ப்ளீஸ்ணா. உங்களையும் நீங்க கொஞ்சம் பார்த் துக்கோங்க.''

''ஷ்யூர் வினு, நீ தேவையில்லாம மனசப் போட்டுக் குழம்பிட்டிருக்காத. வித்யாவும் அங்க வீட்ல தனியா போரடிச்சுட்டிருக்காளேன்னுதான் சொன்னேன். உனக் கும் ஒரு சேஞ்சா இருக்கும். வரவரப் பெரிய மனுஷி மாதிரி யோசிக்க ஆரம்பிச்சுட்ட!'' என்ற தனது அண் ணனைப் பார்த்தாள்.

இதற்கே இப்படிச் சொல்லும் தனது அண்ணனிடம் எப்படித் தனது மனதில் உள்ளவற்றையெல்லாம் சொல்வது என்று மிகவும் தயங்கினாள் வினயா.

ஆனால் நீண்ட நாட்களாகக் கண்டிப்பாகச் சொல்லத் தான் வேண்டுமென்று நினைத்திருந்த படியால், சரி பரவாயில்லை யென்று விட்டு விடவும் முடியாமல் தவித்தாள்.

''என்னமா, சொல்லு?''

''அண்ணா!''

''ம்''

''அண்ணா... போலீஸ் டிபார்ட்மெண்ட் வேலையே சவால்கள் நிறைஞ்சதுன்னு சொல்லுவாங்க. அப்படி

யிருக்கும் போது நீங்க ஒரு ஸின்சியர் போலீஸ் ஆஃபீஸர் வேற. ஒவ்வொரு நாளும் நீங்க எடுக்கற ரிஸ்க்கை யெல்லாம் பாக்கும் போது உங்களுக்கு ஏதாவது ஆயிடுமோன்னு எங்களுக்கு குறிப்பா எனக்கு ரொம்ப பயமா இருக்குண்ணா. எங்க எல்லாருக்கும் நீங்க வேணும்ண்ணா. என்னுடைய பயம் அவசியமில்லாதது தான். எனக்கே புரியுது. ஆனாலும் ரொம்ப நாளா உங்க கிட்ட சொல்லிடணும்னு இருந்ததால சொல்லிட்டேன். தயவுசெஞ்சு தப்பா எடுத்துக்காதீங்க.''

ஒரு வழியாகத் தான் சொல்ல நினைத்ததையெல் லாம் சொல்லி முடித்து விட்டிருந்தாள் வினயா.

''எந்த அளவுக்கு திங்க் பண்ணியிருக்கன்னு நினைச்சா எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு வினு, ஆனா நிறைய விஷயங்கள்ல அளவுக்கு மீறின யோசனை இருக்கற நிம்மதியையும் சேத்துக் கெடுக்குமே தவிர அதனால வேற எந்தப் பலனும் இருக்காது.

''அதே மாதிரி இன்னைக்கு நிலைமைல எதுல ரிஸ்க் இல்ல? தினம் தினம் அதிகமாயிட்டிருக்கற ட்ராஃபிக்ல வண்டி எடுத்துட்டுக் கிளம்பினா திரும்பவும் நல்லபடியா வீடு வந்து சேருவோமாங்கற நிச்சயமில்ல. அந்த மாதிரி எல்லாத்துலயுமேதான் ரிஸ்க் இருக்கு.

''போலீஸ் ஜாப்னு இல்லமா. எல்லாத் துறைகள்ல யுமே நியாயமா நடந்துக்கறவங்க சோதனைகள் சந்திச்சு தான் ஆகணும். ஆனா அதுக்கெல்லாம் பயந்துட்டிருந்தா யாருமே அவங்கவங்க கடமைகள செய்ய முடியாது.''

தங்கையின் பயம் ஜீவானந்த்துக்குப் புரிந்தது. மேலும் இவள் சொன்னதாகத் தன்னிடம் அபிநயா சொன்னதும் அப்பொழுது நினைவுக்கு வந்தது.



தங்கையின் பயம் தீரும் விதமாக அவளிடம் மேலும் சிறிது நேரம் பேசியவன், ''சரிமா. இனி நீ போய்ப் படிச் சுட்டுப் படுத்துத் தூங்கு. எனக்கும் கொஞ்சம் வேலை யிருக்கு,'' என்று தன்னறைக்குச் சென்றான்.

''அபி.''

தன்னை ரகுநாத் அழைக்க, ''சொல்லுங்க பெரியப்பா!'' என்று வந்து நின்றாள் அபிநயா.

''இன்னைக்கு உனக்கு காலேஜ் லீவ்தான?''

''ஆமா பெரியப்பா.''

''சரி. அப்பக் கிளம்பு, கம்பெனி வரைக்கும் போய்ட்டு வரலாம்.''

''நான்...''

''ஏன், என்ன தயக்கம்?''

........

''இத்தன நாளும் நீ சின்னப் பொண்ணுதாம்மா. ஆனா இனிமேலும் அப்படியே இருக்கக் கூடாது. உனக்கு எப்ப முடியுமோ, அப்ப கம்பெனிக்கு வா. பிஸினஸ் பத்திக் கொஞ்ச கொஞ்சமா தெரிஞ்சுக்கோ.''

''சரி, பெரியப்பா.''

''நான் கம்பல் பண்றேன்னு நினைச்சுக்க வேண் டாம்மா, உன் நல்லதுக்குதான் சொல்றேன்.''

''அச்சச்சோ! இல்ல பெரியப்பா. நானே உங்களக் கேக்கலாம்னு தான் இருந்தேன். இனிமேல் நேரம் கிடைக் கும் போதெல்லாம் நான் கம்பெனிக்குக் கண்டிப்பா வர்றேன் பெரியப்பா.''

''வர்றது மட்டுமில்லமா, நிர்வாகம் பண்ணக் கத்துக் கணும். கொஞ்சம் கான்ஸன்ட்ரேஸன் மட்டும் இருந்த துன்னாப் போதும்மா. நீ கொஞ்ச நாள்ளயே பிரமாதமாக் கத்துக்கலாம்.'

''ஷ்யூர் பெரியப்பா.''

''அதே மாதிரி வேற எதுவானாலும் நீ எங்கிட்டத் தயங் காமக் கேக்கலாம், நீ நிம்மதியா சந்தோஷமா இருக்கணும். அதுதான் முக்கியம்.''

''நீங்க எல்லாமே பாத்துப் பாத்து நல்லா செஞ்சு குடுத்திருக்கறதால எனக்கு எந்தக் குறையும் இல்ல.''

என்னதான் தனது பெரியப்பாவுக்கு உடனே பதில் சொல்லி விட்டிருந்தாலும், அவர் வேறு எதைப் பற்றியோ கேட்க வருகிறாரோ என்று அபிநயாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதோடு ஜீவானந்த்தே சொல்கிற மாதிரி தனது காதலுக்குப் பெரியப்பாவிடமிருந்து எதிர்ப்பு எதுவும் வர வாய்ப்பில்லையென்றுதான் அபிநயாவிற்கும் தோன் றியது.

''சரிமா. அப்ப இன்னும் அரை மணி நேரத்துல கம் பெனிக்குக் கிளம்பலாம்,'' என்றவரிடம், ''சரி பெரியப்பா,'' என்று சொல்லிவிட்டு வந்தாள்.

என்னதான் ஒரு சில வார்த்தைகளே என்றாலும் ஒவ்வொரு முறையும் ஜீவானந்த்தே தன்னை அழைத் துப் பேசியதில் மனதிற்குள் மிகவும் சந்தோஷமாக உணர்ந்தாள் அபிநயா.

மேலும் ஜீவானந்த்தின் அன்பை முழுமையாக உணர்ந்து கொண்ட இந்தச் சில நாட்களாகத் தரையில் கால் பாவாமல் வானத்திலேயே மிதந்தாள் எனலாம்.



அனைத்து இள வயதுப் பெண்களைப் போலவும் இதுநாள்வரை எந்தவொரு கனவுகளையும் கண்டிருக்காத அபிநயா தனது காதலைக் கிடைத்தற்கரிய பொக்கிஷ மாக நினைத்து மனப் பெட்டகத்திற்குள் வைத்துப் போற்றிப் பாதுகாத்தாள்.

அபிநயாவிடம் வெளிப்படையாகவே தெரிந்த அந்த மாற்றம் ரகுநாத்தின் கண்களிலும் படத் தவறவில்லை. அதிலும் இப்பொழுது சில நாட்களாக அவளது முகத்தில் தெரியும் அந்த அளவிட முடியாத ஒருவித சந்தோஷம் கலந்த நிம்மதியும்.

அபிநயா ஆனந்தத்தில் புள்ளி மானாகத் துள்ளித் திரிவது ஒரு விதத்தில் சந்தோஷத்தைக் கொடுத்தாலும், ஏதாவது பிரச்சனையில் சென்று மாட்டிக் கொள்ளக் கூடாதே என்று அவருக்குக் கவலையாகவும் இருந்தது.

ரகுநாத்தின் சாதாரணக் கண்களுக்கே வித்தியாசம் நன்றாகவே தெரியும் போது, சுந்தரியின் கழுகுக் கண் களுக்குச் சொல்ல வேண்டியதே இருக்கவில்லை.

இவள் எப்படி இவ்வளவு சந்தோஷமாக இருக்கலா மென்று மனம் கறுவியது.

அதிலும் சாதாரணமாகவே பார்ப்பவர்கள் அனைவரை யும் அது யாராக இருந்தாலும் மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்க்க வைத்துவிடும் அபிநயாவின் அழகு இப்பொழுது மேலும் புதுப்பொலிவு பெற்றுத் திகழ்ந் ததைச் சுந்தரியால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடிய வில்லை.

திருமணமாகி வந்தபோது இருந்த அவளுடைய தாய் நளினியின் முகத்தை அப்படியே இப்போதைய

அபிநயாவின் முகம் நினைவு படுத்த, மனதிற்குள் எங்கோ ஒரு மூலையில் இருந்த பொறாமைத் தீ மீண்டும் பொங்கி எழுந்தது.

அன்றைக்குக் கேட்டபோது கூட யாரையோ விரும்பு வதாகச் சொன்னாளே.

ஒரு நல்ல வாழ்க்கை மட்டும் அமைந்து விட்டால் அதற்குப் பிறகு இவளும் இவளது தாயைப் போலத் தன்னை மதிக்கக் கூட மாட்டாளே.

அந்த அளவிற்கு விட்டால்தானே, பார்த்துக் கொள் கிறேனென்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

அதிலும் அன்று ஸ்ரீநிதியுடன் படிக்கும் அவளது வகுப்புத் தோழியும் மற்றும் அவளுடைய தாயும் வீட் டிற்கு வந்திருக்க, ஒரு மரியாதைக்காகச் சென்று அவர் களிடம் தானும் சில வார்த்தைகள் பேசினாள் அபிநயா.

அப்பொழுது ஸ்ரீநிதியின் தோழியுடைய அம்மா, அடடா எத்தனை அழகு, பார்த்துக் கொண்டே இருக்க லாம் போல மிகவும் அழகாக இருக்கிறாய் என்றெல்லாம் அபிநயாவிடம் சொல்ல, தானும் ஒரு நன்றியுடன் சிரித்துவிட்டுப் போய்விட்டிருந்தாள் அபிநயா.

அதற்குப் பிறகு, ஏன் அப்பொழுதே அதைப் பற்றி அபிநயா மறந்து கூடப் போய் விட்டிருந்தாள்.

ஆனால் அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரிக்கோ, அபிநயாவின் மேலிருந்த பொறாமையும், கோபமும் மேலும் பல மடங்கு அதிகரித்திருந்தது.

நன்றாக அலங்கரித்துக் கொண்டு யாராவது வந்து விட்டால் போதும், அவர்களுக்கு முன்னால் வந்து பல்லை இளித்துக் கொண்டு நின்று விடுவது, பிறகு அவர்கள்



மரியாதைக்காகவேனும் ஒரு வார்த்தை சொல்லாமலா இருப்பார்கள்.

அதிலும் இவளுடைய அழகில் மயங்கி அனைவரும் துதி பாட வேண்டுமென்றே அனைத்தையும் செய் கிறாளே!

ஆனால் எப்பொழுதும் போல மனதில் எதையும் வைத்துக் கொள்ளாமல் வெகுளியாக நடந்து கொண் டிருந்த அபிநயாவுக்கோ, அப்பொழுது புதிதாகச் சுந்தரிக் குத் தன்மேல் வந்திருக்கும் வெறுப்பைப் பற்றி எதுவுமே தெரிந்திருக்கவில்லை.

படிப்பதற்கு நிறைய இருந்ததில் அனைத்தையும் முடித்துவிட்டு அன்று இரவு ஒன்பது மணிக்குச் சாப்பிடு வதற்காக அபிநயா கீழே இறங்கி வந்த போது, மற்ற அனைவருமே கூடச் சாப்பிட்டு முடித்துவிட்டுச் சென் றிருந்தார்கள்.

அவளுடைய தூரத்துச் சொந்தத்தில் யாரோ ஒரு வருக்கு உடல் நலமில்லை யென்று பார்வதம் ஒரு மாதத்திற்கு முன்பு ஊருக்குக் கிளம்பிப் போயிருக்க, இப்பொழுதெல்லாம் இரவு உணவுக்கு இண்டர்காமில் தான் அவளை அழைத்துக் கொண்டிருந்தார்கள். அபிநயா விற்கும் அன்று படிக்கும் மும்முரத்தில் நேரம் போனதே தெரிந்திருக்கவில்லை.

இன்றைக்கு ஏன் அனைவரும் சாப்பிடும் போது தன்னை அழைக்காமல் விட்டு விட்டார்கள் என்று நினைத்துக் கொண்டே சாப்பிட அமர்ந்தாள்.

பசி உயிர் போக, ப்ளேட்டில் எடுத்துப் பரிமாறிக் கொள்வதற்காக வேகமாக ஹாட் பாக்ஸைத் திறந்தாள்.

முதலில் பார்த்த ஹாட் பாக்ஸ் ஏனோ காலியாகக் கிடக்க, அடுத்தடுத்து மற்ற அனைத்து ஹாட்பாக்ஸ் களையும் கூடத் திறந்து பார்த்தாள். கடைசியாக ஒரு ஹாட்பாக்ஸில் மட்டும் இரண்டே இரண்டு இட்லிகள் இருக்க, மற்ற அனைத்துமே துடைத்து வைக்கப்பட்டாற் போலச் சுத்தமாக இருந்தன.

அந்த இட்லிகளுக்கும் சட்னி, சாம்பார் என எதுவுமே இல்லாதிருக்க, தயிரோடு சேர்த்துச் சாப்பிட்டாள்.

கால் வயிறு மட்டுமே நிரம்பியிருக்க, பசி இன்னும் பல மடங்கு அதிகமாகிவிட்டாற் போல இருந்தது.

சரி, பரவாயில்லை. ஃப்ரிட்ஜில் ஃப்ரூட்ஸ் ஏதாவது இருந்தால் பார்க்கலாமென்று சென்றவள், அங்கேயும் ஒன்றையும் காணாது திகைத்தாள்.

''மகாராணி! உங்க இஷ்டத்துக்கெல்லாம் வந்தா இனிமேல் இதுதான் நிலைமைன்னு காட்றதுக்காகத்தான் இப்படியெல்லாம் செஞ்சேன்!'' என்று பின்னாலிருந்து வந்த சுந்தரியின் குரலில் திரும்பினாள் அபிநயா.

''என்ன, நேரத்துக்கு வர முடியாதோ, விட்டாக் கொண்டு வந்து ஊட்டியே விடணும்னு சொல்லுவ போலிருக்கு.''

............

''கைல புடிக்க முடியாத அளவுக்குக் கொஞ்ச நாளா ரொம்ப சந்தோஷமா இருக்க. பாவம்! வேற யார் வாழ்க்கை துக்கமாகப் போகுதோ?''

அப்படிச் சொன்ன சுந்தரியைச் சற்றுப் பயத்துடன் நிமிர்ந்து பார்த்தாள் அபிநயா.



''என்னடி பார்க்கற? சரி. ஒரு ஜோஸியர் தான ஏதேதோ சொல்றார்னு நானும் உன் பெரியப்பாவும் இன்னும் ரெண்டு ஜோஸியர்களைக் கூட இன்னைக்கு உன் ஜாதகத்தைக் கொண்டு போய்ப் பாத்தோம்.

''உனக்கு எந்தப் பிரச்சனையும் வராதாம். நீயெல்லாம் நல்லாதான் இருப்பியாம். உன்னக் கட்டிக்கப் போறவ னோட உயிருக்குத்தான் ஆபத்து வருமாம்.''

சுந்தரி சொன்னதைக் கேட்ட அபிநயாவிற்கு யாரோ நெஞ்சிலேயே சாட்டையால் அடிப்பதைப் போலிருந் தது.

ஆனாலும் சுந்தரிக்கு முன்பாக எதையும் காட்டிக் கொள்ளக் கூடாதென்று முகத்தைச் சாதாரணமாகவே வைத்துக் கொண்டு நின்றிருந்தாள்.

''என்னடி நான் சொன்னத நம்ப மாட்டியாக்கும்! நம்பாத போனா உன் பெரியப்பாகிட்டயே கேளு.''

நம்பவில்லையா, அதுதான் உயிர் நாடியையே காயப்படுத்தியாயிற்றே! இனியும் போதவில்லையாமா?

''உன் வயசுக்கு யார் என்ன சொன்னாலும் அது உனக்குப் பெருசாத் தெரியாது. ஆனா நாங்க அப்படி விட்டுட முடியாது. நாலு நல்லது கெட்டதயும் யோசிச்சுச் செய்ய வேண்டியது எங்க கடமை. அவங்க பொண்ணா இருந்தா இப்படியெல்லாம் செய்வாங்களான்னு நாலு பேர் எங்களப் பத்திதான் பேசுவாங்க. ஒழுங்கா ஒரு பொண்ணா லட்சணமா இரு. தயவுசெஞ்சு காதல் கத்தரிக்காய்னு சுத்தி உன்னக் கைப்பிடிக்கறவனோட வாழ்க்கைலயும், ஐயோ பாவமேன்னு வளத்த எங்க வாழ்க்கைலயும் விளையாடிடாத. நேரம், காலமெல்லாம்

கூடி வர்ற வரைக்கும் கொஞ்சம் நாங்க சொல்றதயும் கேட்டுத் தொல!''

ஏனோ மனதிற்கு மிகவும் பாரமாகி விட, நிற்கக் கூட முடியாமல் கால்கள் வெடவெடக்க ஆரம்பித்திருந்தன அபிநயாவிற்கு.

'ஐயோ, இல்லை! என் ஜீவானந்த் நன்றாக இருக்க வேண்டும். அதற்கு நான் என் உயிரை வேண்டு மானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். கடவுளே! கடவுளே! என்று அபிநயாவின் மனம் கதறிக் கொண் டிருப்பது தெரியாமல் சுந்தரி பாட்டுக்குப் பேசிக் கொண்டே போனாள்.

ஒரு வழியாகத் தன்னறைக்கு வந்து சேர்ந்திருந்தவள் அப்படியே படுக்கையில் விழுந்து கதறி அழுதாள்.

ஆற்றுவாரோ, தேற்றுவாரோ இல்லாமல் வெகுநேரம் அழுது தீர்த்தவள், அதற்குப் பிறகு எழுந்து அமர்ந்தாள்.

இல்லை. சுந்தரி சொல்வது போலெல்லாம் எதுவும் நடக்கக் கூடாது, நடக்க விடக் கூடாது.

இனி ஜீவானந்த்தை எக்காரணம் கொண்டும் பார்க் கவோ பேசவோ கூடாது. அது எத்தனை துயரமானதாக இருந்தாலும்.

அப்படியே வெகு நேரம் அமர்ந்து ஏதேதோ யோசித் துக் கொண்டிருந்தவள், கடைசியில் ஒரு முடிவுக்கு வந்திருந்தாள்.

அதைச் செயல்படுத்துவது மிகவும் கடினமான ஒன்று தான். ஏன், நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்றே. ஆனால் இப்போதிருக்கும் நிலையில் அதைத் தவிர தனக்கு வேறு வழியும் இல்லையே.



இரவு தூங்கப் போவதற்கு முன்பு அதையே தீவிரமாக நினைத்துக் கொண்டிருந்ததாலோ அல்லது வெகுநேரம் கழித்துக் கண்ணயர்ந்ததால் அதிகாலை நேரத்தில் தான் ஆழ்ந்து தூங்கியதாலோ எப்படியோ ஆழந்த தூக்கத்தில் வந்திருந்த அந்தப் பயங்கரமான கனவில் அலறி அடித்துக் கொண்டு எழுந்திருந்தாள் அபிநயா.

விடிந்து வெகு நேரம் ஆகியிருக்கும் போல வெளிச் சம் தன்னறை முழுக்கப் பரவியிருப்பதைக் கண்டாள்.

அதிகாலைக் கனவு பலிக்கும் என்பார்களே.

அப்படியானால்...

ஏதோ ஒரு பெரிய தீவிரவாதக் கும்பலைப் பிடிப்ப தற்காக ஒரு அடர்ந்த காட்டிற்குள் ஜீவானந்த் செல் கிறான். அங்கு காவல்துறைக்கும் அந்தக் கும்பலுக்கு மிடையே பலத்த சண்டை நடக்கிறது. அந்தப் போராட் டத்தின் முடிவில் காவல் துறையினர் அந்தக் கும் பலையே கூண்டோடு பிடித்திருந்தாலும், அப்பொழுது அந்தத் தீவிரவாதி ஒருவனின் துப்பாக்கித் தோட் டாவைத் தனது நெஞ்சிலேயே வாங்கிக் கொள்ளும் ஜீவானந்த் அதே இடத்தில் சரிந்து விழுந்து மடிகிறான்.

என்னதான் அது கனவு தான், நனவில்லையென்பது தெரிந்தே இருந்தாலும், தாங்கிக் கொள்ள முடியாமல் கதறி அழுது விட்டிருந்தாள் அபிநயா.

விடிந்து விட்ட நேரத்தில் தனது பாட்டி இறந்து விட்டது போலக் கனவு கண்டதாகவும், அதே போலத் தொடர்ந்து வந்த இரண்டு நாட்களில் உண்மையிலேயே தனது பாட்டி இறந்து விட்டதாகவும் பள்ளியில் படிக்கும் போது கண்ணீருடன் தனது வகுப்புத் தோழி ஒருமுறை

சொன்னது வேறு அந்த நேரம் பார்த்து நினைவிற்கு வந்தது அபிநயாவிற்கு.

அந்த வினாடியே கண்களைத் துடைத்து, அழு கையைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

அதற்குப் பிறகு இரவு தான் எடுத்திருந்த முடிவில் தீவிரமடைந்திருந்தாள் அபிநயா.

# 19

மறுநாள் கல்லூரிக்குச் சென்றபோது, வினயா டிரைவ ருடன் கல்லூரிக்கு வந்திருப்பது தெரிந்தது.

அவளுடன் சாதாரணமாகப் பேச முடியும் போல அபிநயாவிற்குத் தோன்றவில்லை.

ஆனாலும் அதற்குள் தன்னைப் பார்த்திருந்த வினயா, ''ஹாய் அபி, குட்மார்னிங்!'' என்று அருகில் வர, பதிலுக்குத் தானும் வழக்கம் போலப் பேசினாள்.

''என்னாச்சு அபி?''

வினயா கேட்பது புரியாமல் அபிநயா அவளைப் பார்க்க, ''இல்ல, முகமெல்லாம் ஒரு மாதிரியிருக்கு. உடம்புக்கு ஏதாவது சரியில்லையா?'' என்று கேட்டாள்.

''ஆமா. கொஞ்சம் சளி, காய்ச்சல்.''

''அச்சச்சோ! பேசாம வீட்லயே ரெஸ்ட் எடுத்திருக் கலாமே அபி,'' என்றவள், ''சரி. ஹெல்த்தப் பாத்துக் கோங்க!'' என்றாள்.



மேலும் சில வார்த்தைகள் பேசிவிட்டுத் தனது வகுப் பறைக்குள் செல்வதற்குள்ளேயே, எதையோ சாதித்து விட்டதைப் போல ஒன்றுமே முடியாமல் அமர்ந்து விட்டிருந்தாள்.

இவளிடமே இப்படியென்றால், இவளுடைய அண்ண னிடம்....

கடவுளே! நீதான் உடனிருந்து நான் நினைத்திருப் பதைச் செய்து முடிப்பதற்கான மனவலிமையை எனக்குத் தர வேண்டுமென்று கண்கள் கலங்கக் கடவுளை வேண்டிக் கொண்டாள்.

நேற்று வரை வாழ்க்கை எவ்வளவு சந்தோஷமானதாக இருந்தது! கண்ட காட்சிகளெல்லாம் எவ்வளவு ரசனை மிக்கதாக இருந்தன. ஒரே நாளில் அவையெல்லாம் இப் படித் தலைகீழாக மாறிவிட முடியுமா?

அதுதான் முடிந்திருக்கிறதே. சற்றே தடுமாறத் தொடங்கிய மனதை மீண்டும் கல்லாக்கிக் கொண்டாள் அபிநயா.

போதும். வாழ்க்கையில் தான் இழந்ததனைத்தும் போதும். இனியும் யாரையும் இழக்கும்படி நேர்ந்து விடக்கூடாது. அதற்குத் தான் எந்த அளவு சிரமங்களைச் சந்திக்க நேர்ந்தாலும் சரி.

என்னதான் அபிநயா தனக்குத் தானே ஒரு மனக் கணக்கைப் போட்டுக் கொண்டிருந்தாலும், ஜீவானந்த் தின் நிலையிலிருந்து யோசிக்க அவள் தவறி விட்டிருந் தாள்.

ஜீவானந்த்தைப் பொறுத்தவரை அவனுடைய வேலை அவனுக்கு உயிர் மூச்சாக இருந்தது, இருந்து கொண்டும் வருகிறது.

ஆனால் இப்பொழுது அபிநயா அவனது வாழ்க்கைக் குள் நுழைந்து விட்ட பிறகு, அவனது மனம் சற்றே தடுமாறத் தொடங்கி விட்டிருந்தது.

அதாவது அவனுக்கு அப்படித் தோன்றத் தொடங்கி யிருந்தது என்று சொன்னால் அது சரியாக இருக்கும்.

அபிநயாவைத் தன்னுடையவளாக்கிக் கொண்டு அவளைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டு மென்று அவனது மனம் பரபரபத்தது.

அதிலும் அபிநயாவிற்கு மும்முரமாக மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக்கிறார்களென்று ஏதோ பேச்சு வாக்கில் தனது தங்கை சொன்னதிலிருந்துதான், அவனுக்கும் மனதிற்குள் இந்த எண்ணம் தீவிரமடைந் திருந்தது.

முடிந்த அளவு விரைவில் அவளது வீட்டினருடன் கலந்து பேசி நிச்சயதார்த்தத்தை முடித்து கொண்டு, திருமணம் வேண்டுமானால் அபிநயாவின் இந்த வருடப் படிப்பு முடிந்ததும் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு மனதிற்குள் வந்திருந்தான்.

வேலை விஷயமாக ஒரு வாரம் வெளியூர் செல்ல வேண்டியிருந்ததால், சென்று வந்ததும் முதல் வேலை யாகத் தனது பெற்றவர்களிடம் பேசிவிட முடிவு செய் திருந்தான்.

அன்று மாலை கல்லூரி முடிந்து வீட்டிற்குள் வந்த அபிநயா ஒரு டம்ளர் காபியை மட்டும் வாங்கிக் கொண்டு தன்னறைக்குச் சென்றிருந்தாள்.

இனி இரவு உணவுக்கு மட்டும் வந்து போய் விடலா மென்று நினைத்துக் கொண்டே காபியைக் குடித்து



முடித்தவள், மனமே இல்லாமல் மெதுவாகச் சென்று கை கால் முகம் கழுவிக் கொண்டு வந்தாள்.

அன்றைக்கு ஜீவானந்திடமிருந்து அழைப்பு எதுவும் வராதது நினைவிற்கு வர, வேண்டிக் கொண்டது போலக் கடவுளே உதவி செய்யத் தொடங்கிவிட்டார் போலிருக்கிறது என்று மனதிற்குள் விரக்தியாகச் சிரித்துக் கொண்டாள்.

நினைத்துக் கூட முடித்திருக்கவில்லை, அதற்குள் ஜீவா என்ற எண்ணிலிருந்து தனது மொபைலுக்கு அழைப்பு வர, கைகள் நடுங்க எடுத்தாள்.

சில வினாடிகள் தயங்கியவள், அதற்குப் பிறகே மெதுவாக அட்டெண்ட் செய்து காதருகில் கொண்டு போனாள்.

கடவுளே! இன்னும் எப்படியெப்படியெல்லாம் என்னை வதைக்கப் போகிறாயென்று அவளது மனம் பாட்டுக்கு ஊமையாய்க் கதறியது.

''ஹலோ...''

..........

''ம். நல்லார்க்கேன், லேசா சளி காய்ச்சல்.''

அவனது தங்கையிடம் சொன்ன அதே பொய்யை அவனிடமும் சொன்னாள்.

பிரம்மப் பிரயத்தனப்பட்டு மேலும் சில நிமிடங்கள் பேசியவள் பேசி முடித்துவிட்டு அவன் இணைப்பைத் துண்டித்திருந்த அடுத்த வினாடியே தலையில் கை வைத்தபடி அமர்ந்திருந்தாள்.

ஆரம்பமே இப்படியென்றால்...

அதுவும் அவனது கம்பீரமான குரலும், உண்மையான கரிசனமும் அபிநயாவின் மனதைச் சுக்கல் நூறாக்கி யிருந்தன.

இவனிடம் தான் நினைத்திருப்பதை யெல்லாம் எப்படிச் செய்து முடிக்கப் போகிறேனென்று நினைத்த வளுக்கு, ஒருவேளை அவன் ஜெயித்து விடுவானோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

ஆனால் கெட்டதிலும் ஒரு நல்லதாக ஒரு வாரம் வெளியூர் போகிறேன், நேரம் கிடைக்கும்போது நானே அழைக்கிறேனென்று அவன் சொன்னது சற்று மன ஆறுதலைக் கொடுத்தது.

இந்தத் தொடக்கமே நிரந்தரப் பிரிவுக்கு வழி வகுத்து விடுமோ?

அப்படி மட்டும் நடந்தால் போதும் கடவுளே என்று மூளை சொல்ல, ஐயோ! என் ஜீவானந்த்தைப் பிரிந்து அவனில்லாமல் நானெப்படி உயிர் வாழப் போகிறே னென்று மனம் கதறித் துடித்தது.

மனமும் அறிவும் சேர்ந்து நடத்திய போராட்டத்தில் கடைசியில் அறிவு ஜெயித்தது.

பகுத்து அறிந்து நடைமுறைக்கு ஒத்துப் போவதைத் தேர்ந்தெடுத்திருந்த, மனிதர்களுக்கே உரியதான அந்த ஆறாவது அறிவான பகுத்தறிவு தனது வேலையைச் செவ்வனே செய்ய ஆரம்பித்திருந்தது.

ஆம், தெரிந்தோ தெரியாமலோ தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ள ஆரம்பித்திருந்தாள் அபிநயா.



# 20

ஒரு வாரம் சென்றிருந்தது.

நடுவில் இரண்டு முறை ஜீவானந்திடமிருந்து தனது மொபைலுக்கு அழைப்பு வந்திருக்க, அதைச் சமாளிக்க அபிநயா பெரிதாக ஒன்றும் சிரமப்பட்டிருக்கவில்லை.

ஏனென்றால் நலம் விசாரிக்கும் அளவிற்கு மேல் அவன் ஒன்றும் பேசியிருக்கவில்லை.

அந்த அழைப்பையே கூட மிகுந்த தயக்கத்திற்குப் பிறகுதான் அபிநயாவும் அட்டெண்ட் செய்து பேசி யிருந்தாள்.

அது எவ்வளவு சிரமமானதாக இருந்தாலும், இனி அதையும் தவிர்த்து விட வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

தான் அப்படிச் செய்தால் ஜீவானந்த் அதை எளிதில் விட்டு விடுவானென்று அபிநயாவிற்குத் தோன்ற வில்லையென்றாலும், எப்படியாவது அதைச் சமாளித்துக் கொள்ள வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

தனது பெரியப்பாவுடன் கம்பெனிக்குக் கிளம்புவ தற்குத் தயாராகக் கீழே இறங்கி வந்தாள் அபிநயா.

அப்பொழுது அவளிருக்கும் மனநிலையில் எங்கே யும் போகப் பிடிக்காவிட்டாலும், பிறகு என்ன ஏதென்று பெரியப்பா தூண்டித் துருவிக் கேட்டுவிடக் கூடாதே என்ற பயத்தால் மட்டுமே எதுவும் சொல்லாமல் அவ ருடன் கிளம்பியிருந்தாள்.

கம்பெனிக்குச் சென்றவள் அங்கும் வழக்கம் போலத் தனது பெரியப்பா ரகுநாத்தும், அவரது மகன் சங்கரும் சொல்லிக் கொடுத்தவற்றைக் கற்றுக் கொண்டாள். தானும் அது போலச் செய்ய முயன்று அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக நிர்வாகம் முதல் அனைத்தையும் தானே தனித்து நின்றும் செய்யத் தொடங்கியிருந்தாள்.

என்னதான் மற்றவர்களுக்காக மிகவும் முயன்று தன்னைச் சாதாரணமாகக் காட்டிக் கொண்டாலும், அவ் வளவுதான், இனித் தனக்கு வாழ்க்கையில் ஒன்றுமே இல்லை, அனைத்தும் முடிந்துவிட்டது என்றெல்லாம் மனதிற்குள் தோன்றிக் கொண்டே இருந்த எண்ணங்கள் அபிநயாவை உள்ளுக்குள் கொஞ்சம் கொஞ்சமாக மனவலிமையை இழக்கச் செய்து கொண்டிருந்தன.

''அப்பா! அப்பறம் ஒரு குட் நியூஸ்!'' என்ற சங்கரண் ணாவைத் தானும் நிமிர்ந்து பார்த்தாள் அபிநயா.

''நம்ம மானேஜர்கிட்டேயிருந்து பிடுங்கிட்டுப் போனானு களே பத்து லட்சம், அது கிடைச்சுடுச்சாம். திருடனப் பிடிச்சுட்டாங்கன்னு இப்பதான் போன் பண்ணினாங்க!'' என்று சந்தோஷத்துடன் வந்தான் சங்கர்.

இது எப்பொழுது நடந்தது என்பதைப் போல அபிநயா அவர்களைப் பார்க்க, ''ஓ! உனக்குத் தெரியாதில்லையா? ஸ்டாஃப்ஸ்க்கு சம்பளம் குடுக்கறதுக்காக பேங்க்லிருந்து ட்ராப் பண்ணிட்டு வந்தப்பதான் இது நடந்திருக்கு!'' என்று சுருக்கமாக நடந்தவற்றைச் சொன்னார் ரகுநாத்.

''திருடன் யாருப்பா, உள் ஆளா?''என்று ரகுநாத்தும் சங்கருடன் எழுந்து செல்ல, ''அது போனாதான் தெரி யும்பா. இப்பதான் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து கூப் பிட்டிருந்தாங்க!'' என்று சங்கர் சொன்ன பதில் மெது வாகக் காதில் விழுந்து தேய்ந்தது.



''என்னமா, கிளம்பலாமா?'' என்று இரண்டு மணி நேரங்களில் திரும்பி வந்தார் ரகுநாத்.

என்ன நடந்தது என்பதைப் போலத் தன்னைப் பார்த்த தம்பி மகளிடம் அனைத்தையும் சொன்னார்.

இப்பெல்லாம் குற்றங்கள் ரொம்பவும் குறைஞ் சுடுச்சுமா. அப்படியே எங்காவது சிலது நடந்தாலும் அதுவும் உடனே கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டன வாங்கித் தரப் பட்றதுனால தப்பு செய்யறவங்களுக்கும் ஒரு பயம் வந்துடுது. எப்படியோ சட்டம் ஒழுங்கு இப்ப வெல்லாம் எவ்வளவோ நல்லா நடக்குது என்று சந் தோஷமாகச் சொல்லிக் கொண்டவரைப் பார்த்தாள்.

ஜீவானந்தின் நினைவு தான் வந்தது அபிநயாவிற்கு.

பெரியப்பாவாக ஏதாவது சொல்வாரா என்பதைப் போலப் பார்த்தவள், ''சரிமா. கிளம்பலாம். பாவம்! காலை யிலிருந்து உனக்கும் போரடிச்சிருக்கும்!'' என்று எழுந்த வருடன் தானும் உடன் நடந்தாள்.

ஜீவானந்தின் ஞாபகத்தில் அபிநயா தனது முகபாவ னையைச் சாதாரணமாக வைத்துக் கொள்ள முயல, பாவம் போலீஸ் என்றதும் அவளுக்குத் தனது தந்தையின் ஞாபகம் வந்துவிட்டது போல என்று ரகுநாத்தால் நினைக் காமல் இருக்க முடியவில்லை.

ஜீவானந்த் அபிநயாவை அழைத்துப் பேசி அன் றோடு நான்கு நாட்கள் ஆகியிருந்தன.

உண்மையில் பார்த்தால் மனதிற்கு நிம்மதியாகத் தானே இருக்க வேண்டும். ஆனால் ஏன் இப்படிக்

கஷ்டமாக இருக்கறதென்று மனதில் ஒரு வலியுடன் நினைத்தாள்.

தொடர்ந்து யோசிக்க யோசிக்கத் தாங்கிக் கொள்ள முடியாமல் கதறி அழுது விட்டிருந்தாள்.

வெகு நேரத்திற்குப் பிறகு ஒரு வழியாகத் தெளிந் தவள், முகத்தைக் கழுவுவதற்காக எழுந்து சென்றாள்.

ஆனால் அதே நேரம் தனது மொபைல் அழைக்க, ஓடி வந்து பார்த்தாள்.

கடவுளே! ஜீவானந்த்....

இந்த முறை நிச்சயமாக எடுத்துப் பேசினால் உடைந்து விடுவோமென்று அவனது அழைப்பை அட்டெண்ட் செய்யாமலே விட்டு விட்டிருந்தாள்.

ஐந்தைந்து நிமிட வித்தியாசங்களில் மேலும் இரண்டு முறையும் வந்த அழைப்பு முழு ரிங் போய்த் துண்டானது.

அவனை மறுப்பது இவ்வளவு கடினமானதாக இருக்கு மென்று அபிநயா கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை. நெஞ்சுக்குள் யாரோ கத்தியை விட்டுத் திருகினாற் போலத் துடித்துப் போனாள்.

அதிலும் தன் பாட்டுக்குச் சும்மா இருந்தவனிடம் போய் முதலில் தனது மனதை வெளிப்படுத்திவிட்டு....

மேலும் இரண்டு நாட்கள் சென்றிருந்தன.

மீண்டும் ஜீவானந்திடமிருந்து அழைப்பு வந்திருக்காத தில் தொல்லை விட்டதென்று நிம்மதியாக இருப்பா ரென்று அதற்கும் ஒரு மூச்சு அழுதாள்.

''அபிநயா.''



வெளியே இருந்து பெரியப்பா ரகுநாத் தன்னை அழைப்பது கேட்டது.

''இதோ வர்றேன் பெரியப்பா!'' என்று குரல் கொடுத்துக் கொண்டே அவசரமாகச் சென்று முகத்தைக் குளிர் நீரால் அடித்துக் கழுவியவள், ''சொல்லுங்க பெரியப்பா!'' என்று வேகமாகத் தனது அறைக்கு வெளியே சென்று கேட்டாள்.

கீழே ஹாலில் அமர்ந்திருந்த ரகுநாத், ''என்னமா, நீ ஃப்ரீயா இருக்கியா - இல்ல? உனக்கு ஏதாவது வேலை யிருக்கா?'' என்று கேட்க, ''சொல்லுங்க பெரியப்பா. சும்மாதான் இருக்கேன்!'' என்றாள்.

''கொஞ்சம் வெளியே போய்ட்டு வரலாமா?''

''எங்கன்னு தெரிஞ்சுக்கலாமா பெரி....''

''தாராளமாம்மா. நம்ம கம்பெனியோட கோல்டன் ஜூப்ளி இயர் ஃபங்ஷன் வருதே, அதுக்குக் கொஞ்சம் பர்ச்சேஸ் பண்ணணும்.''

''சரி பெரியப்பா. போகலாம். ஸ்ரீ....''

''ஸ்ரீ, அவங்க அம்மா எல்லாரும் வேற ஒரு பர்ச்சேஸ்க் குப் போயிருக்காங்கமா. நீ வந்தாக் கொஞ்சம் பொறு மையா நீட்டா வேலையாகும்னு பாத்தேன்.''

''எப்பக் கிளம்பலாம்?''

''நீ வந்தா சரி, நான் தயாராதான் இருக்கேன்.''

''இதோ கால் மணி நேரத்துல ரெடியாகி நானும் கீழ வந்துடறேன்,'' என்றவள் சொன்னது போலவே வெளியே செல்வதற்குத் தயாராகக் கிளம்பி வந்தாள்.

அழுகையின் அடையாளமாக முகம் சற்று வீங்கித் தெரிய, கூடவே கண்களும் நன்கு சிவந்திருந்தன.

ஆராயும் பார்வையுடன் தன்னைப் பார்த்தவரிடம், ''சரி, அதான்...'' என்று எப்பொழுதும் படிக்கும் அதே பாட்டைப் படித்தாள்.

''ஏனோ இப்பெல்லாம் உனக்கு அடிக்கடி சளி பிடிக்கிது. கொஞ்சம் கேர் எடுத்துதான் கவனிச்சாகணும்!'' என்றவரின் வார்த்தைகளில் ஏதேனும் உள்ளர்த்தம் இருக்கிறதோ என்று அபிநயாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இரண்டரை மணி நேரத்தில் பொறுமையாக வாங்க வேண்டிய அனைத்தையும் வாங்கி முடித்தவர்கள், டிரைவரிடம் கொடுத்து எல்லாவற்றையும் கொண்டு போய்க் காரில் வைக்கச் சொன்னார்கள்.

''என்னமா, டயர்டா இருக்கா?''

''இல்லில்ல பெரியப்பா, நல்லா ஃப்ரஸ்ஷாதான் இருக்கேன்.''

உண்மையில் பார்த்தால் இப்பொழுதிருக்கும் நிலைமைக்கு வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடப்பதை விட வெளியே வந்திருப்பது மனதிற்கு மிகவும் ஆறுதலாகக் கூட இருந்தது.

ஆனாலும் மனதின் ஒரு மூலையில் முணுமுணுவென்றிருந்த ஒரு வலி நான் அப்படியே தான் இருக்கிறேனென்று தன்னை நினைவு படுத்திக் கொண்டே இருந்தது.

''அப்ப ஃபங்ஷனுக்கு உனக்கும் டிரஸ் எடுத்துட்டுப் போயிடலாமா?''

''எனக்கெதுக்கு பெரியப்பா? ஏற்கெனவே நிறைய டிரஸ்ஸஸ் போடாம அப்படியே இருக்கு.''



''அது இருக்கட்டும்மா. உங்க அம்மாவோட கம்பெனி. அவங்க மட்டும் இருந்திருந்தா இந்நேரம் எல்லாம் எவ்வளவு பிரமாதமா இருந்திருக்கும். இருபது இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன்னாடியே உங்கம்மா எவ்வளவு டர்ன் ஓவர் பண்ணிட்டிருந்தாங்க தெரியுமா? அதை யெல்லாம் கம்பேர் பண்ணும்போது இப்பக் கம்பெனி ஒன்னும் பெரிசா வளர்ச்சியடைஞ்சுடல. காலத்துக்குத் தகுந்த மாதிரி சில மாற்றங்கள் மட்டும் செஞ்சு அதே அளவுல கொண்டு போக மட்டும்தான் எங்களால முடிஞ்சிருக்கு...''

பல வருடங்களாக மனதிற்குள்ளேயே வைத்திருந்ததாலோ என்னவோ அல்லது தனக்கும் தெரிந்து கொள்ள வேண்டிய வயது வந்துவிட்டதென்று நினைத்தாரோ, தனது பெரியப்பா சொன்னதனைத்துமே அபிநயாவிற்குத் தனது மனதிற்குள் ஏற்கெனவே இருந்த தாக்கத்தை மேலும் அதிகப்படுத்தியிருந்தது.

''சரி, வாம்மா. அப்படியே உள்ள போய் உனக்கு டிரஸ் பாத்துட்டே பேசலாம்,'' என்று ரகுநாத் சொல்ல, தனக்கு விருப்பமே இல்லா விட்டாலும் தனது பெரியப்பாவின் வார்த்தையைத் தட்ட முடியாமல் அவருடன் தானும் அந்தப் பெரிய துணிக்கடைக்குள் நுழைந்தாள் அபிநயா.

அவருடைய மனைவி சுந்தரி முதல் பிள்ளைகள் வரை யார் அழைத்துமே இப்படித் துணிக் கடைகளுக்கெல்லாம் வந்திருக்காதவர் தனக்காக இந்த அளவிற்கு இறங்கி வந்திருப்பதைப் பார்க்க மிகவும் ஆச்சரியமாக இருந்தது அபிநயாவிற்கு.

''நீங்க வேணும்னா உக்காருங்க பெரியப்பா. நான் செலக்ட் பண்ணி முடிச்சுட்டு வர்றேன்,'' என்றாள்.

''அப்படிங்கற? சரிமா, அப்ப நீ போய்ப் பாரு,'' என்று அங்கு வரிசையாகப் போடப்பட்டிருந்த சேர்களில் ஒன்றில் சென்று அமர்ந்து விட்டிருந்தார் ரகுநாத்.

## 21

ஜீவானந்த்துக்கு ஏனோ சில நாட்களாக மனதே சரியில்லை.

வேலை நேரத்தில் எந்தவொரு நினைவுகளும் அவனை ஒன்றும் செய்ய முடியாதென்றாலும், மற்ற நேரங்களில் அவனால் சற்றும் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

அதிலும் ஒரு பெண்ணின் நினைவுகள் தன்னை இந்த அளவிற்குத் தொல்லை செய்வதா என்றிருந்தது அவனுக்கு.

சரி, வேண்டாம், நினைக்காமல் விட்டு விடலாம் என்று பார்த்தாலும் முடியவில்லை. என்ன யோசித்தும் ஏன் இப்படியெல்லாம் செய்கிறாளென்பதும் சற்றும் புரியவில்லை.

அதிலும் அன்று கடைசியாக வீட்டிற்கு வந்திருந்த அன்று தனது காயத்தைப் பார்த்துவிட்டு எந்த அளவிற்குக் கண்கள் கலங்கி விட்டிருந்தாள்.

அந்த அன்பில் பொய்மைத்தனம் துளியும் கலந்திருக்கவில்லை யென்பதிலும் அவனுக்குச் சிறிதும் சந்தேகமிருக்கவில்லை.



திடீரென்று என்ன ஆயிற்று?

எந்த நேரத்திலும், யாரிடத்திலும் எதற்காகவும் கை கட்டி நின்றிருக்காத ஜீவானந்த்தின் தன்மானம் ஒரு சிறு பெண்ணின் வெகுளித்தனமான அன்பில் சுக்கல் நூறாகியிருக்க, அதற்காகவும் அவனும் ஒன்றும் கவலையோ கோபமோ பட்டு விடவில்லை.

எதுவாக இருந்தாலும் அழைப்பை அட்டெண்ட் செய்து பேசுவதற்கென்ன என்றுதான் எரிச்சலாக இருந்தது.

ஆனால் ஒன்று மட்டும் ஜீவானந்த்துக்கு நிச்சயமாகத் தெரிந்தது, எதற்காகவும் அபிநயாவை விட்டுவிடவோ மறந்து விடவோ தன்னால் முடியாதென்பதுதான் அது.

சரி, ஊருக்காவது சென்று வரலாம், இப்பொழுதிருக்கும் மனநிலையாவது சற்று மாறட்டுமென்று கிளம்பியிருந்தவனைத் தான் அவனுடைய தாய் அழைத்து ஒரு வேலையைச் சொல்லியிருந்தார். அதாவது அவரது பாணியில் சொல்ல வேண்டுமென்றால் உதவி.

இன்னும் இரண்டு நாட்களில் அவனுடைய பெரிய தங்கை வித்யாவிற்குப் பிறந்த நாள் வர இருந்தது.

அதற்கு எப்பொழுதும் போல மகளுக்குத் துணி எடுத்துக் கொடுக்க ஆசைப்பட்ட மீனாட்சி தனது சிறிய மகனை அழைத்து நீ எப்படியும் ஊருக்கு வருவாயென்பதால் சொல்கிறேன். இங்கு அனைத்தையும் போட்டு விட்டு என்னால் இப்பொழுது கிளம்பி வர முடியாது. அதனால் தயவு செய்து எனக்காக இந்த உதவியைச் செய்யென்று சொல்லி வேண்டிக் கேட்டுக் கொண்டிருந்தார்.

ஏற்கெனவே இருந்த மன நிலையினாலோ என்னவோ இந்த அம்மா எப்பொழுதுதான் மாறுவார்களோ என்றிருந்தது ஜீவானந்த்துக்கு.

வித்யா தனக்கும் உடன்பிறந்த தங்கையல்லவா, அவளுக்கு ஒன்று செய்யத் தன்னிடம் இப்படி வேண்டிக் கேட்க வேண்டுமா, எடுத்து வந்துவிடு என்று ஒற்றை வார்த்தையில் சொல்ல வேண்டியதுதானே என்று அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

சரி, முதலில் அந்த வேலையை முடித்து விடலாமென்று உடனே கிளம்பி வந்து விட்டிருந்தவனுக்கு, கடைக்குள் வந்த பிறகு தான் தன்னுடைய தேர்வு எப்படியிருக்குமோ என்று ஒரே யோசனையாக இருந்தது.

எப்படியோ ஒரு வழியாக வித்யாவுக்கும் வினயாவுக்கும் தனக்குத் தெரிந்த அளவில் நன்றாகவே தேர்வு செய்து முடித்தான்.

விட்டிருந்தால் இன்னும் சில வினாடிகளில் அங்கிருந்து கிளம்பியும் இருப்பான்.

எந்தவொரு பண்டிகையும் அருகில் இல்லாததாலோ அல்லது விடுமுறை நாளாக இருக்காததாலோ, அந்தப் பெரிய ஹால் முழுக்கவே ஆங்காங்கே ஒரு சிலர் மட்டுமே இருந்தார்கள்.

ஏற்கெனவே செலக்ட் செய்து முடித்திருந்தவன், சரி எதற்கும் இருக்கட்டுமென்று கடைசியாக ஹேங்கரில் இருப்பதையும் ஒரு முறை பார்த்து விடலாமென்று அப்படியே ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டு வந்தான்.



அப்பொழுதுதான் அங்கு நின்று ஹேங்கரில் தொங்கிக் கொண்டிருக்கும் துணிகளைப் பார்த்துக் கொண்டிருந்த அபிநயாவைப் பார்த்தான் ஜீவானந்த்.

அவளை அங்கு கண்டதில் அவனுக்குச் சற்று ஆச்சரியமென்றால், அவளுக்கு அதிர்ச்சியென்பது வெளிப்படையாகவே தெரிந்தது.

அவள் மேலிருந்த சிறு கோபமும் கூட அவளைப் பார்த்த வினாடியில் காணாமல் போயிருக்க, ''இப்பதான் உள்ள வந்திருப்பேன்னு நினைக்கறேன்!'' என்றான்.

''ம், ஆமா.''

''என்னைப் பாத்ததுல உன் கண்ல ஏன் இவ்வளவு அதிர்ச்சி?''

.........

''பேசாததப் பாத்தா அதிர்ச்சி ரொம்பவும் பெரிசுதான் போலிருக்கு.''

.......

''அபிநயா! பதிலுக்குப் பேசறதுக்கென்ன?''

''ஓ, நீங்க பெரிய போலீஸ் ஆஃபீஸராச்சே! நீங்க கேள்வி கேட்டு யாராவது பதில் சொல்லலேன்னா உங்களுக்குக் கோபம் வருமில்ல.''

''நான் இப்ப வெறும் ஜீவானந்தாதான் பேசிட்டிருக்கேன்.''

''சந்தோஷம்.''

''இதுதான் பதில் சொல்ற லட்சணமா?''

''இப்ப உங்களுக்கு என்னதான் வேணும்?''

''அபி! என்னமா ஆச்சு, ஏன் இப்படியெல்லாம் வித்தியாசமா நடந்துக்கற?''

''ம், பின்ன உங்க கூடப் பேசவா நான் இங்க வந்திருக்கேன்? நான் வந்தது டிரஸ் எடுக்கறதுக்காக.''

''ஓ.''

''சரி, இப்பப் புரிஞ்சதல்ல, போங்க. போய் உங்க வேலயப் பாத்துட்டுப் போங்க.''

யாரிடமுமே இப்படியெல்லாம் பேசிப் பழக்கப்பட்டிருக்காத என்னை இருந்திருந்து என் ஜீவாவிடமே இப்படிப் பேச வைத்து விட்டாயே, அவனுடைய மனம் என்ன பாடுபடும் என்று உள்ளுக்குள் தன் மனம் கதறுவது எங்கே வெளியே அவனுக்கே தெரிந்துவிடுமோ என்றிருந்தது அபிநயாவிற்கு.

''ஏன் இப்படியெல்லாம் பைத்தியக்காரத்தனமா நடந்துக்கற?''

''இப்பதான் சுயநினைவோட சரியா நடந்துக்கறேன். எனக்கு உங்க கூடப் பேசப் பிடிக்கல. ஏன், உங்களைப் பாத்தாலே பிடிக்கல. பேசாம இங்கிருந்து போறீங்களா?''

''ஏன் சின்னக் குழந்தை மாதிரி மனசுக்குள்ள ஒன்ன வெச்சுக்கிட்டு கண் மூடித்தனமா வெளிய ஒன்னு பேசிட்டிருக்க?''

''ஹலோ மிஸ்டர்! நானொன்னும் அப்படியெல்லாம் பேசல. நீங்கதான் தேவையில்லாம ஏதேதோ பேசி என் உயிரை வாங்கிட்டிருக்கீங்க.''

''ஆமாம்மா, எனக்கு இது தேவையே இல்லாதது தான். ஆனா என்ன பண்றது, அது மனசுக்குப் புரிய மாட்டேங்குதே.''



ஜீவானந்த்தின் அந்த லேசான விரக்தி கலந்த வார்த்தைகளில் கண்கள் கலங்கிவிட, அதை மறைப்பதற்காகத் திரும்பிக் கொண்டாள் அபிநயா.

''அபி! இங்க பாரு. இது நினைச்சு நினைச்சு மாத்திட்டிருக்கற விஷயம் கிடையாது. மனசு சம்பந்தப்பட்டது.''

''ஹலோ மிஸ்டர்! எதுக்கு என்னை இப்படி டார்ச்சர் பண்ணிட்டிருக்கீங்க? எனக்கு உங்களப் பாத்தாலே பிடிக்கலேன்னு நானும் எத்தன தடவதான் சொல்ல முடியும்? இனியும் என் உயிரை வாங்காம உங்க வேலையப் பார்த்துட்டுப் போறீங்களா?''

அதே நேரம் ''டிரஸ் பாக்கறதா இருந்தாப் பாருங்க, இல்லன்னா வெளியே போய்ப் பேசறீங்களா?'' என்று சற்று வயதானவரைப் போல ஒருவர் - அவர் கடை ஊழியராகத் தான் இருக்க வேண்டும் - வந்து சொல்ல, ''பின்ன துணிக்கடைக்கு எதுக்கு வருவாங்க? கலெக்ஷன்ஸப் பாக்கவிட்டாத்தான பாக்க முடியும்!'' என்று தனக்குச் சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்த ஜீவானந்த்தை எரிச்சலுடன் பார்த்தாள் அபிநயா.

''என்ன ஸார், எதுவா இருந்தாலும் வெளியவோ, இல்ல வீட்லயோ போய்ப் பேசலாமே!'' என்று அந்தப் பெரியவர் அவர்கள் இருவரையும் பொதுவாகப் பார்த்துக் கொண்டே சொன்னார்.

''ஹலோ, என்ன நினைச்சுட்டிருக்கீங்க. இங்க பேசிட்டிருக்க வேண்டாம்னு சொல்றதுக்கு வேணும்னா உங்களுக்கு உரிமையிருக்கலாம். யாருன்னே தெரியாதவங்ககிட்ட வீட்ல போய்ப் பேசுங்க, வெளியே போய்ப் பேசுங்கன்னெல்லாம் சொல்றதுக்கு நீங்க யாரு?'' என்று

கோபத்துடன் சத்தமாக அந்தப் பெரியவரைப் பார்த்துக் கேட்டாள் அபிநயா.

''அபிநயா! அவரோட வேலயத்தான் அவர் செய்ய றார். எதுக்கு இப்படி எல்லார்கிட்டயும் டென்ஷனா கிட்டிருக்க?'' என்று கோபத்தை உள்ளடக்கிய குரலில் மெதுவாகக் கேட்டான் ஜீவானந்த்.

''என்ன ஸார், அவங்கதான் உங்கள யாருன்னே தெரியாதுன்னு சொல்றாங்கல்ல, நீங்களாவது...''என்று அந்தப் பெரியவர் மேலும் ஏதோ சொல்ல வருவதற் குள்ளேயே பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத் திக் கொள்ள முடியாமல் அங்கிருந்து வேகமாகச் சென்று விட்டிருந்தாள் அபிநயா.

''யாருன்னே தெரியாதவங்ககிட்ட இப்படிப் பேச முடியாம பாதியில அழுதுட்டு ஓட மாட்டாங்க!'' என்று ஒன்றும் புரியாமல் நின்று கொண்டிருந்த அந்தப் பெரிய வரைப் பார்த்துச் சொன்ன ஜீவானந்த், ஏற்கெனவே தான் செலக்ட் செய்திருந்த துணிகளுக்கு பில் போடுவதற்காக அங்கிருந்து நகர்ந்தான்.

ஆனால் அவனுடைய மனம் கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தது. இவளுக்குப் பிடித்தால் வலிய வந்து பேசுவதற்கும் பிடிக்காமல் போய்விட்டால் எரிந்து விழுந்துவிட்டுப் போவதற்கும் தன்னை என்ன பைத் தியக்காரனென்று நினைத்து விட்டாளா என்றிருந்தது.

சை என்று மனம் வெறுத்துப் போய்விட, வாழ்க்கை யிலேயே முதன் முறையாக எதுவும் செய்யத் தோன் றாமல் வீட்டிற்குச் சென்று அமர்ந்து விட்டிருந்தான்.



தனிமையில் அமர்ந்து யோசித்தவனுக்கு, அபிநயா வின் கவலை தோய்ந்த முகமும், போன முறை பார்த்ததற்கு இந்த முறை பாதியாக இளைத்துப் போய் விட்டிருந்த அவளுடைய தோற்றமும் அவளும் ஒன்றும் சந்தோஷமாக இல்லையென்பதை நினைவுபடுத்தியது.

ஆனாலும் ஏன் இப்படி அவளும் உருகிக் கொண்டு தன்னையும் ஒரு வழி செய்து கொண்டிருக்கிறாள். என்ன ஆனாலும் சரி, இனி அவளாக வரட்டும், வந்து தான் செய்த தவறை எண்ணி வருந்தட்டும். தன்னை என்ன வென்று நினைத்துக் கொண்டு இப்படியெல்லாம் செய்து கொண்டிருக்கிறாளென்று சற்று மட்டுப்பட் டிருந்த கோபம் மீண்டும் பழையபடி அதிகமாகிவிட் டிருந்தது ஜீவானந்த்துக்கு.

உள்ளே சென்ற ஒரு சில நிமிடங்களுக்குள்ளேயே வந்த அழுகையை மிகவும் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டு திரும்பி வந்திருந்த அபிநயாவைப் புரியாமல் பார்த்தார் ரகுநாத்.

சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கப் பிடிக்காமல் எழுந்து அந்த ஹால் முழுக்க நடந்தவர், அபிநயா யாரோ ஒரு இளைஞனுடன் நின்று பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தார்.

சற்று முன்னே சென்று நன்கு கவனித்துப் பார்த்த வருக்கு, அதற்குப் பிறகுதான் அந்த இளைஞன் போலீஸ் ஆஃபீஸர் ஜீவானந்த் என்பது தெரிந்தது.

அப்படியானால்....

பேசாமல் மீண்டும் அதே இடத்தில் வந்து அமர்ந்து விட்டவருக்கு, மேலே யோசிக்க யோசிக்கத்தான் ஏதோ புரிவது போலிருந்தது.

அதற்குள் தன்னை ஓரளவு சமாளித்துக் கொண்டு அவர் அருகில் வந்து நின்றிருந்த அபிநயா, ''நான் இப்ப டிரஸ் எடுக்கல. போலாம்!'' என்றாள்.

உதட்டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு நின்றிருந்தவளைப் பார்த்த ரகுநாத், ''சரி வா!'' என்று எதையும் கேட்காமல் எழுந்து விட்டிருந்தார்.

''டிரைவர்! வண்டிய எடுப்பா!'' என்று ரகுநாத் முன் பக்கமாக ஏறி அமர, பின்னால் தானும் ஏறி அமர்ந்திருந் தாள்.

ஒரு வழியாகத் தன்னறைக்கு வந்து சேர்ந்திருந்த அபிநயா, கதவைத் தாழிட்டுக் கொண்டு அவ்வளவு நேரமாகக் கட்டுப்படுத்தி வைத்திருந்த அழுகையனைத் திற்கும் சேர்த்துப் படுக்கையில் விழுந்து கதறினாள்.

கடவுளே! என்னை ஏன் இப்படி துரதிர்ஷ்டசாலியாகப் பிறக்க வைத்தாய். பேசாமல் அன்றைக்கே என் தாயோடு சேர்த்து என்னுடைய உயிரையும் பறித்துக் கொண்டிருந் தாயானால் இன்றைக்கு என்னால் யாரும் கஷ்டப்பட நேர்ந்திருக்காதே என்று அதற்கும் ஒரு மூச்சு அழுதாள்.

அப்படியே அழுகையில் எவ்வளவு நேரம் சென்றிருக் குமோ, வெளியே யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்க அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

வெளியே பெரியப்பா ரகுநாத் நின்றிருக்க, ''வாங்க!'' என்று அவருக்கு வழிவிட்டு உள்ளே தள்ளி நின்றாள்.

அவருடைய பார்வை தன் முகத்தில் இருப்பது தெரிய, பேசாமல் குனிந்து கொண்டாள்.



என்ன பிரச்சனைன்னு நான் கேக்கலமா, ஆனாலும் எதுக்குமே அழுகை ஒரு தீர்வா இருக்க முடியாது.

மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டு வர, அப் படியே குனிந்தபடியே நின்றிருந்தாள்.

''சாப்பிடலாம். வா.''

''எனக்கு வேண்டாம், பசியில்ல.''

''அதுக்காக வெறும் வயித்தோட படுக்கறதா? பாலா வது ஒரு டம்ளர் குடிச்சுட்டு வந்து படு.''

''சரி. அப்புறமா வந்து குடிச்சுக்கறேன்!'' என்று குனிந்த தலையுடன் மெல்லிய குரலில் சொன்னவளைப் பார்த்தவர், ''டைனிங் டேபிள்ல ஃப்ளாஸ்க்ல பால ஊத்தி வைக்கச் சொல்லிடறேன். வந்து குடிச்சுட்டு தேவை யில்லாம மனசப் போட்டுக் குழப்பிக்காம நிம்மதியா படுத்துத் தூங்கு. எல்லாம் நல்லபடியா நடக்கும்!'' என்று விட்டுப் போனார்.

இனியுமா, அதுவும் நல்லபடியாக. அதற்குத்தான் வழியே இல்லாமல் போய்விட்டதே.

என் ஜீவாவை நான் என்னவெல்லாம் சொல்லி விட்டேன், அதுவும் நாலு பேருக்கு முன்னிலையில். ஜீவானந்த்தைப் போல ரோஷமுள்ள ஒரு ஆண்மகன் இத்தனைக்கும் பிறகும் தன்னை ஏற்றுக் கொள்வ தென்பது கனவிலும் நடக்க முடியாத ஒன்று என்பதில் அபிநயாவிற்குச் சிறிதும் சந்தேகமிருக்கவில்லை.

என்னதான் தான் எப்பொழுதுமே மிகவும் சந்தோஷ மாக இருந்திருக்கா விட்டாலும், ஒரு சில மாதங் களுக்குள் இப்படி வாழ்க்கையே ஒன்றுமில்லாததாகி

விடுமென்று அபிநயா கனவிலும் நினைத்துப் பார்த் திருக்கவில்லை.

அம்மா! என்னால் சுத்தமாக ஒன்றுமே முடியவில் லையே என்று கதறித் தீர்த்தவள், மனதிற்குள் எதை யெதையோ எண்ணி மேலும் மேலும் கலங்கியவள் அதிகாலை நேரத்தில்தான் கண்ணயரத் தொடங்கி னாள்.

## 22

அன்று அந்த வீடு மிகவும் கலகலப்பாக இருந்தது. ஏதோ நல்ல காரியம் நடக்கப் போகிறதென்பது பார்த்த உடனேயே தெரிந்தது. ஆம். கல்யாண வேலைகள் மிகவும் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன.

மிகவும் சுறுசுறுப்புடனும் சந்தோஷத்துடனும் அங்கிருந்த அனைவரும் தங்களது வேலைகளைப் பார்த்துக் கொண் டிருந்தனர்.

''என்னப்பா, எல்லாரும் கொஞ்சம் வேகமா ஆக வேண்டிய காரியங்களப் பாருங்க. ஏம்பா குருமூர்த்தி, இங்க வந்து இந்தப் பலகைகள எடுத்து அப்படிப்போடு. ஏன் மாரிமுத்து, எண்ணெய் முப்பது டின் வேணும்னு ஆயில் மில்லுக்குச் சொல்லியிருந்தோமே, வந்துடுச்சா? வரலேன்னா போன் பண்ணிக் கேளு!'' என்று அனை வரையும் லாவகமாக வேலை செய்ய வைத்துக் கொண் டிருந்தார் அந்தப் பெரியவர்.



பார்ப்பதற்குப் பெரிய மீசையுடனும், கம்பீமான தோற றத்துடனும் அனைவரிடமும் மிகவும் அன்பாகப் பேசிக் காரியங்களை முடித்துக் கொண்டிருந்தார்.

அவரது அன்பு கலந்த அதிகார மிரட்டலைப் பார்த்து ரசித்தவாறு அமர்ந்திருந்தான் அவருடைய பெரிய மகன் ரகுநாத். தந்தையின் சொல்லை மறுத்து ஒரு வார்த்தை பேசாதவன்.

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற உண் மையை ரகுநாத்திட கண் கூடாகக் காண முடிந்தது. பெரியவர் கமல்நாத்திற்கு இரண்டு பிள்ளைகள். பெரியவன் ரகுநாத். இளையவன் பிரேம்நாத்.

ரகுநாத்தின் குணம் இப்படியிருக்க, இளையவன் பிரேம்நாத்தின் குணம் அதற்கு எதிர்விதத்தில் அமைந் திருந்தது.

தந்தை எது சொன்னாலும் அதில் நியாயமிருக்கும் என்று வயதில் பெரியவர்கள் சொல்வதைக் கேட்டு நடப்பவன் ரகுநாத்.

ஆனால் பிரேம்நாத் அப்படியில்லை. தனது தந்தை முதல் யார் என்ன சொன்னாலும் அது நல்லதென்று மனதிற்குப்பட்டாலும் தனக்குப் பிடித்தால் மட்டுமே ஏற்றுக் கொள்ளக் கூடியவன். அதற்காகத் தந்தையின் பேச்சைக் கேட்காதவனென்றும் குற்றம் சொல்லிவிட முடியாது. எதுவானாலும் மற்றவர்களைவிடவும் தனக்கு அதிகமாகப் பிடித்திருக்க வேண்டுமென்று நினைப் பவன்.

என்னதான் அவர்களுக்கென்று வழிவழியாக இருக் கும் குடும்பத் தொழில் இருந்தாலும், அதிலும் நூற்றுக்

கணக்கான பேர் வேலை செய்யுமளவிற்குத் தொழில் பிரமாதமாகப் போய்க் கொண்டிருந்தாலும் பிரேம்நாத் திற்கு அந்தத் தொழிலை நிர்வாகம் செய்வதில் சற்றும் விருப்பமிருக்கவில்லை.

பிரேம்நாத் காவல் துறையில் உயர் அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தான். அதிலும் சமீபத்தில் தான் சிறப்பாகப் பணியாற்றியதற்காகப் பதவி உயர்வும் பெற்றிருந்தான்.

நிறையப் பெண் வீட்டு ஜாதகங்கள் தேடிவந்த வண்ணம் இருந்தாலும், பிரேம்நாத்திற்கு அவற்றில் ஒரு இடத்தைக் கூடப் பிடித்திருக்கவில்லை. பல கண் டிஷன்களைப் போட்டுத் தனக்கு வர வேண்டியவள் கண்டிப்பாக இப்படித்தான் இருக்க வேண்டுமென்று சொல்லி விட்டிருந்தான்.

கெட்ட குணமென்று ஒன்றும் இல்லையென்றாலும், பிடிவாதம் கலந்த அந்த மிரட்டலே சில சமயம் கெட்ட குணமாகத் தோன்றுமளவிற்கு நடந்து கொள்பவன்.

அப்படி அவன் போட்ட அனைத்து கண்டிஷன் களுமே இயற்கையாக அமையப் பெற்றிருந்த ஒரு இடமும் வந்தது.

மேலும் அவர்கள் எதிர்பார்த்ததை விடவும் பல மடங்கு நல்ல இடமாகவும் அது அமைந்தது.

பெரியவர் கமல்நாத்தின் விருப்பத்திற்கேற்றவாறு பிரேம்நாத்தும் முழு மனதுடன் தனது சம்மதத்தைத் தெரிவித்தான். தந்தை மகன் இருவரும் வாழ்க்கையி லேயே முதல் தடவையாக ஒரே விருப்பத்துடன்



சம்மதம் சொன்னது அனைவருக்கும் மிகுந்த ஆச்சரி யத்தைக் கொடுத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக மாப்பிள்ளை பிரேம்நாத்திற்கு அந்தப் பெண்ணை மிகவும் பிடித்துப் போனது.

திருமண நாளும் வந்தது. பெண் மற்றும் மணமகன் வீட்டார்கள் இருவருமே மிகப் பெரிய பணக்காரர்களாக இருந்ததால் பார்த்தோரெல்லாம் வியக்குமளவிற்கு அய்யர் சூழ, மந்திரம் ஓதி, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்துச் செய்ய வேண்டிய சகல விதமான சடங்குகளு டனும் மிக மிகச் சிறப்பாக நடந்தேறியது அந்தத் திரு மணம்.

'ஆஹா, என்ன பொருத்தம்!' என வந்திருந்த அனை வருமே வாயார வாழ்த்தினார்கள். இப்படிச் சொல்லால் விவரிக்க முடியாத சந்தோஷத்தில் அனைவரும் இருக்க, தனது மனைவி சுந்தரி மட்டும் ஒரு மாதிரியாக இருந் ததை ரகுநாத் பார்க்காமலில்லை.

பிரேம்நாத்திற்கு வந்திருக்கும் இடம் மிகப் பெரியது. பணத்திலும் அழகிலும் தன்னை விடப் பல மடங்கு அதிகமாக இருந்த நளினியை முதல் சந்திப்பிலேயே பிடிக்காமல் போனது சுந்தரிக்கு.

நளினி மணப்பெண் கோலத்தில் அந்த அழகான அலங்காரத்தில் தேவதை போலிருந்தாள். இவ்வளவு அழகா என்று திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் அனை வரும் வாய்விட்டே பேசிக் கொண்டார்கள். மணமக்கள் இருவரும் மணமேடை விட்டிறங்கி வந்து கமல்நாத் மற்றும் நளினியின் தந்தையின் பாதங்களில் பணிந்து ஆசி பெற்றுக் கொண்டார்கள். வாயார வாழ்த்தி ஆசி

கொடுத்தவர்களின் வாக்கு தவறாகப் போவதை அறியாமல்.

நளினியின் தந்தையும் ஒரு மிகப் பெரிய பிஸினஸ் மேன் என்பதோடு, நளினியும் பிரேம்நாத்தைப் போலவே சிறு வயதில் தாயை இழந்தவள்.

தாயில்லாப் பெண் என்பதாலும், அவருடைய முற்போக்குக் கருத்துகளினாலும் மகளைச் சுதந்திரப் பறவையாகவே வளர்த்திருந்தார் அவளுடைய தந்தை ராகவன்.

அவருடைய அளவில்லாத சொத்துக்களைப் பராமரிக்கும் பொறுப்பை மகள் நளினிக்கே கொடுத்திருந்தார். பிறப்பிலேயே அறிவாளியான நளினிக்கு இந்த அனுபவ அறிவும் சேர்ந்து கொள்ளப் பட்டை தீட்டிய வைரத்தைப் போலப் பிரகாசித்தாள்.

சமுதாயத்தில் அத்தகைய உயர்ந்த அந்தஸ்தில் இருந்தாலும் ஏழை பணக்காரனென்ற வித்தியாசம் பார்க்காமல் அனைவருடைய உணர்வுகளையும் மதித்து நடந்து கொண்டாள். ஒருவருக்கு ஒரு கஷ்டமென்றால் உடனே தனக்கு வந்ததைப் போல நினைத்து மனதார உதவி செய்யும் உயர்ந்த குணங்களைப் பெற்றிருந்தாள். சில மாதங்களில் மகளை ஒரு நல்ல பிரமாதமான குடும்பத்திற்குள் ஒப்படைத்து விட்ட நிம்மதியில் நளினியின் தந்தையும் போய்ச் சேர்ந்தார்.

கமல்நாத்தின் ஆசைப்படியே ரகுநாத்தும், பிரேம்நாத்தும் அந்த வீட்டில் ஒன்றாகவே வாழ்ந்தார்கள். பிரேம்நாத்திற்குத் தனது மனைவி நளினியை மிகவும் பிடித்திருந்த தென்றாலும் அவளுடைய நிர்வாகத் திறமை, அனுபவ அறிவு போன்றவை தன்னைவிட



அதிகமோ என்று அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. உடனே தனது மனைவி அப்படியிருந்தால் அது தனக்குப் பெருமைதானே என்றும் சந்தோஷப்பட்டுக் கொண்டான்.

இப்படி அவர்களுடைய இல்லற வாழ்வும் இனிதே தொடங்கியிருந்தது.

வீட்டைப் பராமரிக்கும் பொறுப்பும் நளினி, சுந்தரி இருவருக்குமே இருந்தது. சுந்தரியின் அதிகார மிரட்டலை விடப் புதிதாக வந்திருக்கும் நளினியின் அன்பான வார்த்தைகளுக்கே மதிப்பு அதிகமிருந்தது. நமக்குத் தானே வேலை செய்கிறார்களென்று அவர்களின் நலன் காத்த நளினிக்கும், வேலைக்காரர்கள்தானே, நாம் சொல்வதைத் தான் கேட்டாக வேண்டுமென்று நடத்திய சுந்தரிக்கும் நிறைய வித்தியாசமிருந்தது.

தனக்குப் பின் வந்தவள் எவ்வளவு திமிர் இருந்திருந்தால் இப்படி அனைவரையும் தனது கைக்குள் போட்டுக் கொண்டிருப்பாளென்று சுந்தரியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

நளினி என்னதான் தனது இயற்கையான குணத்தால் மட்டுமே அப்படியெல்லாம் நடந்து கொண்டாலும், இவள் மற்றவர்களின் முன்பு தன்னை இழிவுபடுத்துவதற்காகத்தான் இப்படியெல்லாம் செய்கிறாளென்று சுந்தரியைப் பொறாமைப்பட வைத்தது. நளினி அனைவரிடமும் சாதாரணமாக சிரித்துப் பேசுவது கூட அவளைச் சந்தேகப்பட வைத்தது. தான் சந்தேகப்படுவதோடல்லாமல் முடிந்த அளவு மற்ற அனைவரையும் கூடச் சந்தேகப்பட வைக்க முயற்சித்தாள்.

நளினி அப்படிப்பட்டவள் அல்ல. வீட்டிலும் சரி, அலுவலகத்திலும் சரி, கள்ளம்கபடமில்லாமல் சிரித்துப் பேசுவதை மட்டுமே அறிந்தவளென்பதால் சுந்தரி சொன்னதை யாரும் நம்பவில்லை. ஏன், பொருட்படுத்தக் கூட இல்லை.

மாறாக அனைவரும் சுந்தரியைத்தான் புழுவைப் பார்ப்பது போலப் பார்த்தார்கள். அதனால் சுந்தரிக்கு நளினியின் மேலிருந்த பொறாமை தான் மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டே சென்றது.

கடைசியாகத் தான் நேரடியாக நளினியிடம் மோதினால் பலனிருக்காது என்பதையும் உணர்ந்தாள். அதற்கு மேல் தான் மோதினாலும் நளினி அதை விளையாட்டாக எடுத்துக் கொண்டு பொருட்படுத்தாமல் கூடப் போகலாம்.

ஆனால் எப்பாடு பட்டாவது தான் அவளது கொட்டத்தை அடக்கித்தான் ஆக வேண்டும். பழையபடி தன் ஆதிக்கம் ஒன்று மட்டுமே அந்த வீட்டில் நிலைக்க வேண்டுமென்ற எண்ணம் சுந்தரியின் மனதில் வேர் விட்டு மரமாக வளரத் தொடங்கியிருந்தது.

நளினியை அசைக்க அஸ்திவாரத்திலேயே கை வைத்தால்தான் முடியுமென்று நினைத்த சுந்தரி தான் நினைத்ததைச் செயல்படுத்தத் தொடங்கினாள். அதாவது மனைவியின் மேல் உயிரையே வைத்திருக்கும் பிரேம்நாத்திற்கே அவள் மேல் சந்தேகம் வரும்படி செய்துவிட வேண்டுமென்று நினைத்தாள் சுந்தரி.

அன்று காலையில் பிரேம்நாத்தும் நளினியும் தங்களது அறையில் ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். பிரேம்நாத் டிரஸ்ஸிங் டேபிள் கண்ணாடி முன்பு நின்று தனது யூனிஃபார்மை சரி செய்து கொண்டிருந்தான்.



அப்பொழுது, ''நளினிமா! சின்னய்யாவுக்கு காபி கொண்டு வந்திருக்கேன்!'' என்று கதவருகில் நின்று தயங்கிக் கொண்டே சொன்ன பார்வதத்திடம் சென்று, ''குடுங்கமா!'' என்று அதே புன்னகையுடன் வாங்கிக் கொண்டாள் நளினி.

காபியைக் கொடுத்த பார்வதம் ஒரு எச்சரிக்கை கலந்த பார்வையில் அறை முழுவதும் நோட்டம்விட, என்ன என்பதைப் போலப் பார்த்தாள் நளினி.

''நளினிமா! நான் ஒன்னு சொன்னாத் தப்பா எடுத்துக்க மாட்டீங்களே?''என்று தயங்கிக் கொண்டே கேட்டவளிடம், ''என்னமா, தாராளமா சொல்லுங்க,'' என்றாள்.

''எவ்வளவு பெருந்தன்மையான குணம்மா உங்களுக்கு. அதனாலதான் இத சொல்லாம என்னால இருக்க முடியல!'' என்று மேலும் தயங்கியவளிடம், ''எதுவானாலும் தயங்காம சொல்லுங்க,'' என்றாள்.

''சுந்தரியம்மா இருக்காங்களே அவங்களுக்கு உங்கள சுத்தமாப் பிடிக்கலமா. உங்களோட நல்ல குணத்துக்காகத்தானம்மா நீங்க எல்லார் கூடவும் அன்பா அனுசரணையா நடந்துக்கறீங்க. ஆனா அதப் பாத்து சுந்தரியம்மா பொறாமைப் படறாங்கன்னு நினைக்கறேம்மா. நளினி ஒரு மாதிரி, நடத்த சரியில்லன்னு எல்லார் கூடவும் சொல்றத என்னால தாங்கிக்க முடியலமா!'' என்று கண்ணீருடன் பார்வதம் சொன்னது பிரேம்நாத்தின காதில் விழுந்துவிட... அவ்வளவுதான்.

தனது கணவனுக்கு அவ்வளவு கோபம் வருமென் பதை அப்பொழுதுதான் முதன் முறையாக நளினி பார்க்க நேர்ந்தது.

''ஏம்மா, நீயெல்லாம் ஒரு பெரிய மனுஷியா? சுந்தரி அப்படிச் சொன்னாங்களா, இல்ல நீயேதான் சொல்றியா? எவ்வாவு நெஞ்சமுத்தம் இருந்திருந்தா எனக்கு முன் னாடியே என் மனைவிய அப்படியெல்லாம் சொல்லி யிருப்ப? இன்னாரு தடவ நீ இப்படியெல்லாம் பேசறதப் பாத்தேன்னா அப்புறம் நான் மனுஷனாவே இருக்க மாட்டேன்!'' என்று வீடே அதிரும்படி சத்தமாக மிரட்டி னான்.

''ஏய் நளினி, இனிமேல் நம்ம ரூமுக்கு இந்தம்மா எதையும் கொண்டு வரக்கூடாது, ஏன், என் கண்லயே படக்கூடாதுன்னு சொல்லிடு. எல்லாத்துக்கும் முதல்ல வேலைய விட்டே நிறுத்திடு!'' என்ற தனது கணவனைப் பயத்துடன் பார்த்தாள் நளினி.

பிரேம்நாத்தின் கோபம் தந்த பயத்தில் நடுங்கியபடி கீழே இறங்கிச் சென்று விட்டிருந்தாள் பர்வதம்.

சுந்தரி தன்னை அப்படி யெல்லாம் சொன்னதைக் கூட நளினி பொருட்படுத்தவில்லை, ஆனால் தனது கணவனுக்கு வந்த கோபத்தைப் பார்த்து நடுங்கி விட்டிருந்தாள்.

இவையனைத்தும் சேர்ந்ததில் மனம் பாரமாகிவிட படுக்கையில் விழுந்து கண்கள் கலங்கியவளைத் தனது மார்புடன் அணைத்துச் சமாதானப்படுத்தினான்.

''நளினி! அழாதமா. ப்ளீஸ், உன்னைப் பத்தி எனக்குத் தெரியும். கண்டவங்களும் பொறாமைல பேசறதை



யெல்லாம் நாம காதுல கூட வாங்கக் கூடாது!'' என்று இன்னும் ஏதேதோ சொல்லிச் சமாதானப்படுத்தியவன் மனைவி முழுமையாகப் பழைய மன நிலைக்குத் திரும்பிய பிறகே கிளம்பினான்.

புன்னகையுடன் கணவனை வழியனுப்பிவிட்டுப் பர்வதத்தைத் தேடிச் சென்றாள் நளினி.

பர்வதம் ஸ்டோர் ரூமில் எதையோ எடுத்து வைத்துக் கொண்டிருக்க, ''அவர் திட்டினதைத் தயவு செஞ்சு தப்பா எடுத்துக்காதீங்கமா. என் நல்லதுக்குத்தான் நீங்க சொன்னீங்கன்னு எனக்குப் புரியுது. எம்மேல ஒண்ணும் சங்கடமில்லையே உங்களுக்கு?'' என்றாள்.

''என்னமா, பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க. நான் தான் சின்னய்யாவுக்கு முன்னாடி சொல்லியிருக்கக் கூடாது. அவரு உங்க மேல வெச்சிருக்கற அன்புனால தானம்மா அப்படியெல்லாம் சொன்னார். அதுவரைக்கும் எனக்கு ரொம்ப சந்தோஷம்.''

அப்படிச் சொன்ன பர்வதத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, ''நீங்க தப்பா எடுத்துக்காததுல எனக்கும் ரொம்ப நிம்மதியா இருக்குமா!'' என்ற நளினியின் கைகளைப் பிடித்துக் கொண்டு அழுது விட்டாள் பர்வதம்.

சுந்தரி ஒரு நாளாவது இப்படிப் பேசியிருப்பாளா? ஆனால் நளினி வந்து கொஞ்ச நாள் கூட ஆகவில்லை. தான் ஒரு வேலைக்காரியாக இருந்தும் அப்படி நினைக் காமல் தன் உணர்ச்சிகளுக்கும் மதிப்புக் கொடுக்கிறாளே இந்தப் பெண்.

எவ்வளவு பெரிய நிர்வாகியாக இருந்தும், எத்தனையோ வேலைகள் இருந்தும், தன் மனது நோகக் கூடாதென்று

வந்து சமாதானப்படுத்தி விட்டுப் போகிற இந்தப் பெண்ணின் மனதும்தான் எவ்வளவு இளகியதென்று நினைத்து நினைத்து மாய்ந்து போனாள் பர்வதம்.

அன்று இரவு தங்களது திருமணத்திற்கு வர முடிந்திருக்காத சில முக்கிய நண்பர்களின் குடும்பங்களை வீட்டிற்கு அழைத்து ஒரு சிறு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தான் பிரேம்நாத். அவர்கள் அனைவரிடமும் தனது மனைவி நளினியை அறிமுகப்படுத்தி வைத்தான். அவர்கள் நன்றாகப் பேசியதால் நளினியும் அவர்களிடம் பிஸினஸ் மற்றும் பொதுவான விஷயங்களைப் பற்றி வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தாள். பிரேம்நாத்தும் தான். விருந்து முடிந்த பிறகுகூட சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டே வந்தவர்கள் புறப்பட்டார்கள்.

''என்னதான் கொழுந்தனாரோட ப்ரண்ட்ஸ்தான்னாலும் இந்த நளினி எதுக்கு அந்தச் சிரிப்பு சிரிச்சாளோ! நாலு ஆம்பளைங்க உக்காந்திருக்கற இடத்துல ஒரு பொம்பள மாதிரி அடக்கமா இருந்து தொலைக்க வேண்டியதுதான!'' என்று சாதாரண விஷயத்தைப் பிரேம்நாத் காதுபடச் சுந்தரி முனகிக் கொண்டிருக்க, அவளை ஒரு எச்சரிக்கும் பார்வை பார்த்துவிட்டுத் தன்னறைக்குச் சென்றான் பிரேம்நாத்.

அன்று சற்று அதிகமாக வெட்கப்பட்ட தனது மனைவியை ஆச்சரியத்துடன் பார்த்தான் பிரேம்நாத். அவள் தான் தாயாகப் போவதைச் சொன்னதில் அவளை விடப் பல மடங்கு அதிகமாகத் தானும் சந்தோஷப்பட்டான்.

தொடர்ந்து வந்த நாட்களில் நளினியின் ஆனந்தம் மேலும் அதிகரித்தது. பர்வதமும் தேவைப்பட்ட



பணிவிடைகள் அனைத்தையும் செய்து நளினியைத் தான் பெற்ற பெண்ணைப் போலப் பார்த்துக் கொண்டாள்.

விஷயம் அனைவருக்கும் தெரிய ஆரம்பிக்க, அனைவருமே மிகவும் சந்தோஷப்பட்டார்கள். தாய்மையின் பூரிப்போடு நளினி வழக்கம்போல நிர்வாகத்தையும் கவனித்துக் கொள்ள நாட்கள் தன்பாட்டுக்கு இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன.

அப்பொழுது சுந்தரிக்கும் சங்கர் பிறந்திருந்தான். நளினிக்குச் சங்கரை மிகவும் பிடிக்குமென்றாலும் அவள் அந்தச் சிறுவனிடம் பேசுவது சுந்தரிக்குச் சுத்தமாகப் பிடிக்காது. அதிலும் நளினி தாய்மையடைந்ததற்குப் பிறகு அனைவருமே அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்குவதைப் பார்த்து மனதிற்குள் குமுற ஆரம்பித்திருந்தவள், அதை எப்படியாவது நிறுத்தியாக வேண்டுமென்று தன்னால் ஆனதையும் செய்தாள்.

எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்பதைப் போல, என்னதான் பொய்யாக இருந்தாலும் அதையே மீண்டும் மீண்டும் அழுத்திச் சொல்லும்போது உண்மையாகி விடப் போகிறது. அதுதான் நளினியின் விஷயத்திலும் நடந்தது.

நளினியைப் பற்றிச் சுந்தரி சொல்லும் குற்றச்சாட்டுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே சென்றன. அதாவது பொறாமை வார்த்தைகளும், சந்தேக வார்த்தைகளும்.

சுந்தரி சொல்வதும் உண்மையாக இருக்குமோ என்று முதன் முறையாக நினைக்க ஆரம்பித்திருந்தான் பிரேம்நாத்.

சீரான வேகத்தில் மிகவும் கவனத்துடன் ஓட்டப்பட்ட அந்தக் கார், அந்தப் பெரிய தொழிற்சாலையின் முன்பு வந்து நின்றது.

மிகவும் பவ்யமாகக் கார் கதவைத் திறந்துவிட வந்த டிரைவரைத் தடுத்துவிட்டு தானே கார் கதவினைத் திறந்து கொண்டு இறங்கினாள் நளினி.

''எத்தன முறை சொன்னாலும் கேக்க மாட்டிங்களா? இதக்கூட நான் செஞ்சுக்க மாட்டேனா?'' என்று கண்டிப்புக் கலந்த ஒரு சிறு புன்னகையுடன் கம்பெனிக்குள் சென்றாள்.

அந்த மிக நீளமான தரைத் தளத்தில் அவரவர்களது வேலைகளில் மூழ்கியிருந்தவர்கள் அனைவரும் தங்களது எம்.டி.யைக் கண்டதும் விஷ் செய்தார்கள்.

பதிலுக்குச் சிறு புன்னகையுடன் அனைவருக்கும் தலையை அசைத்துக் கொண்டே கம்பெனி முழுவதும் தனது ரவுண்ட்ஸை முடித்துக் கொண்டு ஒரு மணி நேரத்திற்குப் பிறகே தனது இருக்கைக்குச் சென்றாள் நளினி.

அந்தக் கம்பெனியில் வேலை செய்பவர்கள் அனைவருக்கும் கடமையுணர்ச்சி, நேரந் தவறாமை இவை இரண்டும் இரண்டு கண்களாக இருந்தன. அதேபோல அங்கு வேலை செய்பவர்களில் யாருக்கு என்ன கஷ்டமானாலும் உடனே அழைத்துத் தேவையான உதவி செய்யப்பட்டது. ஒரு சில இடங்களைப் போலல்லாமல் அவரவர்களது தகுதிகளுக்குத் தகுந்தவாறு கைநிறையச் சம்பளம் கொடுக்கப்பட்டதால் அந்தக் கம்பெனிக்கும் நளினிக்கும் வெளியே மிகவும் நல்ல பெயர் இருந்தது.



உள்ளே சென்று தன்னிடத்தில் அமர்ந்த நளினி அன்று தான் செய்ய வேண்டிய வேலைகள் அனைத்தையும் மனதிற்குள் வரிசைப்படுத்திக் கொண்டாள்.

அதற்கு முன்பு கம்பெனி மேனேஜர் விக்னேஷ்வரன் தன்னைப் பார்ப்பதற்காக நேற்று வந்துவிட்டுப் போனது நினைவு வர, சில முக்கியமான வேலைகளை மட்டும் முடித்துக்கொண்டு முதலில் அவனை அழைத்து என்னவென்று கேட்டுவிட முடிவு செய்தாள்.

முடிவு செய்ததைப் போல மேலும் இரண்டு மணி நேரங்களில் தனது வேலைகளை முடித்துக் கொண்ட நளினி, பி.ஏ.வை அழைத்து, மேனேஜரை வந்து தன்னைப் பார்க்கச் சொல்லிப் பணித்தாள்.

விக்னேஷ்வரனின் தந்தை நாராயணன் நளினியின் தந்தையுடைய நிர்வாக காலத்தின் தொடக்கத்திலிருந்தே அவர்களுடைய கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தவர். திறமையோடு மிகுந்த நம்பிக்கைக்குரியவராகவும் இருந்ததால் அவர் பணி ஓய்வு பெற்றபோது அந்தப் பணிக்கு அவருடைய பிள்ளை விக்னேஷ்வரனையே நளினியின் தந்தையான ராகவன் நியமித்திருந்தார்.

நாராயணனின் குடும்பம் ஓரளவு வசதி படைத்தது தான் என்றாலும் அவருடைய மகளுக்கு உடல்நிலை சற்றுச் சரியில்லாததால் கையிலிருந்த பணமனைத்தும் நீராய்ச் செலவானது. அவருடைய மகளுக்கு இதயத்தில் ஓட்டை இருப்பதாகவும் எவ்வளவு விரைவில் சிகிச்சை செய்யப்படுகிறதோ அந்த அளவிற்கு நல்லதென்றும் மருத்துவர்கள் கூறியிருந்தார்கள்.

இன்னும் அவ்வளவு பணத்திற்கு எங்கே போவ தென்று நாராயணன் கவலைப்பட்டுக் கொண்டிருக்க, அந்த விஷயம் எப்படியோ நளினியின் தந்தையை எட்டியிருந்தது. அதாவது எம்.டி.யை

நளினியின் தந்தை உடனே நாராயணனை அழைத்து ஆறுதல் சொன்னதோடு, தானே முழு ஆபரேஷன் செல வையும் ஏற்றுக் கொள்வதாகச் சொல்லி ஆபரேஷனுக்கு நாள் குறிக்கச் சொல்லியிருந்தார்.

அதற்குள் அவரது மகள் நளினிக்குத் திருமணம் நிச்சயமாகிவிட அவர் கல்யாண வேலைகளில் மும்முர மாகி விட்டிருந்தார். அந்த மும்முரத்தில் நாராயண னுக்குத் தான் வாக்குக் கொடுத்ததையே மறந்து போயிருந்தவர், திடீரென நினைவு வந்தபொழுது நளினியிடம் அனைத்தையும் சொல்லியிருந்தார். துரதிர்ஷ்டவசமாகத் தொடர்ந்து வந்த சில நாட்களில் அவளது தந்தையும் இறந்து விட்டிருக்க, நளினியாலும் தந்தை சொன்னதை உடனே செய்ய முடியாமல் போயிற்று.

ஆனால் விக்னேஷ்வரனை அழைத்துத் தங்கையின் அறுவைச் சிகிச்சைக்குத் தேதி முடிவானால் தயங்காமல் உடனே வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு தனது தந்தை தன்னிடம் சொல்லியிருந்த சில நாட்களி லேயே சொல்லி விட்டிருந்தாள்.

ஒருவேளை நேற்று விக்னேஷ்வரன் தன்னைச் சந்திக்க முற்பட்டதும் அதற்காகத்தானோ?

அதே நேரம் தனது டேபிளில் இருந்த டெலிபோன் ஒலிக்க, எடுத்து ஹலோ நளினி ஹியர் என்றாள்.



எதிர் முனையில் பேசியது அவளுடைய கணவன் பிரேம்நாத்.

சில நிமிடங்களில் தனது கணவனுடன் பேசியவள், ''இப்பக் கிளம்பி வர்றீங்களா? சரி, வாங்க,'' என்று போனை வைத்தாள்.

ரிஸீவரைக் கீழே வைத்த சில வினாடிகளிலேயே மீண்டும் ஒலிக்க, உடனே எடுத்துக் காதில் வைத்தாள்.

''வீட்லயே பேசிக்கலாமா? அப்ப நீங்க இப்ப வர லையா? அதுக்கும் ஓகே!'' என்றவள் எதிர்முனையில் தனது கணவன் சொன்னதைக் கேட்டு வெட்கப்பட்டுக் கொண்டே, ''இப்ப முதல்ல போனை வைக்கறீங்களா?'' என்று ரிஸீவரை வைத்திருந்தாள்.

என்ன முயன்றும் ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகே நளினியால் தனது கணவனுடன் பேசியதால் தோன்றிய வெட்கத்தையும் சிரிப்பையும் கட்டுப்படுத்திக் கொண்டு பழைய நிலைக்கு வர முடிந்தது.

பாவம்! கண்டிப்பாக அந்தப் பெண்ணிற்கு உதவ வேண்டும், அதுவும் தனது தந்தை கடைசியாகத் தன் னிடம் கேட்டுக் கொண்டதை உடனே நிறைவேற்றியே ஆக வேண்டுமென்று நளினி நினைத்துக் கொண் டிருக்கும்போதே யாரோ அறைக்குள் வருவதற்கு அனுமதி கேட்க, வருமாறு அழைத்தாள்.

விக்னேஷ்வரன் உள்ளே வர, ''வாங்க, உக்காருங்க!'' என்றாள்.

''அப்பா நலமா இருக்காரா?''

''ஆமாம் மேடம்.''

''உங்க தங்கை எப்படியிருக்காங்க?''

''தங்கச்சி சிக்காதான் இருக்கா. இன்னும் ஒன் வீக்ல ஆபரேஷன் பண்ணியாகணும்னு டாக்டர்ஸ் சொல்றாங்க...''

''அப்ப ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணிட வேண்டியதுதான, ஏன் லேட் பண்ணிட்டிருக்கீங்க?''

''எதுக்கும் உங்ககிட்ட...''

''பணத்தப்பத்திக் கவலைப்பட வேண்டாம். உடனே அட்மிட் பண்ணிடுங்கன்னு ஏற்கெனவே உங்ககிட்ட சொன்னதாகத்தான் எனக்கு ஞாபகம்.''

''ஷ்யூர் மேடம், இத்தன நாளா அவ்வளவு பெரிய ஆபரேஷனத் தாங்கிக்கற அளவுக்கு அவளோட உடல் நிலை இல்லன்னு டாக்டர்ஸ் சொல்லிட்டதாலதான் அட்மிட் பண்ண முடியாமப் போயிடுச்சு மேடம். இப்ப எவ்வளவோ பரவாயில்ல. நாளைக்கே கூட அட்மிட் பண்ணிடுங்க, பேஷண்டோட கண்டிஷன் நல்லா இருக்குன்னு டாக்டர்ஸ் சொல்லிட்டாங்க.''

''அப்ப இன்னும் டிலே பண்ணாம நாளைக்கே அட்மிட் பண்ணிட்டுச் சொல்லுங்க. எல்லாம் நல்லபடியா நடக்கும். கவலைப்படாதீங்க.''

''நீங்க இருக்கும்போது எங்களுக்கு ஒரு கவலையும் இல்ல. முக்கியமா நான் ரொம்ப நிம்மதியா இருக்கேன்.''

''அது சரிதான், அதுதான் எனக்கும் வேணும். எவ்வளவு பணம் வேணும்னாலும் சொல்லுங்க. நான் தர்றேன்.''

''ரொம்ப நன்றிங்க. ஆனா அத நான் எப்பிடி உங்களுக்குத் திருப்பித் தரப் போறேன்னுதான் தெரியல.''



''என்னது திருப்பித் தர்றீங்களா? அந்தப் பேச்சே கூடாது. யோசிக்காம எவ்வளவு லட்சம் செலவானாலும் உடனே கேட்டு வாங்கிட்டுப் போய் ஆக வேண்டிய வேலையப் பாருங்க.''

''என்னதான் இருந்தாலும் இவ்வளவு பெரிய தொகையைக் குடுக்க முன் வர்றீங்க. யாராவது ஏதாவது சொல்லக்கூட செய்யலாம்...''

வேறு யார் என்ன சொல்லி விடுவார்களென்று இவன் இவ்வளவு தயங்குகிறானென்று நளினிக்குப் புரியவில்லை. ஒருவேளை ஆபரேஷனுக்கு ஆகும் முழுச் செலவையும் நாம் ஏற்றுக் கொள்வோமென்ற நம்பிக்கை இல்லையோ?

''என்னோட வார்த்தைகளுக்கு மேல யாரும் எதுவும் சொல்ல மாட்டாங்க. மத்தவங்ககிட்ட சொல்லிட்டிருக்கணுங்கற அவசியமும் எதுவுமில்ல.''

...........

தனது தந்தை தன்னிடமும் கேட்டுக் கொண்டதை நாம் இன்னும் செய்யாமலிருக்கிறோமே என்னும் ஆதங்கம் நளினிக்கு. கூடவே அந்தப் பெண்ணும் அறுவைச் சிகிச்சை முடிந்து நல்லபடியாக நலமுடன் வாழவேண்டும் என்பதும்.

''சரி மேடம்! அப்ப நான் நாளைக்கே தங்கச்சிய டாக்டர்கிட்ட அழைச்சுட்டுப் போய்ட்டு வந்து டாக்டர்ஸ் என்ன சொல்றாங்களோ சொல்றேன்,'' என்றவன் சில முறை நன்றி சொல்லிவிட்டே கிளம்பினான்.

எப்படியோ தனது தந்தையின் வேண்டுகோள் நிறைவேறினால் சரியென்று நினைத்துக் கொண்டவள், மதிய உணவிற்காக வீட்டிற்குக் கிளம்பினாள்.

மதிய உணவிற்குக் கண்டிப்பாக வீட்டிற்கு வந்தாக வேண்டுமென்ற கணவனின் அன்புக் கட்டளைதான் நினைவுக்கு வந்தது.

மதிய உணவிற்குப் பிறகு ஒரு மணி நேரம் ஓய் வெடுத்து விட்டு அதற்குப் பிறகே மீண்டும் கம்பெனிக் குத் திரும்புவது இப்பொழுதெல்லாம் நளினியின் வழக்கமாகியிருந்தது.

ஐந்து நிமிடங்களில் நளினி தனது காரருகில் வந் திருக்க, ''இப்ப ஒரு பத்து நிமிஷத்துக்கு முன்னாடி தான் ஐயா வந்துட்டுப் போனாரு மேடம்!'' என்றான் டிரைவர்.

பத்து நிமிடங்களுக்கு முன்னர்தான் வந்து விட்டுப் போனாரா, அப்படியானால் ஏன் தன்னைப் பார்க்காமலே போய் விட்டார் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட நளினி, அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

''ஸார் உங்களக் கூட்டிட்டுப் போவார்னு நினைச் சுட்டிருந்தேன் மேடம். ஆனா வந்த வேகத்துலயே திரும்பி வெளிய வந்து அவரு வண்டியில ஏறிப் போய்ட்டாரு!'' என்று டிரைவர் சொன்னதைக் கேட்ட நளினிக்கு மேலும் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

ஏன் இப்படி, இங்கேயே வந்து விட்டுப் பிறகு தன்னைப் பார்க்காமல் போனார் என்று மனம் குழம்பியவள், பிறகு அதை வீட்டிற்குப் போய் அவரிடமே கேட்டால் போகிற தென்று நினைத்துக் கொண்டாள்.

வீடு வந்து சேர்ந்தவள், ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த கணவனிடம் சென்றாள்.

அன்று ஏனோ தனது கணவன் சற்றுக் கோபத்தில் இருப்பது போலத் தோன்றியது.



அருகில் சென்றிருந்தவள், ''இப்பதான் வந்தீங்களா?'' என்று கேட்டாள்.

நிமிர்ந்து மனைவியைப் பார்த்த பிரேம்நாத் ஆமா மென்பதைப் போல லேசாகத் தலையை மட்டும் அசைத் தான்.

''நீங்க இப்பக் கம்பெனிக்கு வந்துட்டு வந்திருப்பீங்க போலிருக்கு?''

''கொஞ்சம் பேசாமத்தான் இரேன்!'' என்று கணவனிட மிருந்து வெடுக்கென்று வந்த பதிலில், பாவம்! என்ன வேலைப் பளுவோ என்று நினைத்துக் கொண்டவள் -

''நீங்க சாப்டீங்களா?'' என்று மெதுவாகத் தயங்கிக் கொண்டே கேட்டாள்.

தனது கேள்விக்குப் பதிலொன்றும் சொல்லாமல் எழுந்து சென்ற கணவனின் செய்கை புரியாமல் பார்த் தாள் நளினி. பாவம்! ஏதோ மூட் அவுட் போலிருக்கிறது. எதுவானாலும் இரவு பேசிக் கொள்ளலாமென்று நினைத் துக் கொண்டாள்.

ஆனாலும் அன்று மதியத்திற்கு மேல் நளினிக்கு வேலையே ஓடவில்லை. ஏன் கம்பெனிக்கு வந்து விட்டு வந்த கையோடு திரும்பிப் போயிருக்கிறார், அப் படியும் கம்பெனி விஷயங்கள் எதையும் அவர் பார்ப்பது கூட இல்லையே. அவர் கம்பெனிக்கு வருகிறாரென் றாலே அது தனக்காக மட்டுமாகத்தானே இருக்கும். அதுவும் தான் மதியம் வீட்டிற்குக் கிளம்புவதற்குச் சற்று முன்னர் பேசிய போது கூட சந்தோஷமாகத்தானே பேசினார்.

ஒருவேளை வீட்டிலேயே பேசிக் கொள்ளலாமென்று சொன்னவர் மீண்டும் மனம் மாறித் தான் விக்னேஷ்வரனுடன் பேசிக் கொண்டிருந்த பொழுது வந்திருப்பாரோ, அப்பொழுது நடந்த உரையாடலைக் கேட்டிருப்பாரோ, அதாவது அரைகுறையாக.

நினைத்துப் பார்க்கவே மனதிற்குக் கஷ்டமாக இருந்தாலும் அந்த முடிவுக்குத்தான் நளினியால் வர முடிந்தது.

இருந்திருந்து தன்னை யெப்படி அவர் அப்படித் தவறாக நினைக்கலாமென்று எண்ணாது இருக்க முடியவில்லை.

இப்படி எதை யெதையோ எண்ணி வெகு நேரம் தன்னையே குழப்பிக் கொண்டாள் நளினி.

கணவனின் கோபத்திற்கான காரணம் முழுவதும் புரியா விட்டாலும் ஏதோ கொஞ்சம் புரிந்த மாதிரிதான் இருந்தது.

ஏனோ அஸ்திவாரமே ஆட்டம் கண்டு விட்டதைப் போல மனதால் துடித்துப் போனாள் நளினி.

வேண்டுமென்றே தனது போக்கைத் தவறாகப் பேசிக் கொண்டிருக்கும் சுந்தரிக்கு, தன் மேலுள்ள பொறாமையால் பிரேம்நாத்தையும் சந்தேகப்பட வைத்துக் கொண்டிருக்கும் சுந்தரிக்கு, இப்பொழுது தனது கணவன் உண்மையிலேயே தன்னைச் சந்தேகப்படுவது தெரிந்தால் பழம் நழுவிப் பாலிலேயே விழுந்தது போலல்லவா ஆகிவிடும்.

நடந்ததை எடுத்துச் சொல்லி அவருக்குப் புரிய வைத்துவிட வேண்டும். ஒன்றுமில்லாத இந்தச் சின்ன விஷயத்தைத்தான் தெரியாமல் நீங்கள் பெரிய தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்று எடுத்துச் சொல்ல வேண்டும்.



நான் எடுத்துச் சொன்னால் கண்டிப்பாக அவர் புரிந்து கொள்வார். பிறகு இவ்வளவு சிறிய விஷயத்திற்காகவா நான் அப்படிக் கோபப்பட்டேனென்று நொந்து போய்த் தன்னிடம் மன்னிப்பு கூடக் கேட்பாரென்று மனதிற்குள் தனது கணவனின் மேல் மிகப் பெரிய நம்பிக்கை வைத்தாள் நளினி.

அத்துடன் இந்தப் பிரச்சனை தீர்ந்து விடப் போகிறதென்று நினைத்த நளினிக்கு, இந்தச் சிறிய பிரச்சனைதான் தனக்கு வாழ்க்கையிலேயே மிகப்பெரிய பிரச்சனை ஆகப் போகிறதென்பது தெரியாமலல்லவா போய் விட்டது.

நாம்தான் தேவையில்லாமல் மனதைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிறோமோ? ஒருவேளை கணவனுடைய கோபத்திற்கான காரணமே வேறாக இருக்கலாமோ என்றும் மனதிற்குள் நினைத்துச் சிரித்துக் கொண்டாள் நளினி.

எப்பொழுதும் போல மாலையில் பிரேம்நாத் டியூட்டி முடிந்து வந்தபோது நளினி ஹாலில்தான் அமர்ந்திருந்தாள். பெரியவர் கமல்நாத்தும் ஹால் சோபாவில் அமர்ந்து டி.வி.யில் ஓடிக் கொண்டிருந்த ஒரு இசைக் கச்சேரியின் பாடலை ரசித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் கணவன் வந்ததும் எழுந்து சென்ற நளினி சிறிது நேரத்தில் டிபன், டீ ப்ளாஸ்க்குடன் திரும்பி வந்தாள்.

தனது மனைவி வருவதைப் பார்த்த பிறகும், அவள் தனக்காகத்தான் டீ எடுத்து வருகிறாளென்று தெரிந்திருந்தும் வேண்டுமென்றே அந்த வழியாகப் போன சுந்தரியை அழைத்து, ''எனக்கு யார்கிட்டயாவது ஒரு கப் டீ கொடுத்தனுப்ப முடியுமா?'' என்று கேட்டான் பிரேம்நாத்.

அவன் கேட்பது புரியாமல் கையில் டீயுடன் நின்று கொண்டிருந்த நளினியையும், பிரேம்நாத்தையும் மாறிமாறிப் பார்த்தாள் சுந்தரி.

''ஏன் இவ உங்களுக்குத்தானே எடுத்துக்கிட்டு வந்திருக்கா?'' என்று நளினியைக் காட்டிச் சுந்தரி கேட்க, ''ஆமாங்க!'' என்ற பணிவுடன் டிபன் பிளேட்டைக் கணவனுக்கு முன்பாக டீபாயில் வைத்தாள் நளினி.

''எனக்கு இனிமேல் எதுவானாலும் வேலைக்காரங்க கொண்டு வந்து குடுத்தாப் போதும். ஐ மீன் நீ கொண்டு வர வேண்டாம்.''

எச்சரிக்கை கலந்த குரலில் தனது மனைவியைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் பிரேம்நாத் எழுந்து செல்ல, நளினி ஏதோ உலகமகாக் குற்றத்தைச் செய்து விட்டதைப் போல ஏளனத்துடன் சிரித்து விட்டுப் போனாள் சுந்தரி.

கணவனின் ஏளனத்தால் துடித்துப் போன நளினி வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் திரும்ப, ''நளினி! இங்க வாம்மா!'' என்று அழைத்தார் - நடந்ததனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த கமல்நாத்.

''இப்படி உக்காருமா. எதுக்கு அவன் அப்படிப் போறான்? ஏதாவது பிரச்சனையா?'' என்று கேட்டார்.



''பிரச்சன வேற ஒண்ணு இருக்கும்னு நீங்க நினைக்கறீங்களா மாமா? இவர் எதுக்கு இப்பிடி நடந்துக்கறார்னு எனக்கே புரியலையே!'' என்று மதியம் கணவனிடமிருந்து கம்பெனிக்கு போன் வந்ததிலிருந்து நடந்ததனைத்தையும் சொல்லி முடித்தாள் நளினி.

''நீ எதுக்கும்மா கவலைப்பட்ற? எங்கூட வாம்மா!'' என்று நளினியை அழைத்துக் கொண்டு பிரேம்நாத்திடம் அதாவது தன து இளைய மகனிடம் சென்றார் கமல்நாத்.

டி.வி. ஓடிக் கொண்டிருக்க, கட்டிலில் படுத்தவாறு பார்த்துக் கொண்டிருந்தான் பிரேம்நாத்.

தனது மனைவியும் தந்தையும் வருவதைப் பார்த்துக் கட்டிலில் இருந்து எழுந்திருந்தான்.

''எதுக்குப்பா இந்தப் போலி மரியாதையெல்லாம்? நீ உம் மனசுல என்னதான் நினைச்சுட்டிருக்க? நடந்தது என்னன்னு கூடத் தெரியாம எதுக்கு இப்ப நளினி மேல கோபப்பட்ற?''

''உங்களுக்கு மட்டும் என்ன தெரிஞ்சிடுச்சுன்னு இவள அழைச்சுட்டு இப்ப நியாயம் பேச வந்துட்டிங்க? இது என்னோட குடும்பப் பிரச்சன. நீங்க போகலாம்.''

மகன் அப்படிச் சொன்னதால் வந்த கோபத்தைச் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டார் கமல்நாத்.

''ஓ! அதனால தான் ஹால்ல வெச்சு எல்லாருக்கும் முன்னாடி அப்படி யெல்லாம் பேசினயாக்கும்? சரி, சொல்லு. நளினி மேல என்ன தப்புக் கண்டு பிடிச்சுட்டன்னு இப்ப நீ இப்படி நடந்துக்கற?''

''ம், ஒரு தப்பு ரெண்டு தப்புன்னா சொல்லலாம். அவ செய்யற காரியங்கள் எல்லாமே தப்பானது தான். ஆனா நான் செஞ்ச ஒரு பெரிய தப்பு இவளக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுதான்!'' என்று பிரேம்நாத் எரிச்சலை உள்ளடக்கிய குரலில் சொல்ல, அதைக் கேட்ட நளினி ஆயிரம் தேள்கள் ஒரு சேரக் கொட்டியது போன்ற வலியுடன் நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள்.

''எவ்வளவு பெரிய வார்த்தையைச் சொல்லிட்டிங்க? உன்னை எனக்குப் பிடிக்கலன்னு கூட நீங்க சொல்லி யிருக்கலாம். அத விட்டுட்டு இவ்வளவு பெரிய வார்த் தையைச் சொல்ல உங்களுக்கு எப்படிங்க மனசு வந்தது?

''என்னைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டதே தப்புன்னு சொன்னீங்கன்னா அப்புறம் எல்லாமே உங்களுக்குத் தப்பாத்தான் தெரியும்.''

''உன்னோட கதை யெல்லாம் இங்க யாருக்கு வேணும்? முதல்ல ரெண்டு பேரும் இங்கிருந்து கிளம் புங்க.''

''என்னப்பா இது, நீதியையும், நியாயத்தையும் காக்கற போலீஸா இருந்துட்டு நீ இப்படியெல்லாம் நடந்துக்க லாமா? இதெல்லாம் உனக்கே நல்லார்க்கா? இனிமேல் நளினிகிட்ட இப்படி நடந்துக்க மாட்டேன்னு சொல்லு. இப்ப இப்படி நடந்துக்கிட்டதுக்கும் எனக்கு முன்னாடியே நளினிகிட்ட ஸாரி கேளு. நான் போயிடறேன்,'' என்றார் கமல்நாத்.

''என்னது ஸாரியா? அதுவும் இவகிட்ட?'' என்று பிரேம்நாத் ஏளனமாகச் சிரிக்க, இடைமறித்தாள் நளினி.



''வேண்டாங்க, அதெல்லாம் எனக்கும் வேண்டாம். தயவு செஞ்சு நான் இப்ப என்ன செஞ்சா உங்களுக்குப் பிடிக்கும்னு மட்டும் சொல்லுங்களேன்.''

''சொல்றேன். நல்லாக் கேட்டுக்கோ. நீ கம்பெனிய நிர்வாகம் பண்றது எனக்குப் பிடிக்கல. இனிமேல் பொம்பள மாதிரி அடக்க ஒடுக்கமா ஒழுக்கமா வீட்ட மட்டும் கவனிச்சுக்கோ. அத விட்டுட்டுப் பிஸினஸ் அது இதுன்னு குடும்ப மானத்தக் காத்துல பறக்க விட்டுட் டிருந்த அப்புறம் நான் மனுஷனாவே இருக்க மாட்டேன்.''

''என்னங்க இப்படிச் சொல்லிட்டிங்க? என்னால எப்படி கம்பெனிய கவனிச்சுக்காம இருக்க முடியும்? என் உயிர் இருக்கற வரைக்கும் எங்கப்பாவோட பிஸினஸப் பாக்காம இருக்கறதப் பத்தி என்னால நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது. தயவு செஞ்சு உங்க முடிவ மாத்திக் கறீங்களா?'' என்று கணவனைப் பார்த்துக் கேட்டாள் நளினி.

சொன்னதுதான் தாமதம், பளாரென்று அவளது கன்னத்தில் அறைந்திருந்தான் பிரேம்நாத்.

''அப்ப நீ சொல்றதையெல்லாம் நான் கேக்கணும். ஆனா நான் சொல்ற எதையும் நீ கேக்க மாட்டே. அப்படித்தானே? அப்புறம் எதுக்குடி நீ இந்த வீட்ல இருக்க? போடி வெளியே!'' என்று சொல்லிக்கொண்டே அறை வாயிலை நோக்கிக் கையை நீட்டினான்.

''போதும். நிறுத்துடா. நீயெல்லாம் ஒரு மனுஷனா?'' என்று மீசை துடிக்கக் கேட்டவர், ''இவன நான் பாத்துக் கறேன், வாம்மா!'' என்று சமாதானம் சொல்லி நளினியைக் கீழே அழைத்து வந்தார்.

துக்கம் தொண்டையை அடைக்கக் கஷ்டப்பட்டு நடந்து வந்த நளினி கீழே விழப்போக, சற்றுத் தள்ளி நின்றிருந்த பர்வதம் ஓடிவந்து தாங்கிப் பிடித்துக் கொண்டாள்.

கைத்தாங்கலாகப் பிடித்து அழைத்துச சென்று, பக்கத்து அறையிலிருந்த கட்டிலில் அமர வைத்தாள்.

''என்ன பண்ணுது நளினிமா, பாக்கவே ஒரு மாதிரியிருக்கீங்க?'' என்று அவள் ஆதரவாகக் கேட்டுவிட, அவ்வளவுதான்.

அப்படியே படுக்கையில் சரிந்து கதறி அழ ஆரம்பித்திருந்தாள் நளினி.

சற்று ஓயட்டும் கேட்கலாமென்று கவலையுடன் செய்வதறியாது அவளைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் பர்வதம்.

சில நிமிடங்களில் ஓரளவு தன்னை சமாளித்துக் கொண்டு நிமிர்ந்த நளினி, ''அம்மா! குடிக்கத் தண்ணி குடுக்கறீங்களா?'' என்று கேட்டாள்.

''இதோ வர்றேம்மா!'' என்று வேகமாக உள்ளே சென்ற பர்வதம் தண்ணீர் டம்ளருடன் சில வினாடிகளில் திரும்பி வந்த பொழுது படுக்கையிலேயே மயங்கிச் சரிந்திருந்தாள் நளினி.

''நளினிமா!'' என்று அழைத்துக் கொண்டே அருகில் வந்திருந்தவளுக்கு, அதற்குப் பிறகுதான் அவள் மயக்கமடைந்து விட்டிருந்தது தெரிந்தது.

ஹாலில் அமர்ந்திருந்த ரகுநாத்திடம் சென்று, ''பெரியப்பா, நளினிமா மயக்கமாய்ட்டாங்க. என்னன்னு



தெரியல!'' என்று பர்வதம் பதறிக் கொண்டே சொல்ல, வேகமாகச் சென்று அவர்களது குடும்ப டாக்டருக்கு போன் செய்துவிட்டு வந்தார் ரகுநாத்.

ரகுநாத் டாக்டருக்கு போன் செய்துவிட்டு வந்தபோது பிரேம்நாத் ஹாலைக் கடந்து சென்று கொண்டிருந்தான்.

''பிரேம்! எங்க போற? நான் டாக்டருக்கு போன் பண்ணிட்டேன்!'' என்று தான் சொன்னதைக் கண்டு கொள்ளாமல் போனவனைப் புரியாமல் பார்த்தார் அவர்.

ஒன்றும் புரியாமல் நளினியைப் பார்க்க வந்த ரகுநாத், அங்கே தனது தந்தை அவ்வளவு கோபமாக இருந்ததைத் தனது வாழ்நாளிலேயே முதன் முறையாகப் பார்த்தான்.

வெளியே சென்றுவிட்டு, சற்று முன்புதான் வீட்டிற்கு வந்திருந்த ரகுநாத்திற்கு அனைவரது செய்கைகளும் புதிராய் இருந்தன. என்னவோ நடந்திருக்கிறது என்பது மட்டும் புரிய, என்ன என்பதைப் போலத் தனது தந்தையைப் பார்த்தான்.

''என்னப்பா ஒண்ணும் புரிய மாட்டேங்குதா? உன் அருமைத் தம்பி இருக்கான்ல, எல்லாம் அவன் செய்யற வேலதான். இனிமேல் எனக்கு ஒரு மகன்தான், சின்னவன் இல்லைன்னு ஆயாச்சு. என்ன தைரியம் இருந்திருந்தா எனக்கு முன்னாடி அதுவும் நிறை மாசமா இருக்கறவளக் கைநீட்டி அடிச்சிருப்பான்!'' என்று பெரியவர் நடந்ததனைத்தையும் தனது பெரிய மகனிடம் சொல்லி முடிக்கவும் டாக்டர் வரவும் சரியாக இருந்தது.

நேராகச் சென்று நளினியைப் பரிசோதித்து விட்டுச் சில நிமிடங்களில் வெளியே வந்தார் மருத்துவர்.

பெரியவரின் முகத்தில் தெரிந்த கவலை ரேகைகளைக் கண்டவர், ''சும்மா வெறும் மயக்கம். பயப்பட்ற அளவுக்கு ஒண்ணுமில்ல!'' என்றார்.

''ரெண்டு உயிராச்சே. இனி டெலிவரி முடியற வரைக்கும் ஸ்ட்ரெயினக் குறைச்சுக்கறது நல்லது. ஆமா, எங்க பிரேம்நாத்?''

''கொஞ்சம் முன்னாடிதான் வெளிய கிளம்பினான்.''

''அவங்க அப்பா இறந்துகூட ஆறு மாசத்துக்குள்ள தான இருக்கும். மகள ரொம்ப செல்லமா, பிரமாதமா வளர்த்தார். இருந்து பேரக் குழந்தையப் பாக்கத்தான் கொடுத்து வைக்கல. பாவம்.''

மேலும் சிறிது நேரம் இருந்து நளினியிடமும் பேசித் தைரியம் சொல்லிவிட்டு அதற்குப் பிறகே டாக்டர் கிளம்பினார்.

நாட்கள் தன் பாட்டுக்கு ஓடிக் கொண்டிருந்தன.

நளினி என்னதான் தான் நன்றாக இருப்பதாக வெளியே காட்டிக் கொண்டாலும், மனதிற்குள் கொஞ்சம் கொஞ்சமாக உருகிக் கொண்டிருந்தாள்.

வரவர மனைவியின் முகத்தில் விழிப்பது கூடப் பாவமென்பதைப் போல நடந்து கொண்டான் பிரேம்நாத்.

தனது விருப்பத்தைச் சொல்லிவிட்ட பிறகும் கூட எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் எப்பொழுதும் போல நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டிருப்பாள், இவளுக்கெல்லாம் தான் யாரென்று காட்ட வேண்டுமென்று மனதிற்குள் கறுவிக் கொண்டான்.



என்னதான் தைரியசாலியாக இருந்தாலும் இந்தப் பிரச்சனையால் மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் கொஞ்சம் கொஞ்சமாக உருக்குலைந்து கொண்டிருந்தாள் நளினி.

வேலைக்காரர்கள் முதல் அனைவருமே இப்பொழுதெல்லாம் தன்னை ஒரு புழுவைப் போலப் பார்ப்பதாக உணர்ந்தாள். சும்மாவா தன்னைப் பற்றிக் கொஞ்சம் கொஞ்சமாகச் சுந்தரி ஏற்றி விட்டவையனைத்தும் நன்கு வேலை செய்ய ஆரம்பித்திருக்கின்றனவென்பது தெளிவாகப் புரிந்தது.

ஆனால் ஊர் உலகத்தில் இருப்பவர்கள் ஆயிரம் பேசத்தான் செய்வார்கள், நம் மனைவி எப்படிப்பட்டவளென்பது கணவனுக்கல்லவா தெரிய வேண்டும்.

ஆனால் தன்னுடைய கணவனா இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாரென்ற அதிர்ச்சியிலிருந்து நளினியால் இன்னும் கூட மீண்டு வர முடியவில்லை.

சரி, அப்படித்தான் கணவனின் விருப்பப்படி, விருப்பமென்ன, கட்டளைப்படி கம்பெனிக்குச் செல்வதை விட்டு விடலாமென்று பார்த்தால், தான் அப்படிச் செய்தாலுமே கூட ஏதோ போனால் போகிறதென்று வேண்டுமானால் தன்னை ஏற்றுக் கொள்ளலாமே.

ஐயோ, அப்பா! என்னை மட்டும் தனியாக விட்டு விட்டுப் போய் விட்டீர்களே என்று கதறியவள் அதற்குப் பின் வந்த நாட்களிலெல்லாமும் கூட கண்ணீரிலேயே கரைந்தாள்.

சுந்தரியின் பொறாமைக் குணமும், பிரேம்நாத்தின் சந்தேகக் குணமும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே சென்றன.

நளினி மனதிற்குள் உருகி உருகி ஓடாகிக் கொண்டிருந்தது தெரிந்தாலும், கேவலம் இவ்வளவு நடந்த பிறகும் கூட இவளால் எப்படி இவ்வளவு சந்தோஷமாக நடமாடிக் கொண்டிருக்க முடிகிறது. நானானால் உயிரையே விட்டிருப்பேனென்று ஏளனமாகப் பார்த்துக் கொண்டு போனாள் சுந்தரி.

யார் எப்படியிருந்தால் எனக்கென்ன? என் கணவர் நல்லவர். என்னைப் புரிந்து நடந்து கொள்வார் என்று எத்தனை முறை தன் தந்தையிடமும் தோழிகளிடமும் சொல்லியிருப்பாள். ஆனால் அந்த நம்பிக்கையே இப்பொழுது பொய்யாகி விட, தோப்பிற்குள்ளும் தனி மரமானாள்.

ஏன் தனது கணவனே கூட எத்தனை முறை உன்னைப் பற்றி எனக்குத் தெரியும், வேறு யார் என்ன சொன்னால் எனக்கென்ன என்று தன்னைச் சமாதானப்படுத்தி இருக்கிறான்.

அப்படி என்ன தெரிந்து விட்டது. என்று நினைத்து நினைத்துத் தன்னையே வருத்திக் கொண்டாள்.

எந்நேரமும் கவலை யென்றானதால் நளினியின் உடல் நலமும் கொஞ்சம் கொஞ்சமாகச் சீர்கெட ஆரம்பித்திருந்தது. ஆனால் பார்ப்பவர்களின் கண் பார்வைக்குத் தான் சந்தோஷமாக இருப்பதைப் போலச் சிரமப்பட்டுக் காட்டிக் கொண்டாள்.

பிரசவத்திற்குப் பத்து நாட்கள் மட்டுமே இருந்தன. எந்தப் பிடிப்புமே இல்லாமல் பெயருக்கு நடமாடிக் கொண்டிருந்த நளினியைப் பார்வதம் தான் நேராநேரத்திற்குக் கட்டாயப்படுத்திக் கொஞ்சமாவது சாப்பிட வைத்துக் கொண்டிருந்தாள்.



பார்வதத்தின் கவனிப்பு மட்டும் இல்லாது போயிருந்தால் இந்நேரம் நளினியும் கூட இல்லாது போயிருக்கலாம். அந்த அளவிற்கு நளினியைத் தான் பெற்ற மகளைப் போல மிகவும் அக்கறையெடுத்துக் கவனித்துக் கொண்டாள்.

கமல்நாத் பிரேம்நாத்திடம் பேசுவதையே விட்டிருந்தார். பிரேம்நாத்தைப் பொறுத்தவரை அவனுக்குப் பிடிக்காததை அல்லது அறிவுரையை மற்றவர்கள் சொல்லிக் கேட்ட பழக்கம் வாழ்நாளிலேயே இல்லையென்பதால் தானே மாறுவானென்று ஆயிரத்தில் ஒரு பங்காக நம்பிக்கை வைத்தார் கமல்நாத்.

ரகுநாத்தும் பிரேம்நாத்திடம், அதாவது தனது தம்பியிடம், எத்தனையோ எடுத்துச் சொன்னான். இந்த வீட்டில் மட்டுமல்ல, இந்த உலகத்திலேயே இப்பொழுது நளினிக்கு இருக்கும் உற்ற துணை நீ மட்டும்தான். உன்னை நம்பித்தானே அவளை இந்த வீட்டிற்கு மருமகளாக்கி விட்டுப் போய்ச் சேர்ந்தார் அந்தப் பெரியவர் என்று மனதார, தம்பி தான் செய்து கொண்டிருக்கும் தவறை உணர்ந்து நன்றாக வாழ வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன்தான் அதையும் சொன்னார்.

என்னவோ அவனுக்குச் சற்றும் சம்பந்தமே இல்லாத ஒன்றைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருப்பதைப் போல ஒரு எரிச்சல் கலந்த முகபாவனையுடன் தனது தம்பி எங்கோ பார்க்க, அதுவரை சற்றுச் சிரமப்பட்டுக் கடைப்பிடித்துக் கொண்டிருந்த பொறுமையனைத்தும் ரகுநாத்திடமிருந்து காணாமல் போயிருந்தது.

எவ்வளவு பிரமாதமான பெண் நளினி, அவளைப் போல ஒரு மனைவி கிடைத்திருந்தும் கூட ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாயென்று ரகுநாத் கேட்டுவிட, அவ்வளவுதான்.

ஹாலில் அமர்ந்து கம்பெனி ஃபைல்ஸ் எதையோ பார்த்துக் கொண்டிருந்த நளினி, திடீரென்று ஏதோ நிழலாடுவது போலத் தோன்ற நிமிர்ந்து பார்த்தாள்.

தனக்கு முன்னே பயங்கரக் கோபத்துடன் நின்று கொண்டிருந்த கணவனைச் சற்றுப் பயத்துடன் பார்த்தாள்.

"உம் மனசுல நீ என்னடி நினைச்சுட்டிருக்க? உன்ன மாதிரி எத்தன பேர நான் பார்த்திருப்பேன்? கம்பெனிக் குப் போறேங்கற பேர்ல இதை எவனுக்காக வயித்துல சுமந்துட்டிருக்கியோ?" என்று தனது கணவனின் வார்த்தைகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல் எழுந்து நின்று கத்தி விட்டாள் நளினி.

"ஐயோ, போதும் நிறுத்துங்க. இப்ப என்னைப் பிடிக் கலைங்கறதுக்காக நம்ம கொஞ்ச நாள் உண்மையான தாம்பத்திய உறவக் கொச்சைப்படுத்தாதீங்க. ஏதோ ஒன்ன மனசுக்குள்ள வெச்சுக்கிட்டு, எங்கிட்ட ஏன் இப்படி ஜென்ம விரோதி மாதிரி நடந்துக்கறீங்க? உங்களத் தவிர வேற யாரையும் மனசளவுல கூட நான் நினைச்சது கிடையாது."

"அட நிறுத்துடி, இப்படிக் கேட்டுட்டிருந்தா யார்தான் தங்களோட குற்றத்த ஒத்துக்குவாங்க? உன்னை விட்டு வெச்சதாலதான் நீ இந்தளவுக்கு வந்திருக்க?" என்று தனது மனைவியைக் கண்மண் தெரியாமல் அறைந் தவன் அதே வேகத்தில் இழுத்துச் சென்று வெளியே தள்ளினான்.



போய் விழுந்த வேகத்தில் நளினி எழுந்திருக்க முடி யாமல் துடிக்க, விஷயமறிந்து பெரியவரும் ரகுநாத்தும் ஓடி வந்தார்கள்.

பார்வதம் ஓடிச் சென்று துடித்துக் கொண்டிருந்த வளைக் கைத்தாங்கலாகப் பிடித்துத் தூக்கித் தன்னோடு அணைத்துக் கொண்டாள்.

"இனிமேல் இவளுக்கும் எனக்கும் எந்த உறவுமில்ல. ஒண்ணு, இவ இந்த வீட்ல இருக்கணும், இல்லன்னா, நான் இருக்கணும்."

"போடா வெளிய, நீ இந்த வீட்லதான் இருந்தாக ணும்னு யார் அழுதது?" என்று கோபத்தில் உறுமினார் கமல்நாத்.

"வேண்டாங்க. நீங்க எங்கயும் போக வேண்டாம். இது உங்க வீடு. நீங்க நிம்மதியா இருங்க. நான் போறேன்."

"நளினி! நீ எங்கயும் போக வேண்டாம். அவன் போய்த் தொலையட்டும்."

"இல்ல மாமா, என்னத் தடுக்காதீங்க. நான் கண் காணாம எங்காவது போய் நல்லா இருந்துக்கறேன்!" என்று கண்கள் கலங்கக் கையெடுத்துக் கும்பிட்டாள் நளினி.

உள்ளே சென்று தனக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு சிறிது நேரத்தில் புறப்படத் தயாராக வெளியே வந்த தனது நிலையைப் பார்த்துக் கண்ணீர் வடித்த வர்களிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டு விட்டாள்.

கமல்நாத்தும் ரகுநாத்தும் எவ்வளவோ தடுத்துப் பார்க்க முயன்றும், இனி இந்த வீட்டில் நீங்கள் என்னை

ஒரு வினாடி இருக்கச் சொன்னாலும் கூட அது என்னை நீங்களே உயிரோடு கொல்வதற்குச் சமமாகுமென்று அனைவரது வாயையும் அடைத்து விட்டு வெளியே வந்திருந்தாள் நளினி.

பர்வதம் தானும் உடன் வருவதாக எவ்வளவோ மன்றாடிப் பார்த்தாள். நிச்சயமாக அவசியம் வரும் அந்த நேரத்தில் நானே வந்து அழைத்துக் கொள்கிறேனென்று புறப்பட்டு விட்டிருந்தாள்.

ரகுநாத்தும், கமல்நாத்தும் மிகவும் நொந்து போய் நளினிக்குத் துணையாகப் பேசப் பேச, பிரேம்நாத்திற்கு மனைவியின் மேலான கோபம் சற்றும் குறையவில்லை, மாறாக அதிகம்தான் ஆனது.

நளினியின் பிரசவ நாளும் வந்தது. மருத்துவர்கள் எவ்வளவோ முயன்றும் அவர்களால் குழந்தையை மட்டுமே காப்பாற்ற முடிந்தது. அந்தப் பிஞ்சுக் குழந்தை இந்த உலகத்திற்கு வந்த அந்த நிமிடத்தில், அதன் தாய் இந்த உலகத்தை விட்டே போய் விட்டிருந்தாள்.

எப்படி யெல்லாமோ பிறக்க வேண்டிய அந்தக் குழந்தை யாருமற்ற அனாதையாகப் பிறந்ததல்லவா கொடுமை!

அதற்குப் பிறகு அந்தக் குழந்தையைக் கமல்நாத்தும் ரகுநாத்துமே வளர்க்க ஆரம்பித்தார்கள். நிச்சயமாக அவசியம் வருமென்று அந்த வெகுளிப் பெண் இதை மனதில் வைத்துத்தான் சொல்லியிருப்பாளோ என்று பர்வதம் அந்தப் பச்சை மண்ணைப் பார்க்கும் போதெல் லாம் நினைத்துக் கொள்வாள்.

அப்படியே அதன் தாயையே உரித்து வைத்தாற் போலிருந்த அந்தக் குழந்தையை, நளினியைக் கவனித் துக் கொண்டதை விடவும் பல மடங்கு அக்கறையுடன் கவனித்துக் கொண்டாள் பர்வதம்.



காலப் போக்கில் பிரேம்நாத்தும் தனது குழந்தை சாயலில் அதன் தாயையே நினைவு படுத்தியதில், மன திற்குள் தான் செய்த தவறுகளை யெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக உணர ஆரம்பித்தான்.

ஆயிரம் பேர் வந்து மனதைக் கலைத்தாலும் தனது மனைவியின் மேல் தானல்லவா நம்பிக்கை வைத்திருக்க வேண்டுமென்று நினைத்து நினைத்து மனதிற்குள் கதற ஆரம்பித்திருந்தான்.

தான் செய்த பாவங்களுக்குப் பரிசாகவும், எவ்வளவு பெரிய பாவத்தைச் செய்து விட்டோமென்று எந்நேரமும் மனதை அரித்துக் கொண்டிருந்த கவலையாலும், தொடர்ந்து வந்த சில வருடங்களிலேயே தனது உயிரை விட்டு விட்டிருந்தான் பிரேம்நாத்.

அதற்குப் பின் வந்த மேலும் சில வருடங்களிலேயே கவலையோடு, முதுமை நோயும் சேர்ந்து கொள்ளக் கமல் நாத்தும் இறைவனடி சேர்ந்தார்.

அக்கறையென்று எதுவும் இல்லாவிட்டாலும் பெரி தாக எதிர்ப்பையும் தனது மனைவி காட்டாததால் தனது உடன்பிறந்தவனின் குழந்தையைத் தொடர்ந்து தானே வளர்க்க ஆரம்பித்திருந்தார் ரகுநாத். அதோடு யாரு டைய கண்களையும் உறுத்தாத வகையில் அந்தக் குழந்தையின் மேல் தொடர்ந்து இருந்து வந்த பர்வதத் தின் அக்கறையும் கவனிப்புமே அதற்கு மிகவும் உறு துணையாக அமைந்தனவென்றால் அது சற்றும் மிகை யல்ல.

சாயலில் மட்டுமன்றி அறிவு அழகு என அனைத்திலும் அதன் தாயையே ஒத்திருந்த அபிநயாவைச் சுந்தரிக்கு எப்பொழுதுமே பிடிக்காது. தனது வார்த்தைகளென்னும் கொடுக்கினால் யாரும் அறியாத வண்ணம் தன்னால் முடிந்த போதெல்லாம் அவளைக் குத்திக் கிழித்துக் கொண்டிருந்தாள்.

அதில் ஓரளவு ரகுநாத்திற்கும் தெரியும்தான் என்றாலும் மனைவியிடம் அதைக் கேட்டு வைத்து அபிநயாவின் மேல் அவளுக்கிருக்கும் வெறுப்பை இன்னும் மிகைப்படுத்திட அவர் விரும்பவில்லை.

அதற்குத் தகுந்தாற்போலத் தனது தாயைப் போன்ற பெருந்தன்மையும் பிரச்சனைகளைப் பெரிதுபடுத்தாமல் விட்டுக் கொடுத்துப் போய்விடும் நல்ல குணமும் அபிநயாவிற்கும் இயற்கையிலேயே அமையப் பெற்றிருந்தன.

அபிநயாவை மட்டுமல்ல, அன்று ஏனோ ரகுநாத்தையும் கூடப் பழைய நினைவுகள் வந்து ஆக்கிரமித்துத் தூங்க விடாமல் செய்திருந்தன.

பல வருடங்களுக்கு முன்பு நடந்திருந்தவை அனைத்துமே அப்பொழுது தான் நடந்ததைப் போல மனதைக் கசக்கிப் பிழிய, எந்தப் பாவமும் அறியாத இந்தச் சிறு பெண்ணிற்காவது நல்லபடியான வாழ்க்கையை அமைத்துக் கொடுத்துவிட வேண்டும்.

அதற்காகத் தான் எந்த அளவிற்கு சிரத்தை எடுக்க நேர்ந்தாலும் சரியென்று நினைத்துக் கொண்டவரால் அதற்கு பிறகுதான் சற்றேனும் கண்ணயர முடிந்தது.



# 23

''வா ஜீவா!'' என்று வீட்டிற்குள் வந்த மகனை வரவேற்றார் மீனாட்சி.

''சாப்டாச்சா கண்ணா? வா, முதல்ல வந்து சாப்புடு.''

''இல்லமா. நான் சாப்டாச்சு. மதிய நேரம் நீங்க கொஞ்சம் தூங்க மாட்டிங்களாமா?''

''இந்நேரம் படுத்துட்டுத்தான் இருந்தேன். நீ ஏம்பா டல்லா இருக்க?''

''அப்படியா, என்னமா யாரையும் காணோம்.''

''எல்லாரும் உள்ள இருந்தாங்கப்பா. உன்னத்தான் ரொம்ப நேரமா எதிர்பார்த்துட்டிருக்காங்க.''

''ஓ, என்ன ஸ்பெஷல்?''

''ஏன்னா, எப்பவுமே நீதான் மிஸ்ஸாயிட்ற! அதான்...'' என்று ஹாலுக்கு வந்தார் அவனுடைய தந்தை சண்முகம்.

''ஜீவா! டிரஸ்...'' என்று தாய் கேட்டு முடிப்பதற்குள்ளேயே, ''கார்ல இருக்குமா. இன்னும் எதையுமே உள்ள எடுத்துட்டு வரல,'' என்றான்.

''சரி சரி கண்ணா, எல்லாத்தையும் உள்ள எடுத்துட்டு வரச் சொல்லிட்றேன். பாவம்! உனக்கே எத்தனையோ வேலையிருக்கும். சொல்லிட்டு அதுக்கப்புறம் கஷ்டமா இருந்ததுப்பா.''

''அட என்னமா நீங்க திரும்பவும்... குடிக்க ஒரு கப் காபி கிடைக்குமா?''

''இதோ தர்றேன்பா!'' என்று நகர்ந்த தாயை அழைத்தவன், ''ஸ்ட்ராங்கா உங்க கையால கலக்கின காபி மட்டும் போதும்மா. சாப்பிடற வேற எதயும் எடுத்துட்டு வராதீங்க. இப்ப வேண்டாம்!'' என்றான்.

''ஐய்! ஜீவாண்ணா வந்தாச்சு!'' என்று தங்கைகள் இருவரும் வர, சிறிது நேரம் கலகலப்பாகக் கழிந்தது.

''ஏண்ணா டல்லா இருக்கீங்க?''

வீட்டிலிருப்பவர்கள் அனைவருமே கேட்டு விட்டிருக்க, அபிநயாவின் நினைவுதான் வந்தது ஜீவானந்த்துக்கு.

சுவடே இல்லாமல் உள்ளே நுழைந்து எவ்வளவு பெரிய வலியை ஏற்படுத்தியிருக்கிறாள்.

''அண்ணா! வாங்க. தோட்டத்துக்குப் போய்ட்டு வரலாம்.''

''இல்லமா, நான் ஒரு ஒரு மணி நேரம் கழிச்சு வர்றேன்.''

''ஓ! ரெஸ்ட் எடுக்கப் போறீங்களா, சரிதான். சரி, அப்புறமாவது வாங்க!'' என்று தங்கைகள் இருவரும் நகர, ''என்னங்க, நீங்க?'' என்று கணவரைப் பார்த்தார் மீனாட்சி.

''இல்லமா, நான் வரல!'' என்று சண்முகம் சோபாவில் அமர்ந்துவிட, ''உலக அதிசயமா ரெண்டு பேரும் ரெஸ்ட் எடுக்கணும்னு இருக்காங்க போலிருக்கு, வாங்கமா!'' என்று பெண்கள் மூவரும் தோட்டத்திற்குக் கிளம்பினர்.

''அங்க பழம், காய்கறின்னு ஏதோ புதுசு புதுசா செடிகளக் கொண்டு வந்து நடச் சொல்லிட்டிருக்காங்கப்பா, அதுக்கு நாலு பேர் வேல செஞ்சுட்டிருக்காங்க. அதத்தான் இவங்க பாக்கப் போறாங்க!'' என்று கேளாமலே சிறிய மகனிடம் விவரம் சொன்னார் சண்முகம்.



''தேவா இன்னும் வரலையா?''

''இல்ல ஜீவா, நாளைக்குத்தான் அங்கிருந்து கிளம்பறாங்க.''

தனது மொபைலுக்கு அழைப்பு வர, புது எண்ணாக இருக்கிறதே என்ற யோசனையுடன் அட்டெண்ட் செய்து காதில் வைத்தான்.

''ம் சொல்லுங்க, உங்கள மறக்க முடியுமா?''

............

ஒரு சில வினாடிகள் யோசித்தவன், ''தாராளமா வாங்க. நான் இங்கதான் இருக்கேன்,'' என்று தனது வீட்டிற்கு வழி சொன்னான்.

எதற்காக அவர் வருகிறாரென்று யோசித்தவன் சற்று நேரத்தில் தங்களது வீட்டிற்கு வரப் போகும் ரகுநாத்தைப் பற்றிச் சுருக்கமாகத் தனது தந்தையிடம் விவரம் சொன்னான்.

''அவரப்பத்தி நான் கேள்விப்பட்டிருக்கேன்பா. ஓ! அவரோட கூடப் பிறந்த தம்பி பொண்ணுதான் அபிநயாவா?'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார் சண்முகம்.

''வினுகூட அந்தப் பொண்ணப்பத்தி நிறையச் சொன்னா. பாவம்! எவ்வளவு பிரமாதமான பொண்ணு. ஆனா கடவுள் இவ்வளவு பெரிய குறையக் குடுத்துட்டாரே.''

பிரமாதமான பெண்ணா? அப்படி நினைத்துத் தானே மனதைப் பறிகொடுத்து விட்டுத் தவித்துக் கொண்டிருக்கிறேனென்று ஜீவானந்த்தால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''சரிப்பா நான் பால் பண்ணை வரைக்கும் போய்ட்டு வந்துட்றேன். காலைல போய்ட்டு வந்தது.'' என்ற தந்தையிடம், ''இருங்கப்பா. அவர் வந்துட்டுப் போனதும் நானும் வர்றேன்,'' என்றான்.

ஒருவேளை அவர் இருப்பது தனக்குப் பிடிக்காதோ என்னும் எண்ணத்தில் தந்தை கேட்டது ஜீவானந்துக்குப் புரியாமல் இல்லை.

அரை மணி நேரத்தில் ரகுநாத் அங்கு அவர்களது வீட்டிற்கு வந்தபோது ஜீவானந்தும், சண்முகமும் மட்டுமே இருந்தனர்.

வெளியே பண்ணையாட்களிடம் பேசிக் கொண்டிருந்த இருவரும் காரை விட்டிறங்கிய ரகுநாத்தை வரவேற்றுப் பேசிக் கொண்டே அவருடன் உள்ளே வந்தனர்.

முதலில் சிறிது நேரம் மூவரும் பொதுவான விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க, ஏற்கெனவே ரகுநாத்திடம் கேட்டுக் கொண்டபடி அவருக்கு டீயை எடுத்து வந்து கொடுத்து உபசரித்து விட்டுப் போனாள் வேலைக்காரப் பெண் கமலா.

''எடுத்துக்கோங்க!'' என்று ஜீவானந்தும், சண்முகமும் கூட உபசரித்தனர்.

டீயைக் கையில் எடுத்து ஒரு வாய் குடித்தவர், நான் எதுக்கு வந்திருக்கேன்னு நீங்க யூகிச்சிருப்பீங்கன்னு நினைக்கறேன் என்று ஜீவானந்தைப் பார்த்தார்.

ஆமாமென்பதைப் போலத் தலையை ஆட்டிய மகனையும், ரகுநாத்தையும் பார்த்தார் சண்முகம்.



''நேத்து ஈவினிங் நீங்களும் அபியும் துணிக்கடைல பேசிட்டிருந்ததப் பாத்தேன்,'' என்றவர், அபிநயாவைப் பற்றி அவளுடைய சிறு வயது வாழ்க்கை முதல் அவளுடைய பெற்றவர்கள் வரை அனைத்தையும் சொன்னார்.

''நேத்து சாயங்காலத்திலிருந்து ஏன் ஒரு பத்து நாளாவே அவளக் கண் கொண்டு பாக்க முடியல. அந்த அளவுக்குக் கண்ணீர்லயே கரைஞ்சுட்டிருக்கா. நான் இத எடுத்துட்டு இங்க வரைக்கும் வந்ததுக்கு அதுவும் ஒரு காரணம்தான்.''

''காலைல அபிகூடப் பேசினேன். அவ எதையுமே உருப்படியா சொல்லல. ஆனா இனி அவ்வளவுதான், எல்லாமே முடிஞ்சதுன்னு ஒரு தரம் விரக்தியா ஏதோ சொன்னா. தயவு செஞ்சு நீங்களாவது சொல்லுங்க, என்ன பிரச்சனைன்னு?''

''பிரச்சனை யெல்லாம் எதுவுமில்ல. நாங்க ரெண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் மனசார விரும்பறோம்.''

தன் ஊகம் சரியாகத்தான் போயிற்று என்று மனதிற்குள் நினைத்த ரகுநாத், நல்ல வேளையாக வேறு பிரச்சனை எதுவுமில்லையென்று மனதிற்குள் நிம்மதியடைந்தார்.

''அப்ப இப்ப உங்களுக்குள்ள எந்தப் பிரச்சனையும் இல்லையே. இல்ல அபிநயா...''

''திடீர்னு இப்பக் கொஞ்ச நாளா அபிதான் வித்தியாசமா நடந்துக்கறா. ரெண்டு பேரும் விஷயத்த அவங்கவங்க வீட்ல சொல்லலாம்னு இருக்கற நேரத்துல அதுவும்...''

அதற்குக் காரணம் தனது மனைவியாகத்தான் இருக்க வேண்டும், அந்த வெகுளிப் பெண்ணின் மனதை ஏதாவது தேவையில்லாததைச் சொல்லிக் கலைத்திருக்க வேண்டுமென்று ரகுநாத்தால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''உங்கள மாதிரி ஒரு நல்ல, பிரமாதமான குடும்பத் துக்குள்ள மருமகளா வர்றதுக்கு அபிநயா ரொம்பவும் குடுத்து வெச்சிருக்கணும். உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணை இருக்கான்னு தெரியாம நான் பாட்டுக்குப் பேசிட்டே இருக்கேன்,'' என்று சண்முகத்தைப் பார்த்தார் ரகுநாத்.

''சும்மாவே பிள்ளைங்களோட ஆசைகளத் தட்டிப் பேசி எனக்குப் பழக்கமில்ல. ஏன்னா தப்பான எதையுமே செய்ததில்லை, தப்பான வழியில இந்த வீட்டுப் பிள்ளை கள் யாரும் போனதில்லேங்கறது தான் அதுக்குக் காரணம்.

''எல்லாத்துக்கும் மேல உங்க பொண்ணு அபிநயாவ நானும் சிலமுறை பாத்திருக்கேன். பிரமாதமான பொண்ணு. நாங்க போய்த் தேடினாக்கூட அவள மாதிரி ஒரு நல்ல பொண்ண நாங்க கண்டு பிடிச்சிருக்க முடியாது. உங்க பொண்ணு எங்க வீட்டு மருமகளா வர்றதுல எனக்கு மட்டுமில்ல, எங்க குடும்பத்துல எல்லாருக்குமே பரி பூர்ண சம்மதம்!'' என்று மன நிறைவுடன் சொன்ன சண்முகத்தைப் பார்த்தார் ரகுநாத்.

''தன்னோட சின்ன வயசுலிருந்தே - ஏன், அவ பிறந்தது லிருந்தே கூட அபிநயாவ அவ்வளவு சந்தோஷமா நான் பாத்ததே இல்ல. பத்து நாள் முன்னாடி வரைக்கும் அந்த அளவுக்கு சந்தோஷமா இருந்தா. அதே சந்தோஷம் அவ



முகத்துல வாழ்நாள் முழுக்க இருக்கணும்னு நான் ஆசைப்பட்டேன்.''

தொடர்ந்து சிறிது நேரம் இருந்து மேலும் சில விஷயங்களையும் பேசி முடித்த ரகுநாத், ''அப்ப நான் கிளம்பறேன். நீங்க உங்க குடும்பத்துல இருக்கற எல்லார் கூடயும் கலந்து பேசிட்டுச் சொல்லுங்க. நீங்க சொல்ற மாதிரி மேல ஆக வேண்டிய நல்ல விஷயங்களப் பாத்துக்கலாம்,'' என்று எழுந்தார்.

கிளம்புவதற்கு முன், ''உங்கள நினைச்சு நான் நிறைய முறை பெருமைப்பட்டிருக்கேன். ஆனா நீங்களே எங்க வீட்டுக்கு மருமகனா வருவீங்கன்னு நான் நினைச்சுக் கூடப் பாக்கல. நான் இப்ப ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கேன்!'' என்று லேசாகக் கண்கள் கலங்க ஜீவா னந்தின் கைகளைப் பிடித்துச் சொல்லிவிட்டுப் போனார்.

ரகுநாத்தை வழியனுப்பிவிட்டு இருவரும் வீட்டிற் குள் வந்திருக்க,

அதே நேரம், வித்யாவும், வினயாவும் கூட வீட்டிற் குள் வந்திருந்தனர்.

''வாவ் அண்ணா, உண்மையிலயே எங்களால நம்பவே முடியலண்ணா! நீங்களா இப்படி!'' என்று வித்யா சந்தோஷத்தில் ஏதேதோ பேச, ''எனக்கு முதல் லயே தெரியுமாக்கும்!'' என்று பெரிய மனுஷி போல முன்னே வந்தாள் வினயா.

தொடர்ந்து மீனாட்சியும் வர, அதற்குப் பிறகு குடும் பத்திலிருப்பவர்கள் அனைவரும் சேர்ந்து ஜீவானந்த்தைக் கேலி பேசியே ஒரு வழி செய்ய ஆரம்பித்திருந்தனர்.

அபிநயா தங்கள வீட்டிற்கு வாழ வருவதில் ஜீவானந்தை விடவும் கூட மற்றக் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் சந்தோஷமென்றால் அது சற்றும் மிகையல்ல.

ஆனால் ஜீவானந்த்துக்குத் தான் ஒரே யோசனையாக இருந்தது. யோசிக்கச் சற்றுத் தனிமை தேவைப்பட்டது.

ஏன், முன்னிலும் இப்பொழுது அவனுக்கு அபிநயா வின் மேலிருக்கும் கோபமும், எரிச்சலும் அதிகமாகி விட்டிருந்தது என்று கூடச் சொல்லலாம்.

''என்னண்ணா ஒரே யோசனையா இருக்கீங்க?''

''அதெல்லாமில்லமா!'' என்ற தனது அண்ணனின் குரலில் இருந்த வித்தியாசம் வெளிப்படையாகவே தெரிந்தது வித்யாவுக்கு.

''அண்ணா! தயவு செஞ்சு நான் கேக்கறேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. இந்த விஷயத்துல உங்களுக்கு நான் ஏதாவது உதவி பண்ண முடியுமா, சொல்லுங்களேன். எதுவா இருந்தாலும் செய்யத் தயாரா இருக்கேன்.''

அப்படிக் கேட்ட தனது தங்கை வித்யாவைப் பார்த் தான் ஜீவானந்த்.

''ஏண்ணாா சிரிக்கறீங்க?''

''பின்ன நீ ஏம்மா இவ்வளவு சீரியசா இருக்க? நமக்கு எல்லாம் தெரியும். நம்ம கணக்கு எப்பவுமே சரியா இருக்கும் அப்படிங்கற மெத்தனம் எனக்கு. அதனால அனுபவிச்சுட்டிருக்கேன். நீ தேவையில்லாம மனசப் போட்டுக் குழப்பிக்காம போ வித்யா. நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கணும்.''



''சரிண்ணா.''

என்னதான் சரியென்று விட்டு வைத்திருந்தாலும் தனது அண்ணனின் வார்த்தைகளில் இருந்த அந்த லேசான விரக்தி, வித்யாவை நிம்மதியாக இருக்க விடவில்லை.

என்ன செய்யலாமென்று ஒரு சில நிமிடங்கள்தான் யோசித்திருப்பாள்.

அடுத்த வினாடியே மனதிற்குள் ஒரு முடிவுக்கு வந்திருந்தவள், அதைச் செயல்படுத்துவதற்காக உடனே எழுந்து சென்றாள்.

# 24

''என்னங்க...''

தன்னை மனைவி அழைக்க, என்ன என்பதைப் போல நிமிர்ந்து பார்த்தார் ரகுநாத்.

ஒரு சில வினாடிகள் தயங்கிய சுந்தரி, ''இல்ல, வெளிய போய்ட்டு இப்பதான் வர்றீங்க போலிருக்கு. குடிக்க ஏதாவது குடுக்கட்டுமா?'' என்று கேட்டாள்.

''இல்லமா. ஒண்ணும் வேண்டாம்.''

''அப்புறம் நான் உங்ககிட்ட ஒண்ணு சொல்லணும்.''

..........

கணவனின் மௌனத்தையே சம்மதமாக ஏற்றுத் தொடர்ந்தாள் சுந்தரி.

''கைவசம் ரெண்டு ஜாதகமிருக்கு, அபிக்குப் போய்ப் பொருத்தம் பாத்துட்டு வந்துடலாமா?''

''அதுக்கெல்லாம் இனி அவசியமில்ல.''

அப்படிச் சொன்ன கணவனைப் புரியாமல் பார்த்தாள் சுந்தரி.

''அது விஷயமாத்தான் நான் இப்பப் போய்ட்டு வந்திருக்கேன்!'' என்றவர் அதுவரை நடந்திருந்த அனைத்தையும் மனைவியிடம் விவரமாக எடுத்துச் சொன்னார்.

''அப்படி யெல்லாம் அவ ஆசைப்பட்றான்னு...''

''அதெல்லாம் பயப்பட்றதுக்கோ, தயங்கறதுக்கோ ஒண்ணுமே இல்ல. ரொம்பப் பிரமாதமான பையன், வழிவழியா செல்வாக்கு நிறைஞ்ச வசதியான குடும்பம். இங்க அபிக்கு இருக்கற அளவுக்கு - ஏன், அதவிட இன்னும் ஒரு மடங்கு அதிகமாவே மாப்பிள்ளைக்கு வசதியிருக்கு. அதே மாதிரி தனித்தனியா மாப்பிள்ள கூடப் பிறந்தவங்க எல்லாருக்குமே கூட. அதனால அபியோட பணத்துக்காக வர்றாங்களோன்னு பயந்துக்க வேண்டியதில்ல. எல்லாத்துக்கும் மேல பணத்தப் பெருசா மதிக்காம, குணத்தையும், மனுஷங்களையும் மதிக்கிற நல்ல பிரமாதமான குடும்பம்.''

கணவன் சொல்லச் சொல்ல, நெஞ்சு காந்தியது சுந்தரிக்கு. அது எப்படி அந்த அனாதைக் கழுதைக்குப் போய் இவ்வளவு பிரமாதமான இடம் அமையலாமென்று உள்ளம் கொதித்தது.

''எதுக்கும் உடனே அவசரப்பட்டு...''



''அவசரப்பட்டா? பொறுமையா நிதானமா ஊர் உலகமே வியந்து பாக்கற அளவுக்குப் பிரமாதமா அபி கல்யாணத்தப் பண்ணலாம்னு இருக்கேன்...''

''சரி. நான் நேரடியாவே விஷயத்துக்கு வர்றேன். இருக்கற சொத்தையெல்லாம் நம்ம குழந்தைகளுக்கும் சேத்து மூணு பங்காப் பிரிச்சுட்டு அதுக்கப்புறமா என்ன வேணும்னாலும் பண்ணுங்க.''

மூன்றில் ஒரு பங்கு என்றாலும் கூட அது பலப்பல கோடிகளைத் தாண்டுமே, அதெப்படி அந்த அபிநயாவிற்குப் போய் அவ்வளவு பணத்தைக் கொடுப்பது.

''போதும், இந்த விஷயத்துல நீ தலையிடாம இருக்கறதுதான் உனக்கு மரியாதை. எத எப்படிப் பண்ணணுங்கறது எனக்குத் தெரியும்.''

கணவனின் வார்த்தைகளிலிருந்து தெறித்த கோபத்தைப் பார்த்த சுந்தரிக்கு மனதிற்குள் பக்கென்றது.

''ஏன், நான் நம்ம...''

''போதும். வாய மூடு. இதுநாள் வரைக்கும் நீ உன் வாழ்நாள்ல எத்தனையோ பாவங்களைப் பண்ணியிருக்க. ஆனாலும் நான் ஒருமுறையாவது ஏன்னு கேட்டிருக்கேனா? ஏன் அந்தப் பிஞ்சுக் குழந்தை அன்புக்காக ஏங்கி நின்னுட்டிருந்தப்பவெல்லாம் அத எந்த அளவுக்கு வாயிலயும் வயித்துலயும் அடிச்சிருப்ப? அந்தப் பாவத்துக்கெல்லாம் பரிகாரமா இனிமேலாவது நான் சொல்ற மாதிரி நடந்துக்கோ. மனசளவுல கூட இனி அவளுக்குக் கெடுதல் நினைக்காத.''

''இருந்தாலும் சொத்த...''

''இதுக்கும் மேல திரும்பத் திரும்ப நீ அதப்பத்தியே பேசிட்டிருந்தா மரியாத கெட்டுப் போகும். இப்பக்கூட உனக்குப் பயந்துட்டோ இல்ல உன்ன மதிக்கணும்னோ நான் உங்கிட்ட இதையெல்லாம் சொல்லல. உன்னோட சுயரூபம் வெளிய தெரிஞ்சு அப்புறம் எல்லாரும் உன்னைக் கேவலமாப் பாத்துட்டுப் போகக் கூடாதுங்கற ஒரே காரணத்துக்காகத்தான் நான் இவ்வளவு பேசிட்டிருக்கேன்.

''எல்லாத்துக்கும் மேல இன்னொன்னையும் தெரிஞ்சுக்கோ. அபிக்கு நியாயமாப் போய்ச் சேர வேண்டிய பங்குக்கும் மேல நம்ம பங்கா ஏதாவது செய்யணும்னு நீ ஆசைப்பட்டா - அது இந்த ஜென்மத்துல நடக்காதுங்கறது எனக்குத் தெரியும் - வேணும்னா நீ இனி வாயத்திற. போதும். என் குழந்தைகளுக்கு இன்னும் மேலமேல நீ பாவத்த சேத்துட்டுப் போறத இனி நான் அனுமதிக்க மாட்டேன். அவங்களுக்குக் கடவுள் கொடுத்த ஆரோக்யமான கைகால் இருக்கு. அவங்க என்னோட ரத்தம். திவ்யமா அவங்களுக்குத் தேவையான எல்லாத்தையும் அவங்க நல்ல வழியிலயே தேடிக்குவாங்க. கடைசியா உன் கணவனாவும் சொல்றேன். தயவு செஞ்சு நான் சொல்றத நீ உனக்குள்ள யோசிச்சுப் பாரு, அந்த வழில கொஞ்ச தூரம் நடந்து பாரு. அதுக்கப்புறமாதான் எவ்வளவு நல்ல சந்தோஷமான வாழ்க்கைய நாம இவ்வளவு நாளும் இழந்திருக்கோம் அப்படிங்கறத உன்னால புரிஞ்சுக்க முடியும்!'' என்று விட்டு எழுந்து சென்ற கணவனையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் சுந்தரி.



காலையில் இருந்து படுத்தே இருந்ததில் தலை வலிப்பதைப் போலிருக்க, காற்றாடச் சற்று நடக்கலாமென்று கீழே இறங்கி வந்திருந்தாள் அபிநயா.

என்னதான் காற்றும், பசுமையும் மனதைச் சற்றே சாந்தப்படுத்தினாலும், பாரம் நெஞ்சிலேயே இருக்கும் போது, அதற்கு முழுமையான தீர்வு ஏது என்று விரக்தியுடன் நினைக்கத் தோன்றியது.

வீட்டுக்குப் பின்னாலிருந்த தோட்டத்து லானில் அமர்ந்து எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, ஹாலில் பேசிக் கொண்டிருந்த ரகுநாத்தின் குரல் முக்கால் பங்கு மூடப்பட்டிருந்த அந்த ஹால் ஜன்னல்களின் வழியே வந்து தெளிவாகக் காதுகளில் விழுந்தது.

அவர் சொல்வதையெல்லாம் கேட்கக் கேட்க, நெஞ்சோடு சேர்த்துக் கை கால்களும் நடுங்கத் தொடங்கி விட்டிருந்தன அபிநயாவிற்கு.

ஜீவாவுக்கும், தனக்கும் திருமணம் செய்யப் போகிறாராமே, எவ்வளவு சாதாரணமாகச் சொல்கிறார். அதற்கு மேல் அவர் பேசுவதைக் கேட்க அபிநயா அங்கு இருக்கவில்லை

என் ஜீவாவை எப்படியெல்லாம் அவமானப் படுத்தி விட்டேனென்று நினைத்து நினைத்தே உள்ளுக்குள் கதறிக் கொண்டிருந்த அபிநயா தன் கையிலிருந்த மொபைல் ஒலிக்க, எடுத்துப் பார்த்தாள்.

வித்யா.

சற்றே நடுக்கத்துடன் அட்டென்ட் செய்து காதில் வைத்தவள், ''ஹலோ...'' என்றாள்.

ஆனால் சத்தத்திற்குப் பதிலாக முதலில் காற்றுதான் வந்தது

"ம்... நான் அபி, சொல்லுங்க வித்யா."

எதிர்முனையில வித்யா சொன்னதைக் கேட்டு முடித்து விட்டு போனை வைத்திருந்தாள். அதற்கு மேல் அவள் பேச வேண்டியதே இருக்கவில்லை. அந்த அளவிற்குத் தான் சொல்ல வேண்டியதை மட்டும் சொல்லி விட்டு இணைப்பைத் துண்டித்திருந்தாள் வித்யா.

எதற்காகத் தன்னை வித்யா அழைக்கிறாளென்று என்ன யோசித்தும் அபிநயாவிற்கு ஒன்றும் புலப்பட வில்லை.

"இந்த வாய்ப்பைத் தவற விடாதே!" என்று அவளது மூளை தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருக்க, யோசிக்காமல் டிரைவரைக் காரை எடுக்கச் சொல்லிக் கிளம்பி விட்டிருந்தாள்.

போகப்போக இப்படி ஒவ்வொரு வினாடியும் கொஞ் சம் கொஞ்சமாகச் சாவதற்குப் பதிலாக நேரிலேயே சென்று ஜீவானந்திடம் அனைத்தையும் சொல்லி விடுவது மேலென்று தோன்றத் தொடங்கி விட்டிருந் தது.

ஆனால் அதை அவன் காது கொடுத்துக் கேட்பானா? முதலில் அவன் தன்னைப் பேச விடுவானா?

ஏதேதோ குழப்பங்களுக்கு நடுவில் தொடர்ந்து வந்த ஒரு மணி நேரத்தில் வினயாவின் வீட்டைச் சென் றடைந்திருந்தாள் அபிநயா.



அவள் ஹாலுக்குள் காலடி எடுத்து வைக்கவும், அதே நேரம் உள்ளிருந்து வித்யா ஹாலுக்கு வரவும் சரியாக இருந்தது.

"வாங்க அபி!" என்றவள், "எனக்கு எந்த விளக்கமும் வேண்டாம். தயவு செஞ்சு ஜீவாண்ணாகிட்டப் போய் நீங்க பேசுங்க!" என்று அழைத்துப் போனாள்.

"அபி! அண்ணாவ நான் இவ்வளவு விரக்தியாப் பாத்ததே இல்ல. எதுலயுமே இன்ட்ரஸ்ட் இல்லாம அவரப் பாக்கறதுக்கே எனக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு. இந்த விஷயத்துல அவருகிட்ட நீங்கதான் பேசியாகணும். வேற வழியே இல்ல!" என்றவள், "அண்ணாவோட ரூம்!" என்று மெல்லிய குரலில் சொல்லிவிட்டு அவள் திரும்பி வந்திருந்தாள்.

கண்கள் கலங்க நடுக்கத்துடன் அந்த அறைக்குள் அபிநயா செல்ல, யாரோ வரும் அரவம் கேட்டுத் திரும்பி னான் ஜீவானந்த்.

..................

எந்த உணர்ச்சியையும் காட்டாத அவனது கண்களில் ஏற்கெனவே கலங்கிப் போயிருந்த அபிநயா இப்பொழுது மேலும் அதிகமாகவே நம்பிக்கையை இழந்து விட்டிருந் தாள்.

"ஜீவா..."

அழுகையில் குரல் மேலே எழும்பாமல் போக, "ஜீவா!" என்று இன்னும் அருகில் சென்றிருந்தாள் அபிநயா.

.........

"ஜீவா! எம் மேல கோபமா?"

............

''ஜீவா. பேச மாட்டிங்களா? எனக்குத் தெரியும், உங்களுக்கு எம்மேல கோபம்...''

''உம்மேல கோபப்பட நான் யாரு?''

''தயவு செஞ்சு அப்படியெல்லாம் சொல்லாதீங்க ஜீவா. உங்க அன்பும் காதலும் இருக்கற தைரியத்துல தான் நான் உயிர் வாழ்ந்துட்டிருக்கேன்...''

''போதும், எம்மனசுக்குள்ள இருக்கற அபிக்குப் பொய் பேசத் தெரியாது. நிமிஷத்துக்கு ஒரு நிறம் மாறத் தெரியாது. அவளத்தான் எனக்குப் புடிச்சிருக்கு...''

''நானும் அதே அபிதான் ஜீவா.''

''கேக்க நல்லா இருக்கு. ஆனா நல்லா யோசிச்சுப் பாரு. உனக்கு என்னைச் சுத்தமாவே பிடிக்காது. ஏன், என்னை யாருன்னு கூட உனக்குத் தெரியாது.''

''அப்படி இருந்துடணும்னு தான் ஜீவா இப்பக்கூட ஆசப்பட்றேன். ஆனா முடியல. என்ன பண்றதுன்னே தெரியாம மனம் நொந்துபோய் நடைபிணமா தான் ஜீவா நான் இப்பக் கொஞ்ச நாளா வாழ்ந்துட்டிருக்கேன்...''

அதற்கு மேல் பேச முடியாமல் கைகளில் முகம் புதைத்துக் கதறியவளைத் திரும்பிப் பார்த்தான் ஜீவானந்த்.

சில வினாடிகளில் தன்னைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்த அபிநயா, ''ஒருநாள்... இல்ல, ஒரு மணி நேரம் உங்க மனைவியா இருந்து வாழ்ந்துட்டுச் சாகணும்னாக் கூட அந்த வாழ்க்கை எனக்குப் போதும் ஜீவா. அத நான் சந்தோஷமா ஏத்துக்குவேன். ஆனா உங்க உயிருக்கு...



தாங்க முடியலையே அம்மா...'' என்று கதறியவளைத் தொடர்ந்து தூர நின்று பார்த்துக் கொண்டிருக்க முடியாமல், ''அபி, என்னடா...?'' என்று அருகில் ஓடி வந்திருந்தான் ஜீவானந்த்.

''அபி! இரு, முதல்ல இங்க வந்து உக்காரு!'' என்று அவளை அணைத்தபடி அழைத்துக் கொண்டு போய் அங்கிருந்த கட்டிலில் அமர வைத்திருந்தான்.

''ஜீவா! நான் சொல்றத தயவு செஞ்சு முழுசாக் கேட்டுடுங்களேன்!'' என்று அவனது கையைப் பிடித்துக் கெஞ்சியவளிடம், ''அபி! அழாம சொல்லு. அப்பதான் கேப்பேன்!'' என்றான்.

முடிந்த அளவு அழுகையை அடக்கிக் கொண்டு அன்று ஜோசியர் வந்து போனதிலிருந்து, தொடர்ந்து தனக்கு வந்த கனவு வரை அனைத்தையும் சொல்லி முடித்திருந்தாள் அபிநயா.

அவள் சொன்னதனைத்தையும் கேட்டு முடித்தவனுக்கு அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை.

இப்படியும் ஒரு பெண்ணா என்றிருந்தது.

ஆனால் அதற்குப் பிறகுதான் அவனால் அபிநயாவின் இடத்திலிருந்து யோசிக்க முடிந்தது. அவளுடைய நெஞ்சு நிறைய ஆசையை வைத்துக் கொண்டிருந்தும், தன் மேல் எவ்வளவு அன்பும், காதலும் இருந்திருந்தால் அவள் இப்படியொரு முடிவை எடுத்திருப்பாளென்று நினைக்கத் தோன்றியது. தனக்காக, தன் உயிருக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்னும் பயத்தில்தான் அவள் இப்படியெல்லாம் நடந்து கொண்டாளென்பதைப்

புரிந்து கொண்டு விட்ட ஜீவானந்துக்கு இந்தப் பத்து நாட்களாக அவள் பட்ட வேதனை தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.

தன்மேல் அவள் வைத்திருக்கும் அன்பும் காதலும் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தால்...

அவள் பட்டிருந்த அந்த அனைத்து வேதனை களையும் அந்தச் சில வினாடிகளில் அனுபவித்து முடித் திருந்தவன், ''அபி! அபி! என்னை மன்னிச்சுடுடா!'' என்று அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

இனி எக்காலத்திற்கும் இந்தப் பாதுகாப்பை விட்டு விடக் கூடாது என்று அபிநயாவும் அவனது நாயகனின் கைகளுக்குள் கோழிக் குஞ்சாய் ஒண்டிக் கொண்டாள்.

பொறாமை என்னும் பேயும், சந்தேகம் என்னும் பிசாசும் எந்நாளும் அண்டாது அவர்கள் பல்லாண்டு காலம் இணை பிரியாது சந்தோஷமாக வாழ இறை வனைப் பிரார்த்திக்கிறேன்.

நீங்களும் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள்.